759

T. N. Leg. Assembly Debates
4-4-1990
V. 215 No. 3

D
V211,9 31 N90
N90.25.2
142000

வெளியீடு 5-10-1990 Issued 5-10-1990

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 4, 1990—தொகுதி 25—எண் 3
Wednesday, the 4th April 1990—Volume 25—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

143860

D

V211,31'N90

N90.25.3

## உள்ளடக்கம்.

4-4-1990 பக்கங்கள்

1. மானியக் கோரிக்கைகள், 1990-91- விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 27 — கதர்த் தொழில்
(ஆ) கோரிக்கை எண். 30 — சமூக நலன்
(இ) கோரிக்கை எண். 48 — ஊரகத் தொழில்கள்
(ஈ) கோரிக்கை எண். 57 — ஊரகத் தொழில்கள்குறித்த மூலதனச்செலவு
} 479-578

*மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் 481,550-576
*திரு. எஸ். டி. உகம்சந்த் 481-488
*திரு. எச். எம். ராஜு 488-493
திருமதி பாப்பா உமாநாத் 493-503
*திருமதி எஸ். பி. சற்குணம் 503-509
திரு. ரெ. பிச்சைமுத்து 509-513
திரு. பெ. சீனிவாசன் 513-522
திருமதி ரமணி நல்லதம்பி 522-532
*திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி 532-538
திரு. எம். முகமது சித்திக் 538-542
*திருமதி பி. லட்சுமி 543-550

2. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள். 578-579

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பங்குனி 21, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021*

**1990 ஏப்ரல் 4, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**
*''எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு*
*கொள்ளாத கொள்ளாது உலகு''.*

*பிறர் எள்ளி நகையாடாதவாறு எள்ளளவு செயலையும் எண்ணிச் செயல்படவேண்டும். தமக்குப் பொருந்தி வராத எந்தச் செயலையும் உலகு ஏற்றுக் கொள்ளாது.*

*[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

### 1. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)

### (அ) கோரிக்கை எண். 27—கதர்த் தொழில்

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

*''மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ரூ.7,08,94,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''*

**திரு. ஜி. ஜி. குருமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*''மானியக்கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,08,94,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''*

### (ஆ) கோரிக்கை எண். 30—சமூக நலன்

''**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

*''மானியக் கோரிக்கை எண் 30-சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,39,42,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''*

[1990 ஏப்ரல் 4

முற்பகல் 10-15 மணி

திரு. ஜி.ஜி. குருமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 30-சமூக நலன் என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,39,42,59,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

(இ) கோரிக்கை எண். 48-ஊரகத் தொழில்கள்

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண்-48 ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,74,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 48-ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 24,74,30,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கை அண்ணா மாவட்டம் செய்யூர், வட்டத்தில் முகையூர் கிராமத்தில் கயிறு திரிக்கும் தொழிற் சாலை அமைப்பது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 48-ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கபெறுகின்ற ரூ 24,74,30,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

(ஈ) கோரிக்கை எண். 57- ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன்:

''மானியக்கோரிக்கை எண். 57-ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.70,64,000,-க்கு மேற்படாத் தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''



1990 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக் கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னு ரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

*மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர்த் தொழில், சமூக நலன், ஊரகத் தொழில்கள் மற்றும் பட்டு வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் * அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் இந்த அவையில் படித்ததாக அவைக் குறிப்பில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுகின்ற ஆலோசனைகள், கருத்து களின் அடிப்படையில் என்னுடைய பதில் உரையை இறுதியாக அவைக்கு அளிக்கிறேன்.

*திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட கதர்த்தொழில், சமூக நலன், மற்றும் ஊரகத் தொழில்கள் பற்றிய மானியக்கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பினை அளித்தமைக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மகாத்மா காந்தி அவர் கள் நாடு சுதந்திரம் அடைந்த நேரத்திலே சொல்லியிருப்பது இந்திய நாட்டினுடைய உயிர் நாடியே கிராமத்திலே தான் இருக் கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த கிராமங்களுடைய முன்னேற்றமானது நல்ல முறையில் இருக்க வேண்டும். என்று சொன்னால் இந்த துறையின் மூலமாக கிராமத்திலே வாழ்கிற மக்களுக்கு நீங்கள் மேலும் மேலும் பல நன்மைகளைச் செய்கிற அளவுக்கு காரியங்களை ஆற்ற வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் நாடு சுதந்திரம் அடைந்தது என்று சொன்னால் நாட்டிலே இருக்கிற பெண்களுக்கு பாதுகாப்பு தேவை. பெண்கள் நாட்டிலே சுதந்திரமாக நடமாட வேண்டும். இரவு நேரத்திலே அவர்கள் எல்லாவிதமான தங்க ஆபரணங்களையும் அணிந்து கொண்டு தன் னந்தனியாக எந்தவிதமான அபாயமும் இல்லாமல், அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் சென்றுவருகிற அளவுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும் என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த நேரத்தில் நாம் மகளிர் களுக்கு மேலும் மேலும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று சொன்னால். இந்த சமூக நலத்துறை மூலமாக அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் பெற்றுத் தருகிற அளவுக்கு நம் முடைய அரசு முன்வர வேண்டும்.

இன்றைக்கு இருக்கிற சமுதாய சூழ்நிலையைப் பொறுத்த வரையில் மகளிருக்கு என்று நாம் பல்வேறு சட்டங்களை கொண்டு வந்தாலும் அவைகள் எல்லாம் ஏட்டளவில் இருக்கிற

(*) ....ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

ஒரு நிலையைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பெண்களை பொறுத்தவரையில் அவர்கள் இன்னும் சுதந்திரமாக செயல் படுகிற நிலைமை நாட்டிலே ஏற்படவில்லை. படித்த பெண்களாக இருந்தாலும் அவர்களுக்கு வேண்டிய சுதந்திரம் நாட்டிலே வழங்கப்படவில்லை என்பதை நான் இன்றைக்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பெண்களுக்கு சொத்து உரிமை என்ற முறையிலே அவர்களுக்கு சொத்திலே சமபங்கு வழங்குகிற அளவுக்கு சட்டங்களை இயற்றியிருந்தாலும் இன்னும் அந்த சட்டங் களுடைய இம்பேக்ட், கிராமத்திலே இருக்கிற அந்த பெண் களுக்குச் சென்று அடையவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்று சொன்னால் சமுதாய மாற்றங்கள் வெறும் சட்டங் களால் மட்டும் ஏற்பட்டுவிட முடியாது என்பதை நம்முடைய முன்னோர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் சட்டத்தைப் போட்டு விட்டோம். அவர் களுக்கு அது சென்றடைந்து விடும் என்ற நினைப்பிலே நாம் இருந்து விட்டால் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் கிடைக்காது என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

10.20 மணி

அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு கொண்டு வரப்பட்டிருக் கிற இந்த மானியக் கோரிக்கைளைப் பொறுத்தவரையில் தலை யாய பிரச்சினையாக இருப்பது, நாட்டிலே முக்கியமான பிரச்சி னையாக இருப்பது இந்த சத்துணவுத்திட்டம்தான்; இந்த சத்து ணவுத்திட்டம் என்ற மாபெரும் திட்டத்தை எந்த அளவிலே உண்மையாக செயல்படுத்துகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்,

புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டம் கொண்டு வந்த நேரத்திலே, ஏழை மக்கள்—குறிப்பாக, கிராமத்திலே இருக்கின்ற அந்த ஏழை மக்களுக்கு உதவிகள் செய்யவேண்டும் என்கிற முறையிலே அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டு மென்ற முறையிலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த நேரத்திலே, பலர்கூட கேலி பேசினார்கள். அதை ஒரு உதவாக்கரை திட்டம் என்று பேசிய அந்த சூழ்நிலையிலேகூட, ஆலமரத்தைப் போல பின் அது எல்லோருக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையிலே வளர்ந்து கொண்டிருக்கின்றது. அதனால்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவேன் என்று சொல்லி அன்றைக்கே கொண்டு வந்தார்கள். அன்றைக்கு இந்த திட்டத்தை எதிர்த்தவர்கள் கூட அதை ஏற்றுக்கொள்கின்ற அளவுக்கு இன் றைக்கு விரிவாக்கம் செய்கின்ற வகையில் பல்வேறு மாற்றங்கள் செய்வதற்கு முன் வருவோம் என்று சொல்கின்ற அளவுககு, அன்றைக்கே தீர்க்கதரிசனமாக புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள், ஆனால் இந்த சத்துணவுத் திட்டத்தை



இந்த அரசானது, இன்றைக்கு எந்த அளவுக்கு சரியான முறை யிலே செயலாற்றவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அன்றைக்கு அதை கொண்டுவந்த சூழ்நிலையில், மையத்திலே வழங்குகின்ற எண்ணெயானது ஒரு குழந்தைக்கு 5 கிராம் என்ற முறையிலே வழங்கப்பட்டது, ஆனால், அந்த எண்ணெயி னுடைய அளவை இன்றைக்கு, ஒரு கிராமாகக் குறைத்திருக் கிறார்கள், இப்படி அந்த சத்துணவுத் திட்டமே வீணாகின்ற அளவுக்கு, அதிலே பல மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன, அதோடு மட்டுமல்லாமல், அங்கே இருக்கின்ற கட்டிடங்கள் எந்த அளவுக்கு கட்டமுடியுமோ அந்த அளவக்கு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே கட்டப்பட்டன. சென்ற ஆண்டு நான் அறிந்திருக்கின்ற வரையிலே ஒரு சத்துணவுக் கூடத்திற்கு கூட, கட்டிட வசதி செய்து தரப்படவில்லை, அதோடு மட்டு மல்லாமல், இருக்கின்ற அந்த சத்துணவுக் கூடங்களுக்கு சரியான முறையிலே பராமரிப்பு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. கேட்டால், அது உள்ளாட்சித் துறையைச் சேர்ந் ததா அல்லது வேறு அமைப்பிலே சேர்ந்ததா என்று நாங்கள் முடிவினைச் செய்யவில்லை என்று சொல்கின்ற நிலையிலே தான் இன்றைக்கு அது இருந்துக் கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு இந்தத் திட்டத்தை விட முடியவில்லை. அந்தத் திட்டத்தையே நல்ல முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய எண்ண மும் அரசுக்கு இல்லை என்பதுதான் இன்றைக்கு எங்களால் உணர முடிகின்றது. அதோடு மட்டுமல்லாமல், சென்ற ஆண்டு இந்த திட்டத்தை விரிவாக்கம் செய்கின்ற வகையிலே முட்டைகளும் போடுவோம் என்ற முறையிலே திட்டங்கள் உருவாக்கப்பட்டன. நான் ஒன்றை மட்டும் அன்றைக்கே எடுத்துச் சொல்லிருக்கிறேன். நீங்கள் முட்டைகள் போடுவதாக தேர்தல் அறிக்கையிலே சொன்னதால், அதை நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டும் வந்திருக்கிறீர்களே ஒழிய, இன்றைக்கு நாட்டிலே....

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மன்னிக்கவும், சத்துணவுத் திட்டத்தோடு முட்டைகள் வழங்குவதாக தேர்தல் அறிக்கையிலே சொல்லப்படவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த திட்டம் இது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வில்லை என்று இன்றைக்கு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கி றார்கள், அன்றைய சபைக் குறிப்பில் கூட இருக்கிறது; நான் கேட்டது: தேர்தல் அறிக்கையிலே சொன்னீர்களே, செய்திருக் கிறீர்களா என்றுதான் கேட்டிருக்கிறேன். அவர்களும் செய்கி றோம் என்றுதான் சொன்னார்கள். அது உண்டோ, இல்லை யோ நீங்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்,

அதே நேரத்திலே, அந்த முட்டைகளைப் போடுகின்றீர்களே, அவைகள் சரியான முறையில் போடப்படவில்லை என்ற குறைகள் இருக்கின்றன. அதைவிட, சத்துணவு முறையிலே இன்றைக்கு பால் வழங்கலாம், அல்லது கீரைகள் போன்ற பொருட்களை வழங்கலாம். முட்டை போடுவதால் பல்வேறு பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. இன்றைக்கு முட்டையினுடைய விலை ஏறிக் கொண்டிக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் அதை சீரான முறையில் வழங்குவதற்கு வழிவகைகள் இல்லை. ஏற்கனவே, அமைப்பாளர்கள் வழங்குகின்ற நேரத்தில் அதற்கு 50 பைசா நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் பின் 70 பைசா என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சென்று பார்த்தால், அரசாங்கம் மொத்தமாக டெண்டர்கள் வாங்கி ஒரு முட்டையின் விலை ரூ. 1.30 என்ற விலைக்கு முட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். இந்த வகையிலே அதில் மாற்றங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகையால், பால், கீரைகள் போன்று இந்தத் திட்டத்திலே நீங்கள் வழங்கினால், அவ்வித குறைகள் நீங்குவதற்கு ஒரு வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் சமூக நலத்துறையைப் பொறுத்த வரையில், 1975-76-ம் ஆண்டு, அதற்காக ஒதுக்கப்பட்டத் தொகையானது, ரூ. 1 கோடியே 30 லட்சம்தான். ஆனால் இன்றைக்கு அந்த சமூக நலத்துறையினுடைய பணிகள் மேலும் மேலும் வளர்ந்து, இன்றைக்கு சுமார் ரூ.139 கோடி அளவிலே பல்வேறு காலகட்டங்களிலே, பணங்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றன என்று சொன்னால், அதனுடைய பணிகள் எந்த அளவிற்கு சிறப்பானதாக இருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். முன்பு சொல்லப்பட்டது, ஏழைகளுக்கு, முதியோர்களுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே புரட்சித் தலைவர் அவர்கள் ரூ.35/- மாதத்திற்கு அவர்களுக்கு நிவாரணமும், சத்துணவு மையத்திலே தினமும் ஒருவேளை அவர்களுக்குஉணவு உட்கொள்வதற்கும், அதே நேரத்திலே ஒரு வாரத்திற்கு ஒருகிலோ அரிசி இலவசமாக வழங்குவதற்கும் திட்டங்கள் வகுத்து செயலாற்றினார்கள். ஆனால், இன்றையதினம், அந்தத்திட்டத்தினை மாற்றி, அவர்களுக்கு ரூ.50/- மொத்தத்திலே உதவிப்பணமாக வழங்கப்படுகிறது. அவர்களுக்கு, சத்துணவு கூடத்திலே உணவுகள் இல்லை. வாரத்திலே ஒரு கிலோ அரிசி....

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. முதியோர் ஓய்வு ஊதியம் பெறும் அனைவருமே, சத்துணவுக் கூடங்களில் மதிய உணவு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சா அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்படி பல இடங்களில் வழங்கப்படவில்லையென்று புகார்கள் வந்திருக்கின்றன.



அந்தப் புகார்களை வேண்டுமானால் நான் சம்பத்தப்பட்ட அமைச்சருக்கு வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன். அதே நேரத்தில் இன்றைக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப் பட்டது நிறுத்தப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் மீண்டும் பரிசீலனை செய்து—ஏனென்றால், ஏறியிருக்கின்ற விலைவாசியில் 50 ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகளை ரத்து செய்து இருக்கின்றீர்கள். அவைகளையெல்லாம் நீங்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10.25 மணி

அதோடு மட்டுமல்லாமல், சென்ற ஆண்டு சொல்லப்பட்டது. பெண்களுக்கென்று 200 பேருக்கு ஆட்டோ ரிக்ஷாக்களை அவர்கள் சொந்தமாக உபயோகப்படுத்துவதற்கு வழங்வகுதற்கு அரசாங்கம் திட்டத்தை உருவாக்கியிருக்கின்றது என்று சொல்லி அதற்கான நிதி வசதியும் ஒதுக்கப்பட்டது. ஆனால் எத்தனை பேருக்கு இன்றைக்கு வழங்கப்பட்டது என்ற குறிப்புகள் இல்லை. வழங்கப்படவில்லை, என்றுதான் எங்களுக்கு வந்திருகின்ற தகவல்கள். அதேபோன்று பெண்களுக்கு ஐஸ்கிரீம் வண்டி மற்றும் கரும்புச் சாறு பிழியும் வண்டிகள் வழங்குவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. ஆனால் அந்தத் திட்டங்களில் எத்தனை பேர் பயன் அடைந்திருக்கிறார்கள் என்ற குறிப்புகள் இன்றைக்கு இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் நாம் பெண்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம்...

*மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதியோர்கள் சத்துணவுக் கூடங்களிலே இப்போது சாப்பிடுகிறார்கள். சாப்பிடக்கூடியவர்களுக்கு அரிசி வழங்கப்படவில்லை. சாப்பிடாதவர்களுக்கு அரிசி வழங்குகின்ற நடைமுறை இன்னமும் இருந்துவருகிறது. அவர்களுடைய ஆட்சிகாலத்தில் 20 கிலோ அரிசி வாங்கினால் 5 கிலோ அரிசி இலவசம் என்று சொன்னார்களே, அது வழங்கப்பட்டதா?

திரு. எஸ்.டி. உகம்சந்த்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசியது, முதியோர்களுக்குப் பென்ஷன் பற்றியது. அமைச்சர் அவர்கள் வேறு விஷயத்தைக் கேட்டு இருக்கிறார்கள். 20 கிலோ வாங்கினால் ஒரு கிலோ வழங்கவேண்டும் என்ற திட்டமானது தீட்டப் பட்டது. (குறுக்கீடு) ஐந்து கிலோ வாங்கினால் வழங்க வேண்டுமென்ற திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்னதாகவே இன்றைக்கு நீங்கள் வந்திருக்கின்றீர்கள். நீங்கள் வேண்டுமானால்கூட அதை நடைமுறைப்படுத்தலாம். ஏனென்றால் மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய திட்டங்கள்,

அரசாங்கம் சொல்லி இருக்கலாம். ஆனால் இடையிலே அந்த அரசாங்கத்தினுடைய நிலைமைகள் மாறியிருக்கின்றன. நீங்கள் வந்திருக்கின்ற சூழ்நிலையில் அதை நிறைவேற்று வதற்கு வேண்டிய வழிவகை செய்யலாம். ஆனால் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் பெண்களுக்காக இன்றைக்கு சமூக நலத்திலே இந்த அளவுக்கு நிதிகளை ஒதுக்கியிருக்கின்றோம். ஆனால் நிலைமை என்ன?

இன்றைக்கு நாட்டிலே அரிசியினுடைய விலையாவது மிக அதிகமாக ஏறியிருக்கின்றது. அதுவும் ரேஷன் கடையில் விலைகள் ஏறியிருக்கின்றன. அந்தச் சூழ்நிலையில் ஒரு பக்கத்திலே மலிவு விலையிலே மது கொடுக்கிறோம் என்று சொன்னால் அது பெண்களுக்கு மேலும், மேலும் தாழ்வு களை ஏற்படுத்துகிற அளவிற்கு, அவர்களை துன்பப் படுத்துகின்ற அளவுக்குத் தான் அந்தக் காரியங்கள் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். பெண்களுடைய வாழ்வு முன்னேற்றம் அடையவேண்டும் என்ற முறையில், பணத்தை ஒதுக்கினால் மட்டும் போதாது. அவர்கள் நல்லமுறையில் வாழ்வதற்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையை உருவாக்க வேண்டுமென்றால் அரிசியினுடைய விலையும் குறையவேண்டும். மலிவு விலை மது திட்டத்தை நீக்க வேண்டும் (குறுக்கீடு) என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு உள்ள நிலைமைகள் எல்லாம்' ஊரகத் தொழிற் துறையைப் பொறுத்தவரையில், பல்வேறு தொழிற்கூடங்கள் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு சிறிய தொழிற் சாலைகளை எல்லாம் உருவாக்குவதற்காக அரசாங்கம் நிதியு தவிகளைச் செய்து கொண்டு வருகின்றது. ஆனால் அப்படி உதவிகளைப் பெறுகிறவர்கள் அந்தத் தொழிற்சாலைகளைச் செயல்படுத்துகின்றார்களா என்பதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், உதவி பெறுபவர்கள் அந்த உதவிப் பணத்தோடு சென்று விடுகின்றார்கள். பின்னால் அந்தத் தொழிற்சாலைகளை நடத்தமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு அல்லது நடத்தக்கூடாது என்ற காரணத்திற்காகக் கூட அப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு நாட்டிலே நிலவுகின்றன. அவைகளையெல்லாம் அரசாங்கம் கண்காணிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

அதேநேரத்தில் ஒரு வேண்டுகோளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மதுராந்தகம் தொகுதியைச் சார்ந்திருக்கின்ற மதுராந்தகம் கூட்டுறவு பாலித்தீன் மெல்லிழைக் கோணி தயாரிக்கின்ற தொழிற்சாலையானது 1983ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அது நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டு வந்தது. ஆனால் தற்போது அதற்கு அரசாங்க நிறுவனத்தின் மூலமாக



டான் பெட், அக்ரோ இன்டஸ்ரீஸ், விவசாயத் துறை போன்ற அமைப்புக்கள் மூலமாக ஆர்டர்கள் வழங்கப் படுவதில்லை. அவற்றிற்கு இன்றைக்கு 20 டன் வரையிலே, தேவைகள் இருக்கின்றன. 20 டன் ஒரு மாதத்திற்கு எல்லாவற்றிற்கும் தேவையாக இருக்கிறது. ஆனால் அவைகளுக்கு வேண்டிய ஆர்டர்களை கூட்டுறவு நிறுனவத்திற்கு அவர்கள் வழங்குவது கிடையாது. தனியார்களுக்கு இன்றைக்கு வழங்கிக் கொண்டு வருகிறார்கள். அதன் காரணமாக இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலையை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றது. அதுவும் நான் அறிந்திருக்கிற வரையிலே அந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலையை ஒரு தனியாருக்கு விற்பனை செய் வதற்காக ஏற்கெனவே அரசாங்கம் விளம்பரம் செய் திருக்கிறது. டெண்டர் என்ற முறையில் நீங்கள் 'வாருங்கள்' என்று சொல்லி, யாரோ தனியார் லாபம் அடைவதற்காக, அதை மூடுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து இருக் கின்றார்கள். அந்தத் தொழிற்சாலையை வேண்டுமானால் அரசாங்க நிறுவனமாக இருக்கக்கூடிய டான்பேட் எடுத்து நடத்தலாம் அல்லது வேளாண்மைத் துறை வேண்டுமானாலும் அதை நடத்தக் கூடிய வாய்ப்பு இருக்கிறது அதில் உற்பத்தியாகின்ற அந்தப் பொருட்களை அவர்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

10.30. மணி

இன்றைக்கு மதுராந்தகம் தொகுதியைத் பொறுத்த வரையில் அங்கே கடல் ஓரப் பகுதியாக இருப்பதால் தென்னை மரங்கள் அங்கே அதிகமாக இருக்கின்றன. அந்த தென்னை மரங்களைக் கொண்டு பல உபத் தொழில்களை ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியில் தென்னை நாரிலிருந்து கயிறு திரிக்கும் ஒரு தொழிற்சாலை துவங்குவது என ஏற்கனவே அரசு திட்டங்கள் வகுத்து இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அந்தத் தொழிற்சாலையை கொண்டு வந்தால் அங்கே இருக்கின்ற ஏழை மக்களுக்கு பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படும். அதேநேரத்தில் இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்த வரையில் இன்னும் பல்வேறு நல்ல திட்டங்கள் உருவாகின்ற அளவுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இந்து மக்களுடைய சமுதாயப் பிரச்சினையோடு, வாழ்க்கைப் பிரச்சினையோடு ஒட்டி இருக்கிற காரணத்தால் நல்ல பல முன்னேற்றத் திட்டங்கள் அனைத்தும் இந்த மானியக் கோரிக்கையில் அடங்கி இருப்பதன் காரணமாக இன்றைக்கு இன்னும் மிக அதிகமான அளவில் நிதி ஒதுக்கீடு செய்து மேலும் மேலும் பல திட்டங்களை அரசு செய்யவேண்டு மென்று கேட்டு இந்த அளவில் பேசுவதற்கு வாய்ப்பு

அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது 20 கிலோ அரிசி வாங்கினால் 5 கிலோ இலவச அரிசி தருவதாக நீங்கள் சொல்லியிருக் கிறீர்கள் என்று சொன்னார்கள். தவறான தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தந்து இருக்கிறார்கள். 20 கிலோ அரிசி நியாய விலைக் கடைகளில் வாங்கினால் ஒரு கிலோ அரிசி தருவதாகத் தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடை பெற்றது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறாக, உண்மைக்கு மாறாகச் சொல்லக் கூடாது. 5 கிலோவுக்கு ஒரு கிலோ அரிசி என்றும், 20 கிலோ வாங்கினால் 5 கிலோ இலவசமாக தரப்படும் என்று தான் சொன்னீர்கள். உண்மைக்கு மாறாக இங்கே பேசக்கூடாது.

*திரு எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஒருசில கருத்துக்களை இங்கே நான் பேச கடமைப்பட்டிருக்கிறேன்.

கதர்த் துறையில் கேட்டிருக்கும் தொகை 7 கோடியே 8 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய். நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் நாட்டின் குடிமக்களால் உற்பத்தி செய்யப்படும் கதர்த் துணியை அணிவதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற் காகவும், மக்களது தொழில் வளம் பெறவும், அந்நிய நாட்டுத் துணிகளை வாங்காமல் நமது துணியை வாங்க வகை செய்யும் வகையில் தேசப்பிதா மகாத்மா காந்தி அண்ணலார் அவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே இத்துறைத் தொழிலுக் காக முன்னுரிமைக் கொடுத்து ஆதரித்து வந்தார். இந்த கதர் இயக்கம் நாளடைவில் சிறந்த முறையில் வளர்ச்சி அடைந்தது மட்டுமல்லாமல் மக்களிடையே உள்நாட்டுத் துணியையே அணிய வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி நல்ல முறையில் வளர்ந்து வருகிறது என்பதை நாம் அறிவோம்.

இந்த நிலையில் மக்கள் மேலும் கதர்த் துணியை அணியும் வகையில் வருடத்திற்கு 90 நாட்கள் என்று இருப்பதை அதிகரித்து 150 நாட்களுக்கு தள்ளுபடி விற்பனையை நீட்டிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



கதருக்கு எங்கள் மாவட்டத்தில் நல்ல ஆதரவு தரப் படுகிறது. கடந்த முறை 63 ஆயிரம் கிலோ இலவம் பஞ்சு வேண்டும் என்று நாங்கள் கேட்டு இருந்தோம், அவ்வளவு பஞ்சு எங்களுக்கு தராதது ஒரு குறையாக இருக்கிறது. இந்தமுறை வரும் தீபாவளிக்கு எங்களுக்கு குறைந்தது 70 ஆயிரம் கிலோ இலவம் பஞ்சு தேவைப்படுகிறது, அதைத் தர ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கதர் கம்பளி துணி வகைகள் எங்கள் மாவட்டத்தில் பெருமளவுக்கு விற்பனை ஆகிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மை ஆகும். லூதியானா போன்ற இடங்களிலிருந்து வரும் முகவர் (ஏஜெண்ட்) களை எங்கள் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். ஏன் என்றால் சென்னையில் இருக்கும் இத்துறையினருக்கு அந்தக் கம்பளித் துணியின் தரம், நிறம், மக்கள் விரும்புகிறார்களா, இல்லையா. என்பது தெரியாது, மேற்படி ஏஜெண்ட்கள் இங்கே சென்னையிலுள்ள கதர் கிராம அலுவலகத்திற்கு வந்துவிட்டு சென்று விடுகிறார்கள் என்று நாங்கள் அறிகிறோம். இதைத் தவிர்ப் பதற்கு, லூதியானா போன்ற இடங்களிலிருந்து வரும் அந்த ஏஜெண்டுகளை எங்கள் மாவட்டத்திற்கு அனுப்பி வைத்தால் மக்களுடைய விருப்பம் தெரியவரும் என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

10.35 மணி

கதர்த் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு கொடுக்கும் ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு ஊதிய உயர்வையும் எல்லா படித்தொகையும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். கதர் கிராமத் தொழில் வாரியத்தில் தலைமை நூற்பாளருக்கு தினக்கூலி 15–ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. அதை 30 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன், நேப்பாள் தறி அலகு தொழில் நுட்பத் தொழில் உதவியாளர்களின் தினக்கூலியை உற்பத்தி அடிப்படையில் வழங்காமல் மாற்றி அமைக்க வேண்டும். மாதம் 3 ஆயிரம் மீட்டருக்கு உற்பத்தி குறைந்தால், குறைவுக்கு ஏற்ப கூலியை குறைத்து வழங்கும் முறையை மாற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

சமூகநலத்தில் நமது அரசு கேட்டு இருக்கும் தொகை 139,42,59,000 ரூபாயாகும். பால்வாடி இல்லாத ஊர்களும் நமது மாநிலத்தில் இருக்கின்றன. பால்வாடியை கண்டிப்பாக குழந்தைகளுக்கு அமைத்துத் தரவேண்டும். எங்களுடைய நீலகிரி மாவட்டத்தில் போர்த்திஉறாடா என்ற கிராமத்தில் 500 குழந்தைகள் இருந்தாலும்கூட அங்கே ஒரு பால்வாடி இல்லை என்பதை மிகவும் வேதனையுடன் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

குழந்தைக்காப்பகங்கள் சிறந்த முறையில் செயல்பட வேண்டும. அவர்களுக்குச் சேரவேண்டிய உணவுப் பொருள்கள் கண்டிப்பாகச் சேரவேண்டும். இந்த வயதில்தான் குழந்தைகளை அவசியமாக நல்லமுறையில் பராமரிக்கவேண்டும். இந்த வயதில்தான் குழந்தைகளின் வளர்ச்சியும் வளர்ச்சி மூலமாக எதிர்காலமும் அமைந்து இருக்கிறது. ஆகவே, அந்தக் காப்பகங்களை நல்லமுறையில் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகள் சத்துணவில் சில குழந்தைகள் சைவம் என்ற முறையில் முட்டைகளை சாப்பிடாமல் இருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் சில பகுதிகளில் முட்டைகளை குழந்தைள் சாப்பிடுவதில்லை. அந்தப் பகுதி குழந்தைகளுக்கு மட்டும் முட்டைக்கு பதிலாக பால் வழங்குமாறு இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

சத்துணவு ஊழியர்களின் ஊதியம் கண்டிப்பாக உயர்த்தப் படவேண்டும். 8 வருடம் பணியில் இருப்பவர்களுக்கு நிரந்தர வேலை தரும் அரசு, அதை 5 வருடமாகக் குறைத்தால் நல்லது என்று கூற கடமைப்பட்டிருக்கிறேன். விதவைகள்; ஆதரவற்றோர். கணவனால் கைவிடப்பட்டவர்கள், குடும்பப் பொறுப்புகளை தாங்களே சுமக்கும் பெண்களுக்கு, விலைவாசி உயர்வை கருத்திலேகொண்டு அவர்களுக்கு மானியமாக வழங்கப்படும் 600 ரூபாயை 750 ரூபாயாக உயர்த்தி, அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

அரசு மற்றும் தனியாரிடம் பணிபுரியும் பெண்களுக்கு மாவட்டத்திற்கு ஒரு விடுதியாவது கட்டி கொடுத்து பணிபுரியும் இத்தகைய பெண்களுக்கு உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற பெண்களுக்கு, முதியோர் உதவித் திட்டம் கீழுள்ள வயது வரம்பை 30–லிருந்து குறைத்து, குறைந்தபட்சமாக 20 வயது என்று ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரதட்சணை கொடுமையை ஒழிக்க அரசு பல வழிமுறைகளை வகுத்து, தண்டிக்கப்பட்டவர்கள் தண்டனையிலிருந்து தப்பாமல் இருக்கும்பொட்டு சட்டத்தைத் தீவிரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர், விதவை பென்சன் தாமதமாகும் நிலை மாற வழி செய்யவேண்டும். சில இடங்களில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது' பென்சன் தொகை உடனடியாகக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.



உதகையில் உள்ள காது கேளாதோர் பள்ளியில் சுமார் 55 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மேல்வகுப்பு படிப்பதற்கு எட்டாம் வகுப்பு வரை அதை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10 இலட்சத்திற்கும் அதிகமாக இருக்கும் உடல் ஊனமுற்றோர், பார்வையில்லாதோர், காது கேளாதோர் மற்ற ஊனம் உற்றவர்களுக்கு அரசுத்துறையில் 1 சதவீத இடஒதுக்கீடு என்று இருப்பதை 2 சதவீதமாக்கி, அரசுத்துறையில் அவர்களுக்கு இடஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலை கிடைக்காத, பார்வையற்றோருக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை, பட்டதாரிகள், முதுநிலை பட்டதாரிகளுக்கு மாதம் 100 ரூபாயிலிருந்து 150 சேர்த்தும் புதுமுக வகுப்பு மேல்நிலை வகுப்பிலிருந்து பட்டப்படிப்பு முடிக்காதவர்கள் வரை ரூபாய் 75–லிருந்து 125 சேர்த்தும் இதர வகுப்புகளுக்கு ரூபாய் 50–லிருந்து 100 சேர்த்தும் உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பார்வையற்ற மாணவர்களுக்காக தேர்வின் போது எழுதும் எழுத்துத் துணை உதவியாளர்களுக்கு தேர்வு ஒன்றுக்கு 6 ரூபாய் கொடுக்கும் நிலை இருக்கிறது. மூன்று மணி நேர தேர்விற்கு அந்த உதவியாளர்களுக்குக் கொடுக்கும் தொகை மிகவும் குறைவு. ஆகவே, அதை 12 ரூபாயாக உயர்த்தி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோர் பயன்படுத்தும் மோட்டார் பொருத்தப் பட்ட ஊர்திகளுக்கு வழங்கப்படும் நிலஎண்ணெய் தொகையில் 50 சதவீதம் மைய அரசு மானியமாக வழங்கும் திட்டத்தில் 2 குதிரை சக்தி கொண்ட மோட்டார் ஊர்திகளுக்கு மாதத்திற்கு 15 லிட்டர் நில எண்ணெய் என்றும் அதற்குமேல் உள்ள மோட்டார் பொருத்தப்பட்ட ஊர்திகளுக்கு 25 லிட்டர் நில எண்ணெய் என்று கொடுப்பதை முறையே 25 லிட்டர் என்றும் 40 லிட்டர் கொடுக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எட்டாம் வகுப்புதேறிய ஆதிதிராவிடர் பெண்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் திருமண திட்டத்தில் பணம் இல்லாமல் திருமணங்கள் நடைபெற்று இருக்கின்றன. அப்படி திருமணங்கள் முடிந்துவிட்டாலும்கூட அந்தப் பணத்தை உடனடியாக தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள் இருப்பினும், அவர்கள் நம்பும் வகையில் நமது அரசாங்கம்

10.40 மணி

அந்தப் பணத்தை உடனடியாக அவர்களுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆதிவாசி இனப் பெண்கள் 5–ம் வகுப்பு படித்தாலே அவர்களுக்கு திருமணத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கும் 5000 ரூபாய் வழங்கப்படும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அதைக் கொஞ்சம் இன்னமும் தளர்த்தி இரண்டு ஆண்டுகள். குறைத்து, 3-ம் வகுப்பு படித்திருந்தாலே இலவசப் பண உதவி கிடைக்கும் என்று ஆணையிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது ஆதிவாசிப்பெண்கள் அதிக அளவில் படித்து வருகிறார்கள். ஆனால் இப்போது 18-20 வயதாகியிருக்கும் பெண்கள் எல்லாம் அவ்வளவாகப் படிக்கவில்லை. அவர்கள் திருமண வயதுக்கு வந்துவிட்டதன் காரணமாக, ஆதிவாசிப் பெண்கள் 3-வது வகுப்பு படித்திருந்தால் உதவிப் பணம் கிடைக்கும் வகையில் மாற்றி உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கர்ப்பமுற்ற தாய்மார்களுக்கு ரூ. 200 வழங்குவதற்காக அவர்கள் மருத்துவச் சான்றிதழ், வருமான சான்றிதழ் போன்றவை பெற வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அந்தச் சான்றிதழ்களைப் பெறுவதில் மிகுந்த கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் மருத்துவ மனைகளில் அட்மிட் செய்யப்படும் போதே, அந்தந்த மருத்துவ மனைகளிலுள்ள மருத்துவர்கள் அவர்களுக்குரிய சான்றிதழ்களை அந்த தாய்மார்களுக்கு வழங்கி விட்டால் அதனால் பலன் கிடைப்பதில் ஏற்படும் தாமதம் தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரகத் தொழில் வளர்ச்சிக்கு 24,74,50,000 ரூபாய்க்கு மேல் அமைச்சர் அவர்கள் இங்கே கேட்டிருக்கிறார்கள். இதில் மகளிரை ஊக்குவிக்கும் வகையில் அப்பளம் இடுவோர், ஊறுகாய்த் தொழில் ஈடுபட்டோருக்கு அதிகமான ஊக்கத் தொகை தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெறும்போது 5 முதல் 10 பேர் என்று ஒன்று சேர்ந்து கூட்டாகத் தொழில் செய்பவர்கள், நாங்கள் சேர்ந்து கூட்டாகத் தொழில் செய்ய விரும்புகிறோம் என்று சொன்னால் அவர்களுக்கு தரப்படும் கடனை ஒட்டு மொத்தமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அடுத்ததாக, சிவகாசி தீப்பெட்டித் தொழிற் சாலைகளில் பணிபுரியும் சிறுவர்கள், சிறுமிகள் அங்கே வேலை செய்யும் பெரியவர்களைக்காட்டிலும் சிறந்த முறையிலும், பெரியவர்களைவிட அதிகமான அளவிலும் பணி செய்தும்கூட சிறுவர்களுக்கு மிகக் குறைந்த ஊதியத்தைக் கொடுக்கிறார்கள். இம்முறை மாறி வேலைக்கேற்ப பெரியவர்களுக்கு கொடுக்கப் படும் ஊதியத்தையாவது சிறுவர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்ததாக மலைவாழ் மக்களுக்கும், ஆதிவாசி மக்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் சுய வேலைவாய்ப்புத் திட்டங்களில் முன்னுரிமை கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் மாவட்டத்திலுள்ள கோத்த இனத்தைச் சேர்ந்த மலைவாழ் ஆதிவாசிகள் சிறந்த தச்சுத் தொழிலாளர்கள், சில ஆண்டுகளாக



இத்தொழில் குறைந்து கொண்டு வருகிறது. மீண்டும் அவர்களை ஊக்குவித்து அந்தத் தொழிலை பழைய நிலைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தொதவர் இனத்தைச் சார்ந்த பெண்கள், பின்னல் வேலைப்பாட்டில் பிரசித்தி பெற்ற சால்வை களைச் செய்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் ஊதியம் மிகக் குறைவானது. உலக அளவில் அந்த சால்வைகள் பிரசித்தி பெற்றவை. வெளிநாட்டில் அதிகமாக விற் பனையாகக் கூடியவை. அவர்களின் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக தேன் எடுக்கும் தொழிலில் மலைவாழ் ஆதிவாசி மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அதில் அதிகமாக ஈடுபடும் வகையில் அவர்களின் ஊதியமும் உயர்த்தப்படவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் கிடைக்கும் பழ வகைகளைப் பயன்படுத்தி ஒரு ஜாம் பாக்டரி அங்கே அமைத்து, நாடு முழுவதும் விநியோகம் செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே நீலகிரி மாவட்டத்தில் 15-ம், கேரளா மாநிலத்தில் ஒன்றும்தான் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற் சாலைகள் உள்ளன. நீலகிரி சங்கங்களில் 15 ஆயிரம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 25 ஆயிரம் ,ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை உற்பத்தியை அவர்கள் செய்கிறார்கள். இந்த அமைப்புக்கு மாவட்டத்தின் மொத்த உற்பத்தியில் 25 சதவீதம் பங்கு சேரும். மேலும் அதிக அளவில் உற்பத்தியைப் பெருக்க அதன் மத்திய அமைப்பான இன்கோ சேர்வ் சலுகையையும் உதவியையும் செய்வதுடன், நவீன விஞ்ஞான முறையிலேயே அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதியத்தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு எல்லா படித்தொகைகளும், ஊதிய உயர்வும் வழங்கவேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர பதவி உயர்வும் கொடுக்கப்பட வேண்டும். அதற்கெல்லாம் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்தற்காக, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் மீண்டும் நன்றி கூறிக்கொண்டு, அமர்கிறேன். ஜெய்ஹிந்த்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சமூக நலத்துறை சம்பந்தப்பட்ட பிரச்சினையில் எங்களுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். சமூகத்தின் சரிபாதியாக இருக்கிற பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றோர் களுக்காக விவாதிக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையின்

மீது நம்முடைய அரசாங்கத்தின் கொள்கைப்படி இதற்கும் 30 சதவீதம் நேரத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு) நமது துணைத் தலைவர் அவர்கள் கருணை காட்டுவார்கள் என்றும் நினைக்கிறேன்.

இந்த ஆண்டு பெண் குழந்தைகளுடைய ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது. உசிலம்பட்டி உள்ளிட்ட தென் மாவட்டங் களில் பிறக்கின்ற குழந்தைகள் பெண் குழந்தைகளாக இருந்து விட்டால், கள்ளிப் பால் ஊற்றி, நெல்மணிகளை மூக்கிலே திணித்து கொன்று விடுகின்ற கொலை பாதகச்செயல்கள் ஓராண்டு, ஈராண்டல்ல, கடந்த 15 ஆண்டுகாலமாகவே நடந்து கொண்டிருக்கிறது. நான் சார்ந்துள்ள ஜனநாயக மாதர்ச்சங்கமும், மற்றும் பல சேவை அமைப்புகளும் அந்த இடத்திற்கேச் சென்று ஆய்வு செய்து, அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கொடுத்தபோதிலுங்கூட, அவர்கள் எந்தவித நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

10–45 மணி

அதுமட்டுமல்ல. நம்முடைய தமிழகச் சட்டமன்ற வரலாற்றிலேயே இந்த முறைதான் மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையிலேயே அந்தப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது. பிறந்த குழந்தை பெண் குழந்தை என்று அறிந்தவுடன் அதைக் கொன்றுவிடுவது என்ற முறை கிராமத்துப் பாணியாக இருந்தாலும் கருப்பையில் இருப்பது எந்தக் குழந்தை என்று கண்டுபிடித்து, 'அம்னியோ சென்டஸஸ்' என்ற விஞ்ஞான முறையின் மூலம் கண்டுபிடித்து அவை பெண் குழந்தைகளாக இருந்தால் அவற்றை அப்போதே அழித்து விடுகிற அரக்கத்தனம் மிக மிகச் சாதாரணமாக நடந்துகொண்டிருக்கிறது. ஒரு ஓட்டலுக்குச் சென்று காப்பி சாப்பிடுவதைப்போல இது நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கொடுமைகளைத் தடுத்து பெண் குழந்தைகளைக் காப்பாற்றஅரசு முன்வரும் என்றும்,கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்றும் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

முதலாவதாக இந்தக் கொடுமைகளுக்கான சமுதாயப் பின்னணிகளை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது பெண்களைப் பற்றிய பிற்போக்குத்தனமான பார்வையைப் புரிந்து நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். தாய், தகப்பன் மீது மட்டும் நடவடிக்கை எடுப்பதால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது. பெண்களை வளர்ப்பது, திருமணம் செய்து கொடுப்பது, படிக்க வைப்பது, சீதனம் கொடுப்பது போன்றவற்றிற்கு ஆகும் செலவு, வரதட்சணைப் பிரச்சினை இவற்றை எல்லாம் பார்க்கவேண்டும். வரதட்சணைக் கொடுமை



என்பது பெரும் புற்றுநோயாக இன்றைக்கு பெருகிக்கொண்டிருக் கிறது. 1961-ஆம் ஆண்டு நேரு அவர்களும், 1986-ஆம் ஆண்டு அவரது பேரனும் கொண்டு வந்த வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தில் குறைகள் பல இருப்பினும் அதை அமலாக்குவது என்பது கேலிகூத்தாகிவிட்டது. அது பாதிக்கப்பட்டவர்களுக்கு பலன் அளிக்கவில்லை. நீதி மறுக்கப்படுகிற நிலைமை இன்னும் தொடருகிறது. பெண்ணாகப் பிறப்பதே பெரும் பாவம் என்கிற கருத்தினை மாற்றி 'மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா' என்ற கவிமணி அவர்களின் பீடுநடை போடுகின்ற கருத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த அரசு இதற்கான பிரத்தியேகமான நிதியாதாரத்தை எதிர் பார்க்காமல் சில ஆக்கபூர்வமான திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒன்று பெண் குழந்தையைப் பெற்றால் அவர்களுக்கு வீட்டுமனை, வேலை வாய்ப்பு ஆகியவை அளிக்கப்படும் என்று அறிவிக்க வேண்டும். பெண் குழந்தைகளைப் பள்ளிக்குத் தொடர்ந்து அனுப்பினால் அவர்களுக்கு மாதம் தோறும் 100 ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படும் என்று அறிவிக்க வேண்டும். டி.வி. வானொலி, திரைப்படங்கள் போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்களில் பெண் குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டிய அவசியம் பற்றி தொடர்ச்சியான பிரச்சாரம் செய்யவேண்டும். பெண் குழந்தை களைச் சுமையாகக் கருதுவது தவறு என்பதை உணர்த்த வேண்டும். பெண் குழந்தைகளை வளர்க்க விரும்பாவிட்டால் அவற்றைக் குழந்தைக் காப்பகங்கள் மூலமாக எடுத்து வளர்க்க வேண்டும். பள்ளிப்பாடப் புத்தகங்களிலும், கல்லூரிகளிலும் இதை ஒரு பாடமாகவே ஆரம்பம் முதல் உணர்த்த வேண்டும். இப்போது கூட ஒன்றாவது வகுப்புப் புத்தகத்தில் ஒரு படம் இருக்கும். அதில் அப்பா என்ன செய்துகொண்டிருக்கிறார்? ஈசி சேரில் உட்கார்ந்து கொண்டு பேப்பர் படிக்கிறார். அம்மா என்ன செய்கிறார்? சமையல் அறையில் சமைக்கிறார். தம்பி என்ன செய்கிறான்? அவன் படிக்கிறான். தங்கை என்ன செய் கிறாள்? அம்மாவுக்கு உதவியாக வீட்டைப் பெருக்கிக் கொண்டிருக்கிறாள். ஏன்? அதை மாற்றக்கூடாதா? அந்தப் பெண் படிப்பதுபோல் மாற்றிச் சொல்லக்கூடாதா? பெண் கூட்டுவதற்காக மட்டுமே பிறந்திருக்கிறாளா? இதிலே என்ன பார்வை இருக்கிறது என்பதைப் பாருங்கள். ஆகவே எந்த ஆட்சி வந்தாலும் இந்தப் பார்வை மறையவேண்டும் என்பதற்காகத் தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய நினைவாக வந்திருக்கக்கூடிய திருமண உதவித் திட்டம் சம்பந்தமாக ஒரு வார்த்தை. தகுதியுள்ளவர்கள் அனைவருக்கும் அது கிடைப்பதில்லை. அதிலே தாமதம் இருக்கிறது. சிலருக்குக் கிடைக்கிறது. சிலருக்குக் கிடைக்கவில்லை. பல மாதங்கள் காத்திருக்கவேண்டி இருக்கிறது. அடுத்த மாதம்

தருவது மட்டுமல்ல. அடுத்த ஆண்டு கூட ஆகிவிடுகிறது. பணம் வரட்டும் என்று சொல்கிறார்கள். மாப்பிள்ளை கிடைப்பதே இந்தக் காலத்தில் கஷ்டம். ஆகவே அந்தப் பணம் கிடைக்கவில்லை என்று சொல்லி கல்யாணத்தை ஒத்தி வைத்தால் மாப்பிள்ளை போய்விடுவார். ஏனென்றால் எந்த இடத்தில் கிராக்கி இருக்கிறதோ அங்கே அவர் போய்விடுவார். ஆண்களை இன்றைக்கு ஏலம் விட்டுத்தானே பெண்கள் வீட்டிலே விலைக்கு வாங்குகிறார்கள். மாப்பிள்ளை வியாபாரம் தானே நடக்கிறது. எனவே அந்த மாப்பிள்ளை வியாபாரத்தில் ஏலம் எந்தப் பக்கம் ஜாஸ்தியாக இருக்கிறதோ அந்தப் பக்கத்திற்குப் போய்விடுவார் மாப்பிள்ளை. எனவே நீங்கள் பணம் கொடுப்பதைத் தாமதப் படுத்தினால் திருமணத்திற்குப் பணம் கொடுப்பது மட்டுமல்ல. மாப்பிள்ளை தேடிக்கொடுக்கக்கூடிய பொறுப்பும் அரசுக்கு வரும் என்பதை நான் எச்சரிக்கையாக இங்கே சொல்ல விரும்புகிறேன். ஆகவே தகுதி வாய்ந்த அனைவருக்கும் அந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்யவேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. அந்த உதவித்தொகையைப் பெறுவதில் சில குளறுபடிகளும், சில சங்கடங்களும் இருக்கின்றன. சிலபேர் சொல்கிறார்கள் 5,000 ரூபாய் வாங்குவதற்கு 1,000 ரூபாய் செலவழிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. யாரிடம் அவ்வாறு கொடுத்தீர்கள், சொல்லுங்கள் என்று அமைச்சர் கேட்டால் சொல்ல முடியாது; சொன்னால் அந்தப் பணமும் கிடைக்காமல் போய்விடும் என்று சொல்வார்கள்......

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் பேசுகிறபோது திருமண உதவித் தொகை பெறுவதில் இருக்கக்கூடிய இடர்பாடுகளை எல்லாம் கூட எடுத்துச் சொன்னார்கள். இந்தத் திட்டம் இந்த ஆண்டு தான் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது. எனவே இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதில் ஆரம்பத்தில் சில நிர்வாகக் கோளாறுகள் இருக்கத்தான் செய்தது. என்னென்ன சான்றிதழ்களைப் பெறுவது, யார் மூலம் பெறுவது, இந்தத் தொகையை யார் பொறுப்பாக பயனாளியிடத்தில் ஒப்படைப்பது என்பது பற்றி இந்த அரசு ஒரு அறிவிப்புச் செய்தது. அதற்குப் பிறகு தேவைப்பட்ட நேரத்தில் சில மாறுதல்களைச் செய்தது இந்த அரசு. இன்னும் சில மாறுதல்களை நாங்கள் செய்ய இருக்கிறோம். எனவே, புதிதாக அறிமுகப்படுத்திய ஒரு திட்டம் உடனடியாக முழு பயனை எந்தவிதமான சிரமும் இன்றி எல்லோருக்கும் கொடுப்பது என்பது இயலாத காரியம். காலப் போக்கில் இதிலே இருக்கக்கூடிய குறைபாடுகள் நீக்கப்படும் என்பதை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து இந்த உதவி பெற 8-வது வகுப்பு வரை படித்து இருக்கவேண்டும் என்று நம்முடைய கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். இது கல்வியை ஊக்கப்படுத்துவதற்காக கொடுப்பது என்று சொன்னார்கள். அது ஒரு முறையிலே சரியானதுதான். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், திருமண உதவி பெண்களுடைய கல்வியை ஊக்குவிக்கப் போதுமானது அல்ல. எல்லோரும் அதை ஒத்துக் கொள்வார்கள். இது கல்வி அடிப்படையிலே என்பதை விட திருமண உதவி என்ற முறையில், வறுமை அடிப்படையிலே அதை நிர்ணயித்தால் உதவியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். பெண் குழந்தைகளை படிக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். முதல் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை படிக்கும் பெண் குழந்தைகள் இடையிலே 45 சதமானம் பேர்கள் பள்ளிக்குப் போவதில்லை. அதே மாதிரி 5-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை படிக்கின்றவர்களும் இடையிலே நின்று போகின்றார்கள். எங்கே போகின்றார்கள்? உல்லாச வாழ்விற்கா போகிறார்கள்? அம்மா பெற்றுப் போடுகின்ற குழந்தைகளுக்கு ஆயா வேலை பார்ப்பதற்காக அல்லது வேறு வேலை செய்வதற்காக, பட்டாசு வேலை செய்வதற்காக அவர்கள் அனுப்பப்படுகின்றார்கள். ஆகவே கல்வியை தெய்வப் பெண்ணாக்கிய இந்த சமுதாயம்' மானிடப் பெண்ணை மடமையிலே தள்ளுவது என்ன நியாயம் என்று கேட்க நான் விரும்புகிறேன். ஆகவே இந்த முறையில் அவர்களுடைய கல்விக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். 85 லட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு போடுகின்ற ஏற்பாடு இங்கு தான் இருக்கிறது. அதே போல, பள்ளிக்கூடத்திற்கு செல்லமுடியாத நிலையில்தான் பெரும்பாலான பெண் குழந்தைகள் இருக்கின்றார்கள். இதனை இந்த அரசு பரிவோடு பார்க்கவேண்டும், செயலிலே காட்டவேண்டும்.

**10—50 மணி**

ஜனநாயக மாதர் சங்கம் கோரியபடி, திருமண உதவியில் மலை ஜாதி பெண்களுக்கு 5-ம் வகுப்பு வரை படித்தால் போதும் என்று வரம்பை ஏற்றிருப்பதற்காக முதல்வர் அவர்களுக்கு நன்றி. அதுபோல ஆதிதிராவிடர் வகுப்பினை சேர்ந்த பெண்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும். இப்படிப் படிப்படியாக வறுமை அடிப்படையில் இந்த திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு வரதட்சணைக் கொடுமையைக் கருத்தில் கொண்டால் கலப்புத் திருமணம் காதல் திருமணம் தேவை என்றே நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் கலப்புத் திருமணத்திற்கு உதவித் தொகை மிகவும் தாமதமாக கொடுக்கப் படுவதாக புகார் வருகிறது. 2, 3 ஆண்டுக்காலமாக மனுவுடன் அலைகின்ற தம்பதிகளை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே 3 மாதத்திற்குள்ளாக கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதோடு தகுதி

அடிப்படையில் வேலை வாய்ப்பிலே முன் உரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கணவன் இறந்துவிட்ட நேரத்தில் குடும்ப நிலையை சீர்படுத்த ரூபாய் 2 ஆயிரம் என்பதை 3 ஆயிரம் என்று உயர்த்தியதை பாராட்டுகிறேன். இதனைப் பெறுவதில் அனாவசியமான இடையூறுகள் இருக்கின்றன. அவைகள் தவிர்க்கப்படவேண்டும். இது எந்த நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதியோர் உதவித் தொகை சம்பந்தமாக இன்றைக்கு தாமதம் கூடுதலாகிக்கொண்டிருக்கின்றது. அது தவிர்க்கப்பட வேண்டும். இதில் இரண்டு தடைகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்று. முதியோர் பென்சன் பெறக்கூடியவர்களுக்கு ஆண் பிள்ளைகள் இருந்தால் கிடைப்பது இல்லை. மகன் இருந்தால், என்னமோ ஊரிலே இருக்கின்ற மகன்கள் எல்லாம் தாயைக் காத்த தனயன்களாக இருக்கின்ற மாதிரி எல்லோருடைய அபிப்பிராயம். பலபேர் அம்மாவை அம்போ என்று தெருவிலே விட்டுப்போகின்றவர்கள் தான் அதிகமாக இருக்கின்றார்கள். இங்கே இருப்பவர்களைச் சொல்லவில்லை. பொதுவாக நாட்டில் இருப்பவர்களைத்தான் சொல்கிறேன்.

ஆகவே அப்படி தாயைக் காக்காத தனயன் என்று ஒரு சர்டிபிகேட் வாங்கிக்கொடுத்தாலாவது அந்த அம்மையாருக்கு முதியோர் பென்சன் கொடுப்பதற்கு உதவி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலே நாம் ஆண் பார்வை தானே பார்க்கின்றோம். பெண் பிள்ளைகள் என்றால் சம்பாதிக்க முடியாது. அதைப் பெற்றால் பரவாயில்லை. ஆண் பிள்ளையை பெற்றால் பென்சன் இல்லை என்பது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. நான் கூட பல இடத்திலே தொகுதியிலே பார்த்திருக்கிறேன். அதை மாற்றவேண்டும்.

அடுத்தது, விதவைகள். 40 வயது உச்ச வரம்பு. 40 வயதுக்கு முன்னே புருஷன் செத்துப்போனால் என்ன பண்ணுவது? நீங்கள் உத்தரவு போடமுடியாது. 40 வயதிலேதான் புருஷன் சாக வேண்டும். அந்த அம்மை விதவை ஆக வேண்டும் என்று போடமுடியாது. 18 வயதிலே கூட இன்றைக்கு விதவையாகி விடுகின்றார்கள்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 40 வயதிலேதான் கணவன் சாகவேண்டும் என்று சொல்லி ஒரு உத்தரவைப் போட முடியாது. அந்த 40 வயது உச்சவரம்பு வைக்கப்பட்டதனுடைய நோக்கமே விதவை மறுமணம் திட்டத்தை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். 40 வயதிற்குள்ளாக அந்த விதவைகள் எப்படியாவது மறுமணம் செய்துகொள்ளவேண்டுமென்று அந்த மறுமணத் திட்டத்தை ஊக்கப்படுத்தவேண்டுமென்றுதான் 40 வயது வரை வரம்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 40 வயதிற்கு மேற்பட்ட விதவையை யாரும் மணந்துகொள்ள முன்வரமாட்டார்கள் என்று கருதுகிறேன்.



**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 40 வயதிற்குள்ளேயே வருவதில்லை. மனைவி செத்துப்போனால் கருமாதி வீட்டிலேயே கல்யாணம் நிச்சயமாகி விடும். ஆனால் ஒரு பெண் கணவனை இளம் வயதிலே இழந்தால் ஆயிரம் கேள்விகள் கேட்பார்கள். இன்னாருக்கு கல்யாணம் செய்துகொடுத்தார்கள் என்பது பற்றியெல்லாம் கேட்பார்கள். அதைத்தான் நான் இங்கே சொல்கிறேன். இந்த சமுதாயம் ஆண் ஆதிக்க சமுதாயம் என்று சொல்கின்றார்களே அது ரொம்ப கரெக்ட். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது சரி. அதற்காக 40 வயது வரை கல்யாணம் பண்ணிக்கொள்ளாதவர்கள் என்று சொல்லி தெருவிலே அவர்களை விடவேண்டாம். நீங்கள் விதவை ஆனவர்கள் எல்லோருக்குமே ஆதரவற்றவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மறுமணம் இன்னும் செய்துகொள்ளவில்லை என்று சர்டிபிகேட் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக தமிழ்நாடு சமூக நல வாரியம் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்பது என்னுடைய கருத்து. உயர்மட்ட பெண்களுடன் இல்லாமல், அடிமட்டத்தில் உள்ள பெண்களிடம் விழிப்பு உணர்ச்சி ஏற்படுத்துகின்ற அளவுக்கு மாதர் அமைப்புகளில் பிரதிநிதிகள் பங்கு பெறக்கூடிய முறையிலே அதை மாற்றியமைத்து ஏராளமான வேலைவாய்ப்புக்களை பெற திட்டங்கள் இருப்பதை கீழ்மட்டத்திலே இருந்து கொண்டுசெல்லக்கூடிய முறையில் ஆக்கப்பூர்வமான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

10-55 மணி

சமூக நலன் தொடர்பாக 1988 ஆம் ஆண்டுக்கான ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையைப் பார்க்கும்போது அதிலுள்ள ஒரு சிலவற்றை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 1975 முதல் மைய அரசின் உதவியோடு துவங்கிய திட்டம். 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உதவும் திட்டம். இதில் கோதுமைப்பொருட்கள் கொண்ட சத்துணவுத் திட்டத்துக்கு 164 லட்சம் ரூபாய் மைய அரசு உதவி வரப்பெற்றது. இது வரப்பெற்றது 1986—88 ஆம் ஆண்டுகளில். இதில் செலவிடப்பட்டது ரூபாய் 112 லட்சம் மட்டுமே. 51 லட்சம் செலவிடப்படாமலே விடப்பட்டது. பட்ஜெட்டில் 647 லட்ச ரூபாய் 1984-85 ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் சுமார் 150 லட்சம் ரூபாய் செலவிடப்படவில்லை. 60 அங்கன்வாடி மையங்களில் குடிதண்ணீர் வசதி கிடையாது. 120 அங்கன்வாடிகளில் கழிப்பிட வசதி கிடையாது. மகப்பேற்றுக்கு முன்னால் டெட்டனஸ் ஊசி போடும் திட்டத்தில் 1984—87 ஆண்டுகளில் 67 சதம் வரையில் பணி நடைபெறாமலே இருந்தது. அனாதைக் குழந்தைகளுக்கு திருச்சி பாரதிபுரம் மாணவர் விடுதியில் ஒரு தங்குமிடம், காட்டேஜ் கட்டும் பணி 1978 முதல்

முடிக்கப்படாமலேயே உள்ளது. அனாதைக் குழந்தைகளின் உணவுச் செலவுக்காக ஒரு குழந்தைக்கு மாதம் 100 ரூபாய் உதவி என்று இருந்தும் வெறும் 60 ரூபாய் அளவுக்கே செலவு செய்யப்பட்டது. சமூக நலப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் தொகையே செலவழிக்கப்படவில்லை என்றால் அது சிக்கனமாகாது. சமூக நலப் பணிகள் மீது அக்கறையற்ற அணுகுமுறையாகும். இது மாற்றப்பட வேண்டும்.

சிட்கோ தொழில் கூட மனைகளை எல்லாம் சிறு தொழில் அதிபர்களுக்கு உரிமையாக்க வேண்டுமென்று இருக்கிறார்கள். ஆனால், சிட்கோவில் கட்டப்பட்ட தொழிலாளர் குடியிருப்புகள் சென்னை, புதுக்கோட்டை போன்ற பல நகரங்களில் உள்ளன. இந்தக் குடியிருப்புகளை அவற்றில் வசிக்கும் தொழிலாளர்களுக்கே உரிமையாக்க வேண்டுமென்று அரசு ஆணையிருக்கிறது. ஆனால் சிட்கோ மட்டும் அதனை அமுல்படுத்த மறுக்கிறது. அலட்சியப்படுத்துகிறது. இதில் அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் தலையிட்டு இக்குடியிருப்புகளை தொழிலாளர்களுக்கே உரிமையாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறு தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் சிட்கோ 1970-ல் துவங்கப்பட்டது. ஆனால் 1986-ல் ரிசர்வ் வங்கி நடத்திய சர்வே என்ன கூறுகிறது? 18 ஆயிரம் சிறு தொழில் நிறுவனங்கள் நலிவடைந்துள்ளன, 1984–85-ல் 20.75 சதவிகிதம் சிறு தொழில் வளர்ச்சி விகிதம் இருந்தது. 1987-88-ல் 10.37 சத விகிதம் என்கிற அளவுக்கு குறைந்திருக்கிறது. நலிவுக்கு என்ன காரணம்? 63 சத விகிதம் நலிவுற்ற சிறு தொழில்கள், நடைமுறை மூலதனம் இல்லாததால், மூலப்பொருள் கிடைக்காததால், விற்பனை செய்வதில் சிரமங்களால் நலிவுற்றதாக காரணங்கள் கூறப்படுகின்றன. ஆகவே, இக்காரணங்களைப் போக்குவது சிட்கோவின் பணி. சிட்கோ ஏன் செய்யவில்லை? ஏன் செய்ய முடியவில்லை? இனியேனும் செய்யும் நிலையில் மாற்றியமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். சிறுதொழில்கள் தான் வேலைவாய்ப்புக்கு இடம் அளிப்பன. பெரிய தொழிற்சாலைகளில் ஆட்குறைப்பு, வேலை நிறுத்தம், கதவடைப்பு என்று நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலையில் கூட ஆயிரம் பேரை வெளியேற்றிவிட்டுத் தான் ஒப்பந்தமே ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 மணித் துளியாகியிருக்கிறது. போதாதா? முடியுங்கள்.

**திருமதி பாப்பா உமாநாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் கொஞ்சம் நேரத்தில் முடித்து விடுகிறேன். சிறு தொழில் வளர்ச்சிக்கு, சிறு தொழில் நலிவைப் போக்க அரசின் கூர்மையான கவனம், நடவடிக்கை தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து, சிட்கோ பற்றி ஆடிட்டர் ஜெனரலின் 1988 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். 1984–88-ல், 24 மையங்களில் உருவாக்கப்பட்ட தொழிற்கூட மனைகள், 124 சிறிய மனைகள் 1988 ஆம் ஆண்டு வரையிலும் பயன்படுத்தப் படாமல் இருந்தது. இவற்றின் மதிப்பு ரூ. 25 லட்சம். தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 811 சிறிய தொழில்கூட மனைகளில் 44 சதவிகித மனைகளில் எந்தத் தொழிற்சாலையும் நிறுவப்படவில்லை. சிட்கோ 1.24 கோடி ரூபாய் மதிப்புடைய 1224 ஏக்கர் நிலத்தை வைத்துள்ளது. இந்நிலம் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்படாமலேயே உள்ளது. சிட்கோ, சிறுதொழில்களுக்கு விற்பனை வசதி எதையும் செய்து தரவில்லை. சிட்கோ துவங்கிய நாளிலிருந்து ஏற்றுமதி செய்த பொருளின் மதிப்பு 3 லட்சம் ரூபாய். ஆனால் இதற்கான சம்பளச் செலவோ ரூ. 5 லட்சம். அதுமட்டுமல்லாமல் சிறு தொழிலுக்கு தேவையான கச்சாப்பொருள்கள் என்று சொல்லக் கூடிய இரும்பு, எஃகு, கோக் கரி சம்பந்தப்பட்ட தொழில்களிடம் சுமார் 3½ கோடி ரூபாய் கூடுதலாகக் கட்டணம் வசூலித்தது. இது 1988 ஆம் ஆண்டு இறுதிவரை நீடித்தது. இந்த நிலைமையில் இப்போது வந்திருக்கிற புதிய அரசின் அணுகுமுறையில் ஏதாவது மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றி உங்களுடைய கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்படவில்லை. இதைப்பற்றி அமைச்சர் பதிலில் குறிப்பிடுவார் என்று நினைக்கிறேன்.

டான்சியின் நிலையும் இதேபோலத்தான் இருக்கிறது. டான்சி பல நிறுவனங்களை மூடிவிட்டது. இன்னும் சில தொடர்ந்து நடக்குமா என்று தெரியவில்லை. சிறுதொழில்களுக்கு மூலப்பொருள் குறிப்பாக, இரும்பு, எஃகு, நிலக்கரி போன்றவை கிடைக்க உத்தரவாதம் இல்லாவிட்டால், இவற்றின் நலிவைத் தடுக்க முடியாது.

11–00 மணி

அடுத்து பெண்கள் விடுதிகள். இன்றைக்கு 7 மாவட்டங்களில் விடுதிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. குறைந்த வருமானமுள்ள பெண்களுக்கு தங்கும் விடுதிகள் எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக பெரிய தாலுக்கா சென்டர்களிலும் ஏற்படுத்த வேண்டும். கணவனால் கைவிடப்பட்ட, பெற்றோர்கள் ஆதரவில்லாத பெண்கள் குழந்தைகளுடன் தங்கிட தற்காலிக தங்கும் விடுதிகளை அதிகப்படுத்த வேண்டும். அடுத்து, அரசு துறையிலும், தனியார் துறையிலும் நடத்தப்படும் பல விடுதிகளில் பல முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. எனவே, சென்னை மற்றும் பல பகுதிகளில் இவற்றைக் கண்காணிக்க மாதர் அமைப்புகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப் பட வேண்டும். இப்போது அப்படி விடுதிகளில் பல கோளாறுகள் இருக்கின்றன. வெளியிலே ஏற்பட்ட ஒழுக்கக் குறைவினால்

இந்த இல்லங்களுக்கு அந்தப் பெண்கள் வந்திருக்கிறார்கள். அந்த அபய இல்லங்களில் உள்ள அதிகாரிகள் அந்தப் பெண்களைத் தவறாகப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. அதைப்பற்றி ஒரு விரிவான ஆய்வு செய்ய வேண்டும், பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். லீகல் கவுன்சலிங் சென்டர்ஸ், தாற்காலிக தங்கும் விடுதிகள் ஆகியவற்றைக் கூடுதலாகத் துவங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வாலன்டரி அமைப்புகளிடம் மட்டும் இந்தப் பொறுப்பை ஒப்படைக்காமல், சமூகநலத் துறையில் கூடுதலாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பார்வையற்றோர், ஊனமுற்றோர் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன். பார்வை யற்றோர் விஷயமாக இந்த அரசு கூடுதலாக கவனம் செலுத்த வேண்டுகிறேன். சாலை ஓரத்திலே துண்டு விரித்து ஐயா, கண்ணு தெரியாத குருடன், கொஞ்சம் பிச்சை போடுங்கள் என்று கேட்கக்கூடிய நிலையை மாற்றி, தாங்களும் முன்னுக்கு வர முடியுமென்ற நம்பிக்கையோடு படித்து இருக்கக்கூடிய பார்வை யற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகள் தருவதில் இன்னும் அதிக மான அக்கறை செலுத்த வேண்டும். அவர்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால், அவர்கள் ஒரு போராட்டம் நடத்தி னார்கள். இதே சென்னை மாநகரத்தில் காவல் துறையினர் அவர்கள்மீது தடியடி நடத்தினார்கள். ஆயிரம்தான் காரணம் சொன்னாலும், கண் தெரியாதவர்கள் மீது தடியடி செய்வது ஒரு மனித நாகரீகமா? அது நடைபெற்றிருக்கிறது. மக்கள் மத்தியில் இந்த அரசைப்பற்றி அது ஒரு தவறான பிரதிபலிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய பிரச்சினைக்காக நம்முடைய சமூகநலத் துறை அமைச்சர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. 6 மாதத்திற்குள்ளிருந்து ஒரு வருடத்திற்குள்ளாக அந்தப் பார்வையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த முறையிலே அந்த வேலைவாய்ப்பை அவர்களுக்கு அளித்து, அவர்கள் கண்ணிலே ஒளியில்லை என்றாலும், அவர்களுடைய வாழ்க்கை யிலே ஒளி ஊட்டக்கூடிய முறையிலே காரியங்களைச் செய்ய வேண்டும்.

இது மாத்திரமல்ல. வேறு ஊனமுற்றவர்களும் இன்றைக்கு வேலைக்கு அலைகிறார்கள். கால் இல்லாமல், கை இல்லாமல் இருக்கிறவர்கள் அலைகிறார்கள். இப்படி என்னுடைய தொகுதி யில் ஏராளமானவர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். பல வருடங்கள் ஆகியும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வில்லை. ஆகவே, அந்த முறையில் இதைக் கவனிக்க வேண்டும். ஊனமுற்றவர்கள் விஷயத்தில் மற்றவர்களைவிட கொஞ்சம் கூடுதல் அவசரத்தோடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.



மகளிர் மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றும் பணியாளர்கள் பிரச்சினை பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் எழுப்பியுள்ளேன். இன்னும் அவர்கள் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டும். அவர்களுடைய எதிர்காலம் பாதுகாப்பாக அமைவதற்கு சில ஆலோசனைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களிடமும் தெரிவித்துள்ளோம். அதை அவர்கள் பார்த்து. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அதில் தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து நம்முடைய தமிழகம் முழுவதும் இன்றைக்கு ஏராள மான தொழில்கள் துவங்க இருக்கும் இந்தச் சூழ்நிலையில் கிராமப் பகுதிகளில் இருக்கிறவர்களுக்கு இது பற்றி விளக்கம் அளித்து, அவர்கள் பங்குபெறும் முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக சத்துணவுத் தொழிலாளர்கள் சம்பந்தமாக சென்ற பட்ஜெட்டிலே அவர்கள் பகுதிநேர நிரந்தரம் என்று அறிவித்திருக்கிறோம். பகுதி நேர நிரந்தரம் என்ற அறிவிப்பைக் கூட அப்படியே வைத்திருக்கிறார்கள். ஒரு நபர் குழு, 4-வது ஊதியக் குழு, 5-வது ஊதியக் குழு, எதிலும் இவர்களை சட்டை பண்ணவில்லை. ஆகவே, அவர்களை அரசு ஊழியர்களாக்கி, அவர்களுக்குச் சலுகைகள் தர வேண்டும். அவர்களுக்கு வாராந்திர விடுமுறை, பேறுகால வசதிகள் தர வேண்டும். இதில் ஏறத்தாழ 2 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அவர்களுக்குச் சொற்பச் சம்பளம்தான் கொடுக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களே, தினப்படி 100 ரூபாய் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்கள் 200, 300 ரூபாயிலே குடும்பம் நடத்த வேண்டியிருக் கிறது. இன்றைக்கு விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. ஆகவே இவர்கள் விஷயத்திலும், பால்வாடிகள் விஷயத்திலும் கவனம் செலுத்தி, அவர்களுக்கு நல்ல முறையிலே உதவி செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். நன்றி.

11-05 மணி

*திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறை மானியத்தின் மீது பேசுகின்ற நல்வாய்ப்புக் கொடுத்தமைக்கு உளமார்ந்த நன்றியை நவில்கின்றேன். எனக்கு முன்னதாக இங்கே பேசி அமர்ந்து இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் மிக நல்ல கருத்துக்களைத் தேவையான சந்தர்ப்பத்தில் தெளிவாக எடுத்து உரைத்து இருக்கின்றார்கள்.

உலக மகளிர் நாள் என்று கொண்டாடப்படுகின்ற ஆண்டு இது. அதனுடன் சேர்த்து சிறுமியர் ஆண்டு என்று சிறப்பாகக் கொண்டாடுவதற்கு வழி அமைக்கப்பட்டு இருக்கின்ற நல்ல ஆண்டு இது. உலகம் தழுவிய அளவில் மகளிர் நலம், சிறுமியர் நலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக புதிய முயற்சிகளும், அதற்கான ஆக்கப் பணிகளும் உலகம் தழுவிய அளவிலே ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்ற இந்த ஆண்டில் தமிழக அரசின் மூலமாக பெண்களுக்கு சம உரிமையும், 30 சதவீத வேலை வாய்ப்பும் இன்றைய நாளில் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டு இருப்பது உலக நாடுகளுக்கு கலைஞர் அரசு வழிகாட்டியாக அமைந்து இருக்கிறது என்று பெருமையாகச் சொல்ல நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என்ற நிலைமை 60 ஆண்டுக் காலத்திற்கு முன்பு, திராவிடர் இயக்கம் கொண்டுவந்த அந்தத் தீர்மானம் இன்று தமிழகத்திலே கழக அரசின் மூலமாக நிறைவேற்றப்பட்டதுடன், தேசிய முன்னணி அரசும் அதற்கு ஒப்புதல் தந்து, பெண்கள் நாட்டில் பிறக்கின்றபோது ஏளனமாகக் கருதப்படாமல் அவர்களுடைய பிறப்பையும் வாரிசுக்குத் தக்கவராக—ஆண்களுக்குத் தான் வாரிசு உரிமை என்று இருப்பதை மாற்றி—பெண்களும் வாரிசுக்குத் தக்கவர்கள் தான் என்ற நிலையை இன்றைக்கு அவர்கள் அடைந்து இருக்கின்றார்கள். சமுதாயத்திலே பெண்களுக்கு ஒரு ஏற்றத்தைச் சட்டத்தின் மூலமாக ஏற்படுத்தினாலும் கூட, சமுதாய வழக்கில் அந்தச் சம உரிமை வழங்கப்படுவதற்கு இன்னும் மன வளத்தை மக்கள் பெற்றாக வேண்டும். பெண்களுடைய முன்னேற்றம் ஆண்களுடைய ஆற்றல் மிக்க உறுதுணையாலும் ஏற்பட வேண்டியுள்ளது.

தமிழகத்தில் பெண்கள் பலவீனமானவர்கள் என்று ஒதுக்கப்பட்டு இருந்த நிலைமை மாற்றப்பட்டு அவர்களும் ஆண்களுக்கு இணையாக எல்லாத் தொழில்களையும் செய்வதற்கு வாய்ப்புகளும், வசதிகளும் இன்றைய அரசின் மூலமாக வழங்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக ஆட்டோ ஓட்டுகின்ற உரிமம் கூட பெண்களுக்கு 200 பேருக்கு வழங்குவதற்கு முன்வந்து இருப்பது அவர்களாலும் ஆட்டோ ஓட்டுவதற்கு இயலும் என்று தன்மையை நிரூபிப்பதற்காக அமைந்து இருக்கின்றது. எனவே, வாய்ப்புகள் வழங்கப்பட்டால் எல்லாத் துறைகளிலும் பெண்கள் ஈடுபாடு கொள்ள முடியும்; சிறப்பான முன்னேற்றத்தை அவர்கள் பெற்றுத்தர முடியும் என்பதையும் உறுதிபடுத்துகின்றது.

பெண்களுடைய நலத்திற்காக, பாதுகாப்பிற்காக தமிழக அரசு, சமூகநலத் துறை மூலமாக பல திட்டங்களை அமல்படுத்தியுள்ளது. பெண்ணைப் பெற்றுவிட்டவர்கள் அவளுக்குத் திருமணம் செய்விக்கும் நேரத்தில் என்ன பாடுபடுகிறார்கள் என்பதை உணர்ந்துதான், ஒரு தாயின் மனதை, ஒரு தந்தையின் மனதை தலைவராகப் பெற்ற இந்தத் தமிழக அரசின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த



மணப் பெண்களுடைய திருமணச் செலவிற்கு 5 ஆயிரம் ரூபாய் உதவி அளிக்கும் திட்டத்தை மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் பெயரிலே கொண்டு வந்து இருக்கின்றார்கள். இந்த 5 ஆயிரம் ரூபாய் உதவியைப் பெறுவதற்காக, அந்தப் பெண்கள் 8-வது வகுப்பு படித்து இருக்க வேண்டும் என்ற திட்டத்தையும் வலியுறுத்தி இருக்கிறார்கள். கல்வி அறிவை பெண்களுக்குப் புகட்டுவதற்கு இது ஒரு ஊக்கமாக இருக்கும் என்று இருந்தாலும் அது பெண்களுடைய திருமண வயதைத் தள்ளிப் போடுவதற்கும் பயன்படுகிற காரணத்தினால் பெண்களுடைய உடல் ஆரோக்கியத்திற்கும தக்கதாக அது அமைந்து இருக்கின்றது. 18 வயது நிரம்பப்பெற்ற பெண்கள் அந்த 5 ஆயிரம் உதவிப் பணத்தைப் பெறுகின்றபோது அவர்கள் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் வருகிறது. தான் செல்கின்ற வீட்டுக்கு இன்னும் கொஞ்சம் கௌரவமாகச் செல்கிறோம் என்ற பெருமிதம் அவர்களுடைய உள்ளத்திலே அலை மோதுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்தித்தந்திருக்கின்ற இந்த அரசின் செயல் திட்டத்திற்குத் தமிழகம் முழுவதும் இருக்கின்ற பெண்கள் சமுதாயம் தலை வணங்கி பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

மணி 11-10

கலப்புத் திருமணம் செய்து கொள்ளுகின்ற தம்பதியர்களுக்கு பரிசளிக்கும் ஒரு திட்டத்தை 1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசுதான் கொண்டு வந்தது. கலப்புத் திருமணம் செய்து கொள்ளுகின்ற தம்பதிகளுக்குத் தங்க மெடல் பரிசு வழங்கப்பட்டது. 1967 ஆம் ஆண்டு என்று சொன்னால் இப்பொழுது 23 ஆண்டுகள் ஆகின்றன. 67 ஆம் ஆண்டு முதன் முதலாக அந்தத் திட்டத்தில் தங்கள் பெயரை இணைத்துக் கொண்டவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு இன்றைக்கு 22 வயதில் மகனோ, மகளோ இருப்பார்கள். அவர்கள் வேலை வாய்ப்பைத் தேடித் தரும் நிறுவனத்தில் தங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கலாம். பதிவு செய்யாமலும் இருக்கலாம். ஆனால், கலப்புத் திருமணத்தை ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அன்றைய தினம் முன் வந்த அந்தத் தம்பதியர்களுக்கு இருக்கின்ற குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலமாக அல்லாமல், இந்த அரசாங்கமே முன் வந்து அவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதற்கு இடமளிக்க வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்பொழுது தான் கலப்புத் திருமணத்தைச் செய்து கொள்ளுகின்றவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் — ஒதுக்கி வைத்தவர்களெல்லாம் அந்தத் திருமணத்தைச் செய்த தம்பதியர்களைப் பாராட்டுகின்ற விதத்திலேயும், அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை இழிவாகக் கருதாமல் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளுகின்ற உயர்வான நிலையும் ஏற்படுத்தப்படும்.

திருமணத்தில், விதவை மகளுடைய திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் உதவித் திட்டம் பல ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது. இந்த ஆயிரம் ரூபாய் உதவித் திட்டம் என்பது இப்பொழுது இருக்கின்ற நிலையில் போதுமானதாக இல்லை, கணவனை இழந்து நிற்கின்றார்கள். கணவனை இழந்து நிற்கின்ற அந்தப் பெண்ணினுடைய மகள் திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் என்று இருக்கின்ற நிதியுதவியை உயர்த்தி மூவாயிரம் ரூபாய் என்று கொடுத்தால் அந்தக் குடும்பத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கணவனை இழந்த அந்தப் பெண், சிறு வயதிலேயே கணவனை இழந்து இருப்பார், தன்னுடைய கணவனை இழந்ததற்கான சான்றிதழைப் பெறுவதிலே அவர்களுக்கு மிகச் சிரமம் ஏற்படுகிறது. அப்படிச் சிரமம் ஏற்படுகின்ற காரணத்தினால் தன்னுடைய பெண்ணினுடைய திருமணங்திற்கு—திருமணம் நடைபெறுவதற்கு முன்னதாகவே அந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற நிதி உதவி கிடைக்காமல் போய் விடுகிறது. திருமணம் முடிந்து விட்ட பிறகு அந்த உதவியை தருவதற்கு அலுவலகத்தில் இருக்கின்ற அதிகாரிகள் மறுக்கின்றார்கள். எனவே, தாமதப்படுத்தப்பட்டாலும் கூட அந்தச் சான்றிதழ்கள் சரியான முறையில் அவர்கள் பெற்றிருப்பார்கள் என்று சொன்னால் அந்தத் தொகையைத் திருமணம் முடிந்த பிறகும் விதவைத் தாய்மார்களின் பெண்ணினுடைய திருமணத்திற்கு அளிக்கின்ற அந்த நிதியை வழங்க வேண்டுமென்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களுக்குப் பாதுகாப்பு தருவதற்காகச் சேவை இல்லங்கள் பல்வேறு இடங்களிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் சேவை இல்லங்களில், ஆதரவு இல்லாத பெண்களைச் சேர்த்துக் கொள்வதிலே முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதிலே அவர்கள் முதிய வயதுடையவர்களாக இருந்தார்கள் என்றாலும் கூட அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு இடம் அளிக்க வேண்டும். காரணம், வயது முதிர்ந்த நிலையில், அவர்களை வைத்துக் காப்பாற்றுவதற்கு யாருமில்லாத நிலையில் அவர்கள் மிகவும் அல்லலுக்கு ஆளாகிறார்கள். எனவே, கணவனால் கைவிடப் பட்டவர்கள், கணவருடைய ஆதரவை இழந்தவர்கள் என்ற நிலையிலே மட்டுமல்லாமல், வயது முதிர்ந்த நிலையில், ஆதரவுக்கு உரியவர்கள் யாருமில்லாத நிலையில் அவதிப்படுகின்ற அந்த வயது முதிர்ந்த பெண்களையும் அந்தச் சேவை இல்லங்களிலே சேர்த்துக் கொள்வதற்கு விதி வகைகளை தளர்த்திட வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஊராட்சி ஒன்றியங்களில் மகளிர் மன்றங்கள் இருக்கின்றன. அந்த மகளிர் மன்றங்களினுடைய அமைப்பாளர்களுக்குக் காலாண்டிற்கு தொண்ணூறு ரூபாய் மதிப்பூதியம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. காலாண்டுக்கு தொண்ணூறு ரூபாய் ஊதியம் என்றால், மாதத்திற்கு முப்பது ரூபாய் என்ற அளவில் வருகிறது. அது நிச்சயமாகப் போதுமானதாக இல்லை, எனவே ஊராட்சி ஒன்றியங்களில் மகளிர் மன்ற அமைப்பாளர்களாகப் பணியாற்றுகின்றவர்களுக்கு அந்த ஊதியத்தை உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

11–15 மணி

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களுடைய பெயரில் பேறுகால உதவித் திட்டத்தை வழங்கி வருகிறோம். அந்தப் பேறுகால உதவித் திட்டத்தைக் கூட அவர்கள் பேறு காலம் ஆவதற்கு முன்னதாக உதவித் தொகையும் பேறுகாலம் முடிந்த பிறகு உதவித் தொகையும், என்று இரண்டு திட்டங்களாக அவர்கள் பெறுவதற்கு வாய்ப்புகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. அப்படி உருவாக்கப்படுகின்றபொழுது அந்தக் கருவுற்றிருக்கின்ற பெண்களுக்குச் சரியான முறையிலே அவர்கள் பேறுகாலத்திற்கு முன்னதாகவே தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று அறிவிக்கப்படுவது இல்லை. எனவே முன்னதாக பதிவு செய்து கொள்ளாமல் விட்டு விடுகிறார்கள் பேறுகாலம் முடிந்த பிறகு அந்த உதவியை பெற வருகிறபோது அதிலே சிக்கல் இருக்கிறது. எனவே பேறுகாலம் ஆவதற்கு முன்னதாக பதிவு செய்திருந்தாலும், செய்யாமல் இருந்தாலும் அவர்கள் அந்த உதவியைப் பெறுவதற்கு உரியவர்கள் என்ற நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும். பேறுகாலத்திற்கு முன்னதாக தருவது தாயின் வயிற்றில் இருக்கிற சிசுவிற்கு ஊட்டச்சத்து அளிக்க வழங்கப்படுகிறது என்றாலும், இதுவரையில் வாங்காமல் விடுபட்டவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்க வேண்டும், இன்னும் அந்தத் திட்டத்தை நல்லமுறையில் விளம்பரப்படுத்தி, கருவுற்றிருக்கிற பெண்கள் முன்னதாக பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று எல்லா பொது இடங்களிலும் விளம்பரங்களை சரியான முறையில் செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் சிறுதொழிற்சாலைகளிலிருந்து துணை பாகங்களை கொள்முதல் செய்வதற்கு மாருதி உத்யோக் நிறுவனத்தின் உத்தேச இரண்டாவது தொழிற்சாலையை தமிழகத்தில் அமைக்க வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் மத்திய அரசுக்கு விடப்பட்டிருக்கிறது என்ற செய்திக் குறிப்பைப் பார்த்தேன். அதனை வலியுறுத்தி தமிழகத்தில் அமைப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு வங்கி ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், அந்த வங்கிக்கு தலைமையிடமாக தமிழகத்தில் இடம்

ஒதுக்கித் தருவதற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டு கோளை விடுத்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். அந்தத் தலைமையகத்தை நம்முடைய தமிழகத்தில் அமைகக வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அந்தத் தலைமையகம் சென்னைக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் என்னுடைய பாராட்டையும், நன்றி யையும் தமிழக அரசுக்கும், தேசிய முன்னணி அரசுக்கும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்-

மகளிர் மேம்பாட்டு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறைய துவங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. தற்சமயம் 75 தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகம் முழு வதிலும் இருக்கின்றன என்று அறிக்கையில் இருக்கிறது. அவைகளை இன்னும் அதிகப்படுத்துவதற்கு வாய்ப்பு, வசதிகளை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளி மாணவர்களுக்கு சீருடை தைத்துக் கொடுக்க இந்தச் சங்கங்கள் பயன்படுகின்றன. அவர்களுச்கு கொடுக்கப்படுகிற தையல் கூலி மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, அந்த தையல் கூலியை இன்னும் அதிகமாக்கித் தருவதற்கு அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற சத்துணவுக் கூடங்கள் பற்றி சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். சத்துணவுக் கூடங்கள் இருக்கிற கட்டடங்கள் அனைத்தும் மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. எனவே, பழுதடைந்துள்ள அந்த சத்துணவுக் கூடங்களை சீர்செய்து தந்தால் சத்துணவு சாப் பிடுகிற குழந்தைகளின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும். அந்த கூடங்களில் நிறுவப்பட்டிருக்கிற தண்ணீர் டாங்குகள் மிகவும் பழுதடைந்து, துருபிடித்து, ஓட்டையாகி, மூடியில்லாமல் இருக்கின்றன. எனவே, இந்தக் குறைகளை போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குழந்தைகள் சாப்பிட வருவதை பதிவேட்டில் பார்த்தால் விடுமுறை நாட்களில் அவர்களின் வருகை குறைவாக இருக்கிறது. எனவே, விடுமுறை நாட்களில் குழந்தைகள் சத்துணவுக் கூடங்களுக்கு வராமல் பெற்றோர்களுடன் சாப்பிடு கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். விடுமுறை நாட்களில் சத்துணவு போடுவதை ஓரளவிற்கு குறைத்து, சத்துணவு வழங்குகிற அந்தத் திட்டத்தில் ஒரு நாளைக்கு, ஒரு குழந்தைக்கு செலவிடுகிற 44 காசை இன்னும் அதிகமாக உயர்த்தி அந்த குழந்தைகளுக்கு முழு [illegible] அளவில் சத்துணவு, [illegible]



கிடைக்க வழிவகை காணவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

நல்ல பல திட்டங்களை உருவாக்கி தந்திருக்கிற இந்த அரசை நாங்கள் பாராட்டுகிறோம். இந்த அரசின் திட்டங்களை நாங்கள் பாராட்டுவதுடன், மகளிருடைய மேம்பாட்டிற்கு, குழந்தைகள் மேம்பாட்டிற்கு, நாட்டு முன்னேற்றத்திற்கு, தாய்மார்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டால் தான் வழி பிறக்கும் என்ற கருத்தை உள்ளடக்கி இன்னும் பல்வேறு திட்டங்களை அரசு கொண்டு வர வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

11-20 மணி

திரு. ரெ. பிச்சைமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். இந்த நாட்டின் முதுகெலும்பாக திகழ்ந்து கொண்டிருக்கிற உழைக்கின்ற வர்க்கத்தைச் சேர்ந்த ஏழை எளிய மக்கள் காலம் முழுவதும் உழைத்து ஓய்வு பெறுகின்ற 60 வயதை எட்டிய இந்த நாளில் அந்த 60 வயதை முடிய அந்த சமுதாயத்தைச் சேர்ந்த உழைக்கின்ற மக்களுக்கு ஓய்வு ஊதியத் திட்டத்தின்கீழ் இன்று, கேரளம், மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களில் உள்ளதைப் போல, இந்த ஓய்வு ஊதியத் திட்டத்தை 60 வயதுக்கும் மேற்பட்ட நபர்களுக்கும் வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்ற கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல் இன்று இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக திகழ்ந்து கொண்டிருக்கிற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மக்களுக்கு நலிவுற்ற மக்களுக்கு தொழிற்துறையில் முன்னேற்ற ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வந்திருக்கிற வகையில் ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். நாட்டினுடைய பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களுக்கு தொழில் துறையில் தொழில் துவங்க அரசு பல திட்டங்களை அறிவித் திருந்தாலும், அந்தத் திட்டத்தின் அடிப்படையில், திட்டத்தை செயலாக்குகின்ற அதிகாரிகள் அவர்களை ஊக்குவிக்கின்ற அளவிற்கு, அந்தத் திட்டம் உரிய நபர்களுக்குச் சென்று அடையக் கூடிய நிலையில் இன்று நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். அரசு கொண்டு வந்திருக்கிற நலத் திட்டங்கள்

அனைத்தும், உரிய அதிகாரிகளால் ஆங்காங்கு, அதாவது மாவட்டங்களில், மாவட்ட மையங்களில் இருக்கின்ற தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கின்ற அளவிற்கு அந்த அதிகாரிகள் சென்று அந்தக் கூட்டுறவு முறையிலான அந்தத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கின்ற அளவிற்கு எந்தவிதமான ஆறுதலும் கூறப்படுவதில்லை என்பது தான் என்னுடைய கருத்து.

அதேபோல் இந்தச் சத்துணவுக் கூடங்களின், சரியான பராமரிப்பு இல்லாமல், இந்தச் சத்துணவு மையங்களிலே சாப்பிடுகின்ற குழந்தைகளுக்கு சரியான சுகாதார வசதி இல்லாமல் நிறைய இடங்களில் சத்துணவிலே பல்லி விழுந்து மாணவர்கள் அதனால் மயக்கமுறும் நிலையை தினசரி செய்தித்தாளில் நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையைக் களைவதற்கு அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

பெண் குழந்தைகளை ஈன்ற தாய்மார்கள் அந்தப் பெண் குழந்தைகளைக் கொல்லுகின்ற நிலைமை நாட்டில் நிறைய இடங்களில் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலை மாற தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டம் வரவேற்க வேண்டிய வகையிலே இருந்தாலும், இன்னும் தொடர்ந்து சில இடங்களில் அந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அதைக் கண்டிக்கின்ற வகையில் உள்ள திட்டங்கள் வரவேற்கப்பட்டு இருந்தாலும் இப்போது நூதனமான முறையிலே வயிற்றிலே இருக்கிற கரு ஆணா பெண்ணா என்பதை அறிந்து அதையும் சிதைவு படுத்துகின்ற அளவிலே இன்று நாடு முழுவதும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்படிச் செய்கின்ற தாய்மார்களைக் கண்டிக்கின்ற வகையிலே அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வரதட்சணைக் கொடுமையால் நாடு முழுவதிலும் இன்று பெண்கள் படுகின்ற அவதிகளும், இறக்கின்ற நிலைமையும் பரிதாபத்திற்குரிய நிலைமையாக இருக்கிறது என்று எனக்கு முன்பு பேசிய தோழியர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் அந்தக் கருத்துக்களைத் தெளிவுபடுத்தினார்கள். அந்த அடிப்படையில் நானும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கொடுமைக்கு ஆளாக்கப்படுகிற அந்தப் பெண்கள் எவரால் அந்தக் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்ற விவரம் அரசுக்குத் தெரிந்தும் அவர்கள் மீது என்ன நடவடிக்கையை எடுக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால் வசதி வாய்ப்புள்ள, வாழ்க்கையில் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற



அந்த நபர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் இப்படிப்பட்ட நிலையில் அந்தப் பெண்களுக்கு கொடுமைகளை இழைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட வசதி வாய்ப்பு உள்ள நபர்கள் செய்கின்ற காரியங்களுக்கு அவர்கள் மீது உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட உரிய நபர்கள் மீது கடுமையான தண்டனையை நிறைவேற்றுகின்ற வகையில் இந்த மாமன்றத்தின் மூலமாக ஒரு மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஊனமுற்றோர்களுக்கு அரசால் வழங்கப்படுகிற அந்த ஊர்திகளை ஒவ்வொரு மாவட்ட மையங்களிலும் விழாக்களை வைத்து அதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விழாக்களை நடத்தி, அந்த ஊர்திகளை வழங்குவதைவிட, அந்தந்த ஊராட்சி மன்றங்களிலே, அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்களால், அந்தந்த கிராமங்களிலே வழங்குவது என்பது மிகவும் சாலச்சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மற்றும் இந்த ஊனமுற்றோர்களுக்கு வழங்குகின்ற அந்த ஊர்திகள் இன்னும் நிறைய அளவில் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது திருமண உதவித் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற இந்த அரசு இந்தத் திருமண உதவித் திட்டத்தில் வயது வரம்பை, குறிப்பாக அதாவது பழங்குடியினர் 5-வது வகுப்பு வரை கற்றிருந்தால் போதும் என்று அந்த வரம்பை, மற்ற ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பிலேயும் உள்ள மக்களுக்கும் அந்த வரம்பை....

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** துணைத் தலைவர் அவர்களே, திருமண வயது வரம்பு 18 ஆண்டு பூர்த்தி அடைந்து இருக்கவேண்டும். நீங்கள் சொல்வது கல்வித் தகுதி.

**திரு. ரெ. பிச்சைமுத்து:** மலைவாழ் பழங்குடியினருக்கு வழங்கப்பட்டு இருக்கிற கல்வித் தகுதி 5-வது வகுப்பு வரை. இந்தக் கல்வித் தகுதியை எல்லாத் தரப்பு மக்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. மலைவாழ மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தத் தகுதியின் அடிப்படையில் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த மக்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

பட்டு வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இன்று நாட்டில் பட்டாடை உடுத்திப் பகட்டாகப் போகின்ற அளவிற்கு நாட்டினுடைய பொருளாதாரம் குறைவாக இருந்தாலும், அந்த பட்டிற்கு அளிக்கின்ற முக்கியத்துவத்தைவிட கதர் மற்றும் கைத்தறிகளுக்கு அதிக ஊக்கம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

11-25 மணி

மேலும் பட்டு வளர்ச்சியில் பின்தங்கியவர்களுக்கு அதிக அளவில் ஊக்கம் அளித்து, பட்டு வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு அதிக பட்சமான ஊதிய உயர்வும் உரிமைகளும் வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஏதாவது தொழில் தொடங்குவதற்கு இன்று நீங்கள் அறிவித்திருக்கின்ற 108 தாலூக்காக்கள் தொழில் முனைவோருக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த 108 தாலூக்காக்களில் பெரம்பலூர் தாலூக்கா பின்தங்கிய நிலையில் இருப்பதால் தொழில் முனைவோருக்குத் தொழில் துவங்குவதற்கு பல அரிய திட்டங்களில் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற கருத்தைக் கூறி, காதி கிராஃப்ட் மூலம், பெரம்பலூரில் ஒரு காதி கிராஃப்ட் காம்ப்ளெக்ஸ் அமைத்துத்தர வேண்டுமென்ற கருத்தையும் இப்போது நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தென் மாவட்டங்களில் பெரும்பகுதி ஏழை எளிய மக்கள் அதிக அளவில் இருக்கிறார்கள். அந்த ஏழை எளிய மக்கள் அதிகமான அளவில் பணியில் ஈடுபட்டிருப்பதால் இந்தத் தீப்பெட்டித் தொழில் விம்கோ போன்ற பெரிய தொழில் நிறுவனத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக இந்த அவையில் கடந்த ஆண்டு இச்சிறு தொழிலை பாதுகாக்க மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறோம். ஆனால் இதுவரையில் அந்த உதவி நடவடிக்கை தமிழக அரசால் எடுக்கப்படவில்லை. அதற்கு உரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுபோல மரம் ஏறுகின்ற தொழிலாளி மரத்திலிருந்து விழுந்து இறந்தால் ரூ. 10,000 நிதியுதவி வழங்கப்படுமென்ற தமிழக அரசினுடைய நலத் திட்டத்தில் அவர்களுடைய நலனை நன்கு உணர்ந்து அறிவித்திருக்கின்ற வகையில் இதில் ஒரு மாறுதலைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தினம் தினம் செத்து செத்து அந்த மரம் ஏறும் தொழிலாளர்களுடைய பாதுகாப்பிற்காக வேண்டி அரசு அறிவித்திருக்கின்ற ரூ. 10,000-ஐ ரூ. 15,000-ஆக உயர்த்தித் தரவேண்டுமென்ற கருத்தையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



அதேபோலறு பல அரிய நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சத்துணவு திட்டத்தைப் பொறுத்தவரையில் நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை களைவதற்கு ஆங்காங்கே அந்தந்த வட்டங்களிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களை கண்காணிப்பதற்கு உண்டான குழுவாக அமைத்து, அந்தக் குறைபாடுகளை கணகாணிப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது கட்டிடங்கள் எல்லாம் சீர்கெட்ட நிலையில் இருக்கின்றன. அந்தக் கட்டிடங்களைச் சீர்செய்கின்ற அளவில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இன்றைக்கு சுகாதார இன்மையும், கட்டிட சீர் அழிவும் அதிகமான அளவில் இருக்கின்றன. இதனால் பள்ளி மாணவர்களுடைய அந்த உணவு பாதிக்கின்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது.... (மணியடிக்கப் பெற்றது).

11-30 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கட்டிடங்கள் சீர் குலைகின்ற நிலையில் இருக்கின்றன என்றால் சத்துணவுக் கூடங்களுடைய கட்டிடங்களா அல்லது உங்கள் தொகுதியில் இருக்கிற கட்டிடங்களா?

திரு. ரெ. பிச்சைமுத்து : சரியான பாதுகாப்பற்ற நிலையில் தான் இருக்கின்றன அந்த சத்துணவுக் கூடங்கள். ஆகவே அதையெல்லாம் போக்குகின்ற அளவுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் இந்த நலத் திட்டங்களின் கீழ் பல்லாயிரக் கணக்கானவர்கள் தொழில் துறையில் முன்னேறுவதற்கான முறையில் அதிக சலுகைகளை வழங்கவேண்டும் என்று கோரி வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறையின் கீழ் பல்வேறு பணிகளுக்காக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற கோரிக்கையை ஏற்று வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஓராண்டு காலமாக அந்தத் துறையைப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சர் சகோதரி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் திறம்பட பணியாற்றியிருக்கிறார்கள் என்று நான் பாராட்டுவது ஏதோ எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக அல்லாமல் உண்மையிலேயே பெண்களுடைய முன்னேற்றத்தில் அக்கறையும் நலிவுற்றோர் நலவாழ்வில் அக்கறையும் கொண்டு கடுமையாக பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக அமைந்திருந்து அந்தத் துறையில் செயலாற்றிய செயலாளர், இயக்குநர் மற்றும் உள்ள அதிகாரிகள் அனைவரையும் நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பெ. சீனிவாசன்] [1990 ஏப்ரல் 4

இங்கே சத்துணவு பற்றி அனைவரும் பேசினார்கள். சத்துணவுத் திட்டத்தை இந்தியா உலகத்திலேயே முதன்முதலாக ஏசுநாதர் புதனுக்கு பிறகு இல்லாமல் அமுதாரித்துக் கொண்டு வந்ததைப் போல இங்கே அடிக்கடி பாடிக் கொண்டிருக்கிறார்கள். அதை அந்தக் கட்சியின தேசியகீதமாகவே பாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சத்துணவுத் திட்டத்தை எம்.ஜி.ஆருடைய ஆட்சியில் கொண்டு வந்ததன் காரணமே அந்தக் கட்சியிலே இருப்பவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காகவே தவிர குழந்தைகளுக்கு உணவு அளிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. (குறுக்கீடு)

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஏசுநாதர் அவர்களைப் போல என்று சொல்லி, புரட்சித் தலைவர் ஆட்சியிலே கொண்டுவந்த சத்துணவு திட்டத்தை குறை சொல்லுகிறார்களே, அது ஏழைக் குழந்தைகளுக்கு பயன்படவில்லை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்களா? அல்லது வேலை வாய்ப்புக்காக மட்டும்தான் அதுவும் அந்தக் கட்சியிலைச் சேர்ந்தவர்களுக்காகத்தான் அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது என்று இன்றைக்கு சொல்லுகிறார்களே, அதிலே லட்சக்கணக்கான குழந்தைகள் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை மறுக்கிறாரா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்,

திரு. பெ. சீனிவாசன் : நான் சொல்ல வந்த குறிப்பு என்ன வென்றால் கட்சிக்காரர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அதுவும் எந்த வேலைக்கும் லாயக்கற்ற கட்சிக்காரர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற ஒரு புனிதமான நோக்கத்திலே தான் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது என்பது நாடு அறிந்த உண்மை. இன்றைக்கு சத்துணவு அமைப்பாளர்களாக அந்தக் காலத்தில் நியமிக்கப்பட்டவர்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று அறிவித்ததை கேள்வி பட்டு நாங்கள் வருந்தியதை விட அந்த சத்துணவை உண்ணுகிற குழந்தைகள் எவ்வளவு வேதனைப்பட்டார்கள் என்று நாடு முழுவதும் சற்று சுற்றிப் பார்த்தால்தான் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைகளுக்காக கொண்டுவரப்பட்ட சத்துணவு திட்டத்தில் இன்றைக்கு அங்கே இருக்கிற ஆயாக்கள், சத்துணவு அமைப்பாளர்கள் ஆகியோர்கள் அங்கே பளபளப்பு ஏறி இரட்டை இலை இராக்கொடி போட்டு மல்லிகைப்பூச் சூடி அவர்கள் நடக்கிற நடையும் அவர்கள் செய்கிற வேலைகளும்...... (குறுக்கீடு) இது நாட்டிலே இருக்கிற உண்மை.

திருமதி பாப்பா உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, மாற்றுக் கட்சியை விமர்சனம் செய்வதை தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர்களுடைய வர்ணனைகள் அவ்வளவு உசிதமாக இருக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.



1990 ஏப்ரல் 4]

திரு. பெ. சீனிவாசன் : வர்ணனைகளை நான் கொஞ்சம் மாற்றிக் கொள்கிறேன். இன்றையதினம் சத்துணவுக் கூடங்களில் பணியாற்றுகிறவர்கள் அமைப்பாளர்களில் முக்கால் வாசிப் பேர் வீடுகளில் இதுவரை அடுப்பே எரிவது கிடையாது—அவர்கள் பதவிக்கு வந்ததிலிருந்து இன்றுவரை. இங்கே சத்துணவிலே இருக்கும் உணவுதான் அங்கே போகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள், அவர்கள் பெண்ணாக இருக்கிற காரணத்தால் பெண் களுக்கு இரக்கம் காட்ட வேண்டும் என்று நினைக்க வேண்டாம். நம்முடைய திருமதி பாப்பாஉமாநாத் அவர்கள் பெண் உரிமைக் காக பேசியதை இந்த அவையிலே கடை பிடிக்கக் கூடாது. இது வரை குறைந்தது 200,300 பேராவது டிஸ்மிஸ் செய்திருந்தால் மற்றவர்களுக்கு பயம் இருக்கும். அங்கே சத்துணவுக் கூடங்களில் போய் பார்த்தால் அதுவும் ஞாயிற்றுக் கிழமைகளில் சத்துணவு சந்நியோகமே கிடையாது ஆனால் அந்த உணவு மொத்தமும் அவர்களுடைய வீடுகளுக்குத்தான் போகிறது. ஆகவே அதில் ஏதாவது மாற்று ஏற்பாடு உண்டா என்பதை கேட்டு இந்த அரசாங்கம் நிச்சயமாக யோசித்துப் பார்க்க வேண்டும். காரணம் நீங்கள் நல்ல நோக்கத்தோடு இந்தக் குறிப்பிலே கொடுத்திருக்கிற திட்டங்களைப் பார்த்தால் எல்லாத் திட்டங்களுமே ஒரு நசுக்கப் பட்ட சமுதாயத்திற்கு, நசுக்கப்பட்ட பகுதியிலே இருக்கிற மக்களுக்கு நிவாரணம் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு நிறைவேற்றப்பட இருக்கிற திட்டங்கள்.

11–35 மணி

இங்கே இருக்கிற. மேல் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள், அமைச்சர்கள், மற்றவர்கள் எவ்வளவோ பாடுபட்டாலும்கூட கடைசியிலே தண்ணீர் பாத்தியிலே போய், செடிகளுக்குப் பயன் படும்போதுதான், அங்கே குகைகளைப்போல் இடங்கள், அதிலே குடியிருப்பவர்கள்—பணியாற்றுகிறவர்கள்—அவர்களுக்குத் தரப் பட்டிருக்கிற பாதுகாப்பு, ஆகியவைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். சத்துணவு வழங்கும் போதே, சத்துணவு போட்டு விட்டு, அந்தக் குழந்தைகளுக்கு ஒரு ஆரம்பக் கல்வியை வழங்கக்கூடிய அளவிற்கு, 3 வயது, 4 வயது அல்லது 5 வயது குழந்தைகளுக்கு அ–வன்னா, ஆ–வன்னா, ஏ.பி.சி.டி. சில பாடல்கள் சொல்லிக் கொடுப்பதற்கு தகுதி யுள்ளவர்களை, குறைந்த அளவு ஹையர் செகண்டரி படித்து, குழந்தைகளை வளர்ப்பது எப்படி, பராமரிப்பது எப்படி என்ற பயிற்சியையும் பெற்றவர்களைத்தான் அங்கே நியமிக்க வேண்டும். நான் திரும்பவும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இது அரசியல் ரீதியாக, கட்சிக் கண்ணோட்டத்தோடு, தகுதியைப் பற்றிக் கவலைப்படாமல், தரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் சில பேருடைய சுயநலத்திற்காக உருவாக்கப்பட்ட பதவிகள் என்பதை மனதிலே கொண்டு, அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சீனிவாசன் அவர்கள் சத்துணவைப் பற்றி விமர்சனம் இன்றைக்குச் செய்கிறார்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னால், பல ஆண்டுகளுக்குப் பின்னால்.. (குறுக்கீடு)

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ரொம்ப மலிவான தந்திரம். மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் பேசுவது சத்துணவைப் பற்றி கூறுகிறார்கள்; சத்துணவைப் பற்றி கூறுகிறார்கள் என்று. சத்துணவு யாருடைய சொந்த வீட்டிலிருந்தும் போடப்படவில்லை. மக்களுடைய வரிப் பணத்திலே இருந்துதான் எம்.ஜி.ஆர். அவர்களும் போட்டார்கள்; கலைஞர் அவர்களும் போடுகிறார்கள். மறந்துவிடக் கூடாது. ஏதோ எம்.ஜி.ஆர். சினிமாவிலே, வருமான வரி கட்டாமல் மிச்சம் மீதி வைத்திருந்த பணத்தை வைத்து, சத்துணவு போட்டதாக நீங்கள் பல ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டு வருகிறீர்கள். சத்துணவை நான் குறை சொல்லவில்லை. சத்துணவுத் திட்டத்திலே இருக்கிற பெருச்சாளிகளைப் பற்றித்தான் நான் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றை வற்புறுத்திச் சொல்கிறேன். மாண்புமிகு திரு. சீனிவாசன் அவர்கள் ஒன்றை இங்கே சொன்னார்கள். வேலை தருவதற்கு, கட்சிக் காரர்களுக்கு வேலை தருவதற்குத்தான் இந்தத் திட்டம் என்ற ஒரு குற்றச்சாட்டை இங்கே சொன்னார்கள். நான் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிறீர்கள். சத்துணவு அமைப்பாளர்களாக இருப்பவர்கள், அ.இ.அ.தி.மு.க.விலிருந்துதான் போடப்பட்டிருக்கிறார்கள்என்று நீங்கள் நிரூபிப்பீர்களேயானால், நீங்கள் தருகிற எந்தத் தண்டனையையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், நீங்கள் இன்றைக்கு செய்கிற காரியம் இருக்கிறதே, 300 ரூபாய்க்கு நீங்கள் போட்டிருக்கிற ஆட்கள் அத்தனை பேரும், கார்டு வாங்கிக் கொண்டு, பணம் வாங்கிக் கொண்டு போட்டிருக்கிறீர்கள் என்பதை மட்டும் நீங்கள் மறந்து விடாதீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படி ஏதாவது நிரூபிப்பார்களேயானால் இந்த அவையிலே அதற்கான அறிக்கையினைத் தாக்கல் செய்து, நடவடிக்கை உடனடியாக எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். சில மாவட்டங்களிலே இருக்கிற, ஒன்றியங்களிலே



இருக்கிற, ஊராட்சிகளிலே இருக்கிற ஒவ்வொரு வேலைக்கும் எவ்வளவு ரூபாய் என்று பேரம் பேசப்பட்டு அந்தப் பேரம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் நிரூபிக்கிறேன். நீங்கள் எந்த விசாரணை வைத்தாலும் நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சீனிவாசன் அவர்கள் கடந்த கால ஆட்சியிலே, சத்துணவுத் திட்டத்திலே ஊழியர்கள் நியமனங்களிலே முறைகேடுகள் பற்றியெல்லாம் கூறினார்கள். அவர்கள் கூறுவதற்கு உரிமை உண்டு. ஆனால், சத்துணவு ஊழியர்கள் எல்லோருமே படாடோபமாக இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாம் வசதியாக வாழ்கிறார்கள் என்று சத்துணவு ஊழியர்களுக்கு எதிராக இந்த அவையிலே அவர்கள் பேசுவது என்பது, நாங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. அந்த ஊழியர்களிலே பெரும்பாலானோர் —மிகப் பெரும்பாலானோர் இன்னும் மிக வறுமையான சூழ்நிலையிலே—இன்றைக்கு இருக்கிற ஊதியம் அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்றதாக இல்லாததாக இருந்து கொண்டிருக்கிற நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கும், இந்த அவையினுடைய கவனத்திற்கும் கொண்டு வருவது என்னுடைய கடமை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய திரு. பெ. சீனிவாசன் அவர்கள் பேசியது உண்மையிலேயே நியாயமான கோரிக்கைதான். சத்துணவு அமைப்பாளர்களைப் பற்றி, நான் 1985-லே டி.டி.சி. மீட்டிங்கிலே பேசினேன். 100-க்கு 70 சதவிதம் சத்துணவுத் திட்டத்தில் தவறுகள் நடக்கின்றன. பாமாயில் எண்ணெய், நல்லெண்ணெயோடு கலப்பதற்காக போய் விடுகிறது. துவரம் பருப்பு மார்க்கெட்டுக்குப் போய்விடுகிறது. அரிசிகள் எல்லாம் ரைஸ் மில்லிற்கு போய்விடுகிறது. அதேமாதிரி, சத்துணவுத் திட்டத்தில் தவறுகள் நடக்கின்றன என்று பேசினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், உடனே, மறுநாளே, உத்தரவிட்டு, 60 சத்துணவுக் கூடங்களை பார்வையிடுவதற்கு ஒரே நேரத்தில் அனுமதி அளித்தார்கள். 60-ல் 50 சத்துணவுக் கூடங்களில் தவறுகள் நடந்தன. 30 பேரை சஸ்பெண்ட் செய்தார்கள். அந்த மாதிரியான நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக—மக்களுடைய பணம் ஊதாரித்தனமாக செலவழிக்கப்பட்டு—நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் நீங்கள் அதைக் கண்டிப்பதற்குப்பதிலாக மீண்டும் முட்டைகள் வழங்குகிறீர்கள். வேஷ்டி, சேலையும் வழங்குகிறீர்கள். அதுவும் மக்களுடைய பணம், தவறான முறையில் செலவழிப்பதை விட்டு நல்ல திட்டங்களுக்கு, அணைத் திட்டம், தொழில் துறை—இப்பேர்ப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தத் திட்டத்திலும் சில முறைகேடுகள், சில விரும்பத்தகாத காரியங்கள் நடைபெறுவது உண்மைதான். ஆகவே, குறிப்பிட்ட இன்னின்ன முறைகேடுகள் நடக்கின்றன. இந்த, இந்த ஆட்கள் தவறு செய்கிறார்கள். அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னால் சரியாக இருக்கும். ஒட்டுமொத்தமாக அத்தனை பேரையும் பாதிக்கக்கூடிய முறையில், அத்தனை பேரையும் சேர்த்து குறை சொல்லக்கூடிய முறையில் பேசுவது நடைமுறையில், நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய முறை இல்லையே, இது சம்பந்தமாக தங்களுடைய தீர்ப்பை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

11-40 மணி

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, வேறு பிரச்சினை. எதிர்க்கட்சித் தலைவர் இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். அதைக் கேட்டுக்கொண்டு இருந்தேன். அதற்கு நான் அவர்களிடத்திலே விளக்கம் கோர விரும்புகிறேன். கிராம நலப் பணியாளர்கள் நியமிப்பதில் ஆங்காங்கு பணம் வாங்கப்படுகிறது. அதற்கு பிரதியுபகாரமாக லஞ்சம் வாங்கப்படுகிறது. அதைத் தன்னால் நிரூபிக்க முடியும் என்று சொன்னார். அவர் ஒரு நாள் குறிப்பிட்டு, அதற்குள்ளாக, யார், யார், எந்த, எந்த ஊரில், யார், யாரிடத்திலே அப்படிப் பணம் வாங்கியிருக்கிறார்கள் என்ற அந்தப் பட்டியலை இந்த அவைக்குத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படித் தந்தால் அதை விசாரித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன். அதற்கு அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு, பட்டியலைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டதனாலே நான் பொறுப்பேற்றுக்கொண்டு, யார், யார் எங்கெங்கே வாங்கியிருக்கிறார்கள், யார், யார், எங்கெங்கே பேரம் பேசியிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரிந்த தகவல்களை இங்கே நான் உங்களுக்குத் தருகிறேன். நீங்கள் நடவடிக்கை எடுங்கள். இன்றைக்கே நீங்கள் போட்டிருக்கிற விளம்பரத்திலேயே நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள் தெரியுமா? 'என்னுடைய குடும்பத்தின் பெயரால், என்னுடைய சொந்தக்காரர்கள் பெயரால், தவறுகள் நடக்க ஆரம்பிக்கின்றன' என்று இன்றைக்கு நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இன்றைக்கு விளம்பரம் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அதனுடைய தவறுகள் என்ன என்ன என்பதை நீங்களே இன்றைக்கு சொல்லியாக வேண்டும். இன்றைக்கு வெளிப்படையாக நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு உங்கள் பெயராலே, எல்லாப் பத்திரிகைகளிலேயும் விளம்பரம் வந்திருக்கிறது. 'என் பெயராலே, என்னுடைய குடும்பத்தின் பெயராலே, சொந்தக்காரர்கள்....



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத் தனியாகக் கேளுங்கள், சொல்கிறேன். இங்கேயே கேளுங்கள் தனியாக, நான் முதலிலே கேட்பது, பட்டியல் தரவேண்டும்; அதாவது, பேரம் பேசிக் கொண்டார்கள். நான் கேள்விப்பட்டேன் அப்படி என்று தப்பித்துப் போகக்கூடாது. நியாயமாக, ஆதாரங்களோடு கொண்டு வந்து சபையிலே வைக்கவேண்டும். இன்னின்னார், இன்னின்ன ஊரில், ஏ., பி., ஏ, பி-கிட்டே கேட்டான்; பி, சி-கிட்டே கேட்டான்; யார் எவ்வளவு கொடுத்தான் என்கிற விவரங்களைத் திட்டவட்டமாகக் கொண்டு வந்து இங்கே பட்டியலை வைக்கவேண்டும். வைத்தால் நான் விசாரித்து யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறேன்.

இரண்டாவது, விளம்பரம் கொடுத்தேன் என்று சொல்கிறீர்கள். இந்த விளம்பரம் கொடுத்ததுக்குக் காரணம் சில பேர் எங்களுடைய பெயர்களைப் பயன்படுத்தி, இன்னார் பேசுகிறேன் என்று பெயர்களைப் பயன்படுத்தி சில பேருக்கு போர்ஜரி கையெழுத்துப் போட்டு கடிதங்களை சில அதிகாரிகளுக்கு, அனுப்பியிருக்கிறார்கள், தொலைபேசி மூலமாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய உதவியாளரே பேசியதாகவே—காஞ்சிபுரத்திற்கு ஒரு மருந்தாளுநர் பதவிக்கு ஒருவரை நியமிப்பது சம்பந்தமாக என்னுடைய உதவியாளர் பேசியதாகவே காஞ்சிபுரத்திற்குப் பேசி, அவர்கள் நல்லவேளையாக திரும்பத் தொடர்பு கொண்டு, நீங்கள் பேசினீர்களா என்று கேட்டு, இல்லை என்று சொன்ன தகவல் இரண்டு, மூன்று வாரத்திற்கு முன்பு கிடைத்தது. நேற்றைக்கு முன்தினம் அதைப்போலவே என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவருடைய விசிட்டிங் கார்டைப் பயன்படுத்தி அதற்குச் சம்பந்தமில்லாமல் இன்னொரு அப்ளிகேஷனை வைத்து வெறும் வாட்ச்மேன் வேலை, அதற்கு ஒரு அப்ளிகேஷனை வைத்து இணைத்து ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் விசிட்டிங் கார்டை அதிலே பின் செய்து அனுப்பியிருக்கிறார்கள். அது உடனடியாக என்னுடைய கவனத்திற்கு நேற்றைய தினம் வந்தது. இப்படியெல்லாம் சில பேர் என்னுடைய குடும்பத்தாருடைய பெயரை என்னுடைய உதவியாளர்களுடைய பெயரைத் துர்பிரயோகம் செய்ய முயலுகிறார்கள் என்ற செய்தி என் காதுக்கு வந்த காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டு இருக்கிறதேயல்லாமல், யாரும் என்னுடைய குடும்பத்தார் இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடவில்லை. ஈடுபட்டால். ஒன்று அவர்கள் உயிரோடு இருக்கவேண்டும். இல்லாவிட்டால் நான் உயிரோடு இருக்க வேண்டும் என்கின்ற அளவிற்கு முடிவு ஏற்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் உட் காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அவர் பேசியதற்கு பதில் சொல்லவேண்டாமா? என்ன சொல்கிறார் என்று கேளுங்கள். அதைக்கூட கேட்காமலே சத்தம் போட்டால் அதற்காக நான் சத்தம் போடுவதா? அவர் சொல்வதை நான் ஒத்துக்கொள்ளக் கூடாதா? (குறுக்கீடுகள்)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைகளிலே அறிவிப்பு வெளியிட்டதைப் பற்றி மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த காலங் களில் எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்தபோது இப்படிப் பட்ட அறிவிப்புகள் வந்தனவே, அது மட்டும் அல்ல அவருடைய கையெழுத்தையே போர்ஜரி செய்து கோப்புகளில் கூட கையெழுத்துகள் இடப்பட்டன என்று எல்லாம் புகார்கள் வந்தனவே அதற்கு என்ன விளக்கத்தைச் சொல்லப்போகிறார் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

11–45 மணி

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை பாயிண்ட் ஆப் ஆர்டர் என்பதால் நீங்கள் அனுமதித்தீர்கள். நான் அதற்காகத் தான் கேட்டேன், அன்றைக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரால் அந்த அறிக்கை வந்த நேரத்தில் என்னென்ன விமர்சனங்கள் செய்தீர்கள். இநத மன்றத்திலே நீங்கள் என்னென்ன பேசினீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இன்றைக்கு உங்களுக்கு அந்த நிலை வருகிற நேரத்தில் நீங்கள் அறிக்கைத் தருகிற நேரத்திலே நான் தயவு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், நீங்கள் அந்த அளவுக்கு அதிலே அக்கறை காட்டி இந்த உணர்வோடு நீங்கள் இருப்பீர் களானால் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒன்றை நான் உங்களுக்குச் சொல்கிறேன், அன்றைக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் வந்த நேரத்திலே நீங்கள் என்னென்ன பேசினீர்கள் என்பதை மறந்து விடவேண்டாம். இன்றைக்கு நீங்கள்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அறிவிப்புக்கும் இந்த அறிவிப்புக்கும் வித்தியாசம் இருக்கிறது. அருமை நண்பர் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் விடுத்த அறிக்கையில் தன்னுடைய குடும்பத்தார் அப்படி ஈடு படுவது போன்ற ஒரு தோற்றத்தில் அந்த அறிக்கை வந்தது. அது அப்போது விமர்சிக்கப்பட்டு இருக்கலாம். ஆனால் இன்று வந்துள்ள அறிக்கை என்ன அடிப்படையில் வந்துள்ளது என்பது அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. என் குடும்பத்தார் பெயரை



என் உறவினர்கள் பெயரைப் பயன்படுத்தி; என்னுடைய உதவி யாளர்களுடைய பெயரைப் பயன்படுத்தி சில தவறுகள் செய்யப் படுவதற்கான முனைப்பான முயற்சிகள் நடைபெற்ற காரணத் தால் இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது என்று தெளிவாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கான ஆதாரங்கள் இருந்த காரணத்தால்தான் அதைப்பற்றிய இந்த அறிக்கையே அவசியப்பட்டது.

திரு. பொ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சத்துணவுத் துறையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் இதற்கென்று தனியாக விஜிலன்ஸ் ஸ்குவாடு மாதிரி அதிகாரிகளை நியமித்து இதை அடிக்கடி சோதனைச் செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக என்னுடைய தொகுதியிலும், மாவட்டத்திலும், தமிழ்நாட்டில் உள்ள குடியாத்தம், ஓசூர், தர்மபுரி போன்ற பகுதிகளிலும் ஏழை மக்களுடைய உயிர்நாடியான தொழிலாக விளங்குகின்ற தீப்பெட்டித் தொழில் பற்றி இந்தப் பேரவையில் எல்லாக் கட்சிகாரர்களும் ஒருங்கிணைந்து நாம் பேசியிருக் கிறோம். விம்கோ என்ற ஒரு பன்னாட்டு நிறுவனம் இங்கே இருக்கின்ற ஏனைய தீப்பெட்டித் தொழிலை நசுக்கக்கூடிய அளவுக்கு இயந்திரத் தொழிலாக இருக்கிறது. இது காந்திய கொள்கைக்கு விரோதமானது. லட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு தரக்கூடிய அந்தத் தொழிலை ஒரு சில நூறு பேருக்கு, அல்லது ஒரு சில ஆயிரம் பேருக்கு மட்டும் வேலைக் கொடுத்து அதன் மூலம் அந்தத தொழிலை நசுக்குவதற்கு இந்த விம்கோ நிறுவனம் பல ஆண்டு காலமாக ஏறத்தாழ 50, 60 ஆண்டு காலமாக முயற்சி செய்து அந்த முயற்சியின் பயனாக வடக்கே குஜராத், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம் போன்ற சில மாநிலங்களில் உள்ள தீப்பெட்டித் தொழில், கைவினை தீப்பெட்டித் தொழில்கள் எல்லாம் நசிந்து போய் அதை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும் என்று அன்றைய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் முயற்சி செய்தபோது அந்த முயற்சி வெற்றிப் பெறவில்லை. இந்த கைத்தொழில் ஒரு தடவை அழிந்து விட்டால் அதை திரும்ப நாம் உயிர்ப்பிக்க முடியாது. எனவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லி சர்க்காரிடம் சொல்லி எப்படியாவது கடந்த காலத்திலே காங்கிரஸ் கட்சியினுடைய கடைசி நாட்களில் அவர்கள் கொண்டு வந்த அந்த வரவு செலவுத் திட்டத்தில் கைவினை தீப்பெட்டித் தொழிலுக்கு மரண அடி கொடுப்பது போல் போகிறேன். போகிறேன் என்று இருக்கிறதை எல்லாம் கெடுத்துவிட்டு போன தைப் போல அங்கே விம்கோவிற்கு சாதகமாகவும் ஏனைய 'சி' கிளாஸ், 'டி' கிளாஸ் தொழில்களுக்கு குறிப்பாக தமிழ்நாட்டில் இருக்கிற தீப்பெட்டித் தொழில்களுக்கு பாதகமாகவு, அந்தத் தொழிலை நசுக்கக்கூடிய முறையிலும் கடந்த வரவு செலவுத் திட்டத்திலே அவர்கள் புதிய ஒரு வரி அமைப்பை உருவாக்கி

அதன் மூலம் அறிவித்துவிட்டு சென்றார்கள். அதை புதிதாக வந்து இருக்கிற நம்முடைய ஆட்சி டெல்லியில் வந்து இருக்கிற ஆட்சி மக்களுடைய நலவாழ்வை நோக்கமாகக் கொண்டு இருக்கிற ஆட்சி நிச்சயமாக அதை மாற்றி அமைக்கும் என்று எங்கள் காமராஜர் மாவட்டம் அல்லாமல் நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், தர்மபுரி மாவட்டம், சேலம் மாவட்டத்தில் சில பகுதிகளில் இருக்கின்ற சிறு தீப்பெட்டி உரிமையாளர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து இந்த முறை எப்படியும் அதை செய்து தீரவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சத்துணவுக்கு ஒரு சின்ன யோசனை. இப்போது மத்திய அரசினுடைய மானியத்தோடு ஊட்டசத்து தருகிறார்கள், சிறு உருண்டையாக குழந்தைகளுக்கு அந்த உணவைத் தருகிறார்கள். அந்த உணவு சுவையாகவும், சத்தாகவும் இருக்கிறது. அப்படிப்பட்ட அந்த சத்துணவுத் துறையும், ஊட்டச் சத்துத் துறையும் ஆகிய இரண்டையும் ஒன்றாக இணைக்க முடியுமா என்ற சாத்தியக் கூறுகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசிக்கவேண்டும். அதன் மூலம் ஏற்படுகிற சேதாரங் களைத் தடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, எனவே இந்த சத்துணவுத் திட்டம் அருமையான திட்டம். அந்தத் திட்டத்தை இன்றைக்கு இருக்கிற நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்லமுறையிலே பாடுபட்டு, தவறு செய்பவர்களை கண்டித்து, நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிற நல்வாழ்வுத் திட்டங்கள் உரியவர்களுக்குப் போய் சேரக்கூடிய வகையிலே விரைந்து செயல்படுவார்கள் என்ற என்னுடைய நம்பிக்கையைத் தெரிவித்து, அவர்களுடைய கோரிக்கையை வரவேற்று விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

(11-50)

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இந்தக் கதர், தொழில், சமூகநலன் ஆகிய மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பினை தந்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய கருத்துக்களைக்கூற விழைகின்றேன்.

இந்த கதர் வாரியத்திலே ஏறத்தாழ 63 தொழில்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இந்தத் தொழில்களிலே, அதாவது, நூற்பு, உற்பத்தி, சலவை, சாயம் போன்ற பல்வேறு துறைகளின் மூலமாக ஏறத்தாழ 45 ஆயிரம் கிராமிய கைவினைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்று இருப்பதாகவும் அதில் 36 ஆயிரம் பேர் பெண்கள் என்றும் குறிப்பிட்டு இருக்கிறீர்கள், இந்தக் கதர், பட்டு போன்ற துறைகளை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ப்பு மல்பெரி வளர்ப்பு, நல்ல தரமான முட்டை, புழுக்கூடு போன்றவை களை கொள்முதல் செய்கின்ற மையங்கள் என்று பல்வேறு இலாக்காக்களை வைத்து பல்வேறு திட்டங்களை வைத்து செயல் படுத்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பன்னாட்டு நிதியுதவி யுடன், உலக வங்கி நிதி உதவியுடன் பகுதி மேம்பாட்டு



திட்டங்கள் என்று பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த மல்பெரி வளர்ப்பதற்காக புதிய விவசாயிகளைக் கண்டுபிடித்து, பெண் விவசாயிகளையெல்லாம் ஊக்குவித்து இந்தப் பட்டுத் தொழில் ஊக்குவிக்கப்படுவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நேரத்திலே நான் ஒன்றை கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன். புதிய விவசாயிகளைத் தேடிபிடித்து என்று சொல் கின்றதையும், புதிய பெண் விவசாயிகளைக் கண்டுபிடித்து மல்பெரி வளர்ப்பு என்கின்ற அந்த இரண்டின் அடிப்படையிலே யும் சிலவற்றை நாம் கருத்திலே கொள்ள வேண்டியிருக்கிறது. எத்தனை பெண் விவசாயிகள் தங்கள் பெயரிலே நிலம் உடையவர் களாக இருக்கிறார்கள் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். அப்படி நிலம் சொந்தமாக உள்ள பெண்கள் அதிகமாக இல்லாத காரணத் தால் அவர்கள் விவசாயம் செய்கின்ற உரிமையை 'டெனன்சி ரைட்ஸ்' பெற்றுக்கொண்டு, அந்த அத்தாட்சியை காட்டினாலே அவர்களுக்கு எல்லா சலுகைகளும் தந்து அவர்களும் ஊக்குவிக்கப் படுவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். புதிய விவசாயிகளைத் கண்டுபிடித்து என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்கள் என் தொகுதியைப் பொறுத்த வரைக்கும் பொறுத்த வரைக்கும், ராதாபுரம் தொகுதியைப் பொறுத்த வரைக்கும் செயல்படுவதற்கு வாய்ப்பே இல்லையென்று எண்ணுகிறேன். ஏனென்று கேட்டால் இதற்கு ஆதாரமான நீர்ப்பிரச்சினை அங்கே பரவலாக, கொடிய அளவிலே காணப்படுகிறது. குடி நீரை விலை கொடுத்து வாங்கவேண்டிய அவல நிலைமை இருக் கிறது. அந்தப் பகுதியிலே உள்ள புதிய விவசாயிகளும் பெண் விவசாயிகளும் ஊக்குவிக்கப்பட்டு இந்தத் தொழிலை எப்படி செய்ய முடியும் என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, இப்படி புதிய விவசாயிகளை, பெண் விவசாயிகளைத் தேடிப் பிடிக்கின்ற காலகட்டத்திலே அவர்களுக்கு அதிமுக்கியத் தேவையான நீர் ஆதாரத்தைத் தேடி தரக்கூடிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. ஆக, இந்த மானியக் கடன்கள் எல்லாம் வழங்குவதன் மூலமாக, அவர்கள் அந்த நீர் ஆதாரத்தை பெற்றுக் கொள்ள முடியாத தடை நடைமுறையிலே இருக்கிறது. ஆகவே, கிணறுகளை ஆழப்படுத்தியோ அல்லது ஆழ்துளைக் கிணறு களை ஏற்படுத்தித் தந்தோ அவர்களுக்கு அந்த நீர் ஆதாரத்தை ஏற்படுத்தித் தரவேண்டும்.

தொழில் மையங்கள் மூலமாக சிறு தொழில் தொடங்குபவர் களுக்கெல்லாம் மின் இணைப்பு, அந்தத் தொழில் மையம் பரிந் துரை செய்வதன்மூலமாக அவர்களுக்கு உடனடியாக முன்னுரிமை வழங்கப்பட்டு தரப்படுகிறது.

அதேபோன்று, இந்த மல்பெரி செடிகளை வளர்க்கின்ற பெண் விவசாயிகள், புதிய விவசாயிகளுக்கெல்லாம் மின் இணைப்பும் இந்த வாரியத்தின் மூலமாகப் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அங்குள்ள விவசாயிகளெல்லாம், கருங்கல்லுக்குள்ளும் நீர் இருக்கிறதா? இருந்து விடாதா என்கின்ற எண்ணத்தில் அயராத உள்ளத்துடன், தளராத உழைப்புடன் பூமியை துளைத்து துளைத்து துவளுகின்ற நிலையை அடைந்து விட்டார்கள். அத்தகைய விவசாயிகளுக்கு நீங்கள் நீர் ஆதாரத்தை தேடித் தருவீர்களேயானால் விவசாயத் தொழிலை கைவிட்டுவிட்டு கையறு நிலையிலே இருக்கின்ற ராதாபுரம், சாத்தான்குளம், நாங்குனேரி போன்ற தொகுதிகளிலே வாழுகின்ற பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன்பெறுவார்கள். அவர்களுடைய வாழ்வு வளம் பெறும். அவர்கள் வாழ்வு வளம் பெறுவதோடு உற்பத்தியைப் பெருக்குகின்ற காரணத்தினாலே-நாடும் வளம்பெறும் என்று தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இந்த கதர் வாரியத்திலே சோப்பு உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. குளியல் சோப்பு, சலவைத் சோப்பு ஆகிய சோப்புகள் உற்பத்தி செய்யப்பட்டு அதற்கு மார்க்கெட்டுகளிலே நல்ல ஒரு வரவேற்பும் இருப்பதாகத் தெரிய வருகிறது. அதன் மூலமாக மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. இந்தக் கதர்வாரியத்திலே, கிராமங்களிலே கிடைக்கின்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கி, வேலைவாய்ப்பைப் பெருக்குவதே நோக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

11-55 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை

அதற்கு அடுத்ததாக, அங்கம் வகிக்கின்ற தொழில் பனைத் தொழில். பனைத்தொழிலைப் பொறுத்தவரை, இந்தியாவிலே இருக்கிற 7 கோடி பனை மரங்களில் 6 கோடி பனை மரங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. இந்தத் தொழிலில், பதநீர் இறக்குதல், பனங்கற்கண்டு தயாரிப்பது, பனை வெல்லம் தயாரிதல், பனை நார், பனைத்தும்பு உற்பத்தி செய்வது, நார்ப் பொருட்கள், துருசு செய்வது என்று ஏராளமான பொருட்கள் உற்பத்தியாகின்றன. பனைத்தொழிலின் காரணமாக பல உப தொழில்கள் விரிவடைந்திருக்கின்றன. அந்த உப தொழில்கள் காரணமாக 10 லட்சம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். பதநீர் இறக்குவோர், நார்த்தும்பு செய்வோர் என்று இதில் பத்து லட்சம் பேர் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். இந்தத் தும்புப் பொருட்கள் நார்ப்பொருட்கள் எல்லாம் அன்னியச் செலவாணியை ஏற்படுத்தித் தருகிறது. ஆனால் அவர்களின் வாழ்க்கைத்தரம் பொருளாதார ரீதியில் சிறப்பாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுகாதாரக் கேடுகள் நிறைந்த குடிசைப் பகுதிகளில், மிகவும் கஷ்டமான வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஆகவே அவர்கள் நிலையை மேம்படுத்தும் வகையிலும், பொருளாதாரத்தை உயர்வு படுத்தும் வகையிலும், குடிசை மாற்றுவாரியத்தின் சார்பில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்



கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு அதற்கான நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்றும், அதுவும் இந்த நிதியாண்டிலேயே 5,000 வீடுகள் பனைத் தொழிலாளர்களுக்கு கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பனைத்தொழில் சிறப்பாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே இங்கே பனைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் நமது தொழிலாளர்களை அந்த நாடுகளுக்கு அனுப்பி அங்குள்ள தொழில் நுட்பங்களைக் கற்றுவர ஆவன செய்ய வேண்டும்.

நீண்டநாள் கோரிக்கையான ஒன்றை சொல்ல விரும்புகிறேன். தென்னைமர வாரியம், பருத்தி வாரியம் என்றெல்லாம் இருக்கிறது. பனை வாரியம் ஒன்றை அமைத்து, பனைத் தொழிலுக்கு ஊக்கம் தந்து, ஏராளமான பனைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தால், அவர்களுக்கும் வருமானம், நாட்டுக்கும் வருமானம். உப தொழில்கள் பெருகும் என்றவகையில் பனை வாரியம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பனைத் தொழிலில் நார்ப்பொருட்கள், தும்புப் பொருட்களால் அன்னியச் செலாவணி கிடைக்கிறது என்று நான் முன்பே சொன்னேன். நார்க்கட்டில்கள் பின்னுவது சிறந்த தொழிலாகக் கருதப்படுகிறது. பிளாஸ்டிக் ஒயர்களில் பின்னப்படும் கட்டில்கள், நாற்காலிகளை விட சிறந்ததாக நார்க்கட்டில்கள் இருக்கின்றன. பின்னல் கூடைகள், பாய்கள், பெட்டி முடைதல் போன்றவை அங்கே சிறப்பாகச் செயல்படுகின்றன. இந்த பனைத்தொழில் வருடத்திற்கு 5 மாதம் மட்டுமே நடக்கும் சீசன் தொழிலாகும். மீதியுள்ள 6-7 மாதங்கள் பனைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பதை மாற்றி, அவர்களுக்கு பட்டு வளர்ப்பு, ஆடு, மாடுகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவைகளில் ஈடுபட வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

அடுத்ததாக தோல் தொழில். தோல் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வாகன வசதி, நவீன தொழில் சாதனங்கள், வீட்டு வசதி, போன்றவைகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழில் சிறப்படையாமல் இருப்பதற்குக் காரணம், அதை அரசு இன்னமும் சரியாகக் கவனிக்காததுதான். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திலிருந்து ஏராளமான மாடுகள் கேரளாவுக்கு தோலுக்காக கடத்தப்படுகின்றன. நெல்லை மாவட்டத்தில் மேலப்பாளையத்திலிருந்து கன்னியாகுமரி வழியாக கேரளாவுக்கு மாடுகள் கடத்தப்படுகின்றன. ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் இப்படி மாடுகள் கடத்திக் கொண்டு செல்லப்படுகின்றன. அதை நாம் தடுத்து நிறுத்தினால், இறைச்சி பதப்படுத்தும் தொழில் கூடங்களுக்கு நல்லது. புதிய இறைச்சிப் பதப்படுத்தும் கூடங்களை அதிகமாக நாம் நிறுவிட வேண்டும். இறைச்சி போக, தோல் ஏராளமாக

நமக்கும் கிடைக்கும். அத்துடன் எலும்புகள், கொம்புகள் போன்றவையும் நமக்குப் பயன்படும். அதனால் உபதொழில் வளர்ச்சி ஏற்படும். ஆகவே கேரளாவுக்கு மாடுகள் கடத்தப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக....

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, கேரளாவுக்கு மாடுகள் கடத்தப்படுகின்றன என்று சொல்கிறார்கள். மாடுகள் விற்பனைக்குத்தான் கொண்டு செல்லப்படுகின்றன. யாரும் கேரளாக்காரர்கள் வந்து கடத்திக் கொண்டு போகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி : எப்படியும் தமிழ்நாட்டை விட்டு கடந்து செல்கின்றன. ஆகவே கடத்தப்படுகின்றன என்று சொல்கிறேன். (சிரிப்பு) ஆகவே, பனைமரங்கள் அதிகமாக வெட்டப்படுவதால் பனைத் தொழில் நசித்துவிடும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் ஏற்பட்ட வறட்சியால் எராளமான பனை மரங்கள் லார்ஜ் ஸ்கேலில் வெட்டப்படுகின்றன. பனை மரங்களை வெட்டக்கூடாது என்று சட்டம் இருந்தாலும், மரங்கள் வெட்டப்படுகின்றன. அந்தச் சட்டத்தை தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

12—00 மணி

அடுத்து, மண்பாண்டத் தொழிலாளர்கள். இந்த மண்பாண்டத் தொழிலாளர்கள் எனப்படுகின்ற கைவினைஞர்கள் பல ஆண்டுகளாக தமிழகத்தில் பரவலாக வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குச் சொந்த இடங்கள் இல்லை. குழித்துறை போன்ற பகுதிகளில் எல்லாம் அவர்கள் பரம்பரை, பரம்பரையாக இருந்து மண்ணை எடுத்து பிசைந்து, மண்பாண்டங்கள் செய்து தொழில் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்குக் காலங்கள் இருக்கிற சூழ்நிலையில் தனி நபர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு அவர்களுக்கு இன்னல்களைத் தருவதாகத் தெரிகிறது. இவர்களுக்கு ஏதோ ஒரு உத்தரவு இருக்கிறதாம். அதாவது 'வித்அவுட் ஃபினான்ஷியல் கன்கரன்ஸ்' என்று சொல்லி தாசில்தார் ஏற்க மறுக்கிறார்கள். எனவே நம்முடைய முதல்வர் அவர்கள் தலையிட்டு இந்த மண்பாண்டத் தொழிலை மேற்கொண்டுள்ள மூன்று இலட்சம் குடும்பத்தினர் அழிந்துவிடுகின்ற அந்தத் தொழில் நசித்துவிடுகின்ற நிலைமையை மாற்றி அவர்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு அந்த இடங்களைப் பட்டா செய்து கொடுத்து அவர்களுடைய வீட்டுமனைக்கு ஏற்பாடு செய்து, வீடுகளையும் அரசே கட்டிக் கொடுத்து அந்தத் தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு மானியக் கடன்கள்



எல்லாம் கொடுக்கும்போது நில ஜாமீன் கடன் கேட்கிறார்களாம். நிலமே இல்லாதவர்கள் எப்படி அந்த சான்றிதழைக் கொடுக்க முடியும், அவர்கள் எவ்வளவு சிரமப்படுவார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களுடைய தொழிலை முன்னிட்டு அவர்களுடைய சொந்த ஜாமீனில் அதை வழங்க முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 'டிக்' மூலமாக நிறைய தொழில்களைத் தொடங்கி இருக்கிறார்கள். அந்தத் தொழில்களை எல்லாம் பார்க்கும் போது வறண்ட தொகுதியான இராதாபுரம் தொகுதியில் உள்ள நாங்குனேரி, சாத்தான்குளம் போன்ற பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கெல்லாம் ஒரு சின்ன அறிவிப்பு கிடைத்திருக்கிறது. அதாவது மார்ச் 1990-க்குள்ளாக பணத்தைத் திருப்பிச் செலுத்துவதாக இருந்தால் அவர்களுக்கு வட்டியிலிருந்து விதிவிலக்கு என்று அறிவிப்பு கிடைத்திருக்கிறது. அங்கே வறட்சி நிலவுகிற காரணத்தால் இந்த விதிவிலக்கினை டிசம்பர் 1990 வரையில் நீட்டித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அடுத்து சமூக நலனுக்குச் செல்கிறேன்.

காலத்தைக் கருத்தில் கொண்டு ஒருசில கருத்துக்களை மட்டும் வலியுறுத்த விரும்புகிறேன். சத்துணவு ஊழியர்கள் குறித்து அருமை உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் மிகக் கடுமையான விமர்சனம் செய்தார்கள். அது வேதனைத் தருவதாக இருக்கிறது. யார் நியமனம் செய்திருந்தாலும் நமது அரசுதான் நியமனம் செய்கிறது. அதாவது தமிழக அரசுதான் நியமனம் செய்கிறது. அதாவது அந்தப் பெண்களை தமிழக அரசுதான் நியமனம் செய்திருக்கிறது. அவர்கள் எல்லாம் கொழுத்து வாழ்கிறார்கள். திருடி வாழ்கிறார்கள், வீட்டிலே அடுப்பு எரிவதில்லை என்று எல்லாம் சொல்வது அந்த பல்லாயிரக்கணக்கான பெண்கள் மனதைப் புண்படுத்துகிறது. அதே கல்வித் தகுதியைப் பெற்றவர்கள் மற்ற துறைகளிலே எத்தகைய ஊதியத்தைப் பெற்று எத்தகைய வாழ்க்கைத் தரத்தில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை அன்றைக்கு அறிவித்தார்கள். அதாவது 800 ரூபாய் சம்பளத்தில் இரண்டு ஆண்டுகள் செகண்டரி கிரேட் ஆசிரியராகப் பணிபுரிந்தால் அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்து அவர்களுக்கும் சக ஆசிரியர்களைப்போல் சீரான சம்பளம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த வகையில் பல ஆண்டுகள் பல இன்னல்களுக்கு மத்தியில் பணியாற்றிக்கொண்டு வருகிற இந்த பெண்களுக்குக் கருணை காட்டி அவர்களை நிரந்தரப்படுத்தி அதே தகுதியுள்ள மற்ற துறையிலே இருக்கின்ற அனைத்து ஊழியர்களுக்கும் சமமான சம்பளத்தையும், சலுகைகளையும் கொடுத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும். கண்டிப்பதற்காக மட்டும் அவர்கள் அரசு ஊழியர்கள் அல்ல. சலுகைகளை அனுபவிப்பதற்கும் அவர்கள் அரசு ஊழியர்கள்தான்; அவர்களும் இந்தத் தமிழகத்தில் பிறந்த பிரஜைகள்தான் என்ற நிலைமையை நாம் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேலைவாய்ப்பில் 30 சதவீதம் பெண்களுக்கு என்று கூறியிருக்கிறீர்கள். அதை எல்லோரும் பாராட்டுகிறார்கள். நான் அதைப் பாராட்டவில்லை. இன்றைக்குப் பெண்கள் தமிழகத்தில் சரிநிகர் சமானமாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது அந்தஸ்தைப் பெற்று வாழ வேண்டும் என்றால் அவர்களுக்கு பொருளாதாரச் சுதந்திரம் தேவைப்படுகிறது. ஒரு விதவையாகவோ, கணவனால் கைவிடப்பட்டவளாகவோ, அபலையாகவோ மாறுகிற வேளையில் தன்னுடைய காலில் நிற்கிற, அதாவது வரதட்சிணைக் கொடுமை என்ற பிரச்சினைகள் எல்லாம் வரும்போது அவர் தன்னுடைய காலிலேயே நிற்க இந்த அரசு நேசக் கரம் நீட்டி அவர்களுடைய தகுதிக்குத் தகுந்தாற்போல் வேலை வாய்ப்புத் தருகிற சூழ்நிலை இருக்குமேயானால் அவர்கள் நிச்சயமாக பாதுகாக்கப்படுவார்கள். அப்படிச் செய்தால் ஸ்டவ் வெடித்து மரணம், கிணற்றில் தள்ளிவிட்டு தற்கொலை, கயிற்றில் தொங்கவிட்டு தூக்கு என்றெல்லாம் சொல்கிற இந்த அவலங்கள் எல்லாம் நிச்சயமாகத் தடுத்து நிறுத்தப்படும். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து 15 ஆண்டுகாலம் ஆகியும் வேலைவாய்ப்புகளுக்காக ஒரு இண்டர்வியூகூட வரவில்லை என்று நாங்குநேரியைச் சேர்ந்த சண்முகத்தாய் என்ற டபுள் எம்.ஏ., பி.எட். படித்த பெண் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இது போல் விதவைகளுக்கு முன்னுரிமை, முன்னாள் இராணுவ வீரர்களின் மனைவிக்கு முன்னுரிமை என்று சொல்கிற உங்கள் தேர்வாணைக் குழுவிற்கு இரண்டுமுறை இண்டர்வியூ அட்டெண்ட் பண்ணின நாங்குனேரி மனகாவலன்புரத்தைச் சேர்ந்த ஜீவரத்தினம் சலோமி, பி.எஸ்.சி.பி.எட், என்பவர் தனக்கு இன்னும் வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட பெண்களை எல்லாம் கவனிக்க வேண்டாமா?

திருமணச் சந்தையில் மாப்பிள்ளைகளின் நிலைமையைப் பார்க்கவேண்டும். மேலே உள்ளவர்களையும் கீழே உள்ளவர்களையும் நான் விட்டு விடுகிறேன். இடையிலே உள்ளவர்களைப்பற்றி நான் சொல்கிறேன். திருமணத்திற்கு பெண்களைத் தேடுகிற நேரத்தில் சம்பாதிக்கிற பெண்களையே தேடி அலைகிற ஒரு கோரக் காட்சியை நாம் இப்போது காண்கிறோம். ஆகவே பெண்களுக்கு வேலை வாய்ப்பு என்பதில் 30, 70 என்று இருப்பதை மாற்றி 50, 50 என்ற அடிப்படையில் வேலைவாய்ப்பு தந்தால்தான் அவர்களுக்கு ஓரளவுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து தன் காலில் நிற்க முடியும், எனவே அந்த வகையில் அவர்களுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் சமூகநல ஊழியர்கள் எல்லாம் தேர்வு செய்ய வேண்டும். அப்போது தான் அங்கே சென்று பதிந்துவிட்டு காத்துக்கொண்டிருந்ததற்கு ஒரு பொருள் இருக்கும்.





அடுத்து வேலைவாய்ப்பில் பெண்களைப் பொறுத்தவரையில் வயது வரம்பினை ரத்து செய்யவேண்டும். ஏனென்றால் புருஷன் செத்தபிறகு வந்து பதிவாள். அல்லது புருஷன் கைவிட்ட பிறகு வந்து பதிவாள். அதற்குள் அவருக்கு வயது கடந்துவிடும். இந்த லிமிட்டை வைத்திருந்தால் அவர்கள் எல்லாம் மொத்தம், மொத்தமாகக் கொண்டுவந்து பணத்தைக் கொடுத்துத்தான் வேலை பெறவேண்டிய நிலைமை ஏற்படும். அப்போதுதான் வேலை கிடைக்கும். எனவே இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக உடனடியாக அந்த வயது வரம்பினை ரத்து செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

12-05 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) நேரம் ஆகிறது. இன்னும் ஒரு மணித்துளியில் முடிக்கவேண்டும். 5 மணித்துளிகள் கொடுத்தாகிவிட்டன.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பெண்களுக்குப் பெருவாரியாக வேலைவாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மாவட்டத்தின் தலைநகரத்திலே ஓர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், என் கதைக்கு வருகிறேன். கடந்த சில தினங்களுக்கு முன்னதாக பெப்ரவரியிலே பெண்கள் எந்த நிலையிலே இருந்தாலும் ஆண்டியாக இருந்தாலும் அரசனாக இருந்தாலும், தங்கள் உரிமைக்காக போராடவேண்டிய அவலத்திலே வாழ்கிறோம். ஆக கடந்த பெப்ரவரி மாதம் இரண்டாம் தேதி ஒரு நீர் போராட்டம். குடிநீர் விலைகொடுத்து வாங்குகிறார்களே என்று, அணையிலே நீர் இருக்கின்றது. அந்த விநியோகத்திலே ஊழல் இருக்கிறது என்று போராடினேன் அறவழியிலே. அங்கே தடியடி நடந்தது, டி. எஸ். பி. சுந்தரத்தாலே. நீண்ட மயான அமைதி அங்கே. ஒரு காவல் நிலையம் எங்கள் பகுதியிலே. நீதி விசாரணை கேட்டேன் என் தொகுதியிலே கூடங்குளத்திலே நடைபெற்றது. தயவுசெய்து விட்டுவிடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : சமூகநலத் துறைக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா?

திருமதி ரமணி நல்லதம்பி : முடித்த பிறகு சொல்லுங்கள்; இருக்கிறதா இல்லையா என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : துறையைப் பற்றிச் சொல்லுங்கள். உங்களுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கே. பி, கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு காரியத்தை இந்த நேரத்திலே உறுப்பினர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அந்தத் தொகுதியிலே இவர்கள் எப்படி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் என்பதை நான் இந்த அவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த தேர்தல் நேரத்தில், அன்றைக்கு 4 மணிக்கே மைக்-ஐ காவல் துறையை விட்டு ஆப் செய்தார்கள். அதனாலேதாலே தான் அவர்களை மறித்தேன். அந்த காழ்ப்புணர்ச்சியுடன் அவர்கள் பேசுகிறார்கள். நீதி போராட்டம்....

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் த்லைவர் அவர்களே, அன்றைக்கு என்ன நடந்தது என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கெள்கிறேன். தேர்தல் பிரச்சாரம் எத்தனை மணிக்கு முடிவடைய இருந்தது? அன்றைக்கு திசையன்விளையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கடைசி கூட்டம் அங்கே நடத்துவதற்கு அனுமதியும் பெற்று அங்கே கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எதிரிலே அனுமதிபெறாமல் உறுப்பினர் அவர்கள் கூட்டத்திலே பேசினார்கள். எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டத்தை இடைமறித்து அங்கே பேசிக்கொண்டிருந்தார்கள். நான் வந்த பிறகுகூட, அந்த இடத்திற்கு இறுதி நேரத்திற்கு முன்பாக நான் அங்கே வந்து சேர்ந்தேன். அரை மணிக்கு முன்பாகவே அங்கே இருந்து சத்தம் வந்துகொண்டே இருக்கிறது. அதற்குப் பிறகு போலீஸ் தலையிட்டபிறகு அவர்களை அந்த இடத்திலே நிறுத்த முடிந்தது. அப்படிப்பட்ட அறட்போராட்டத்தை அவர்கள் நடத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடிக்கவேண்டும்.

திருமதி. ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன். ஏனென்றால் அப்புறம் நேரம் இருக்காது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நீர்பாசனத்திலே அவர்களுடைய ஊரிலே குடிநீர் இல்லை. பயிருக்கும் நீர் இல்லை குளிப்பதற்கும் நீர் இல்லை, மாடு கன்றுகளுக்கும் குடிப்பதற்கும் தண்ணீர் இல்லை என்பதற்காக போராட்டம் நடத்தினார்கள். அந்த போராட்டத்திலே பெண் என்ற முறையிலே அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட காரணத்தினாலேயே, சமூக நலமாக இருந்தாலும், பெண்களைப் பற்றி பேச வருகிறபோது, தொடர்ந்து



பேசி வருகிறார்கள். பெண் இனம் என்ன துன்பப்படுகிறது என்பதை சொல்லிக் கொண்டு வருகிறபோது, பெண்ணினுடைய மனச்சாட்சியினுடைய பிரதிநிதியாக அவர்கள் பேசுகிறார்கள். அவர்களை பேச அனுமதிக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் அவர்களுடைய கட்சியிலே ஒரு பெரிய வீராங்கனை என்பது அவர்களுடைய கட்சிக்காரர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. அவர்கள் தங்களுடைய தீவிரத்தை நிலைநாட்டுவதற்காக சில நேரங்களில் அந்த கட்சியிலே மற்றவர்கள் கடைப்பிடிக்கின்ற கடடுப்பாட்டைக் கூட மீறிச் செல்லக்கூடிய அளவுக்கு அவ்வளவு தீவிரம் வாய்ந்தவர்கள். அவர்கள் தண்ணீர் பிரச்சினைக்காக கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தி வந்தவுடனே, அன்றே அவர்களை விடுதலை செய்யுமாறு அரசு ஆணையிட்டது, அவர் விடுதலை செய்யப்பட்ட பிறகும் கூட போலீஸ் ஸ்டேஷனிலே இருந்து வெளியிலே போகமுடியாது என்று வம்பு செய்து அவர்கள் வெளியிலே வந்து வெளியிலே இருந்த போலீஸ் வேனிலே உட்கார்ந்து கொண்டு அன்று பகல் முழுவதும் இருந்தார்கள், இரவு முழுவதும் அங்கேயே இருந்தார்கள். வேனிலே இருந்து வேறு காரியங்களுக்காகக்கூட வேனை விட்டு இறங்கவில்லை. எல்லா காரியங்களையும் அந்த வேனிலேயே அவர்கள் செய்தார்கள் என்ற செய்தி எல்லாம் எனக்கு வந்தது. அந்த அளவுக்கு அவர்கள் வீரங்கனை என்பதை நான் மறுக்கவில்லை. நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இவைகளை எல்லாம் மனதார ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்பவில்லை. ஆனால் இதெல்லாம் நடந்தன. பலமுறை சொல்லியும், அதிகாரிகள் எல்லாம் சென்று நீங்கள் சொன்னபடி தண்ணீர் விடப்பட்டாகிவிட்டது என்று சொன்ன பிறகும்கூட அம்மையார் 'நீங்கள் சொன்னால் நம்பமாட்டேன், என் கணவர் வந்து சொன்னால் தான்' நம்பமுடியும்' என்று சொல்லி அது வரையிலே அந்த போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள் வேனிலேயே இருந்துகொண்டு.

12-10 மணி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தண்ணீர் விட்டாயிற்று என்று சொன்ன பிறகும் திரும்பவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள் இன்றுவரை விட்டிருக்கிறார்களா என்று கேளுங்கள். ஆக தண்ணீர் விடவில்லை. குடிநீர் விலைகொடுத்து வாங்குகிறார்கள் (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது, கட்டுப்பாடு வேண்டுமல்லவா? தலைவர் சொன்னபிறகும் பேசிக்கொண்டேயிருந்தால் எப்படி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்னும் சில அவசியமான கருத்துக்களைக் கூறி.... (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : Subject-க்கு வாருங்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே' உண்மை தெரிய வேண்டுமில்லையா, அதற்குதான் நீதி விசாரணை வேண்டுமென்று கேட்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : நீங்கள் பெண்களைப் பற்றிப் பேச வேண்டும் என்கிறீர்கள்: போராட்டம் பற்றி எல்லாம் தனியே பேசுங்கள். இப்போது Subject-க்கு வாருங்கள். இல்லையென்றால் முடித்துவிடுங்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் தான் குறுக்கிடுகிறீர்கள் இன்னும் இரண்டே வரிகள் தான்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : முடியுங்கள் சீக்கிரம்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆக. இதற்காக ஒரு விசாரணை வைத்து, காவல் துறை சொல்வது மெய்யா, இவர்கள் சொல்வது மெய்யா என்று தெரிய வேண்டும். பஸ்ஸிலே வைத்து, போலீசை ரவுண்ட் அப் பண்ண வைத்து எங்களுக்கு எத்தகைய கொடுமைகளை எல்லாம் செய்தார்கள் என்பதை சொல்ல அப்பகுதி மக்கள் ஆயத்தமாக இருப்பார்கள் என்கிற காரணத்தாலே தான் நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டேன். நீண்ட மயான அமைதி. கூடங்குளத்தில் ஒரு காவல் நிலையம் திறந்தார்கள். எங்கள் டி.எஸ்.பி. திரு. சுந்தரம், அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர் பெண் என்ற காரணத்தினாலே அவர் அழைப்பிதழில் என் பெயரைக் குறிப்பிடவும் இல்லை, என்னை அழைக்கவும் இல்லை. இது சரிதானா? இத்தகைய நிலைகள் எல்லாம் ஏன் இருக்கின்றன ? என்றுதான் நான் கேட்டேன் ஆக, பெண்ணாக இருக்கிறேன், பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் சித்தாந்தங்கள் எல்லாம் ஏட்டுச் சுரக்காயாக இருக்கின்றன.... (மணியடிக்கப் பெற்றது).

*திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இன்று சமர்ப்பித்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் தெரிவ்க்க விரும்புகிறேன். இன்றைய தினம் கதர் வாரியம், சத்துணவுத் திட்டம், சிறுதொழில் வளர்ச்சி போன்ற கோரிக்கைகளுக்காக பல கோடி ரூபாய்களை மானியம் வழங்க வேண்டுமென்று இந்த அவைக்கு சமர்பித்திருக்கிறார்கள். இன்றைய தினம் கதர்வாரியம், ஏறக்குறைய இந்த ஓராண்டுக் காலத்தில் நல்ல முன்னேற்றம் கண்டிருப்பதோடு, ஏற்கெனவே கதர் வாரியத்திலே, மத்தியிலே ஜனதா ஆட்சி இருந்தக் காலத்தில், சிறிய தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு எல்லாம், கடன் வழங்குவது வரிச் சலுகைகள் தருவது, மானியம் வழங்குவது போன்ற சலுகைகளை வழங்கி, அதன்மூலம் சிறிய தீப்பெட்டி தொழிற்சாலைகள் எல்லாம் கதர் வாரியத்தின் மூலம் நல்ல வளர்ச்சி கண்டுகொண்டு இருந்தன. பின்னர் ஆட்சி மாற்றத்தின் மூலம் அந்தத் திட்டம் கைவிடப்பட்டு பல சிறியதீப்பெட்டி தொழிற்சாலைகள் சீர்கெட்டு சீர் குலைந்து இருக்கின்றன. அவற்றை எல்லாம் புனருத்தாரணம் செய்கின்ற வகையில் கதர் வாரியம் சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளை உருவாக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. குமரி அனந்தன் ; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே சற்று முன்பு நடைபெற்ற விவாதத்தில் 'வேறு பல காரியங்களுக்குக் கூட அவர்கள் வாகனத்திலிருந்து இறங்கி வரவில்லை' என்பது போன்றோ, அதற்கு அவர்கள் சொன்ன பதில்களும், அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுதல் நலம். ஏனென்றால் நமது சட்டமன்ற உறுப்பினர் பெண்கள் நிலை பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கிற விசாரணையில் எந்த முடிவு வேண்டுமானாலும் வரட்டும். நான் யாரையும் குறை கூறவில்லை. ஆனால் ஒரு பெண் என்ற வகையில் அவர்கள் அதைச் சொன்னார்கள்.......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. நீங்கள ஏன் அதைத் தவறாக எடுத்துக்கொள்கிறீர்கள் ? ..(குறுக்கீடு) அதில் ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடு) தமிழில் பார்த்தால் எல்லாமே அப்படித் தவறாகதான் தெரியும். (குறுக்கீடு) இருக்கட்டுமே, அதில் என்ன தப்பு ? ஏன் அதை பெரிதுபடுத்துகிறீர்கள். (குறுக்கீடு) அதில் ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) நான் சொல்லிக்கொண்டிருக்கும் போது நீங்கள் வாதாடக் கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன் இல்லையா ? (குறுக்கீடு) உறுப்பினர் பேசுங்கள்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த அளவுக்கு கதர்வாரியத்திலே அமைச்சர் அவர்கள் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தீப்பெட்டி தொழிற்சாலைகள் ஏற்பட ஆவன செய்யவேண்டும். என்னுடைய முதுகுளத்தூர் பகுதியில் அதிகமான பனை மரங்கள் இருக்கின்றன. ஏற்கனவே பனைமரத்தின் பதநீரிலிருந்து சாக்லட் தயாரிப்பதற்காக கதர்வாரியத்திலே ஓர் ஆய்வு பல ஆண்டுகளுக்கு

முன்பு எடுக்கப்பட்டது. பின்னர் என்னக் காரணத்தாலோ அதை
நிறுத்திவிட்டார்கள். மீண்டும் பதநீரிலிருந்து சாக்லட் தயாரிக்
கின்ற தொழிற்சாலையை கதர் வாரியத்தின் மூலம் உருவாக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதுகுளத்தூர் தொகுதி
யிலுள்ள கமுதியிலே ஏற்கெனவே 50 பேருக்கு கதர் வாரியத்திலே
யிருந்து நெசவு பயிற்சி, நூற்பு பயிற்சி எல்லாம் ஆண்டுதோறும்
வழங்கி வந்தார்கள். அதற்கு பல இலட்ச ரூபாய் செலவில்
கட்டடங்கள் கட்டப்பட்டு பின்னாலே அந்தப் பயிற்சி நிறுத்தப்
பட்டது. அந்தக் கட்டிடங்கள் அப்படியே இருக்கின்றன. மீண்டும்
கமுதி நகரத்தில், கதர் வாரியத்திற்குச் சொந்தமான அந்தப்
பயிற்சி நிலையத்தில் 50 பேருக்கு பயிற்சி தரும் திட்டத்தைக்
கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-15 மணி.

அடுத்து, சத்துணவுத் திட்டத்திலே ஏறக்குறைய 195 கோடி
ரூபாய் நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்
யப்பட்டிருக்கிறது, சத்துணவுத் திட்டத்திலே புதிதாக பல்வேறு
ஏற்பாடுகள், அதிகமாக உணவு வழங்குகிற நிலைமை இருப்பதைப்
பாராட்டுகிறேன். கடந்த ஆண்டை விட 23 கோடி ரூபாய்
இந்த ஆண்டு அதிகமாக வழங்கியிருக்கிறார்கள். சத்துணவோடு
முட்டையும் கலந்து, 15 தினங்களுக்கு ஒரு முறை முட்டை வழங்கு
கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் சொன்னதுபோல, இன்னும்
சத்துணவுமையங்களில் முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூடச் சொன்னார்கள், நாங்கள்
எங்கள்கட்சியைச் சேர்ந்தவர்களை நியமிக்கவில்லை என்று. இந்த
நேரத்தில் ஒன்றை மட்டும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.
இன்னும் பல சத்துணவு மையங்களில். பச்சை குத்தியவர்கள்,
அண்ணா படத்தையும், அ.தி.மு.க. கொடியும் பச்சை குத்தியவர்
களும், அவர்களுடைய அண்ணா தி.மு.க.வினுடைய கரையுள்ள
வேட்டியை கட்டியவர்களும் பணியாற்றி வருகிறார்கள். என்பதை
இன்றும் நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே
அ.தி.மு.க. நண்பர்கள், பெண்களாக இருந்தாலும் சரி, ஆண்
களாக இருந்தாலும் சரி, அதிக அளவுக்கு அதிலே வேலை வாய்ப்பு
பெற்றிருக்கிறார்கள். அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்கள்
என்றுகூட நான் குறை சொல்லவில்லை. அதே நேரத்தில் அவர்கள்
முறையாக அந்த நிர்வாகத்தை நடத்துகிறார்களா என்பதைத்
தான் நாம் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சத்துணவு மையங்கள் 2, 3 ஆகப் பிரிக்கப்பட்டிருக்கிறது,
ஒன்று பால்வாடி; மற்றொன்று பள்ளிகளில் இருக்கிற சத்துணவு
மையங்கள், இன்னும் ஒன்று ஊட்டச் சத்து மையங்கள். இது
குறித்து நான் தெரிவிக்கின்ற யோசனை, இந்த மூன்று பிரிவுகளை
யும் இணைத்து, ஒரே நிர்வாகத்தின் கீழ் வைக்க வேண்டுமென்
பதுதான். இந்த மையங்களில் 2, 3 சத்துணவு அமைப்பாளர்களை



நியமிப்பதற்குப் பதிலாக, சற்று ஊதியத்தைக்கூட அதிகம் கொடுத்து, ஒரே நிர்வாகத்தின்கீழ் வரக்கூடிய அளவுக்கு அவர்களை நியமனம் செய்தால், அரசாங்கத்திற்கு நல்ல லாபம் ஏற்படும். அதன்மூலம் நிர்வாகத்தை நல்ல முறையில் செய்ய முடியும். இன்றையதினம் பள்ளிகளிலே உள்ள சத்துணவு மையங்கள் பள்ளித் துணை ஆய்வாளர் மூலமாக ஆய்வு செய்யப்படுகிறது. அதைப்போல பால்வாடிகள் ஊராட்சி ஒன்றிய ஆணையரால் ஆய்வு செய்யப்படுகிறது. இவை 2 நிர்வாகங்களின்கீழ் செயல்படுகின்ற காரணத்தால் சரியான முறையிலே சத்துணவு மையங்கள் செயல்பட முடியவில்லை, ஆகவே ஒரே அமைப்பின் கீழ் அதைக்கொண்டுவர முயற்சி எடுக்கவேண்டும். அதே நேரத்தில் பல சத்துணவு அமைப்பாளர்கள் தவறு செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, வேலைநீக்கம் செய்தாலும், ட்ரிபியூனல் போன்ற அமைப்புக்கு அவர்கள் போய், ஸ்டே வாங்கி மீண்டும் பல மாதங்கள் சத்துணவு அமைப்பாளர்களாகவே பணியாற்றி வருகிறார்கள். ஆகவே நடைபெற்ற ஊழல் ஊழலாகவே இருக்கிறது. தவறுகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. எனவே இதிலே அரசு தலையிட்டு, குறுகிய காலத்திலே ட்ரிபியூனலில் முடிவுக்கு வர பெரு முயற்சி எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் சத்துணவு மையங்களை ஆய்வு செய்ய, பார்வையிட அதிகார பற்றற்றவர்கள் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களுக்கும், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் சத்துணவு மையங்களை ஆய்வு செய்ய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இதற்கு தகுந்த ஆணை வழங்கி, அந்தந்த கிராமங்களிலே இருக்கக்கூடிய ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தாலும், ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராக இருந்தாலும், அல்லது அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அவர்கள் சத்துணவு மையங்களை ஆய்வு செய்து—ஆய்வு செய்ய வாய்ப்பு இல்லாவிட்டாலும், பார்வையிட வாய்ப்பு வழங்கி, அதிலுள்ள குறைபாடுகளைக் களைய மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் சத்துணவு அமைப்பாளர்களை நியமனம் செய்யும்போது அதிகார பற்றற்றவர்கள் இல்லாத நிலை வருகிற காரணத்தால் இப்படிப்பட்ட தவறுகளுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே இனிமேல் நியமிக்கப்படும் அந்த நியமனக் குழுவில் அதிகாரப் பற்றற்றவர்களையும் நியமிக்கவேண்டும். எப்படி கலெக்டருடைய உதவியாளர்களாக இருக்கக்கூடியவர்கள் தலைவர்களாகவும், ஆணையாளர்கள் உறுப்பினர்களாகவும் இருந்து தேர்ந்தெடுக்கிறார்களோ, அதைப்போல் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவிலே இருந்து, நியமனம் செய்தால் தவறுகளைக் களைய வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து சத்துணவு

அமைப்பாளர்கள் தவறு செய்தால் நடவடிக்கை எடுத்து உடனுக்
குடன் நீக்கப்படவேண்டும். இதிலே அதிகம் ஊழல்கள் நடக்கிற
காரணத்தால், மீண்டும் பழைய நபர்களை நியமனம் செய்யக்
கூடாது, புதிய நபர்களை நியமனம் செய்யவேண்டும். அப்போது
தான் தவறு செய்பவர்களுக்கு பயம் வரும். உதாரணத்திற்கு
ஒன்று சொல்கிறேன். 80,000 ரூபாய், ஒரு லட்சம் ரூபாய்
அளவுக்கு ஒரு சத்துணவு அமைப்பாளர் சத்துணவு மையத்தில்
உள்ள பொருள்களை விற்றுவிட்டு, மோசடி செய்திருக்கிறார்.
கிரிமினல் வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது அவர் ட்ரிபி
யூனலுக்குப் போய் ஸ்டே வாங்கி, அதே தவற்றை மீண்டும் சத்
துணவுமையங்களில் செய்துக்கொண்டுஇருக்கிறார்.எனவே அப்படித்
தவறு செய்கிறவர்களை, கிரிமினல் நடவடிக்கையில் ஈடுபட்ட
வர்களை நீக்கிவிட்டு, புதிய நபர்களை நியமிக்க வேண்டுமென்று
அதிகாரிகளுக்கு தாக்கீது வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, தொழிலைப் பொறுத்தவரையில் தொழில் முனைவர்
களுக்குப் பல்வேறு சலுகைகளை வரவு செலவுத் திட்டத்தில்
மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பல
சலுகைகளை வழங்கி இருக்கிறார்கள். குறிப்பாக பின் தங்கிய
பகுதிகளுக்கு நல்ல பல சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள்.
அதற்காக இந்த அரசையும் முதல்வர் அவர்களையும் பாராட்டி,
நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

12-20 மணி.

அதே நேரத்தில் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் பின்
தங்கிய பகுதிகளிலே இருக்கக்கூடிய 105 வட்டங்களில்,
அதிலும் சில மிகவும் பின்தங்கிய பகுதியாக சில வட்டங்
களுக்கு மட்டும் விற்பனை வரியிலே 5 ஆண்டுகளுக்கு வரிச்
சலுகை உண்டு என்று அறிவித்து இருக்கிறார்கள். என்னுடைய
பணிவான கருத்து என்னவென்றால். அந்த 105 பகுதிகளும்
பின்தங்கிய பகுதிகள்தான். அதிலே மிகவும் பின்தங்கிய பகுதி
என்று தமிழக அரசு தேர்ந்தெடுத்து சில வட்டங்களுக்கு மட்டும்
அந்தச் சலுகைக் கொடுப்பது என்று சொன்னால் அது பொருத்த
மாக இருக்காது என்பது என்னுடைய கருத்து ஆகும். ஆகவே
தயவுசெய்து அறிவிக்கப்பட்ட 105 பின்தங்கிய பகுதிகளுக்கும் 5
ஆண்டுகளுக்கு விற்பனை வரிச் சலுகையை, விலக்கை வழங்க
வேண்டுமென்று இந்த மானியக் கோரிக்கையிலே கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுபோல சிறு தொழில் தொடங்குகிறவர்களுக்கு பின்தங்கிய
பகுதியிலே மானியம் வழங்கப்படுகிறது. நம்முடைய அரசு 105
வட்டங்களுக்கு மானியம் வழங்குவதாக அறிவித்து இருக்கிறது.
அதற்கு முன்னாலே மத்திய அரசு 30-9-1988 வரையிலும் 15 சத
வீதம் பின்தங்கிய பகுதிகளுக்காக மானியம் வழங்கி இருக்கிறது.
30-9-1988-க்குப் பின்னர் மத்திய அரசு அந்த மானியத்தை



நிறுத்திவிட்ட காரணத்தினால் 9-8-1989வரையிலும் இடைப்பட்ட
காலத்திற்கு அந்த பின்தங்கிய பகுதிகளுக்கு அந்த மானியம் 15
சதவீதம் கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய
சர்க்கார் கொடுக்க வாய்ப்பு இல்லை. ஆனால் மாநில சர்க்கார்
கொடுக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆகவே தொழில் முனை
வோர்களுக்கு அந்த இடைக்காலத்திலே 10 மாத காலத்திற்கு
அந்த 105 வட்டங்களுக்கு மானியம் கிடைக்காத ஒரு நிலை இருக்
கிறது. ஆகவே 30-9-1988-க்கு முன் தொழில் செய்தவர்களுக்கு
அந்த மானியம் கிடைத்து இருக்கிறது. 1989-வது ஆண்டு 8-வது
மாதத்திற்கு பின்னர் தொழில் தொடங்கியவர்கள் அதே பகுதியில்
அதே இடத்திலே மானியம்பெற்று இருக்கிறார்கள். ஆனால் அந்த
இடைப்பட்ட 10மாத காலத்தில் தொழில் தொடங்கியவர்களுக்கு
அந்த 15 சதவீதம் மானியம் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல்
இருக்கிறது. அந்த பின்தங்கிய பகுதிகளுக்கு அந்த வாய்ப்பையும்
உருவாக்கி அந்த 15 சதவீத மானியத்தை வழங்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

சிட்கோ மூலமாக சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலப்
பொருள்கள் வழங்கப்படுகிறது. குறிப்பாக எம்.ஆர்.எல். போன்ற
நிறுவனங்களிலிருந்து 'வாக்ஸ்' போன்ற பொருள்கள் வழங்கப்படு
கிறது. இங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற அந்தப் பொருள்
மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு விடுவதாகவும், நம்முடைய
மாநிலத்திற்கு மிகக் குறைவாக நூறு சதவீதம் கொடுக்கவேண்டிய
தொழிற்சாலைகளுக்கு 30 சதவீதம் கொடுக்கின்ற அளவுக்குத்
தான்—கொடுக்கப்பட்டு வருகிறது. முடிந்தால் ஒரு மாதம் 40
சதவீதம் கொடுக்கப்படுகிறது; பிறகு 30 சதவீதமாக இறங்கிவிடு
கிறது. இந்த நிலை இருக்கிற காரணத்தால், அந்த மூலப்
பொருள் கிடைக்காத காரணத்தால் பல சிறு தொழில் நிறு
வனங்கள் நோய்வாய்ப்பட்டு நலிவுற்ற நிறுவனமாக இருக்கிறது.
அவைகள் டிக் போன்ற ஸ்தாபனங்களுக்குச் செலுத்த வேண்டிய
கடனை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. அந்த
மூலப் பொருள் இல்லாத காரணத்தால் பல தொழில்கள் பாதிக்கப்
பட்டு இருக்கிறது. ஆகவே இங்கே எம்.ஆர்.எல். ஸ்தாபனத்திலே
உற்பத்தி ஆகின்ற பொருள்களை தமிழகத்தின் தேவையைப்
பூர்த்தி செய்த பிறகு மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்க, மாண்புமிகு
அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்
மத்திய அரசோடு பேசி, Wax அளவு அதிகம் பெற்று தமிழகத்தில்
சிறு தொழில் நசுங்காத வண்ணம் பெருமுயற்சி எடுத்துக்கொள்ள
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய முதுகுளத்தூர் தொகுதி மிக மிகப் பின்தங்கிய
தொகுதி; வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள தொகுதி; தொழிற்
சாலையையே பார்க்காத தொகுதி; இரயில் நிலையமே இல்லாத
தொகுதி, அது நீண்ட காலமாக' வெள்ளையர்கள் ஆண்ட
காலத்திலிருந்து இன்றுவரை அப்படியே இருக்கிறது. அந்தத்
தொகுதி வளம் பெறுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று

பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஒரு சிறு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே கேட்டு இருந்தேன். அங்கு பல தொழில்கள் தொடங்க வாய்ப்பு இருக்கிறது. அங்கு கனிமங்கள் நிறைய இருக்கின்றன: மூலப் பொருள்கள் நிறையக் கிடைக்கின்றன.

தமிழ்நாடு மாக்னீசியம் பிளான்ட் மூலமாக 15 தொழில்கள் தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. உப்புத் தொழிற்சாலை அங்கு இருக்கிற காரணத்தினாலே தமிழ்நாடு அரசுக்குச் சொந்த மான உப்புத் தொழிற்சாலையே வாலி நோக்கத்தில் இருக்கிற காரணத்தினால் சால்ட் பேஸ்ட் இன்டஸ்ட்ரீஸ் பல உண்டாக்க முடியும். இப்போது உள்ள மத்திய அரசின் அறிவிப்பின்படி ஆண்டுக்கு 55 இலட்சம் டன் ஐயோடைஸ்டு உப்பு உற்பத்தி ஆகி சாப்பிட வேண்டும் என்று அறிவிப்பு வந்து இருக்கிறது. ஒரு ஆண்டுககு 55 இலட்சம் டன் தேவைப்படும்போது உப்புகளிலும் ஐயோடைஸ்டு கலக்க வேண்டும். அதற்காக சிறு சிறு தொழிற் சாலைகள் ஏற்படுத்த வேண்டும். அதற்கு எங்களுடைய தொகுதி யிலே வாய்ப்பு இருப்பதால், அங்கு சிறு தொழிற்பேட்டை உருவாக்க வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இறுதியாக ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். டான்சியைப் பொறுத்தவரையில் அங்கே பணியாற்றுகிற தொழி லாளர்களுக்கு நீண்டநாள் கோரிக்கை இருக்கிறது. டான்சி நிறுவனம் ஏதோ நஷ்டத்தில் ஓடுவதாகத் தெரிவிக்கிறார்கள். அங்குள்ள பணியாளர்களுக்கு ஐந்தாவது சம்பளக் கமிஷன் சலுகைகள் கிடைக்காமல் இருக்கிறது. எல்லா ஸ்தாபனங் களுக்கும் கொடுக்கக்கூடிய ஐந்தாவது ஊதியக் குழுவின் சலுகைகளை டான்சி தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல விஷயங்கள் இருந்தபோதிலும் அவைகளை நான் அமைச்சர் அவர்களிடம் நேரில் எடுத்துக் கூறுகிறேன் என்று சொல்லி, என்னுடைய தொகுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

12-25 மணி

திரு. எம். முகமது சித்திக்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப் பளித்தமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, பல்வேறுபட்ட சமூக நலத் திட்டங்களை யெல்லாம் ஏழை எளிய மக்கள் பயன் பெறுகின்ற வகையிலே இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம், இவைகளின் மூலம் பலன் அடைந்த தமிழக மக்கள் டாக்டர் கலைஞர் அவர்களை மனமார உளமாரப் பாராட்டுகின்றார்கள்.



குறிப்பாக, திருமண உதவித் திட்டத்தைப்பற்றி பேசாத தமிழக மக்களே இன்றைக்கு இல்லை. இன்றைய பெண்களில் அதிகமானவர்கள் கல்வி பெறப் போகிறார்கள் என்ற நிலைமை தமிழகத்தில் உருவாகுமேயானால் அதற்கு டாக்டர் கலைஞர் அவர்களுடைய திருமண உதவித் திட்டம்தான் காரணம் என்பதை நாளைய வரலாறு பேச இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீனா சென்றாலும் கல்வியைத் தேடு என்று நபிகள் நாயகம் சொல்லியுள்ளார்கள். ஒரு தாயும், தகப்பனும் மற்றபல செல்வங்களையெல்லாம் தேடிவைப்பதைவிட தன்னுடைய பிள்ளைகளுக்குக் கல்விச் செல்வத்தைத் தேடி வைப்பதுதான் சிறந்தது என்று நபிகள் பெருமானார் சொல்லியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம் நிறைவேற்றுகின்ற வகையில், இந்தப் பெண்கள் சமுதாயம் உயர வேண்டுமென்ற எண்ணத்தில் இன்றைக்குத் திருமண உதவித் திட்டத்தின் மூலமாகக் கல்வியை ஊக்குவிப்பதற்கு 5,000 ரூபாய் வழங்கு கின்ற திட்டத்தை மக்கள் பெரிதும் பாராட்டுகின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தத் திட்டத்தில் எட்டாம் வகுப்பு வரை படித்துத்தான் இந்தப் பலனை அடைய வேண்டுமென்ற விதி இருப்பதால் கிராமப் பகுதியிலுள்ள ஏழை எளிய பெருமக்கள் இன்றைக்கு மிகவும் கஷ்டம் அடைகிறார்கள். இந்தக் கல்வித் தகுதியினைக் குறைந்தபட்சம் ஐந்தாம் வகுப்பு வரையிலாவது குறைத்து தர வேண்டுமென்று அந்த ஏழை எளிய பெண்களைப் பெற்ற தாய் மார்கள் இன்றைக்கு கூறுகிறார்கள். இப்படியொரு திட்டத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று எங்களுக்குத் தெரிந்திருந்தால், எங்களுடைய பெண்களையெல்லாம் நாங்கள் எட்டாம் வகுப்புவரை படிக்க வைத்திருப்போமே என்று அவர்கள் குமுறுகிறார்கள். நீங்கள் எப்படியாவது டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே சொல்லி, இந்த திட்டத்தை நாங்கள் அடைய முடியவில்லை; எங்களுடைய பெண்களெல்லாம் எட்டாம் வகுப்பு படிக்கவில்லை; வயதடைந்து விட்டார்கள்; இனி நாங்கள் எட்டாம் வகுப்பு படிக்க வைத்து, இந்தத் திட்டத்தினை நாங்கள் பெற இயலாது, ஆகவே, எங்களுக்கு விதி விலக்கு கொடுங்கள், ஒரு ஐந்து வருஷங்களுக் காவது, பத்து வருஷங்களுக்காவது நீங்கள் இந்தத் திட்டத்தினை ஐந்தாம் வகுப்பு வரை என்று கல்வித் தகுதியை வழங்குங்கள் என்று இன்றைக்கு ஏழை எளிய தாய்மார்கள் எங்களிடத்திலே கூறுகிறார்கள். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், பெண்கள் சமுதாயம் உயர வேண்டுமென்ற ஒரு பெரிய இலக்கை கொண்ட டாக்டர் கலைஞர் அவர்கள், எட்டாம் வகுப்பு வரை என்று இருக்கின்ற கல்வித் தகுதியினை ஐந்தாம் வகுப்பு வரை என்று குறைந்த பட்சம் ஐந்து வருஷங்களுக்காவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நீங்கள் ஐந்து வருஷங்களுக்கு இந்தக் கல்வித்

தகுதியைக் குறைந்துக் கொடுப்பீர்களேயானால், இதற்கு வரை
யிலுள்ள பெண்கள் அந்தத் திட்டத்தினாலே பலன் பெறுவார்கள்;
இதற்குப் பின்னாலே படிக்கின்ற பெண்கள் நிச்சயமாக நீங்கள்
நினைக்கின்ற வகையில் கல்வி பெற்ற பெண்களாக இந்தத்
தமிழகத்திலே உருவாவார்கள்; அப்படிப்பட்ட பெருமை
உங்களைச் சேரும். இன்றைக்குப் பெண்கள் கல்வியிலே உயர்ந்
திருக்கிறார்கள், அனைத்துப் பெண்களும் இன்றைக்கு கல்வியிலே
வளர்ந்திருக்கிறார்கள், அதற்கெல்லாம் யார் காரணம் என்றால்,
டாக்டர் கலைஞர்தான் என்ற ஒரு வரலாறு பேசக் காத்திருக்
கிறது என்பதை நான் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்
கிறேன்.

அடுத்தபடியாக, பெண் சொத்துரிமை. பெண் சொத்துரிமை
இஸ்லாமிய சமுதாயத்தில் நபிகள் பெருமானாருடைய காலத்திலே
வழங்கப்பட்டது. அப்படிப்பட்ட சட்டத்தைப் பார்த்துக்
கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்
பட்டுள்ளது. இதன் மூலமாக டாக்டர் கலைஞர் அவர்கள்
பெண்ணின் பெருமையைப் போற்றி, உரிமையை வழங்கி,
பெண்கள் இனத்திற்கு மேலும் சிறப்பைத் தேடித் தந்துள்ளார்கள்.
இதனால் வரதட்சணை என்ற ஒரு பெரும் கொடுமை நீங்க
இருக்கிறது. வரதட்சணைக் கொடுமை இன்றைக்குப் பெண்
இனத்திற்கு நீக்கப்படப் போகிறது என்றால் அதற்கும் டாக்டர்
கலைஞர்தான் காரணம் என்ற ஒரு வரலாறும் பேசத் தயாராக
இருக்கிறது இந்தச் சமுதாயம் என்பதையும் நான் இந்த
நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

12-30 மணி

என்னுடைய தொகுதியில் செம்பனார்கோவிலில் இருக்கும்
கைமுறை காகித ஆலையில் ஏராளமான ஊழியர்கள் பணி
புரிகிறார்கள். அவர்கள் பல ஆண்டுகளாக பணிபுரிந்தும் அவர்
களின் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறது. எனவே,
அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்ய அரசு உதவிட
வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சத்துணவு வழங்குவதை விடுமுறை நாட்களில்
வழங்குவதை அறவே நிறுத்தி விட வேண்டும். விடுமுறை தினங்
களில் சத்துணவு வழங்குவதால் அங்கே பல ஊழல்கள் நடை
பெறுவதாக சொல்கிறார்கள். விடுமுறை நாட்களில்
குழந்தைகள் சத்துணவுக் கூடத்திற்கு குறைவான அளவில்தான்
வருகிறார்கள். அவர்கள் எண்ணிக்கையை அதிகமாக வந்ததாக
கணக்கில் பதிவு செய்து பல ஊழல்கள் சத்துணவுக் கூடத்தில்
நடந்து வருகின்றன. இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்கு
விடுமுறை தினங்களில் சத்துணவு வழங்குவதை நிறுத்தினால்
அந்த ஊழியர்களுக்கும் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும்.
இதனால் அரசுக்கும் பல லட்சம், பல கோடி ரூபாய் மிச்ச
மாகும், இன்றைக்கு மாதத்தில் இரண்டுமுறை முட்டைகள்
வழங்கும் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது. விடுமுறை
நாட்களில் சத்துணவு வழங்குவதை நிறுத்துவதால் மிச்சப்படுகிற



பணத்தை வைத்துக்கொண்டு, வாரத்திற்கு ஒருமுறை முட்டை
வழங்கினால் குழந்தைகள் பயனடைவார்கள். விடுமுறை
தினங்களில் வழங்காததை மக்கள் குறை சொன்னாலும், மாதம்
நான்கு முறைகள்—முட்டை வழங்கப்படுவதை—வாரம் ஒரு முறை
வழங்கப்படுவதை மக்கள் வரவேற்பார்கள் என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சத்துணவுக் கூடங்களுக்கு முட்டை
வழங்குவதில் பல குறைகள் இருக்கின்றன. பல சத்துணவுக்
கூடங்களில் அங்கேயுள்ள சத்துணவு அமைப்பாளர்கள் அரை
முட்டைகளை வழங்குகிறார்கள். இதற்கு காரணம் கேட்டால்,
முட்டைகள் வழங்குகிற தினத்தில் அளவிற்கு அதிகமான
குழந்தைகள் வந்துவிடுகிறார்கள் என்பதால் பதிவு செய்யப்பட்ட
குழந்தைகளுக்கு முட்டைகளை வழங்கிவிட்டு, பதிவு செய்யாத
குழந்தைகளுக்கு வழங்காமல் இருந்தால், கிராமப்புறங்களில்
இருக்கிற தாய்மார்கள் அந்தப் பதிவு செய்யாத குழந்தைகளுக்கும்
முட்டை வழங்கவேண்டுமென்று வழக்காடுகிறார்கள். ஆகவே;
நாங்கள் அந்த அரை முட்டை கொடுக்கிற சூழ்நிலை ஏற்படு
கிறது. மேலும் நாங்கள் எடுத்து வருகிறபோது முட்டைகள்
உடைந்து விடுகின்றன. அதன் காரணமாகவும் நாங்கள்
முட்டையை பிட்டு கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள்.
இதைப்பற்றி சில அரசியல்வாதிகள் தவறான கருத்துக்களை கூட
எடுத்து வைக்கிறார்கள். எனவே, அந்த சத்துணவு மையங்களுக்கு
ஊராட்சி ஒன்றியத்திலிருந்து வழங்கப்படுகிற முட்டைகளை
நேரடியாக எடுத்துச்சென்று வழங்க உரிய ஏற்பாட்டைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் சில பகுதிகளில்
பாய் முடைபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு பாய்
முடைவதற்கான கோரைகள் அந்தப்பகுதியில் கிடைக்கவில்லை.
கோரைகள் வெளி மாநிலங்களிலிருந்து தான் கொண்டு வர
வேண்டியிருக்கிறது. என்னுடைய பகுதியில் வேளாண்மை அதிக
மாக செய்யப்படுகிறது. அங்கே கோரைகள் சாகுபடி செய்ய
நிறைய வாய்ப்பு இருக்கிறது. எனவே, என்னுடைய தொகுதியில்
கோரை சாகுபடி செய்து, அந்த பாய் முடைபவர்களுக்கு
குறைந்த விலையில், மானிய விலையில் வழங்கி, பாய் முடையும்
தொழிற்சாலைகளைக் கிராமப் பகுதிகளில் ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் சத்துணவுத் திட்டத்தில் இரண்டு லட்சத்
திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் மதிப்பூதியம் தொகுப்பூதியம்
என்ற அளவில் குறைந்தபட்சம் நாள் ஒன்றுக்கு ஆறு மணி
நேரம் என்ற அளவில் எத்தனையோ ஆண்டுகளாக பணிபுரிந்து
வருகிறார்கள். இவர்களுக்கு பாதுகாப்பு செய்து தர வேண்டும்.
இவர்களை அரசு ஊழியர்களாக நிரந்தரம் செய்ய, உரிய
சட்டம் இயற்றி, குறைந்தபட்ச ஊதியம், சட்டப்படியான
ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவர்

களில் எட்டு ஆண்டுகளாக பணிபுரிபவர்களை இந்த அரசு நிரந்தரம் செய்வதாக அறிவித்ததன் அடிப்படையில், அவர்களை நிரந்தரம் செய்யவும், ஊதிய உயர்வு மற்றும் இதர சலுகைகள் வழங்கவும் அரசு முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக, பழுதுபட்டிருக்கிற சத்துணவுக் கூடங்கள் என்னுடைய தொகுதியில் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை பழுது நீக்கி சரி செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியில் பல கூடங்களில் புதியதாக சத்துணவுக் கூடங்களையும், பால்வாடிகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டும். சத்துணவு மையங்களில் சத்துணவுத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த ஒவ்வொரு ஊராட்சியிலும் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஊரில் உள்ள பெரிய மனிதர்களையும் அழைத்து ஒரு கண்காணிப்பு குழுவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு ஊராட்சி மன்றப் பகுதியிலேயும், தையல் பயிற்சி நிலையங்கள் அல்லது தட்டச்சு பயிற்சி நிலையங்கள், கயிறு திரிக்கும் தொழில் பேட்டைகள், நூற்பாலைகள் போன்ற கைத் தொழில் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

12-30 மணி

எனது தொகுதியிலே ஏராளமான மூங்கில்கள் விளைகின்றன. இந்த மூங்கில்கள் எல்லாம் வெளி மாநிலங்களுக்கு லாரி லாரியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே இந்த மூங்கில்களை வைத்து, கூடைகள், மற்றும்கலைப்பொருட்களைத் தயாரிப்பதற்கு ஊராட்சி மன்றப் பகுதியிலே மூங்கில் தொழிற்சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பனை மரங்கள் அதிகமாக இருக்கின்ற என்னுடைய தொகுதியில். அதை வைத்து பனைப் பொருட்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலையையும் அங்கே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றவர்கள், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் எல்லாம், வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்கிறபோது அவர்களை காத்திருப்போர் பட்டியலில் வைக்காமல், அவர்களுக்கு எல்லாம் முன்னுரிமை அளித்து, அவர்கள் பதிவு செய்த ஒருசில வருடங்களில் அவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு வழிவகைகளைச் செய்யவேண்டும். உடல் ஊனமுற்ற அரசு ஊழியர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் செய்வதை நிறுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால், அவர்கள் விரும்புகிற மாவட்டத்திலேயே அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.





*திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இன்றையதினம் சமூகநலன், சத்துணவுத் துறைகளின் மீதான மானியக் கோரிக்கைகள் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில், இன்றைய சமுதாய, பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், நீண்டகால தேவைகளை நிறைவு செய்யும் வகையில் இன்றையதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் பல திட்டங்களையும், நடவடிக்கைகளையும் கண்ணும்கருத்துமாக ஆற்றுகிறோம் என்று கூறிவருகிறார்கள். உண்மையிலேயே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்ச் சமுதாயம் மீது அக்கரை கொண்டுள்ள முதல்வர் அவர்கள், தாழ்த்தப்பட்ட, ஏழை எளிய பாட்டாளி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்கள் இன்றையதினம் மூதன் முதலில் அவர்கள் ஆட்சிகாலத்தில், அரிசி விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இந்த அரிசி விலையை உயர்த்தியபோது, மலிவு விலையில் மதுவு வினியோகிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கடந்த முறை முதல்வராக இருந்தபோது, கடும் வறட்சி காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்ட நேரத்தில் அன்றையதினம் மதுக் கடைகளைக் கொண்டுவந்தபோது, இன்றையதினம் ஆளும் கட்சியிலே இருக்கிற நீங்கள், அப்பனுக்குச் சாராயம், பிள்ளைக்குச் சத்துணவு என்று கிண்டல் பேசினீர்கள். இன்றைய நிலையில், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் கிராமப்புறங்களில் அதிகமாக வாழ்கிறார்கள். அந்த மக்களின் நிலை, இன்றையதினம் நியாயவிலைக் கடைகளில் கிடைக்கின்ற அதே அரிசியைப் பெற்று அதன் மூலமாகத்தான் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை நடத்தி வருகிற காலகட்டங்கள் இருந்து வருகின்றன. இது முதல்வர் அவர்களுக்கு தெரியாதது அல்ல. இந்தக் காலகட்டத்தில் ஒரு ரூபாயை அவர்களுக்கு அதிகப்படுத்தி, அந்த ஒரு ரூபாயை அதிகப்படுத்தியதுடன் அந்த ஒரு ரூபாயைக் காரணம் காட்டுவதற்கு மலிவு விலையில் சாராயத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று இன்றையதினம் அந்த ஏழை எளியவர்களின் வயிற்றில் அடிக்கிறார்கள். அந்த ஏழைத் தாய்மார்கள் இன்றையதினம் கண்ணீர் சிந்துகின்ற நிலையை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் பெண்ணாக இருப்பதால் அந்தப் பெண்களின் துயரம் என்ன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லித் தெரியவேண்டிய அவசியம் இல்லை. அது அவர்களுக்கே தெரியும்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி லட்சுமி அவர்கள் முன்பிருந்த அரசு மதுவிலக்குக் கொள்கையை ரத்து செய்த நேரத்தில், இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்தார்கள். அந்த நேரத்திலே, தாய்மார்களுடைய நிலையைக் கருத்திலே கொண்டு, மதுவிலக்குக் கொள்கையை ரத்து செய்யக் கூடாது என்று வாதிட்டாரா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் இதே சமூக நலன் கோரிக்கைகள் வந்தபோது, நான் பேசுகின்றபோது, எங்களுடைய முதல்வர் அவர்களிடத்திலேயும், சமூக நலத்துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் இதைப் பற்றி மறு பரிசலனை செய்யுங்கள் என்று கூறியிருக்கிறேன். இது சபைக்குறிப்பில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

12-40 மணி

இன்றையதினம் அரிசிப் பற்றாக்குறை இருக்கிறது என்று கடந்த முறை, கடந்த ஆண்டு நீங்கள் பாமாயில் சீமெண்ணெய் போன்ற அத்தியாவசியமான பொருட்களை நியாயவிலைக் கடைகளில் தரமாகக் கொடுக்கவில்லை, நியாயவிலைக் கடைகளில் கிடைப்பதில்லை என்று இங்கே பல உறுப்பினர்கள் உங்கள் மத்தியிலே கருத்துக்களை எடுத்து வைத்தபோது, மத்தியில் காங்கிரஸ் ஆட்சி ஆளுகிறது. மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி ஆளுகின்ற காரணத்தால், வேண்டுமென்றே, திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசை வஞ்சிக்கும் வண்ணம் அவர்கள் செயல்படுகிறார்கள் என்று நீங்கள் குற்றம் சாட்டினீர்கள். ஆனால் இன்றையதினம் உங்களது சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எங்களது ஆட்சி மத்தியில் இன்றைய தினம் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். நாங்கள் கேட்பது எல்லாம் கிடைக்கும் என்ற வண்ணம் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களது கருத்துக்களை கூறினார்கள். ஆனால் இன்றையதினம் பாமாயில என்பது கிடைப்பதில்லை. அது நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் ஒவ்வொரு கிலோ வழங்கப்படுகிறது. அப்படி ஒவ்வொரு கிலோ வழங்கப்படுகிற பாமாயில் விலை கடந்த காலங்களில் ரூ. 18-க்கு விற்கப்பட்டது. அந்த பாமாயில் இன்றைய்தினம் ரூ. 24-க்கு விற்கப்படுகிறது. அதுவும் நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கு மட்டும் தான் வழங்கப்படுகிறது. கிராமப் புறங்களில் வழங்கப்படுவதில்லை. அந்தக் கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு ஏன் அதை வழங்கக் கூடாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சத்துணவு திட்டங்களின் மூலமாக பயன் பெறுகின்றவர்கள் பெண்கள் தான் அதிகமான அளவில் பயன் பெறுகிறார்கள். அந்த சத்துணவு கூடங்களில் பயன்பெற்ற அந்த மையங்களில் 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளை எப்படி பராமரிக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சீனிவாசன் அவர்கள் அந்த சத்துணவு அமைப்பாளர்களை ஆயா பாயா என்று கேலி கிண்டல் செய்வது போல் பேசினார். பெண்கள் சமுதாயம், இன்றையதினம் தமிழக முதல்வர் அவர்கள், நல்ல நிலைக்கு வர வேண்டும் என்றால் பெண்சள் சமுதாயத்தில் அக்கறை உள்ளவர்கள் முன்வர



வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சீனிவாசன் அவர்கள் அப்படி வேலை பார்க்கிற பெண்களை ஆயா, பாயா என்று கிண்டல் செய்வது சரியா? அப்படிப் பேசுவது முறைதானா? நானும் அந்த சத்துணவு மையத்தில் பணியாற்றி சத்துணவு கூடங்களில் பணி புரிந்த ஒருவர் என்பதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சீனிவாசன் அவர்களைக் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். (சிரிப்பு)

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சத்துணவு கூடத்திலே வேலை பார்க்கிற பெண்கள் மட்டும் தான் தமிழ்நாட்டில் இருக்கின்ற பெண்கள் சமுதாயத்தின் மொத்த பிரதிநிதிகளா அல்லது அவர்கள் சமுதாயத்தின் ஒரு அங்கம் மட்டும் தானா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்கள் சமுதாயத்தின் அங்கத்தினர்களா அல்லது அவர்கள் இன்றையதினம் ஆணுக்கு பெண் சரிசமமாக வர வேண்டும், பெண்களுக்கு வேலை வாய்ப்பில் 30 சதவீதம் வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்களே, அது சரியான முறையா என்பதை அண்ணன் சீனிவாசன் அவர்கள் கூற வேண்டும் என்பதையும் அவர்கள் பின்னால் பேசும்போது அதற்கு விளக்கம் தர வேண்டும் என்பதையும் தயவுசெய்து நான் பேசும் போது இடையே குறுக்கிட்டு என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன், (சிரிப்பு)

திரு. பெ. சீனிவாசன்: துணைத் தலவைர் அவர்களே, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவின் நோக்கமே குழந்தைகளுக்காகவா இல்லையென்றால் ஆயாக்களுக்காகவா?

திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குழந்தைகளின் நலனைக் கருதி அந்த கருத்திலே தான் அன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்போது பேசுகின்றபோது அந்த திட்டம் சரியில்லை என்ற காரணத்தாலே திராவிட முன்னேற்றக் கழகத்தில் இந்த திட்டம் தேவையில்லை என்ற கருத்திலே சொல்ல விரும்புகிறீர்களா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: எங்களுடைய முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். திட்டத்தைக் குறை சொல்லவில்லை. திட்டத்தில் திருடர்கள் இருக்கக் கூடாது. திட்டத்தை திருடர்கள் பயன்படுத்தக் கூடாது என்றுதான் சொல்லுகிறேன்.

12-45 மணி

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு சீனிவாசன் அவர்களுக்கு இந்த திட்டம் ஆயாக்களுக்கா, குழந்தைகளுக்கா என்ற சந்தேகம் நீண்ட நாட்களுக்குப் பின்னாலே வந்திருக்கிறது. ஆயாக்களுடைய குழந்தைகளுக்காகத்தான் வந்திருக்கிறது, (சிரிப்பு)

திரு. பெ. சீனிவாசன்: அதைத்தான் நான் சொல்வது, திட்டம் குழந்தைகளுக்காகத்தான் கொண்டு வரப்பட்டது. ஆனால் குழந்தைகளைத் தவிர மற்றவர்களுக்குத்தான் அது பயன்படுகிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஆயாக்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் பேசினார்கள். ஆனால் அந்த சத்துணவு திட்டத்தின் மூலமாக பல குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். அதேபோல பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. பெண்கள் அதில் முக்கியமாக வேலை செய்கிறார்கள். அதில் எதாவது தவறுகள் நடைபெற்றிருக்குமானால், அதற்காக அதிகாரிகள் பலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த தவறுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். ஆனால் அந்த சத்துணவு மையங்களில் இருப்பவர்களால் அந்த சத்துணவே தவறு என்று சொன்னால் நீங்கள் கூட அந்த சத்துணவை ஆதரித்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள். ஆகையினால் அதை மீண்டும் மீண்டும் நீங்கள் பேசுவது தவறு.

*திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் குறிப்பிட்டது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டம் குழந்தைகளுக்காகவா அல்லது ஆயாக்களுக்காகவா என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் கொண்டு வந்த திட்டத்தைதான் நீங்கள் அப்படியே நிறைவேற்றுகிறீர்கள். அவர்கள் எத்தனை லட்சம் குழந்தைகளுக்கு என்று கொண்டு வந்தாரோ அதை அப்படியே நிறைவேற்றி மேலும் முட்டை போடுவதாக வேறு சொல்லியிருக்கிறீர்கள். ஆக அந்த திட்டம் குழந்தைகளுக்கா இல்லையா என்பதை மாண்புமிகு இன்றைய தமிழக முதல்வர் அவர்களே கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ, சீனிவாசன்: ஒரே ஒரு விளக்கம். உங்களுடைய ஆட்சி இருந்தவரை அது ஆயாக்களுக்கு, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அது குழந்தைகளுக்கு.



திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏதோ இப்போது நிலைமை மாறி விட்டதுபோல் சொல்லுகிறார். ஆனால் ஆயாக்கள் இல்லாமல் குழந்தைகள் கிடையாது. ஏதோ குழந்தைகளை தனியாக பெற்றுக் கொண்டிருப்பதைப் போல பேசுகிறார் என்று நான் நினைக்கிறேன். எனவே அந்தக் குழந்தைகளுக்கு அல்ல....

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, குழந்தைகளுடைய பிரச்சினையை அரசியல் ஆக்கி, குழந்தைகளை விட்டு விட்டு மற்றவர்களைப் பற்றி பேசுகிற அளவுக்கு இங்கே நிலைமை வளரக் கூடாது. இதை இதோடு விட்டு விட்டு விவாதத்திலே ஈடுபடக் கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சீனிவாசன் அவர்கள் சத்துணவு குழந்தைகளுக்காகவா அல்லது ஆயாவுக்கா என்று கேட்டார்கள். நான் கூட கேட்கலாம். நீங்கள் ஆளும் கட்சிக்கு வந்தவுடன் 15 நாட்களுக்கு ஒரு முறை இலவச முட்டை என்று அறிவித்திருக்கிறீர்கள். அந்த இலவச முட்டை ஆயாவுக்கா குழந்தைகளுக்கா என்று நான்கூட கேட்க முடியும். ஆனால் அன்றையதினம் அந்தக் குழந்தைகளுக்கு இந்த திட்டம் நல்ல முறையில் பயன்பட வேண்டும், அந்தக் குழந்தைகள் நல்ல வலுவுடன் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அப்படிப்பட்ட நல்ல சத்துணவுத் திட்டத்தை எங்களது முதல்வர் அவர்கள் ஆரம்பித்தார்கள். அது நல்லமுறையில் செயல்பட வேண்டும் என்று நீங்களும் சத்துணவுடன் முட்டையும் வழங்கி வருகிறீர்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சத்துணவு திட்டத்திலே இன்றையதினம் அந்த அமைப்பாளர்கள் சாம்பார் ரசம் என்று குழந்தைகளுக்கு வழங்கும் போது, அந்த சாம்பார் ரசத்தில் அதிகமாக சாம்பார் பொடிகளை கலக்கிறார்கள். அந்த சாம்பார் பொடி தரமானதாக இல்லாமல் பூச்சிக் கூடுகள் நிறைந்து மிகவும் தரங்கெட்ட வகையில் அந்த சாம்பார் பொடி வினியோகிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையை மாற்றி நல்ல தரமான சாம்பார் பொடி வழங்கவும் மற்றும் மளிகை சாமான்கள் மிகவும் தரமான வகையில் வழங்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரையை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன் இன்றையதினம் அந்த சத்துணவு மையத்தில் பணிபுரிகிற சத்துணவு அமைப்பாளர்கள் பெரும்பாலும் பெண்களாகத்தான் வேலை பார்க்கிறார்கள். அவர்களது வேலை நாட்கள் மாதத்தில் 30 நாட்கள் என்றால் அந்த 30 நாட்களும் அவர்கள் மையங்களுக்குச் சென்று பணி புரிந்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு விடுப்பு என்பது கிடையாது, அவர்களை

கடந்த ஆண்டு பகுதி நேர ஊழியர்கள் என்று நீங்கள் அறிவித்திருந்தும் கூட அவர்கள் அப்படி பகுதி நேர ஊழியர்களாக செயல்படுவதில்லை. கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின் போது கூட இதே சமூக நலத்துறையில் நான் அதை வலியுறுத்தி பேசியிருக்கிறேன். அவர்கள் முழு நேர ஊழியர்களாக பணி புரிகிறார்கள். எனவே அவர்களை முழு நேர ஊழியர்களாக பணியில் நிரந்தரம் செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதுடன் வாரத்தில் ஒரு முறை ஞாயிற்றுக் கிழமையாவது அவர்களுக்கு விடுப்பு அளிக்க வேண்டுமென்று அவர்களது சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு 30 சதவீதப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு தருவதாக அறிவித்து இருந்தார்கள். ஆனால், இந்த ஓராண்டுக் காலத்தில் எத்தனை சதவீதப் பெண்கள் அந்த வேலை வாய்ப்பில் பயன் பெற்றுள்ளார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12–50 மணி.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இலவசக் காலணித் திட்டத்திற்கென்று நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் அந்த இலவசக் காலணித் திட்டத்தின் மூலம் எந்தப் பள்ளிக் குழந்தைக்கும் காலணி வழங்கப்படவில்லை. அந்த இலவசக் காலணி திட்டத்திற்காக, கடந்த ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள்—பெண்கள் பயிற்சி பெற்று—நல்ல முறையில் நடைபெற்று வந்தன, ஆனால், இப்பொழுது அந்தச் சங்கங்கள் எல்லாம் செயல்படாமல் அப்படியே கிடக்கின்றன. மேலும், அந்தக் காலணி தைக்கின்ற பெண்கள், காலணி தைப்பதற்குத் தேவையான பொருள்களை அரசு அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. அந்தப் பொருட்கள் எல்லாம் அப்படியே துருப் பிடித்த நிலையில் இன்றைக்குக் கிடக்கின்ற காட்சியைக் காண்கிறோம். எனவே, இலவச காலணி திட்டத்தின் முன்பு அந்தச் சங்கங்கள் எங்கு செயல்பட்டனவோ, அந்த இடங்களில் மீண்டும் அந்தப் பெண்கள் நல்லமுறையில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்—அந்த வேலையைத் தொடர்ந்து செய்ய அந்தப் பெண்களுக்கு வாய்ப்பளிக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான வால்பாறையில் குளிர்காலம் அதிகமாக இருக்கிற காரணத்தால், அந்தத் தொகுதி மக்கள், அங்கு தையல் மெஷின் சமூக நலத்துறை மூலமாக வாங்கி. ஸ்வெட்டர் பின்னி, அதைச் சமூக நலத்துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து, அந்தச் சமூக நலத்துறை அலுவலர் நியாய



விலைக் கடைகளில் விற்று, அந்தப் பெண்கள் பயன் அடையும் வண்ணம் அன்றைய காலக்கட்டங்களில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இன்றைய நிலையில் ஸ்வெட்டர் தைக்கும் அந்தச் சமூகநலப் பயிற்சி மையங்களில், சுமார் 150 தையல் மெஷின்கள் அப்படியே துருப்பிடித்து கிடக்கின்றன. அதைப் போல பல மாவட்டங்களிலும் பல தொகுதிகளிலும, அந்தத் தையல் மெஷின்களால் பயன்படுகிற அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்லமுறையில் செயல்படாமல் மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊனம் உற்றோர்களுக்கென்று அதிக சலுகைகளை அரசு அறிவித்துள்ளது. அப்படி இருந்தும் அந்த ஊனமுற்ற குழந்தைகளுக்காக பள்ளிகள் மாவட்டந்தோறும் துவங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், முதியோருக்கு உதவித் தொகை வழங்கும் சத்துணவுத் திட்டத்தின் கண் பார்வையற்றோர், தொழு நோய், மன நோய் போன்ற நோய்களால் அவதிக்குள்ளாகிறவர்களுக்கு, ஆதரவற்ற நிலையில் இருப்பவர்களுக்கு, சமூக நலத்துறை மூலமாக, உதவித் தொகை வழங்கப்படுகிறது. அப்படி உதவித் தொகை வழங்கப்படும் போது 60 வயது உள்ளவர்களுக்குத்தான் வழங்க வேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். 60 வயது ஆனவர்கள் அந்த நோய்க்கு ஆட்பட்டவர்கள் சிலர் இறக்கவும் நேரிடலாம். அந்த நோயினால் மிகவும் பாதிக்கப்பட்ட சூழ்நிலையை அவர்கள் அடைகின்றார்கள். எனவே, 60 வயது என்பதை 30 வயதாகத் தளர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பெண்கள் 'நடத்தாட்டிகள்' என்பவர்கள் பணி புரிந்து வருகிறார்கள். அவர்கள் நீண்ட நெடுங்காலமாக வேலை செய்தாலும் அவர்களது வருமானம் ரூ. 18 ஆகத்தான் இருக்கிறது. அவர்கள் இன்னும் நிரந்தரம் செய்யப்படாமல், அதே பணியில் வேலை செய்து வருகிறார்கள். அவர்களது சமபளத்தை உயர்த்துவதோடு, அவர்களை வேலையில் நிரந்தரமாக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர், மலைவாழ் மக்கள், மிக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு நலிந்தவர்கள் அந்தத் தொழிலே ஆதரவற்ற நிலையில் இருக்கிற காரணத்தால் அவர்களுக்கும் அரசாங்கம் ஓய்வூதியம் வழங்குகிறது. அந்த ஓய்வூதியம் வழங்கும் வயதை 60 என்று அவர்களுக்கும் நிர்ணயித்திருக்கிறார்கள். அவர்கள் ஆதரவற்ற அநாதைகள். அவர்களுக்கென்று யாரும் இல்லாத சூழ்நிலையில் அந்த 60 வயதிலே வேலைக்குச் சென்று அவர்களுக்குண்டான ஊதியத்தைப் பெற

இயலாது. எனவே, 60 வயது என்று நிர்ணயிப்பதை 40 வயதாகக் குறைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

12-55 மணி

கடந்த காலங்களில் முதியோர்கள் ஒய்வூதியம் பெற்று வந்தார்கள். அதில் சிலர் தங்களுக்கு குழந்தைகள் இருந்தும், ஆண் பிள்ளைகள் இருந்தும் அவர்கள் ஒய்வூதியம் பெற்றார்கள் என்பதை இன்றையதினம் பார்த்து, அப்படிப்பட்டவர்கள் அந்த ஒய்வூதியத்தைப் பெற்றிருந்தால் அதை மீண்டும் அரசாங்கத்திற்குத் திருப்பித் தர வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறு பரிசீலனை செய்து அவர்கள் வாங்கிய பணத்தை திருப்பிக் கட்ட முடியாத சூழ்நிலையில் இருப்பதால் அதைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்று சொல்லாமல் இருப்பதோடு அவர்களுக்குத் தொடர்ந்து ஒய்வூதியம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதுவரையில் பேச வாய்ப்பு வழங்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசால் முன்மொழியப்பட்டிருக்கிற சமூக நலம், கதர் தொழில், சிறு தொழில்கள், பட்டு வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைளின் கீழ் இந்த மாமன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர் பலர் தங்களுடைய மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் இந்த மாமன்றத்திற்கு அளித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட இதே மானியக் கோரிகையின் கீழ் கொடுக்கப்பட்டிருந்த விளக்கத்திற்கும் இந்த ஆண்டு இந்தத் துறையின் சார்பாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கத்திற்கும் நீங்கள் ஏராளமான வித்தியாசத்தை பார்த்திருக்கக்கூடும். சென்ற ஆண்டு அரசு அறிவித்த பல்வேறு நலத் திட்டங்கள் உரிய நேரத்தில் உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டதன் மூலமாக கிராம மக்கள் அளவில் சென்று பயனாளிகள் அடைந்த அந்தப் பயனை நாட்டுமக்கள் எல்லோரும் பெற்றார்கள் என்கிற அந்த விவரங்கள் எல்லாம் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கே உரையாற்றிய பெரும்பாலான உறுப்பினர்கள் ஒரு முக்கியமான கருத்தைச் சுட்டிக் காட்டினார்கள். பேசியவர்களில் பலர் சத்துணவுக் கூடங்கள் பராமரிக்கப்படாமலும் சத்துணவுக் கூடங்கள் அமைந்திருக்கிற பகுதி சுகாதாரமற்ற முறையிலே அமைந்திருக்கிறது என்றும் அந்தச் சத்துணவுக் கூடங்களை பராமரிக்க, பழுதுப் பார்க்க இந்த அரசு இந்த



ஆண்டு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றும் கடுமையான குற்றச்சாட்டை இந்த அரசின்மீது சுமத்தினார்கள். சென்ற ஆண்டு அதாவது 1988-89-ல் சத்துணவுக் கூடங்களைப் பழுது பார்ப்பதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சேர்த்து 1.20 கோடி ரூபாயும், நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநருக்கு 15 இலட்சம் ரூபாயும், சமூக நலத்துறை இயக்குநர் மூலமாக 25 இலட்சம் ரூபாயும், மாநகராட்சி ஆணையர் மூலமாக 10 இலட்சம் ரூபாயும், மாநகராட்சி ஆணையர், மதுரை, கோவை மற்றும் சென்னைக்கு 23 இலட்சம் ரூபாயும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத் துறைக்கு 15 இலட்சம் ரூபாயும். பிற்பட்டோர் நலத் துறை இயக்குநருக்கு 10 இலட்சம் ரூபாயும் ஆக ஒதுக்கீடு செய்தார்கள். அதன் மூலமாக ஏறத்தாழ 2,400 மேற்பட்ட சத்துணவுக் கூடங்களை பழுதுப் பார்க்கவும் பராமரிக்கவும் அந்தத் தொகை செலவிடப்பட்டது.

இந்த ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மட்டும் சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் ஏறத்தாழ 1.60 கோடி ரூபாய் சத்துணவு கூடங்களைப் பராமரிக்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில் இருக்கிற 731 சத்துணவுக் கூடங்களில் 400 சத்துணவுக் கூடங்கள் நல்லமுறையிலே பழுது பார்க்கப்படும். சமையல் அறை இல்லாத சத்துணவுக் கூடங்களில் சமையல் அறை கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சத்துணவுக் கூடங்களில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற, மன்ற உறுப்பினர்களால் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிற, பல்வேறு குறைபாடுகளை களைகின்ற வகையில் இந்த அரசு மிகப் பெரும் முயற்சி மேற்கொண்டிருக்கிறது. சத்துணவுத் திட்டம் இன்றைக்கு பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அந்த அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் முறையாக சத்துணவுக் கூடங்களுக்குச் சென்று, அங்கே இருக்கிற பொருள்களைப் பார்த்து, உணவு நல்ல முறையில் வழங்கப்படுகிறதா என்றெல்லாம் கண்காணித்து, இந்த அரசுக்கு அறிக்கை அனுப்புகிறார்கள். தவறு ஏற்படுகிற நேரத்தில் அந்தத் தவறுக்குக் காரணமாக இருக்கிற சத்துணவுக் கூட ஊழியர்கள், அமைப்பாளர்கள் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டோ அல்லது தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டோ விளக்கம் கேட்கப்பட்டு, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சத்துணவுக் கூடங்களில் முட்டை வழங்குவது பற்றியும் இங்கே உரையாற்றிய நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்கள் பேசுகின்றபோது, இதன் காரணமாக முட்டை விலை உயர்ந்திருக்கிறது; சத்துணவுக் கூடங்களுக்கு முதலிலே முட்டை வழங்குகின்றபோது அமைப்பாளர்களை 50 பைசாவிற்கு வாங்கச் சொன்னார்கள் அதற்குப் பிறகு டெண்டர் முறையைப் பின்பற்றி, விநியோகம் செய்வதன் காரணமாக ரூ. 1.30-க்கு முட்டை வாங்குகிறீர்கள் என்று சொன்னார்கள். இது முற்றிலும் தவறான ஒரு செய்தியாகும். முன்பு இந்தத் திட்டத்தை, அறிமுகப்படுத்திய நேரத்தில், இதை எப்படி விநியோகம் செய்வது என்று அரசு ஒரு முடிவு எடுப்பதற்கு சற்று கால அவகாசம் எடுத்துக் கொண்டது. அந்த கால அவகாசத்திலேதான், ஆங்காங்கே இருக்கக்கூடிய சத்துணவு ஊழியர்களையே, முட்டைகளை நேரடியாக மையங்களுக்கு வாங்கலாம் என்று நாங்கள் அவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தோம். அப்படி அனுமதி வழங்கப்பட்ட நேரத்தில், முட்டையினுடைய விலை 50 பைசா அன்றைய மார்கெட் ரேட்; எனவேதான் மார்கெட் விலைக்கு மிகாமல் முட்டைகளை வாங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு இருந்தது.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : ஆனால் சில மாதங்களில், 50 பைசாவிற்கு அதிகமாக முட்டைகள் வழங்கப்படுகின்றன என்ற செய்தி, அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டவுடன், 50 பைசாவிற்கு மேல் எவ்வளவு தொகை கூடுதலாக தந்திருந்தார்களோ, அந்தத் தொகையை அவர்களுக்கு திரும்பிச் செலுத்த வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு அதன்படி நடவடிக்கை மேற்கொண்டது. இப்போது டெண்டர் முறையில் சத்துணவுக் கூடங்களுக்கு முட்டைகளை வாங்குவதன் மூலம் ஒரு முட்டையின் விலை 1.30 என்று உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். ஆனால், இன்றைக்கு எந்த மாவட்டத்திலும் முட்டையினுடைய விலை 62 பைசாவிற்கு மிகாமல் நாங்கள் வாங்குகிறோம். இந்த முறை, இரண்டு முறைகளிலே பின்பற்றப்பட்டு வருகிறது. டாப்கோ நிறுவனம் 9 மாவட்டங்களுக்கு அவர்களே முட்டை விநியோகம் செய்வதற்கு அனுமதியைப் பெற்று, இன்று டாப்கோ நிறுவனத்தின் மூலமாக 9 மாவட்டங்களுக்கு முட்டை விநியோகம் செய்யப்படுகிறது. மீதி மாவட்டங்களுக்கு, மாவட்ட அளவிலே டெண்டர் கோரப்பட்டு, டெண்டர் எடுத்தவர் ஆங்காங்கே இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், அந்த ஒன்றியத்திற்குத் தேவையான முட்டைகளைக் கொண்டு வந்து வைக்க வேண்டும். அந்த முட்டைகளை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே இருக்கக்கூடிய சத்துணவுக் கூடங்களுக்கு எடுத்து செல்வதற்கு ''டிரான்ஸ்போர்ட்டேஷன் சார்ஜ்'' போக்குவரத்து செலவிற்காக ஒரு முட்டைக்கு 5 பைசா வழங்கப்படுகிறது



எனவே, எப்படிப் பார்த்தாலும் 62 பைசாவிற்கு வாங்கி, 5 பைசா போக்குவரத்து செலவாக, 67 பைசாவிற்கு மிகாமல் இன்றைக்கு, இந்த அரசு, முட்டைகளை சத்துணவு மையங்களுக்கு வழங்கி வருகிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப் போல, முதியோர் ஒய்வு ஊதியத் தொகை பெறுவதில் இருக்கக்கூடிய சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினீர்கள். முதியோர் ஓய்வு ஊதியத் தொகை, மாதம் ஒன்றுக்கு ரூ.35 ஆக இருந்தது, ரூ.50. ஆக உயர்த்தப்பட்டது. முதியோர் ஒய்வு ஊதியத் தொகை பெறுகின்றவர்கள், இன்றும் தொடர்ந்து சத்துணவுக் கூடங்களில், மதிய உணவைப் பெற்று செல்கிறார்கள். அதிலே எந்த விதமான தடையும் இல்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, கலைஞர் அவர்கள் இந்த உத்தரவை வழங்கினார்கள். அதற்கு முன்பு எல்லாம், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலேதான் முதியோர்க்கு ஒய்வு ஊதியம் வழங்கப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், முதியோர் ஒய்வூதியம் பெறுகின்றவர்களின் தொகையை அதிகரித்தோம். அதனாலே, அந்த எண்ணிக்கை உச்ச வரம்பு தளர்த்தப்பட்டு வாய்ப்புடைய எல்லோருக்கும் அந்தத் தொகை வழங்கப்பட வேண்டுமென்று அறிவித்ததன் மூலம், இந்த ஆண்டு கூடுதலாக இந்த தொகை பெறுகின்றவர்களுடைய எண்ணிக்கை ஏறத்தாழ 91,050 பயன் பெற்றிருக்கிறார்கள்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். கூடுதலாக கிட்டத்தட்ட 91 ஆயிரம் பேர் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்பது உண்மை. ஆனால், இந்த உதவித் தொகைகளை அளிப்பதற்கான போதுமான அலுவலர்கள் இல்லை என்கிற காரணத்தினால், அதிலே தாமதம் ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் 3 மாதங்கள் அவற்றை சேகரிக்கிறார்கள். 3 மாதத்திற்கு ஒரு முறைதான் வந்திருக்கின்ற விண்ணப்பங்களை ஆய்வு செய்து, அதையும் அந்தந்த இடங்களுக்குச் சென்று பரிசீலனை செய்ய வேண்டும். தகுதியுடையவர்கள் தானா? அவர்களைப் பராமரிப்பதற்கு யாரும் இருக்கிறார்களா இல்லையா என்பதை இந்த 3 மாத கால இடைவெளிக்குள் பரிசீலித்ததற்குப் பிறகு தான் அவர்களுக்கு அந்த உதவித் தொகை வழங்க அனுமதிக்கப்படுகின்றது. அல்லாமல், விண்ணப்பம் செய்த உடனேயே ஒருவருக்கு உதவித்

தொகை வழங்குவது என்பது இயலாத காரியம். எனவே, இந்த பரிசீலனைக்காக ஆகிற நேரத்தைதான் உறுப்பினர் அவர்கள் காலதாமதம் என்று சொல்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதையும் முடிந்த அளவிற்கு குறைப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

அதேபோல், குழந்தைகள் நலத்தைப் பற்றி இங்கே எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதியோர் ஓய்வு ஊதியத் தொகைச் சம்பந்தமாக நான் ஒரு கோரிக்கை விடுத்திருந்தேன். முதியோர் மகனைப் பெற்றிருக்கிறார்கள் என்கிற காரணத்திற்காக தராமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, தாயைக் காக்கும் தனயன்கள் அதிகமாக இல்லை என்ற காரணத்தினால், அப்படி ஒரு சான்றிதழ் பெற்றுத் தந்தால், அவர்களுக்கு நீங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தேன்.
அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினால் உதவியாக இருக்கும்.

13-05 மணி

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : அப்படிப்பட்ட ஒரு சலுகை அளிக்கப்படுமேயானால், எல்லா தனயன்களும் தாயை காபாற்ற முடியாது என்று சான்றிதழ் தருவதற்கு முன் வந்து விடுவார்கள். எனவே ஒரு உச்சவரம்பே இல்லாமல் போய்விடும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

குழந்தைகள் நலம் காப்பதற்காகத்தான் இந்த அரசு சிறப்பான திட்டங்களை இந்த ஆண்டு அறிவித்திருக்கிறது. முட்டை வழங்குவதோடு மட்டுல்லாமல் சத்துணவுக் கூடங்களிலே பயன்பெறுகிற குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' கேப்சூல் வழங்குவதற்கான திட்டம் அறிவிக்கப்பட்டு, அந்த வைட்டமின் மாத்திரைகள் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விரைவில் அந்த சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு அந்த வைட்டமின் மாத்திரைகள் வழங்கப் படவிருக்கிறது. இந்த ஆண்டு புதிதாக சத்துணவுத் திட்டத்தினால் பயன்பெறும் 3 வயது முதல் 6 வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளுக்கு வருடத்திற்கு இரண்டு முறை வைட்டமின் 'ஏ' கேப்சூல்களை அளிக்க அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம், 2 வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்தின் மூலம் செயல்பட்டு வருகிறது. இதனால் 20 இலட்சத்து 24 ஆயிரம் குழந்தைகள்



பயன் பெற்று வருகிறார்கள். இதில் மொத்தம் 28,628 குழந்தைகள் நல மையங்கள் இருக்கின்றன. தற்போது 6 மாதத்திலிருந்து 3 வயதுக்குள் உள்ள குழந்தைகளுக்கு ஊட்ட சத்துத் திட்டம் 10 மாவட்டங்களில் தனி மையங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கூறிய 2வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு செயல்படுத்தப்பட்டு வருகின்ற சத்துணவுத் திட்டத்தையும், 6 மாதத்திலிருந்து 3 வயதுக்குள் உள்ள குழந்தைகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தனி மையங்கள் இரண்டையும் இணைத்து புதிதாக ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம், இரண்டாவது திட்டம் இந்த ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும். இந்தப் புதிய திட்டம் உலக வங்கியின் உதவியுடன் ஏறத்தாழ 350 கோடி ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது. இந்தத் திட்டக் கால இறுதியாண்டில், இதன் அடிப்படையில் சுமார் 18,392 மையங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட மையங்களாகவும், 2,182 மையங்கள் புதிதாக உருவாக்கப்படுகிற மையங்களாகவும் செயல்படும்.

இங்கே உரையாற்றிய சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு திரு. ராஜு அவர்கள் மலைவாழ் பகுதியில் இதுவரை எங்களுக்குப் புதிதாக குழந்தைகள் நல மையங்களே அமைக்கப்படவில்லை என்றக் குறையைச் சுட்டிக்காட்டினார்கள். இந்தப் புதிய மையங்கள் அமைக்கப்படுகிற நேரத்தில் மலைப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, உடல் ஊனமுற்றவர்கள், கண்பார்வையற்றவர்களை பற்றி இங்கே சுட்டிக்காட்டிய போது, அவர்களுக்கு வழங்கப் படுகிற உதவித் தொகைகள் சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இந்த ஆண்டுதான் உடல் ஊனமுற்றவர்களை அடையாளம் தெரிந்து கொள்வதற்காக அவர்களுக்கெல்லாம் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு அரசு முடிவெடுத்து, மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கு அந்த அடையாள அட்டைகளை அனுப்பி, உடல் ஊனமுற்றவர்களை எல்லாம் தேர்வு செய்து, அந்த அடையாள அட்டைகளை வழங்கச் சொல்லி உத்தர விட்டிருக்கிறோம். அந்த அடையாள அட்டைகள் வைத்திருக்கிற உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசு அளிக்கிற எல்லாத் திட்டங் களையும் பெற்று பயன் பெறுகிற அந்த வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படும். ஒவ்வொரு முறையும் அந்த உதவித் தொகையைப் பெறச் செல்கிற நேரத்தில் உடல் ஊனமுற்றவர்கள் என்று மருத்துவச் சான்றிதழ் ஒவ்வொரு முறையும் பெற்றுச் சென்று ஒவ்வொரு உதவியையும் பெறுவதற்கு ஏற்படுகிற சிரமத்தைத் தவிர்க்கின்ற வகையில் அப்படிப்பட்ட முயற்சிகளை இந்த ஆண்டு இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது.

அதைப் போல, கண்பார்வை குறைவுடையவர்கள் அண்மையிலே நடத்திய போராட்டத்தைப் பற்றியும், அதன் காரணமாக நடைபெற்ற சில விரும்பத்தகாத சம்பவங்களைப் பற்றியும் மரியாதைக்குரிய உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அம்மையார் எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு கண்பார்வையற்றவர்களுக்கு எத்தனையோ வகையில் உறுதுணையாக இருந்தும், ஒவ்வொரு மாவட்டந்தோறும், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு கண்ணொளி வழங்குகிற திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற வகையில் இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்த பட்சம் 800 பேர் அல்லது 1000 பேர் அந்த முகாமிற்கு வரவழைக்கப்பட்டு கண் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, சிலருக்கு அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டு கண்ணாடி வழங்குகிற அந்தத் திட்டம், இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்கு பிறகு துரிதப்படுத்தப்பட்டு மிக நல்ல முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதைப் போலவே, உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்று ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த முறை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் சில தனியார் நிறுவனங்களில் தங்களுக்கு அதைப் போன்ற இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். தொடர்ந்து, கண்பார்வையற்றவர்கள் பலர், பட்டப்படிப்பு முடித்தவர்கள் பல்வேறு துறைகளிலே தங்களுக்கு வேலைவாய்ப்பை உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த அரசிற்குக் கோரிக்கை வைத்தார்கள். அவர்கள் வைத்த கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்க, துறையின் மூலமாக நான் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் சமூகநலத் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு முன்னாலே சென்று அவர்கள் மறியலிலே ஈடுபட்டது, அந்த நேரத்தில் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்கின்ற ஒரு நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது.

13-10 மணி

அதன் காரணமாகத் தான் அவர்களை மனிதாபிமான அடிப்படையில் பரிவுணர்ச்சியோடு அப்புறப்படுத்த வேண்டுமென்று முதலிலே காவலர்கள் ஈடுபட்டாலும் கூட கண் பார்வை அற்றவர்கள் கையில் வைத்துக்கொண்டிருந்த தங்களுக்கு வழிக் காட்டக்கூடிய அந்த ஊன்றுகோல்களால் காவலர்களைத் தாக்க தொடங்கிய பிறகு தான் வலுக்கட்டாயமாக அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதே அல்லாமல் இந்த அரசு கண் பார்வை அற்றவர்கள் மீது மனிதாபிமானம் அற்ற முறையில் நடந்து கொண்டது என்று சொல்லக் கூடிய குற்றச் சாட்டு உண்மைக்கு மாறானது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தான்



திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நீங்கள் சமாதானம் சொல்ல வேண்டாம். அது காவல் துறையில் தவறு செய்து விட்டார்கள் என்று சொன்னால் தவறு என்று தான் சொல்ல வேண்டுமே தவிர கண் பார்வை அற்றவர்கள் காவலர்களை அடிக்க முயற்சித்தார்கள் என்பது அவர்களுக்கு கண் பார்வை இருப்பதாக அர்த்தம் ஆகிவிடும். எனவே அவர்களே அவர்களை பாதுகாத்துக் கொள்ளவே வழி இல்லாத நிலையில் இருப்பவர்களைப் போய் காவல் துறையில் அடித்து இருக்கிறார்கள் என்பதை நியாயப்படுத்த வேண்டாம் என்பதை நான் பணிவன் போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறு நடைபெற்றால் தவறு என்று ஒத்துக்கொள்வதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால் உண்மையில் அன்றைக்கு நடந்த சம்பவம் அது தான். காவலர்கள் கண் பார்வை அற்றவர்கள் அருகே போய் அவர்கள் தோளைத் தொட்டு போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தாதீர்கள்; உங்கள் பிரச்சினைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள், நீங்கள் கலைந்து செல்லுங்கள் என்று அவர்கள் கையைப் பிடித்து அழைத்து செல்வதற்கு கிட்டே சென்று அவரோடு பேசிய நேரத்தில் தான் அவர்கள் தங்கள் கையில் வைத்துக்கொண்டு இருந்த ஊன்றுகோல்களைக் கொண்டு காவலர்களைத் தாக்கத் தொடங்கினார்களே அல்லாமல் இதிலே ஒளிப்பதற்கோ, மறைப்பதற்கோ எந்த நியாயமும் இல்லை. எனவே இது தான் நடந்த உண்மை. அதற்குப் பிறகு தான் கலைஞர் அவர்கள் உடனடியாக அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி அவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி பேசி முடிவு எடுத்து அவர்களுக்கு இன்றைக்கு தரப்பட்டு இருக்கின்ற அந்த உதவித் தொகை பிளஸ் 2 படித்தவர்களுக்கு 75 ரூபாய்.....

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சம்பவம் நடந்த பிறகு காவல் துறை அன்றைக்கு சால்ஜாப்பு சொல்லுகிற முறையிலே வெளியிட்ட அறிக்கையில் அவர்கள் கல் எறிந்தார்கள், போலீஸ் வேனை சேதப்படுத்தினார்கள் என்று எல்லாம் சொல்லி இருந்தார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊன்று கோலை வைத்துத் தாக்கினார்கள் என்ற ஒரு புதிய தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறை அவர்களுடைய நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக சொல்லக்கூடிய சால்ஜாப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலாகச் சொல்லி அந்த மனிதாபிமானம் அற்ற செயலை நியாயப்படுத்தக்கூடாது என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் சொன்னபோது கூட இது இந்த அரசின் மீது ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்துவதாக அமைந்து இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு உண்டான உத்திரவாதத்தை மேற்கொள்ளவேண்டுமே தவிர காவல்துறையின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதன் மூலமாக அவர்களின் இந்த தவறான நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதாக அமையக் கூடாது என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் கலவரம் ஏற்படுவதற்கு எது காரணமாக அமைந்தது என்பதை நான் சொல்ல வந்தேன். அதற்குப் பிறகு ஏராளமான சம்பவங்கள் அங்கே நடைபெற்று இருக்கின்றன. அதற்குப் பிறகு வேண்டுமானால் கல் எரிதல், காவல்துறை வேனை நொறுக்குதல் போன்ற சம்பவங்கள் நடந்து இருக்கக்கூடும். ஆனால் கலவரம் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை தான் என்னுடைய கவனத்திற்கு வந்த செய்தியை இங்கே நான் சுட்டிக்காட்டினேன். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தான் கலைஞர் அவர்கள் உடனடியாக அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி அவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குகின்ற வகையில் ஏற்கனவே உடல் ஊனம் உற்றவர்கள், கண் பார்வை அற்றவர்கள், காது கேளாதவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பு உருவாக்கித் தருவதற்கு என்று ஒரு கமிட்டி இருந்தாலும் கூட அரசு அலுவலர்களைக் கொண்ட ஒரு குழு இருந்தாலும் கூட அந்த குழுவினுடைய பணியோடு சேர்த்து இன்றைக்கு என்னுடைய தலைமையில் வேலைவாய்ப்புத் துறையைச் சேர்ந்த செயலாளர், சமூகநலத் துறை செயலாளர்; போக்குவரத்துத் துறை செயலாளர், மற்றும் தொழில் துறை செயலாளர் ஆகியோர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் மூலமாக உடனடியாக தகுதி இருக்கக்கூடிய கண் பார்வை அற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, அவர்கள் பெற்றுக்கொண்டு இருந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள கண் பார்வை அற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்றவரை அவர்களுக்கு தந்த— உதவித் தொகையை இரட்டிப்பாக உயர்த்தி அன்றைக்கு அறிவித்தார்கள். 10—வது அதற்கு குறைவாக படித்தவர்கள் மாதம் 50 ரூபாய் பெற்றுக்கொண்டு இருந்தார்கள். அந்த உதவித் தொகையை 100 ரூபாயாக உயர்த்தினார்கள். பிளஸ் 2 தேர்ச்சிப் பெற்றவர்கள் 75 ரூபாய் மாதம் ஒன்றுக்கு உதவித் தொகை பெற்றுக்கொண்டு இருந்தார்கள். அது 150 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பட்டதாரி அதற்கு மேல்





படித்தவர்கள் மாதம் 100ரூபாய் பெற்றுக்கொண்டு இருந்தார்கள். அவர்களுடைய உதவித் தொகையை 200 ரூபாயாக இந்த அரசு உயர்த்தி அவர்களுக்கு இந்த திருத்தப்பட்ட உதவித் தொகை வழங்கப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மகளிர் மேம்பாட்டுக் கழகம் பற்றியும், அதனுடைய பணிகள் பற்றியும் இங்கே உரையாற்றிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். மகளிர் மேம்பாட்டுக் கழகத்திற்கு என்று மத்திய அரசு, மாநில அரசு நிதி உதவி வழங்குகிறது. 1989–90-ல் ஏறத்தாழ 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் 2,569 கிராமப்புற மகளிர் வேலைவாய்ப்பைப் பெறுகின்ற வகையிலும், சுயமாகத் தொழில் தொடங்கி அதன் மூலம் அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்கின்ற வகையிலும் மகளிருக்கு இதன் மூலமாக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது. அதோடு நார்வே நாட்டு நிதி உதவியுடன் மகளிர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும்,—'ஸ்டெப் உதவியுடன் ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்குகின்ற திட்டத்திற்காகவும் மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. இந்த ஆண்டு, இந்த அமைப்பின் சார்பாக, டர்க்கி டவல் பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடம் அமைப்பதற்கான வாய்ப்புகளும், தீக்குச்சி தயார் செய்தல் மற்றும் பல்வேறு சிறுதொழில் செய்வதற்கான வாய்ப்புகளையும், செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் பயிற்சி அளிப்பதற்கான தொழிற்கூடம் அமைப்பதற்கும் பட்டு உற்பத்தி, மீன் வளர்ப்பு ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கவும், இந்தப் பயிற்சியை மாநிலத்தில் இருக்கக்கூடிய பல்வேறு தொண்டு நிறுவனங்களுடைய உதவியோடு செயல்படுத்துவதற்கான திட்டங்கள் இந்த ஆண்டு உருவாக்கப்பட்டிருக்கின்றன.

13–15 மணி

இக்கழகம், பெண் கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, குழந்தைகள் வளர்ப்பு மற்றும் வருவாயினைப் பெருக்கும் நடவடிக்கை ஆகிய பலவித நடவடிக்கைகளில் பெண்களுக்கு ஒருங்கே உதவி அளிக்கும் நோக்கத்தோடு ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றிற்கு ஒரு வடிவம் கொடுத்து வருகிறது. இந்தத் திட்டத்தினால் சுமார் 50 ஆயிரம் கிராமப்புற மகளிருக்கு 124 கோடி ரூபாய் செலவில் 5 ஆண்டுகளில் பயன்பெறக்கூடிய திட்டம் ஒன்று இன்றைக்கு இந்தக் கழகத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமேயானால் கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய மகளிர் பெருமளவிலே வேலைவாய்ப்பு பெறவும் அவர்களுக்குத் தேவையான பொருளாதார உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்புகள் இந்த ஆண்டிலே ஏற்படுத்தப்படும்.

கதர் கிராமத் துறையின் மூலமாக இன்றைக்கு கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுதான் இந்தத் துறையின் முழுமையான நோக்கம் என்று நீங்கள் அறிவீர்கள். அந்தத் துறை உருவாக்கப்பட்டு ஏறத்தாழ 29 ஆண்டுக்காலம் நிறைவு பெற்று 30 ஆவது ஆண்டிலே இன்றைக்கு நாம் நின்று கொண்டு இருக்கிறோம். இந்தத் துறை எந்த அளவிற்கு தன்னுடைய கடமையை உணர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதற்கு உதாரணமாக நான் ஒரு செய்தியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அனைத்திந்திய அளவில் தமிழ்நாடு கதர் வாரியம், கதர் திட்டங்களை, கதர் துணிகளை உற்பத்திச் செய்வதிலும், கதர் துணிகளை விற்பனை செய்வதிலும் நாம் இரண்டாவது இடத்தைப் பெற்று இருக்கிறோம். முதல் இடத்தை குஜராத் மாநிலம் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், கிராமத் தொழில்களின் மூலமாக கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய கைவினைஞர்களை ஊக்குவிக்கவும், கிராமத் தொழில்களை ஊக்குவிக்கின்ற வகையிலே பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்கின்ற அந்தப் பணியில் அனைந்திந்திய அளவிலே தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம் இன்றைக்கு முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிற நேரத்தில் கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய கைவினைஞர்களுக்கு உதவித் தொகை வழங்குவதிலேயும், அவர்களை ஊக்குவிப்பதிலேயும் புதிதாகப் பலரை இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதிலேயும் இந்தத் துறை எந்த அளவிற்கு அக்கறை எடுத்துக்கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். கதர் கிராம தொழில் திட்டங்கள் வாரியத்தின் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் தனி நபருக்கு கடன் உதவி அளிப்பதன் மூலமாகவும் செயல்பட்டு வருகிறது. கதர் மற்றும் கிராமத தொழில் திட்டங்கள் தனி நபர் கடன் மூலம் நிறைவேற்றுவதில் நல்ல பலன் தந்துள்ளது. இதனை கருத்திலே கொண்டு ஒவ்வொரு ஆண்டும் தனி நபருக்கு வழங்கப்படும் நிதி உதவியும் அதிகரித்து வருகிறது. இதனால் பொருளாதார ரீதியில் லாபம் இல்லாத நிலையிலே ஆரம்பிக்கும் நிலை தவிர்க்கப்பட்டு வருகிறது. 1989 ஆம் ஆண்டு வரை 8.62 இலட்சம் கிராமிய கைவினைஞர்களுக்கு வாரியம் நேரடியாக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளது.

அண்மையில் முடிவடைந்த நிதி ஆண்டில் கதர் வாரியத்தின் மூலமாக கதர் உற்பத்தி மற்றும் கிராமத் தொழில்களின் மூலமாக 60 ஆயிரம் நபர்களுக்கு புதிதாக வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோம். 1990–91 ஆம் ஆண்டில் இந்தத் துறையின் மூலமாக 75 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு இருக்கிறது. குறைந்த மூலதனத்தில் அதிக அளவில் வேலைவாய்ப்பை கைவினைஞர்களுக்கு, அவர்கள் இருக்கின்ற இடத்திலேயே வழங்கு



13–20 மணி

கின்ற காரணத்தினாலேதான் அவர்களெல்லாம் வேலை வாய்ப்பைத் தேடி நகரப்பகுதிகளிலே வந்து குடியேறி அதன் காரணமாக நகரப் பகுதிகளினுடைய தேவைகள் அதிகரிப்பதைத் தவிர்க்கின்ற வகையிலே இந்த வாரியம் கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய கைவினைஞர்களை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு அந்தந்த இடத்திலேயே வேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையில் இன்றைக்கு நாம் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். கதர் வாரியத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகின்ற கூலி விகிதங்கள் குறைவாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அண்மையிலேதான் கதர் உற்பத்தி மையத்திலே பணியாற்றுகின்ற நூற்பாளர்கள், நெசவாளர்கள் இவர்களுக்கு இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு அவர்கள் வாங்குகின்ற கூலியை உயர்த்தித் தந்திருக்கிறது என்பதையும் பாலிஸ்டர் கதர் அறிமுகப் படுத்திய பிறகு ஒரு நபருடைய சராசரி வருமானம் ரூ.8-லிருந்து 10-ரூபாயாகவும், துணி உற்பத்தியாளர்களான நெசவாளர்களுக்கு ரூ.20 லிருந்து 25 ரூபாயாகவும், பட்டாடைகள் நெய்பவர்களுக்கு ரூ. 40 லிருந்து 50 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு, இன்றைக்கு அவர்கள் பயன்பெற்றுவருகிறார்கள்.

கிராமப் புறங்களில், வீணாகப் போகிற மூலப்பொருட்களைப் பயன்படுத்துகிற வகையில் அவைகளை பயன்தரக் கூடிய பொருளாக மாற்றுவதுதான் இந்தத் துறையின் நோக்கம், உதாரணமாக கிராமப் புறங்களில் எளிதாகக் கிடைக்கக்கூடிய வேப்பெண்ணைய், புங்க எண்ணெய் ஆகியவைகளைப் பயன் படுத்தி சோப் தயாரிக்கும் முயற்சியில் இந்த அரசு ஈடுப்பட்டு, குளியல் சோப், வாசனை சோப்புகளையும், கிராமத் தொழில்கள் மூலம் உற்பத்தி செய்துவருகிறோம். அதைப்போலவே, வீணாகக் கூடிய குப்பைக் காகிதங்கள்.....

*திரு.வி.கே. சின்னசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் சர்வோதய சங்கங்கள் மூலமாக வேலை வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அந்த கிராமப் புறங்களில் சர்வோதய சங்கங்களின் மையங்களில் பணியாற்றும் பெண்கள் ஒருநாள் பூராவும் பணியாற்றினாலும் ரூ.8 அல்லது ரூ.10 தான் ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே அந்த ஊதியத்தை உயர்த்த இந்தத் துறை நடவடிக்கை எடுக்குமா? அதோடு அந்த மையங்களில் 40,50 பெண்கள் பணியாற்றினாலும் அவர்களுக்கு அடிப்படை வசதிகள், கழிப்பிட வசதிகள் கூட இல்லாமல் ஒரு அவல நிலையில் இருக்கிறார்களே, அது குறித்து நடவடிக்கை எடுத்து, அதற்கான கட்டிட வசதிகளை செய்து தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சர்வோதய சங்கங்கள் மத்திய கதர் வாரியத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்ற அமைப்புகள். அந்த சர்வோதய சங்கங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு கூலியை உயர்த்திக் கொடுப்பதோ, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதோ மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. இருந்தாலும் கூட, அப்படிப்பட்ட நிலைமைகள் அங்கேயுள்ள பெண்களுக்கு இருக்குமேயானால், இந்த அரசின் மூலமாக அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கதர் துறையின் மூலமாக சர்வோதய சங்கங்களை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த ஆண்டு கதர் துறையின் மூலமாக காஞ்சிபுரத்தில் புதிய பட்டு விற்பனை நிலையம் அமைக்கவும், பல்வேறு இடங்களில் காதி கிராப்ட் கதர் மற்றும் கிராமத் தொழிலில் உற்பத்தியாகின்ற பொருட்களை விற்பனை செய்கிற நிலையங்களை அமைக்கவும் வேண்டுமென்று இங்கே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டார்கள். மாண்புமிகு திரு. பிச்சைமுத்து அவர்கள் பேசும்போது கூட, பெரம்பலூரில் காதி கிராப்ட் வேண்டுமென்று கேட்டார்கள். இன்றைக்கு அந்த பொருட்களின் விற்பனை அதிகரித்திருப்பதை உணர்ந்து, தமிழகத்தில் பல இடங்களில் 25 புதிய காதி கிராப்ட்களை இந்த ஆண்டு துவக்குவதற்காக அரசு முடிவு எடுத்து அதற்கான நிதியையும் ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் பேசுகிறபோது, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பனைத் தொழிலாளர்களுக்கு வேண்டிய பல்வேறு சலுகைகளைப் பற்றி இங்கே சொன்னார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் பனைத் தொழிலின் மூலமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் பலன் பெற்று வருகிறார்கள். பனைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டம், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக நடைமுறைப் படுத்தப்படவேண்டுமென்றும் இங்கே அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே மத்திய கதர் வாரியத்தின் மூலமாகவும், கூட்டுறவுத் துறையின் அங்கீகாரம் பெற்று செயல்படுகின்ற பனைத் தொழிலாளர்களுக்கு இவை போன்ற வசதிகளைப் பெற்றுத் தர, ரூ. 11,000 அளவில் அவர்களுக்குக் கடனும் மானியமும் இன்றைக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பற்றி இங்கே பேசிய நமது பேரவை உறுப்பினர் மாண்புமிகு திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் சொல்கிறபோது, 1984–85, 1985–86ம் ஆண்டு அறிக்கைகளில் சிறு தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தையும், அந்தத்



தொழில் நலிவுற்று இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டி, அப்படிப்பட்ட நலிவைப் போக்க இந்த சிறுதொழில் துறைக்கு அதிகமான ஊக்கம் தருவீர்களா என்று கேட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு தொழில் துறையிலே ஏற்பட்டிருக்கிற முன்னேற்றத்தை அறிவீர்கள். பொதுவாகவே சிறு தொழில்கள், நடுத்தர தொழில்கள், பெரிய தொழில்கள் இவற்றில் எல்லாம் கடந்த காலத்தில் ஏற்பட்ட நலிவை போக்குகின்ற வகையில் பல்வேறு அறிவிப்புகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

**13-25 மணி**

இங்கே உரையாற்றிய நம்முடைய உறுப்பினர் திரு. காதர் பாட்சா அவர்கள், மத்திய அரசு தன்னுடைய சலுகைகளை நிறுத்திக் கொண்டது. அதன் காரணமாக ஏற்பட்டிருக்கிற நலிவைப் போக்க மாநில அரசு அந்தச் சலுகைகளை அளிப்பதற்கு முன்வருமா என்று கேட்டார்கள். மத்திய அரசு அந்த முதலீட்டு உதவித் தொகை வழங்கிடும் திட்டத்தைத் தொடராததால் தொழிலுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்யும் நோக்கத்துடன் 34 வட்டங்களுக்கு என்று மட்டுமே வழங்கப்பட்டு வந்த மாநில அரசின் உதவித்தொகை விஸ்தரிக்கப்பட்டு அந்த வகையில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக 105 வட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.

அரசு மற்றும் அரசுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து தொழில் பேட்டைகள், தொழில் வளாகங்கள் ஆகியவற்றில் செயல்படும் தொழில்களுக்கு இந்த உதவி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சொந்த உபயோகத்திற்காக ஜெனரேட்டர் நிறுவிக்கொள்ளும் நோக்கத்தினை நிறைவேற்ற உயர் குறைந்த அழுத்த சக்தியை உபயோகிக்கும் தொழில் கூடங்களுக்கு ஜெனரேட்டர் வாங்குவதற்காக 15 விழுக்காடு ஆக ரூபாய் 5 இலட்சம் உதவித்தொகை வழங்க இந்த அரசு அறிவித்திருக்கிறது. வட்டியில்லாத விற்பனை வரிக்கடன் வழங்கும் திட்டம் 5 ஆண்டுகளுக்குரிய திட்டமாக மாற்றியமைக்கப்பட்டு உச்ச அளவு முன்பு 7.5 லட்சம் என்று இருந்தது 10 இலட்சமாக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்தின் பலன் தற்போது விரிவாக்கம் செய்யப்படும் சிறுதொழில் பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

1990–91 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட சிறுதொழில் வளாகங்களிலும், சில மிகவும் பின்தங்கிய வட்டங்களிலும் தொழில் செய்யும் முதலீடுகள் அளவுக்கு 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி முற்றிலும் விலக்கு அளிக்கப்படும் என்று அறிவித்ததன் காரணமாக

நலிவுற்றுக் கிடந்த பல தொழில்கள் இன்றைக்கு நலிவு நீங்கி சிறப்பான முறையில் இந்தத் தொழில்கள் வளர்வதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டு இருக்கிறது. சட்டப்படியாகவும், சாதாரணமாகவும் சிறு தொழில்கள் பெற்றிட வேண்டிய உரிமங்களையும், அனுமதிகளையும் பெறுவதில் ஏற்படுகிற இடர்பாடுகளைக் களைகிற பல நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப் பட்டுள்ளன. புதிய தொழில்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட அனைத்து அரசுத் துறைகளும் 30 நாட்களுக்குள் தேவையான எல்லா அனுமதிகளையும் வழங்கிட வேண்டுமென்று கால அளவு நிர்ணயிக்கப்பட்டு சிறுதொழில் முனைவோர்களுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தினுடைய நிதியுதவியோடு தஞ்சை மாவட்டம், பளையக்கோட்டைக் கிராமத்தில் 131 இலட்சம் ரூபாய் முதலீட்டில் கூட்டுறவுத் துறையில் ரப்பர் பால் கலந்த கயிறுத் தொழிலை, அதாவது 'ரப்பரைஸ்ட் காயர் இன்டஸ்ட்ரி' அமைக்கப்பட்டு வருகிறது. அது தொடர்பான பணிகள் அதாவது இயந்திர சாதனங்கள் நிறுவப்படும் நிலை முடிவுற்று உள்ளது. 1990 ஏப்ரல் திங்களில் இந்தத் தொழில் தன்னுடைய உற்பத்தியைத் தொடங்க இருக்கிறது. பழுப்புக் கயிறு விரிப்புகள் விற்பனை வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன், தேசியக் கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் நிதியுதவியுடன் கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் ரப்பர் பின்புறம் ஒட்டப் பட்ட கயிறு விரிப்புகள், அதாவது 'ரப்பர் பேக்ட் காயர் மேட்' (Rubber Packed Coir Mat) தயாரிப்பதற்கான தொழில் கூடம் அமைப்பது அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் தொழில் முனைவோருக்குத் தேவையான முதலீட்டுக் கடன்கள் வழங்குவதற்கு இந்த ஆண்டு நிதி அதிகரிக்கப்பட்டு இருக்கிறது.

அடுத்து, பெண் தொழில் முனைவோருக்கான திட்டம். பெண் தொழில் முனைவோர்கள் ஏற்படுத்தியுள்ள தொழில் பிரிவுகளுக்கு ஏற்கெனவே கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் கீழ் தொழில் முனைவோரின் பங்குத் தொகை 15 விழுக்காடு ஆகும். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு மகளிர் உதய நிதி என்ற புதிய திட்டத்தைத் தொடங்கி அந்தத் திட்டத்தின் மூலமாக திட்டச் செலவு ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்படாத பெண் தொழில் முனைவோர்களால் ஏற்படுத்தப் படும் தொழில் பிரிவுகளுக்கு 10 விழுக்காடு தொழில் முனைவோரின் பங்குத் தொகை, 15 விழுக்காடு குறைந்த வட்டி விகிதத்தில் நீண்டகாலக் கடன், மீதம் உள்ள 75 விழுக்காடு நீண்ட காலக் கடனாகவும் வழங்கப்படுகிறது. தொழில் பிரிவு ஊக்கத் தொகை பெறத் தகுதி வாய்ந்ததாக இருந்தால் இந்த உதவித் தொகை நடைமுறை மூலதனமாகப் பயன்படும் வகையில் பெண் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்துகிற வகையில் இந்தத் திட்டம்



நடைமுறைக்கு வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 9.79 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் 'டான்சி' மூலமாக இன்றைக்கு பல்வேறு துறைகளுக்குத் தேவையான பொருட்கள் தயார் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கடந்த பல ஆண்டுகாலமாகவே இந்தத் துறை பெருத்த நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதை இந்தத் துறையினுடைய நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்ற, பார்த்து வருகிற உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். அதன் காரணமாகத்தான், பெருத்த நஷ்டத்தில் இயங்குகிற பல்வேறு அலகுகளை, அதாவது யூனிட்டுகளை மூடிவிடக்கூடிய ஒரு கட்டாயம் கடந்த காலத்தில் ஏற்பட்டது. இங்கே உரையாற்றிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் கூட, எஞ்சி இருக்கக்கூடிய யூனிட்டுகளைக் கூட மூடி விடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் புதிய தொழில்கள் வளர்வதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொண்டிருக் கிறதேயல்லாமல் ஏற்கெனவே இருக்கக்கூடிய அலகுகளை மூடி விடுகிற உத்தேசம் இடையாது. இந்த நிர்வாகத்திலே ஏற்பட்டிருக்கின்ற குறைபாடுகள், சீர்கேடுகள் இவைகளை யெல்லாம் களைந்து நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்ற இந்த டேன்சி நிறுவனத்தை லாபத்திலே கொண்டு வருவதற்கான முயற்சிகள் இன்றைக்கு பெருமளவிலே எடுத்து அதிலே ஓரளவுக்கு வெற்றியும் பெற்றிருக்கிறோம்.

13-30 மணி

இந்தத் துறையின் மூலமாக நிறைவேற்றப்பட்ட பணிகள் நுண் அலைகோபுரங்களை இராஜஸ்தான் மாநிலத்திலே நிறுவி இருக்கிறோம்.

சமீபத்திலே நடந்துமுடிந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு தேவைப்பட்ட 90,474 வாக்குப் பெட்டிகள், பேலட் பாக்ஸ், நம்முடைய டேன்சி நிறுவனத்தின் மூலமாக தயார் செய்யப்பட்டு இந்த நாட்டினுடைய பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது. இந்தப் பணியை மிகக் குறுகிய காலத்திலே டேன்சி நிறுவனம் சிறப்பான முறையிலே செய்து முடித்தது என்பதை பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, ஆரம்பப்பள்ளி களுக்குத் தேவையான 'Operation Black Board' என்ற திட்டம் இருக்கிறது. சமீபத்திலே தமிழக அரசு அறிவித்த வறட்சி நேரத்தில் குடி தண்ணீர் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக சென்ற ஆண்டு கலைஞர் அவர்கள் அறிவித்த, 5,000 போர் வெல்ஸ் 2 மாத காலத்திலே அமைத்துத்தரப்பட வேண்டு மென்ற உத்தரவை நிறைவேற்றுகின்ற வகையில் அந்த போர்

வெல்ஸ்—க்கு தேவையான கைப்பம்புகள் இவைகளை டேன்சி நிறுவனம் மிகக்குறைந்த காலத்திலே அந்த 5,000 கைப்பம்புகளை தயார் செய்து மக்களுடைய குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்திருக்கிறது.

அதுபோலவே, டேன்சி நிறுவனம் இந்த ஆண்டு புதிதாக துருப்பிடிக்காத எவர்சில்வரினால் செய்யப்பட்ட காஸ் அடுப்பை உற்பத்தி செய்துள்ளது. அது பொதுமக்களுடைய உபயோகத் திற்காக இன்றைக்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த அடுப்புக்கு இன்று பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கிறது.

அதுபோலவே, சிறுதொழில் துறை மூலம் இயங்குகின்ற இன்னொரு அமைப்பு டால்கோ. சிறுதொழில் தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம். இந்த நிறுவனம் தமிழகத்திலே இருக்கக்கூடிய தோல்பொருள்களை உற்பத்தி செய்கின்ற சிறு தொழில் அதிபர்களுக்கு உதவிடக்கூடிய அளவிலே இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த நிறுவனத்தினுடைய அலகுகளின் மூலமாக ரா ஹைட்ஸ் என்று சொல்லக்கூடிய பச்சைத் தோல்கள் வாங்கப்பட்டு அவைகள் பதப்படுத்தப்பட்டு, பல்வேறு தோல் பொருள்கள் தயார் செய்யப்பட்டு இன்றைக்கு பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. பல்வேறு தோல் தொழிற்சாலைகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற இடத்தில், அந்த தோல் தொழிற்சாலைகளின் மூலம் ஏற்படுகின்ற கழிவு நீரால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பிலிருந்து அந்த பகுதியில் சுகாதாரத்தை ஏற்படுத்துகின்ற வகையில், பொதுவான மாசுக் கட்டுப்பாடு, அதாவது சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டின் அடிப்படையிலே சுத்திகரிப்பு நிலையங்கள் டால்கோ நிறுவனத்தின் மூலமாக தொடங்குவதற்கு 369 லட்சம் ரூபாய் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டம் வாணியம்பாடியைச் சார்ந்த பகுதிகளிலும், ராணிப்பேட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு, திண்டுக்கல், திருச்சி போன்ற பகுதி களில் அரசின் சார்பாக அமைக்கப்பட இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே உரையாற்றிய நம்முடைய மாண்புமிகு திருமதி லெட்சுமி அவர்கள் பேசும்போது, இந்த அரசு இலவச காலணி திட்டத்தைக் கை விட்டுவிட்டது என்று சொன்னார்கள். இலவச காலணித் திட்டம் கைவிடப்படவில்லை. சென்ற ஆண்டில் பள்ளிக்கூடங்களுக்கு, குழந்தைகளுக்குத் தேவையான இலவச காலணிகள் டால்கோ நிறுவனத்தின் மூலமும், சமூக நலத்துறை மூலமும், கதர் வாரியத்தின் மூலமும் உற்பத்தி செய்யப்பட்டு எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன. நடப்பாண்டிலும் இலவச காலணிகளை வழங்கு வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணி தொடர்ந்து டால்கோ நிறுவனத்தின் மூலமாகவும்,



சமூக நலத் துறையின் மூலமாகவும் நடைபெற இருக்கிறது. எனவே, இந்தப் பணிக்காக அமைக்கப்பட்ட எந்த கூட்டுறவுச் சங்கமும் இன்றைக்கு அந்தப் பணி செய்யாமல் இல்லை. ஒரு மூன்று மாத காலத்திற்கு மட்டும்தான் இந்த பணிகள் நடைபெறும். ஆண்டு முழுவதும் இந்த கூட்டுறவுச் சங்கங் களுக்கு வேலை கொடுப்பது என்பது இயலாத காரியம். ஒரு ஆண்டில் ஒரு 3 மாதம் அல்லது 4 மாதத்திற்குத்தான் டால்கோ நிறுவனம் பெற்றுத் தருகின்ற தோல் பொருள் களிலிருந்து காலணிகளை தயார் செய்து அந்த கல்வி ஆண்டு இறுதிக்குள்ளாக பள்ளிப் பிள்ளைகளுககு அந்தக் காலணிகளை வழங்கவேண்டும். எனவே ஆண்டு முழுவதும் வேலை கொடுப்பது என்பது இயலாத காரியம். காரணம் இந்த கூட்டுறவுச் சங்கங்கள் இலவச காலணித் திட்டத்திற்காக மட்டுமே ஆரம்பிக்கப்பட்டவை. எனவே அந்த திட்டம் எப்போது செயல்படுகிறதோ அப்போதுதான் அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கமுடியும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

13–35 மணி

இந்த துறையில் அதிகப்படியான வேலைவாய்ப்பு வழங்கப்படுவது பட்டு வளர்ச்சித் துறையின் மூலமாக. இந்த ஆண்டு பட்டு வளர்ச்சித் துறைக்கு என்று தனியாக கொள்கை விளக்கக் குறிப்பு உங்களுக்குத் தரப்பட்டதிலேயிருந்தே இந்த அரசு பட்டு வளர்ச்சியிலே எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக் கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளமுடியும். இங்கே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் கூட சொன்னார்கள். பளபளப்பான பட்டுத் துணிகளுக்கு அதிகப் படியான தொகையை ஒதுக்குவதைக் காட்டிலும், கதர் கிராமத் தொழிலுக்கு நீங்கள் முக்கியத்துவம் தரலாம் என்று சொன்னார்கள். பள பளப்பான பட்டுக்கு நாங்கள் முக்கியத் துவம் தரவில்லை. ஆனால் பட்டுப் புழுக்களை வளர்க்க, பட்டுக் கூடுகளை வளர்க்க, பட்டுக் கூடுகளிலிருந்து பட்டு நூல் உற்பத்தி செய்ய, கிராமப் பகுதிகளில் இருக்கிற விவசாயிகள், இந்தத் தொழிலை அடிப்படை தொழிலாக மேற்கொண்டிருக்கிற ஏழையெளிய மக்களுக்காக இந்தத் துறையின் மூலமாக ஏராளமான நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு கிராமத்தில் இருக்கிறவர்களிடம் வேறு எந்தத் தொழிலையும் சுலபமாக அறிமுகப்படுத்தி, அவர்களிடம் புகுத்தி, அத் தொழிலில் வெற்றி பெற்றிட முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு அதைப்பற்றிய டெக்னிக்கல் நோஹவ் சொல்லித் தர வேண்டும். ஆனால் அதைப்போன்று பட்டு வளர்ப்பு என்பது அவ்வளவு கடினமான காரியம் அல்ல. விவசாயத் துறையில் இணைந்த தொழில். எனவே தான் தகுந்த நீர் ஆதாரம் இருக்கிறதோ இல்லையோ, குறைந்த நீர் ஆதாரம்

[திருமதி சுப்புலட்சுமி செகதீசன்] [1990 ஏப்ரல் 4

இருந்தால் கூட அதைப் பயன்படுத்தி, பட்டுப் புழுக்களுக்கு உணவு ஆகக்கூடிய மல்பரீஸ் செடிகளை, முசுக்கொட்டைச் செடிகளை தோட்டங்களில் வளர்ப்பதன் மூலமும், அந்த இலைகளை பறித்து, பட்டுப் புழுக்களுக்கு தருவதன் மூலமாக பட்டுப் புழுக்களை உற்பத்திச் செய்யவும், பட்டுக் கூடு களிலிருந்து பட்டு நூல்களைப் பிரித்து எடுக்கின்ற அந்த தொழிலை மேற்கொள்ளவும் கிராமப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களை அதிலே பெரும் அளவுக்கு ஈடுபடுத்தி இருக்கிறோம். இதனை பல திட்டங்கள் வாயிலாக இத்துறையின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக் கிறோம்.

நேசனல் செரிகல்சர் ப்ரோக்ராம் என்ற திட்டம் 10 மாவட் டங்களில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. பன்னாட்டு தொழி லாளர் கூட்டு அமைப்பு நிதி, அதாவது இன்டர்நேசனல் லேபர் ஆர்கனைசேசன் என்கிற அமைப்பின் மூலமாக இதனால் மட்டும் 6 லட்சம் ரூபாய் செலவில் 200 விவசாயிகள் பயன்பெறக்கூடிய பட்டு பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. மேலும், இன்டர் நேசனல் பண்ட் பார் அக்ரிகல்சரல் டெவலெப்மென்ட் அதாவது விவசாய அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதி நிறுவனத்தின் மூலமாக 5 ஆண்டுகளில் பட்டு வளர்ச்சிக்காக ஏறக்குறைய 41.77 கோடி ரூபாய் ஒதுக்கீடு முதல் கட்டமாக தர்மபுரி, சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டு, மல்பரீஸ் பயிரிடுதல், பட்டுக் கூடுகளை வளர்த்தல் ஆகிய பணி களுக்காக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பயிற்சியும், நிதி யுதவியும், மானியத் தொகையும் வழங்கப்பட்டு அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

அதேபோல ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இன்டக்ரேடட் ட்ரைபல் டெவலப்மெண்ட் ப்ரோக்ராம் என்கிற திட்டத்தின்கீழ் சேலம், தென்னாற்காடு, தர்மபுரி, திருச்சி போன்ற மாவட்டங்களில் மலைவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக 1989–90–ல் 69 லட்சமும், 1990–91–ல் 73 லட்சமும் ஒதுக்கப்பட்டது. அந்த விவசாயிகள் பயன்படுகின்ற வகையிலே, மலைவாழ் மக்கள் பாராட்டுகிற வகையிலே இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. அதுபோல மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்கிற ஹில் ஏரியா டெவலப்மென்ட் ப்ரோக்ராம் திட்டத்தின் மூலமும் ஏறக்குறைய 17 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு மலைவாழ் மக்கள் பட்டுத் தொழிலை மேற்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் அறிவுரைக்கு ஏற்ப வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டம், ட்ரவுட் ப்ரூன் ஏரியா ப்ரோக்ராம் திட்டத்தின் மூலமாக தர்மபுரி, சிதம்பரனார், பசும்பொன், காமராஜர்,



1990 ஏப்ரல் 4] [திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

புதுக்கோட்டை, இராமநாதபுரம், நெல்லை–கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் 1990-91 ஆம் ஆண்டிற்கு 11.85 லட்சம் ஒதுக்கப்பட்டு இந்தத் துறையின் மூலமாக வேலை வாய்ப்புகள் வழங்கப்பட இருக்கின்றன. வெஸ்டெர்ன் கார்ட் டெவலப்மென்ட் ப்ரோக்ராம், அதாவது மேற்கு மலை தொடர்ச்சி அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாகவும் விவசாயி களுக்கு இந்துறையில் பயிற்சியும், கடன் உதவியும் தந்து பட்டு வளர்ப்பு இன்றைக்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. போர்ட் பவுன்டேசன் நிறுவனத்தின் மூலம் இந்தத் துறைக்கு நிதியுதவி வழங்கப்பட்டு அது முழுக்க முழுக்க பணிகளை இந்தத் துறை யிலே ஈடுபடுத்துவதற்கான முகத்தான், அவர்கள் தாங்களே முன் வந்து, நேரடியாக முன்வந்து, இந்தத் தொழிலை மேற் கொள்வதற்கு நிதியுதவியும் இதன்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் ஒரு சில குறைகளைச் சுட்டிக்காட்டினார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திருமதி சர்குணம் அவர்கள் பேசும்போது இந்த அரசு அறிவித்திருக்கிற திட்டங்களில் ஒன்றான விதவைகளின் மகளுக்கான திருமணத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தற்போது இத்திட்டத்தின்கீழ் அரசு ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்குகிறது என்றும், விதவையின் மகளின் திருமணத்தின் போது அதனை மூவாயிரம் ரூபாயாக வழங்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். 8 ஆம் வகுப்பு வரை படித்திருந்தாலே அவர்கள் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் வருவார்கள். விதவையின் மகளாக இருந்தாலே போதும். இந்தத் திட்டத்தின்கீழ் அவர்கள் 8 ஆம் வகுப்புவரை படித்திருந்தால் 5 ஆயிரம் ரூபாய் பெற வாய்ப்பு உண்டு. இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8 ஆம் வகுப்புக்குக் குறைவாக படித்திருக்கிற விதவையின் மகளுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிற நிதியுதவியை திருமணத்தின்போது இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தி அறிவிக்கலாம் என்று அறிவிப்பு தந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, எட்டாம் வகுப்புக்கு கீழே படித்திருக்கிற விதவையின் மகளின் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் தற்போது ஆயிரம் ரூபாய் வழங்கப் படுவது, இன்றிலிருந்து அது 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

13-40 மணி

அதைப்போல அரசு ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தில் தங்கிப் பயில்கிற ஆதரவற்ற குழந்தைகள் அந்த இல்லங் களிலேயே பராமரிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு பிளஸ் 2 வரை கல்வி அங்கே வழங்கப்படுகிறது. அதற்குப் பிறகு அவர் களுக்கு ஏதாவது ஒரு தொழிலில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

[திருமதி சுப்புலட்சுமி செகதீசன்] [1990 ஏப்ரல் 4

இந்தப் பயிற்சியை முடித்து, வெளியே செல்லும் அந்த ஆதரவற்றக் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பு பெறுவதிலே சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவர்களுக்கு எந்த கேட்டகரியில், ஓப்பன் காம்படிஷனிலா, பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீட்டிலா மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீட்டிலா — எந்த இட ஒதுக்கீட்டில் வேலைவாய்ப்பு தருவது என்பது இதுவரை முடிவெடுக்கப்படாத ஒன்றாக இருந்தது. அவர்கள் இதுவரையில் ஓப்பன் காம்படிஷனில்தான், பொது ஒதுக்கீட்டில்தான் போட்டி போட்டு வேலை வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் நிலையைக் கருத்திலேகொண்டு, இனி ஆதரவற்ற குழந்தைகள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அந்த இட ஒதுக்கீட்டில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் படும் என்று இந்தத் துறை மூலமாக அறிவிக்கிறேன்.

இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் விதவைகள் உதவி பெறுவதில் உள்ள வயது வரம்பைத் தளர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். இந்த உதவித் தொகை பெறுவதற்கு இப்போது வயது வரம்பு 40 ஆக வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை நான் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். இருந்தாலும்கூட விதவைகள் மறுமணம் செய்து கொண்டதற்குப் பின்னர், அந்த உதவித் தொகையை நிறுத்திக்கொள்ளலாம் என்று ஒரு சான்றிதழை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று அவர்கள் சொன்ன மேலான யோசனையை ஏற்று, விதவைகள் உதவித் தொகை பெறுவதற்கு உள்ள வயது வரம்பை இந்த அரசு அறவே நீக்குகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சத்துணவு ஊழியர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும், அரசு ஊழியர்கள் பெறுகின்ற எல்லாச் சலுகைகளையும் வழங்க வேண்டுமென்று இங்கே உரையாற்றிய எல்லா உறுப்பினர்களும் ஒரு கோரிக்கையை முன் வைத்தார்கள். இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நேரத்தில், இந்தத் திட்டத்திற்கு அவர்கள் பணியிலே அமர்த்தப்பட்ட நேரத்திலே, அவர்கள் நேரடி நியமனம் செய்யப்பட்டார்கள். வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல், நேரடியாக அந்தந்த கிராமங்களில் இருக்கக்கூடியவர்களாகப் பார்த்து, இந்தத் திட்டத்திலே அவர்கள் இன்றைக்குக் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலே அவர்கள் சேர்க்கப்பட்ட நேரத்திலேயே, இது தொகுப்பு ஊதியம் பெறுகிற பணி என்று சொல்லப்பட்டு, அந்தப் பணி உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகவோ அல்லது தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகவே தேர்ந்தெடுக்காமல், நேரடி நியமனம் செய்யப்பட்டவர்களை, அரசு ஊழியர்களாக அங்கீகரிக்க விதிகள் இடம் தராது.



1990 ஏப்ரல் 4] [திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

இன்றைக்கு 2 இலட்சம் பேர் இந்தத் திட்டத்திலே வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். 2 லட்சம் பேருக்கும் அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் கொடுக்கின்ற சூழ்நிலை உருவாகுமானால், அதற்கு ஆகின்ற செலவு, அரசு ஊழியர்களுக்கு நாம் தருகின்ற, வழங்குகின்ற தொகையில் நான்கில் ஒரு பங்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் அரசுக்கு அதிகமான நிதி நெருக்கடி என்பதோடு மட்டுமல்லாமல், நேரடி நியமனம் என்கிற காரணத்தால் அவர்கள் இந்தச் சலுகைகளைப் பெற விதிகள் இடம் தரவில்லை என்பதைக் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை வேண்டுமென்று கேட்டார்கள். அப்படி விடுமுறை விடப்படும் நேரத்திலே அந்தக் குழந்தைகளுக்கு மாற்று ஏற்பாடு என்ன செய்வது என்பதைப் பற்றி ஆலோசனை செய்து, அது பற்றி அரசு ஒரு முடிவு அறிவிக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சத்துணவுக் கூடங்களில் சரியான கண்காணிப்பு இல்லாததால் தான் பல்வேறு குறைபாடுகள் நடைபெறுகின்றன, எனவே மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டுமென்று உரையாற்றிய எல்லோரும் சொன்னார்கள். அவர்களுடைய ஆலோசனைகளை ஏற்று, பஞ்சாயத்து அளவில் ஊராட்சி மன்றத் தலைவர்களை உள்ளடக்கி 5 பேர் கொண்ட ஓர் கண்காணிப்புக் குழு அமைக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், நகர்மன்றத் தலைவர்கள் ஆகியோர் சத்துணவுக் கூடங்களைப் பார்வையிட அதிகாரமும் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற பல்வேறு மானியக் கோரிக்கையின்மீது நீங்கள் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகளுக்கான விளக்கங்களை உங்கள் மத்தியிலே தந்திருக்கிறோம். மானியக் கோரிக்கைகளின் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் நாங்கள் சுட்டிக் காட்டியிருக்கிற திட்டங்களை முழுவதுமாக நிறைவேற்றுவதன் மூலம் அடித்தளத்தில் இருக்கக் கூடிய மக்கள், ஏழை எளிய மக்கள், பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், குறிப்பாக "வீக்கர் செக்ஷன்ஸ்" என்று இதுவரை சமுதாயத்திலே சொல்லப்பட்டு வந்த— இதுவரைதான், இனிமேல் இல்லை— மகளிர் முன்னேற்றத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் இந்த அரசு திட்டத்திலே குறிப்பிட்டுள்ளவாறு நிறைவேற்றும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல பாப்பா உமாநாத் அவர்கள் பேசுகின்றபோது சுட்டிக்காட்டிய இன்னொரு குறைபாடு, உசிலம்பட்டி பகுதியில் பிறந்த பெண் குழந்தைகள் அழிக்கப்படுகிற கொடுமைகள் பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். அந்தக் கொடுமைகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு இந்தப் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்ததற்குப் பிறகுதான் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே முதல்வர் அவர்கள் சிசுக் கொலை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், அப்படி வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளப்படுகிற பெண் குழந்தைகளை அரசே ஏற்று அவர்களை வளர்த்து பராமரித்துத் தேவையான கல்வி வசதிகளை உருவாக்கித் தரும் என்றும் அறிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்கு அந்தப் பகுதிகளில் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்களை அமைப்பதற்குத் தமிழக அரசின் மூலமாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்; இந்திய குழந்தை நலச் சங்கம் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது; அந்த அமைப்பும் ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்களை ஏற்படுத்த முன்வந்து இருக்கிறது.

மதுரையில் இருக்கக்கூடிய சிசு பவனம் என்று சொல்லக்கூடிய ஒரு தனியார் தொண்டு நிறுவனமும் அந்தப் பகுதிகளுக்குச் சென்று, தேவை இல்லை என்று கருதுகிற பெண் குழந்தைகளை, பெற்றோர்களின் அழிவிலிருந்து காப்பாற்றுகிற வகையிலே பெற்று வந்து அந்தக் குழந்தைகளை வளர்ப்பதற்கு அவர்களும் முன்வந்து இருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்கின்ற வகையிலே இப்போது இந்த ஏற்பாட்டைச் செய்வோம்; எதிர்காலத்தில் பெண்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதன் மூலமாகவும், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய குடும்பங்களின் வறுமையைப் போக்குகிற வகையில் நல்ல திட்டங்களைக் கொண்டுவந்து, நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்ற வகையில் இப்படிப்பட்ட பாவச் செயல்களுக்கு, அநீதிகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில் நாம் எல்லோரும் இணைந்து செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டு, இங்கே பல்வேறு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கையின் மீது தந்து இருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபோது ஐசிடிஎஸ், டிஐஎன்பி, சத்துணவுத் திட்டம் ஆகிய இந்த மூன்றையும் ஒன்றாக இணைந்து சிங்கிள் லைன் ஆஃப் அட்மினிஸ்டிரேஷன் என்று கொண்டுவருவதற்காகவும், பிறகு



இந்த மானியக் கோரிக்கையில் அறிவித்து இருக்கிற நல்ல பல திட்டங்களான கர்ப்பஸ்திரிகளுக்கு, பாலூட்டும் தாய்மார்களுக்கான திட்டம், திருமணத் திட்டம் இவைகளை எல்லாம் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு யூனியனிலும் 5 பெண் கிராம சேவிகளுக்கு உத்தியோகம் கொடுத்து, அவர்கள் மூலமாக அந்தத் திட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

அடுத்து காதிபற்றி நான் பேசாததால் அதுபற்றி ஒன்றை கேட்டுக்கொள்கிறேன். காதி மூலமாக தாட்கோ திட்டத்திலே ஒவ்வொரு ஊரிலும் ஒரு யூனியனைத் தேர்ந்தெடுத்து அதில் 10 இடங்களில் 3 இலட்சம் அல்லது 4 இலட்சம் செலவு செய்து பெரிய பெரிய கட்டிடங்களை நாம் கட்டிப் போட்டு இருக்கின்றோம். அந்தக் கட்டிடங்களைக் கட்டிப் போட்ட பின்னர் அங்கு வேலை செய்யும்போது அவர்களுக்கு 125 ரூபாய் கொடுத்து நல்ல முறையிலே டிரெயினிங் கொடுக்கிறார்கள். பிறகு அதை ஊக்குவிக்க முடியாமல் அவர்கள் கஷ்டப்படும் நிலைமை ஏற்பட்டு, சரியானபடி சம்பளம் கொடுக்க முடியாமல் இருக்கிறது. அங்கு ராட்டைகள் கோளாறு ஆகிவிட்டால் அவைகளை ரிப்பேர் செய்து கொடுக்கக்கூட முடியாமல் அந்த இலாக்காவினர் இருந்துகொண்டு இருக்கிறார்கள்—இவைகளை எல்லாம் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டு இருக்கிற 6 மாதம் முதல் 3 வயது வரை உட்பட்ட குழந்தைகளைப் பராமரிக்கிற அந்த அமைப்பை, 3 வயதுக்கு மேல் 6 வயது வரை உள்ள குழந்தைகளைப் பராமரிக்கிற சத்துணவுக் கூடங்களையும் இணைத்து 6 மாதம் முதல் 6 வருடம் வரை உள்ள குழந்தைகள் ஒரே இடத்தில் ஊட்டச்சத்து பெறக்கூடிய, நோய்த் தடுப்பு மருந்துகளைப் பெறக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கி இருக்கிறோம். ஏற்கெனவே இதைக் கண்காணிப்பதற்குத் தேவையான பெண் பணியாளர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்கிறார்கள் மேற்கொண்டு அதிகப்படியான பணியாளர்களை அங்கே வேலைக்கு அமர்த்துவதன் மூலம் திட்டத்திற்கான செலவு அதிகமாகப்போய்விடக் கூடாதே என்று அஞ்சுகிறேன். போதுமான அளவுக்கு அந்தத் திட்டங்களை இப்போது கண்காணிப்பதற்குப் பணியாளர்கள் ஒன்றியங்களிலே இருக்கிறார்கள்.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விடுமுறை நாட்களில்தான் சத்துணவுக் கூடங்களில் ஊழலுக்கு வழி ஏற்படும் நிலை உள்ளது. விடுமுறை நாட்களில் சத்துணவு போடுவதை நிறுத்தினால் ஊழலையும் தடுக்கலாம், அரசுக்கும் நிதி பெருமளவு மிச்சம் ஆகும். இதை அமல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு நிதியை மிச்சப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இல்லை. ஆனால் விடுமுறை நாட்களில் இந்த உணவுப் பொருள்கள் சேதப்படுத்தப்படுவதை அல்லது உணவுப்பொருள்களில் குறைபாடு ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய நோக்கம். எனவேதான் அதற்கு சட்டப்பேரவை உறுப்பினர்களை உள்ளடக்கியஒரு கண்காணிப்புக் குழு இனி அமைய இருக்கிறது. அந்தக் குழுவினர் விடுமுறை நாட்களில் தவறாது சத்துணவுக் கூடங்களுக்குச் சென்று பார்வையிட்டு, வழங்கப்படுகிற உணவுப் பொருட்கள் எந்தவிதமான சேதாரம் இல்லாமல் குழந்தைகளுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

13.50 மணி

திருமதி பாப்பா உமாநாத்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சத்துணவு ஊழியர்களைப் பகுதி நேர நிரந்தரமாக்குவதாகச் சென்ற ஆண்டு கூறப்பட்டது அதைப்பற்றி எந்தவித முடிவும் அறிவிக்கப்படவில்லை என்பதையும், சிட்கோ நிறுவனத்தினர் தாங்கள் கட்டியிருக்கக்கூடிய தொழிற்கூடங்களைத் தொழிலதிபர்களுக்கு வழங்கியதைப்போல, தொழிலாளர்களுக்குக் கட்டப்பட்ட வீடுகளையும் தொழிலாளிகளுக்கே வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தேன். மந்திரி அவர்கள் இதற்கு விளக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சிட்கோ நிறுவனத்தினுடைய பராமரிப்பில் இருக்கக்கூடிய தொழிலாளர் வீடுகள் தொழிலாளர்களுக்கே ஒதுக்கப்பட வேண்டுமென்று அரசு கொள்கையளவிலே முடிவெடுத்து அறிவித்து விட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு வகையிலே அந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. எந்த அடிப்படையில் தொழிலாளர்களுக்கு அந்த வீடுகளை ஒதுக்குவது என்பது இன்றைக்கு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்த வீடுகள் கட்டி, பல ஆண்டுகளாகியிருக்கின்றன. அந்த வீட்டுக்கு என்ன தொகை மதிப்பீடு செய்வது? ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு மாதிரியான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் இன்றைக்கு அரசின் ஆலோசனையில் இருந்துவருகின்றன. பரிசீலனையிலே இருந்து வருகின்றன. கூடிய விரைவில் இவை மீது முடிவுகள்—நல்ல முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு அந்த வீடுகள் தொழிலாளர்களுக்கு நிச்சயமாக ஒதுக்கித் தரப்படும். கொள்கையளவிலே இந்தத் திட்டம் ஏற்கனவே தமிழக முதல்வரவர்களாலே அறிவிக்கப்பட்டு விட்டது.



திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நீலகிரி மாவட்டத்தைப் பற்றிக் கொடுத்த அறிவிப்புக்கு நன்றி கூறிக் கொள்கிறேன், சென்னையில் பனகல் பார்க்கிலுள்ள நல்லி சில்க்ஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் பட்டு விற்பனையில் மிகவும் சிறந்த முறையிலே செயல்பட்டு வருவதைப்போல தமிழ்நாட்டில் உள்ள பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் புதிய வழிமுறைகளை வகுத்து அதிக அளவு விற்பனைக்கு இந்த அரசு வகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கதர்த் துறையிலே இருக்கக்கூடிய பட்டு உற்பத்தி நிலையங்களைக் காட்டிலும், கைத்தறி நெசவுத் துறையிலேதான் பட்டு உற்பத்தி நிலையங்கள் ஏராளமாக இருக்கின்றன. இருந்தாலும்கூட, மாறி வருகின்ற நாகரீகத்திற்கேற்ப மக்கள் அதிகம் விரும்புகின்ற புதிய வடிவமைப்புகளையும் கதர்பட்டில் உருவாக்க வேண்டுமென்று கருதி, இந்த அரசு இந்த ஆண்டு புதிய வடிவமைப்பாளர் பதவியை ஏற்படுத்தி, புதிய வடிவமைப்பாளர்களைப் பணியிலே அமர்த்தியிருக்கிறோம். எனவே, புதிய புதிய டிசைன்களில்—வடிவமைப்புகளில் அது கதர்த் துணியாக இருந்தாலும், பட்டுத் துணியாக இருந்தாலும், பாலியஸ்டர் கலந்த கதர்த் துணிகளாக இருந்தாலும் மக்களைக் கவருகின்ற வகையிலே அந்தத் துணிகள் நிச்சயமாகக் கதர்த் துறையின் மூலமாக விற்பனைக்கு வரும். எனவே. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தப் புதிய கதர் ரகங்களைப் பெற்று இந்தத் துறையை மென்மேலும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்களைப் பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகின்றபொழுது இரண்டு இலட்சம் பேர் இருப்பதாகவும், அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதானால் ஏராளமான பணம் செலவாகும் என்றும் சொன்னார். நான், பொது வரவு-செலவுத் திட்டத்திலே பேசுகின்றபொழுது இந்த இரண்டு இலட்சம் பேர்களிலே ஆளுக்கு ஐந்து, ஐந்து ரூபாய் மாதந்தோறும் பிடித்துக்கொண்டு, குடும்ப நலத் திட்டம் என்கின்ற வகையிலே அவர்களிலே யாராவது இறக்க நேர்ந்தால் அவர்களுக்கு நாற்பதாயிரம் ரூபாய் மற்ற அரசு ஊழியர்களைப்போலவே கொடுப்பதற்காவது வழிவகுக்க முடியுமா என்று ஒரு கேள்வியினைக் கேட்டிருந்தேன். அதோடு, ஊனமுற்ற குழந்தைகள், இளம்பிள்ளை வாதத்தாலே பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் செயற்கைக்கால் போன்றவைகளைக் கொடுக்கின்ற நேரத்தில் அது வளர வளர அதற்கு மாற்றிக்

[திரு குமரி அனந்தன்] [1990 ஏப்ரல் 4

கொடுக்கின்ற திட்டமும் சேர்ந்தே சமூக நலத் திட்டத்தில் இருக்கிறதா அல்லது ஒரு தடவை கொடுத்ததற்குப் பிறகு அந்தக் குழந்தைகளுக்கு மறு தடவை கொடுப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறதா? இரண்டு கேள்விகளைச் சேர்த்துக் கேட்டாலும் மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டோடு நிறுத்தினீர்களே?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரவர்கள் சத்துணவுப் பணியாளர்கள் வேலையில் இருக்கின்ற நேரத்தில் அகால மரணம் அடைந்தால் அரசு ஊழியர்களைப்போல அவர்களுக்கும் நிவாரண நிதி வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த அவையில் இருக்கிற நேரத்திலேதான் அறிவித்தார்கள். எனவே, அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

அடுத்து, செயற்கைக் கால்கள் பொருத்தப்படுவது. அரசு குழந்தைகள் காப்பகங்களில்—ஊனமுற்ற குழந்தைகளுக்கு என்று அரசு காப்பகங்களை நடத்திக் கொண்டிருக்கின்றது. அந்தக் காப்பகங்களிலே தங்கிப் பயிலுகின்ற குழந்தைகளுக்கு, அந்தக் குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஏற்றாற்போல செயற்கைக் கால்கள் மாற்றிப் பொருத்தப்படுகின்றன.

ஆனால், சமூக நலத் துறையின் மூலமாகவும், பல்வேறு தொண்டு நிறுவனங்களின் மூலமாகவும் இதைப்போன்ற செயற்கைக் கால்கள்—செயற்கை கால்கள் அல்ல—அவர்கள் நடப்பதற்குத் தேவையான செயற்கை உறுப்புக்கள் கொடுக்கப்படுகின்ற நேரத்தில் மருத்துவர்கள் இந்தக் குழந்தைகளைப் பரிசீலித்து அவர்களுக்கு எந்த வடிவத்தில் அல்லது எந்த சைஸில் அந்தக் கருவிகள் வழங்கப்பட வேண்டுமென்று சான்றிதழ்கள் தருகிறார்களோ அந்த அளவில் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேற்கொண்டு அவர்கள் அரசை அணுகி கேட்பார்களானால் அந்த உதவியைச் செய்வதற்கு சமூகநலத் துறையின் மூலம் ஏற்பாடு செய்யலாம்.

(13-55 மணி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 27—கதர்த் தொழில்

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.



1990 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 27—கதர்த்தொழில் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 7,08,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண் 30—சமூக நலன்.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 30 சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1,39,42,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இ) கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 24,74,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஈ) கோரிக்கை எண். 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 70,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 5-4-1990 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை 18-57 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது

2. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

58. தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619.ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

64. கோரிக்கை எண் 27—தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

65. கோரிக்கை எண் 30—சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

66. கோரிக்கை எண் 48—தொழில் கொள்கை (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்) 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

67. கோரிக்கை எண் 48—பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறன் பொருட்கள் வளர்ச்சி நிறுவனம் பற்றிய கொள்கையும், திட்டங்களும், 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

68. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1990-91 (தமிழ், ஆங்கிலம்).



69. ஊரக மற்றும் சிறு தொழில்கள் குறித்த செயலாக்க ஆய்வு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

70. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

(......ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்டைக் காண்க.)

# தொழில் கொள்கை

## (ஊரக மற்றும் சிறு தொழில்கள்.)

## 1990–91

கிராமப்பகுதிகளில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுமே சிறு தொழில் மற்றும் ஊரகத்தொழில் துறையில் தமிழ்நாடு அரசின் இரு நோக்கங் களாகும். மிகச் சிறிய தொழில்கள், வீட்டுத் தொழில்கள் உட்பட சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் உருவாக்கி, மேம்படுத்துவதற்கு வேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் தொழில் தொடங்குவதற்கு ஊக்கமளிக்கும் வகையில், தொழில் வணிக இயக்ககம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் போன்ற பல்வேறு அமைப்புகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த அமைப்புகள் மூலமாக அரசு, தொழில் வளர்ச்சிக்குத் தேவையான நிதியுதவியையும், தொழில் நுட்ப உதவியையும் அளிப்பதோடு இன்றியமையாத அடிப்படை வசதிகளை உருவாக்கி மேம்படுத்தி, தொடக்க கால இடையூறுகளைக் களையவும் உதவுகிறது. இந்த அமைப்புகளின் பணிகள் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன:—

### தொழில் வணிக இயக்ககம்:

தொழில்-வணிக இயக்ககம், தமிழ்நாடு அரசின் முதன்மை யான கள அமைப்பாகும். பொதுவாக தொழில் வளர்ச்சிக்கு, குறிப்பாக சிறு தொழில்களின் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து, செயற்படுத்தும் பணி இந்த அமைப்பிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இந்த இயக்ககம் ஏற்கனவேயுள்ள தொழில் களுக்கும், புதிய தொழில்களுக்கும் உதவியளித்து, ஆதரிக்கிறது. இயக்ககம் தானே தொழில்களைத் தொடங்கி, நடத்துவதில்லை. ஆனால், தொழில்கள் தொடங்குவதற்கான நடைமுறைகளை எளிதாக்குதல், அனுமதிகளையும் ஒப்புதல்களையும் விரைந்து பெறுவதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல், மாவட்ட தொழில்மையத்தில் பணியாளரமைப்பைப் பயன்படுத்தி துறைகளுக்குத் தேவையான உதவி கிடைப்பதை நெறிப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் தனியார் துறையில் தொழில் வளர்வதற்கான சாதகமான நிலைமையை உருவாக்குகிறது. பதிவுச் சான்றிதழ் வழங்குவது மட்டுமின்றி, பல்வேறு உதவித்தொகைத் திட்டங் களைச் செயல் படுத்துதல், மூலப்பொருட்கள் பற்றிய மதிப்பீடு, இறக்குமதி உரிமங்கள் போன்ற முறைப்படுத்தும் பணிகளைச் செயற்படுத்தும் பொறுப்பும், மாவட்ட தொழில் மையங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக் கின்ற அமைப்பு என்ற வகையில், அண்மைக் காலங்களில் இம்மைய



இம்மையங்களின் பணி பெரும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஒரு முனைத் தீர்வுக்குழு அமைப்பின்மூலமாக அனைத்துப் பூர்வாங்கப் பணிகளையும் மேற்கொள்ளும் ஏற்பாட்டை மேலும் பயனுள்ள வகையில் செயல்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மாவட்ட தொழில் மையங்கள் செயல்படுத்திவரும் நிதியுதவித் திட்டங்களின் விவரங்கள் வருமாறு:—

(1) மாநில மூலதன முதலீட்டு உதவித்தொகை.

(2) தெரிந்தெடுக்கப்பட்ட தொழில் வகைகளுக்கான சிறப்பு உதவித்தொகை திட்டம்.

(3) வட்டியில்லா விற்பனை வரிக்கடன்/கடன் வசூலை தள்ளிப்போடுதல்.

(4) மின் உற்பத்தி இயந்திரம் வாங்குவதற்கு உதவித் தொகை.

(5) குறைவழுத்த மின்சக்தி உதவித்தொகை.

(6) இந்திய தர நிர்ணய நிறுவனத்திடமிருந்து தரச் சான்றிதழ் பெறுவதற்கான ரொக்க ஊக்கத் தொகை.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை விரிவுப்படுத்தும் நோக்குடன் அரசு திருத்தியமைத்த பல்வேறு முனைப்புத் திட்டங் களையும் பிறகொள்கைகளையும் அறிவித்துள்ளது. பல்வேறு அரசுத் துறைகளிடமிருந்தும், ஏனைய முகவரமைப்புகளிட மிருந்தும் அனுமதிகளை விரைந்து பெற சிறு தொழில் நிறுவனத் களுக்கு உதவும் ஓர் ஒருங்கிணைப்பு அமைப்பாக மாவட்ட தொழில் மையங்களை ஆக்குவது இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகும். தொழில் முனைவோர் அனுமதிகளையும்/உரிமங் களையும் பெறுவதற்காக அளிக்கின்ற விண்ணப்பங்களை மாவட்ட தொழில் மையங்கள் பற்றுக்கொண்டு ஏனைய துறைகள் மூலமாக இவ்விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்து வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் சாதாரணமாக 4 வாரங்களுக்குள், உரிமங்கள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யும் ஒருமுனைத் தீர்வுக்குழு அமைப்பின் மூலமாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கும் ஏற்பாட்டினால் சம்பந்தப்பட்ட துறைகளின் மாவட்ட அளவிலான அதிகாரி களுக்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கருதப்பட்டது. இதனால், தேவையான விவரங்கள் இல்லாத தால் அனுமதிகள் வழங்கப்படாமல் நிறுத்திவைக்கப்படமாட்டா. பின்னர் இயந்திரங்கள், தளவாடங்கள் வகையில் ரூ. 10 இலட்சம் வரையில் முதலீடு செய்யப்படுகின்ற சிறு தொழில்கள் (சுற்றுச் சூழலுக்கு மாசு விளைவிக்காத தொழில்கள்) [illegible] தொடங்கப்படலாம் என்பதற்கு வகை செய்யும் விதத்தில் பச்சைக்கொடி திட்டம் (கிரீன் சேனல் திட்டம்)

கொண்டு வரப்பட்டது. தொழில் முனைவோர் சிறு தொழில்களுக்கான தற்காலிகச் பதிவுச் சான்றிதழ் கிடைத்த உடனே, மாவட்டத் தொழில் மையங்களுக்கு தகவல் தெரிவித்து, வரையறுக்கப்பட்ட படிவங்களில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும். எனினும் அவர்கள் துறைகளிடமிருந்து முன் அனுமதி கிடைப்பதற்காக காத்திராமல் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்து தொழில் பிரிவுகளை அமைக்கலாம். எனினும், தொழில் பிரிவு தொடங்கப்பட்ட 30 நாட்களுக்குள், தொழில் முனைவோர் தொழில் பிரிவுகளை அமைத்தது குறித்து, மாவட்ட தொழில் மையங்களுக்கும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் தெரிவிக்க வேண்டும். பின்னர் துறை அலுவலர்கள் தொழில் பிரிவுகளைச் சென்று பார்வையிடுவர். துறை அதிகாரிகள் குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினால், அவ்வாறு தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தொழில் முனைவோர் அக்குறைப்பாடுகளை சரி செய்யவேண்டும். சுட்டிக் காட்டிய குறைபாடுகளை வரையறுத்த கால அளவிற்குள் சரிசெய்யாதிருந்தால் சம்பந்தப்பட்ட துறை/உள்ளாட்சி மன்றம், தொழில் முனைவோரைத் தண்டிக்கக் கூடாது. எனினும், இக்குறைப்பாடுகள், வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் சரி செய்யப்படவில்லையெனில், சம்பந்தப்பட்ட துறை/உள்ளாட்சி மன்றம் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

மாவட்டத் தொழில் மையங்களின் பணிகள் மற்றும் ஒரு முனைத் தீர்வுக்குழு அமைப்பு மற்றும் பச்சைக்கொடி திட்டம் மூலமாக அனைத்துப் பூர்வாங்கப் பணிகளை மேற்கொள்ளும் ஏற்பாடு, ஆகியன குறித்து தலைமைச் செயலர் கூட்டும் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன. எக்கால அளவிற்குள் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்பது குறித்து சிறு தொழில் பிரிவுகளின் தொழில் முனைவோருக்கு, தமிழ்நாடு மின்வாரியம் விண்ணப்பம் கிடைத்த தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் தகவல் அனுப்புகிறது. தொழில் வளாகங்களில் ஏற்படுத்தப்படும் சிறு தொழில்களுக்கு விரைவில் மின் இணைப்பு கிடைக்கும் வகையில் அவற்றுக்குத் தமிழ்நாடு மின் வாரியம் தனி முன்னுரிமையை நிர்ணயித்துள்ளது. சுற்றுப்புற சூழலுக்கு அதிக அளவில் ஊறு விளைவிக்கும் சிறு தொழில் நிறுவனங்கள் நீங்கலாக ஏனைய நிறுவனங்களிடமிருந்து செயல் உத்தரவாத வைப்பீடுகள் வசூலிக்கப்படமாட்டாது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மாசு கட்டுப்பாடு வாரியம் இம்முடிவைச் செயற்படுத்தி வருகிறது.

சிறுதொழில்களைப் பதிவு செய்தலும் சிறுதொழில்கள் வளர்ச்சியும்;—

(1) இம்மாநிலத்தில் சுமார் 1994 கோடி ரூபாய் மூலதன முதலீட்டில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட (31—12—1989 ஆம் நாளன்றுள்ளவாறான எண்ணிக்கை 1,10,783) சிறு



தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் குறைந்தது 11.63 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

(2) தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய மாவட்டங்களான தருமபுரி (388 சதவீதம்), புதுக்கோட்டை (347 சதவீதம்), வட ஆற்காடு (ஒருங்கிணைந்த) (357 சதவீதம்), தஞ்சாவூர் (340 சதவீதம்) ஆகிய மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ள நிரந்தர பதிவுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. தொழில் வளர்ச்சியின் பயன்கள் மாநிலத்திலுள்ள பின்தங்கிய மாவட்டங்களையும் சென்று சேர்ந்துள்ளது என்பதை இது காட்டுகிறது.

(3) 31-3-1980 முதல் 31-3-1989 வரையிலான கால அளவில் பதிவு செய்யப்பட்ட உணவு உற்பத்தி பொருள்கள் சார்ந்த சிறு தொழில் பிரிவுகள் 509.31 சதவீதமும், இயந்திர பாகங்கள் சார்ந்த தொழில் பிரிவுகள் 467.35 சதவீதமும், மின்னணுப் பொருட்கள் உட்பட மின் இயந்திரக் கருவிகள் சார்ந்த சிறு தொழில் பிரிவுகள் 355.53 சதவீதமும் கணிசமாக உயர்ந்திருப்பது. புதிய பகுதிகளில் சிறு தொழில்கள் தோன்றியுள்ளதற்கு சான்று பகர்கிறது.

(4) சிறுதொழில் துறையில் தற்போது 5,000க்கும் மேற்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மக்கள் பெருமளவில் பயன்படுத்தும் பொருட்களான பிளாஸ்டிக்-ரப்பர் பொருட்கள், உலோகத் தகட்டாலான பொருட்கள், வீட்டு சமையல் பாத்திரங்கள் போன்றவை சிறு தொழில் துறையில் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. சிறு தொழில் துறையினர் தயாரிக்கும் நவீன பொருட்களில் தொலைக்காட்சி, மின்னணு கட்டுப்பாட்டுக் கருவி, மின் மருத்துவச் சாதனங்கள். மின்னணு அளவைக் கருவிகள் போன்றவையும் அடங்கும். இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு மாற்றுப் பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலம் இத்துறை அந்நியச் செலாவணி சேமிப்பதற்குப் பெருமளவில் உதவியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சிறுதொழில்கள் துறை நம் நாட்டின் நேரடி ஏற்றுமதியில் 29 சதவீதம் பங்கேற்று கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது.

தொழில் வணிகத்துறையின் வேதியல் பிரிவு, இம்மாநிலத்தில் இரசாயன தொழில்களின வளர்ச்சியைக் கவனித்து வருகின்றது. இந்த இயக்ககத்திலுள்ள நவீனமயமாக்கல் பிரிவு, சிறுதொழில் பிரிவுகள் தங்கள் தொழில் நுட்பத் திறனை மேம்படுத்திக் கொள்வதற்குத் துணை புரிகின்றது. இந்த இயக்ககத்தின்

மற்றொரு பிரிவு, தொழில் கூட்டுறவு அமைப்புகளைக் கவனித்து வருகின்றது. இதில் தீப்பெட்டி, தேயிலை, சவ்வரிசி, கயிறு, பாலிதீன் பைகள், மின்னணு பொருள், தோல் பொருட்கள் போன்ற தொழில் பிரிவுகளும் அடங்கும்.

அண்மைக் காலத்தில், மின்னணு தொழில் வியக்கத்தகு வகையில் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. இன்றைய நவீன வாழ்க்கையின் அனைத்து கூறுகளிலும் அதனுடைய செல்வாக்கை நம்மால் காணமுடிகிறது. மின்னணு துறையின் இன்றியமை யாமையை நன்குணர்ந்து, அத்தொழில் வளர்ச்சி பெறுவதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்தித் தருவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை தமிழநாடு அரசு எடுத்துள்ளது. மின்னணு தொழில்களின் வளர்ச்சியனை மேலும் ஊக்கப்படுத்தும் பொருட்டு தொழில்-வணிகத்துறை பின்வரும் வசதிகளையும் பணிகளையும் செய்து கொடுக்கிறது:—

(1) தெரிந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி மையங்களில் மின்னணு மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களுக்கென்று தனியாக தொழிற்பேட்டைகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

(2) அனைத்து வசதிகளும் கொண்ட சோதனை மையங் களை ஏற்படுத்தி குறைந்த செலவில் சோதனை, தரக்கட்டுப்பாடு வசதிகளைச் செய்து தருதல்;

(3) பொருட்கள், மனித ஆற்றல் மேம்பாடு வசதிகள் ஆகியவற்றைச் செய்து கொடுத்தல்.

(4) மின் மருத்துவச் சாதன நிலையங்கள்/மின்னணுவியல் சோதனைக் கூடங்களின் மூலம் மின் மருத்துவச் சாதனங்களைப் பழுதுபார்ப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்:

சிறு தொழில்களை ஊக்குவித்து வளர்ப்பதிலும், பின்தங்கிய பகுதிகளிலும் வளர்ந்து வரும் பகுதிகளிலும் அவற்றை பரவலாக்குவதிலும் கிரியா ஊக்கியாக பணியாற்ற வேண்டும் என்ற குறிப்பான நோக்கத்துடன் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டது. மாநிலத்தில் சிறுதொழில் வளர்ச்சிக்கான விரிவான திட்டத்துடன் 1971-ல் இந்நிறுவனம் தன் பணியைத் தொடங்கியது.

சிறு தொழில்களுக்குக் குறிப்பாக தொழில் நுட்பப் பணியாளர் களிடையே சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் பல திட்டங் களை அரசு சார்பில் இந்நிறுவனம் செயல்படுத்துகிறது. கடந்த 19 ஆண்டுகளில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு இந்நிறுவனம், தமிழ்நாட்டில் சிறு தொழில்களில் மேலும் விரைவான வளர்ச்சி ஏற்படுத்த முனைப்புடன் செயலாற்றுகிறது.



சிறுதொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதை முதன்மையான நோக்கமாகக் கொண்ட இந்நிறுவனத்தின் தொழில் மேம்பாட்டு பணிகளில் பின்வருவனவும் அடங்கும்:—

(1) இன்றியமையாத அடிப்படை வசதிகளைச் செய்து தருதல்.—தொழில் வளர்வதற்கான வாய்ப்புள்ள மையங்களில் தொழிற் பேட்டைகளை ஏற்படுத்துதல், மேம்படுத்துதல், பல்வேறு அளவில் தொழிற்கூடங்களைக் கட்டித் தருதல், சிறுதொழில் பிரிவு களை ஏற்படுத்துவதற்காக, இன்றியமையாத அடிப்படை வசதி களுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்குதல்.

(2) ஊக்கத்திட்டங்கள்.—அரசு அவ்வப்போது பிறப்பிக்கும் ஆணைகளுக்கேற்ப உதவித் தொகை வழங்குதல், துணைப்பணிகள் போன்ற முகவர் பணிகளை மேற்கொள்ளுதல்.

(3) முதன்மையான/அரிதான மூலப்பொருட்களை வழங்குதல்:— சிறு தொழிற் பிரிவுகளுக்குத் தேவையான, அடிப்படையான, அரிதான, மூலப்பொருள்கள் இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங்களில் கட்டுப்பாட்டு விலையில் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கிறது. இந்நிறுவனத்தின் விற்பனை நிலையங் களில் பல்வேறுவகையான மூலப்பொருள்கள் கிடைக்கச் செய்வதுடன் மேலும் மேலும் பல விற்பனை நிலையங்களை அமைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் மாவட்டந்தோறும் குறைந்தபட்சம் ஒரு விற்பனை நிலையமாவது ஏற்படுத்துவது இந்நிறுவனத்தின் கொள்கையாகும்.

(4) விற்பனை உதவித் திட்டம்.—சிறுதொழில் பிரிவுகள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு விலையில் சலுகையளித்தல், அரசுக் கொள்முதலில் முன்னுரிமையளித்தல், தேவைக் குறிப்பாணைகளின் அடிப்படையில் முன்பணம் கொடுத்தல் போன்ற ஊக்கத் திட்டங்களின் மூலம் உதவி செய்தல்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்:—

மாநில அளவில் முதன்மை நிதியுதவி நிறுவனமாக விளங்கு கின்ற தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஒரு நிறுவனமாக 1949-ல் ஏற்படுத்தப்பட்டது. கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டு மாநில நிதியுதவிக்கழகச் சட்டத்தின் சில பிரிவுகள் இதற்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் பெரும்பாலும் நாட்டிலுள்ள ஏனைய மாநில நிதியுதவிக் கழகங்களைப் போன்றே செயல்படுவதால், இது மாநில நிதியுதவிக் கழகங்கள் சட்டத்தின் கீழ் வரும் ஒரு மாநில நிதியுதவிக் கழகமாகவே கருதப்படுகிறது.

இந்நிறுவனம், புதிய தொழில்களைத் தொடங்குவதற்குத் தேவையான நிலம், கட்டிடம், தளவாடம், இயந்திர சாதனம் ஆகிய நிலையான சொத்துக்களை வாங்குவதற்கு மட்டுமல்லாமல் தற்போதுள்ள தொழிற் பிரிவுகளை விரிவுபடுத்துதல், நவீனப் படுத்துதல, பல்திறப்படுத்துதல் முதலியவற்றுக்காவும் குறித்த காலக் கடனாக 60 இலட்சம் ரூபாய் வரை அளிக்கிறது.

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட முதல் இருபதாண்டுகளில் முறையான குறித்த காலக் கடன்களுக்கு வகை செய்ததுடன் தொழிற் பிரிவுகளின் பங்கு மூலதனத்திற்கு உத்தரவாதம் அளித்து தொகை செலுத்துதல், காலம் தாழ்த்தி தொகை செலுத்துவதற்கு உத்தரவாதம் அளித்தல், தொழிற் பிரிவுகள் வங்கிகளிடம் கோருகின்ற கடன்களுக்கும் உத்தரவாதமளித்தல் ஆகியவற்றின் மூலம் நம் மாநிலத்தில் துணி, சர்க்கரை, சிமிட்டி, காகிதம், இரசாயனம், பொறியியல் முதலான வெவ்வேறு பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கும் உதவி செய்து தொழில் மேம்பாட்டு பணியை ஆற்றியது.

கடந்த பத்தாண்டுகளாக இந்நிறுவனம் சிறுதொழில் பிரிவு களுக்கு உதவி செய்வதில் அதனுடைய கவனத்தைச் செலுத்தி வருகிறது. மொதத அனுமதியில் 99 சதவீதம் (எண்ணிக்கை வாரியாக) சிறு தொழில் பிரிவுகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு சிறப்புத் திட்டங்களின் கீழ், முதன் முதலாகத் தொழில் தொடங்கியுள்ள தொழில் முனைவோர், தொழில் நுட்பப் பணியாளர்கள், பெண் தொழில முனைவோர், ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் போன்ற நலிவுற்ற பிரிவுகளைச் சேர்ந்த தொழில் முனைவோர், உடல் ஊனமுற்றோர், முன்னாள் இராணுவத்தினர் முதலியோர் குறித்துத் தற்போது தனிக்கவனம் செலுத்தப் படுகிறது.

தொழிற்பிரிவுகளுக்குத் தேவையான நிதியை விரைவில் அளிப்பதற்காக, தற்போதுள்ள கடன் விண்ணப்பங்களும், தொகை வழங்கல் நடைமுறைகளும் எளிமையாக்கப்பட்டு வருகின்றன. கடன் வாங்குகின்ற தொழிற் பிரிவுகளின் குறை களைக் களைவதற்காகவும் கடன் தொகையில் ஒரு பகுதியைப் பெற்ற தொழிற் பிரிவுகளுக்கு மீதமுள்ள தொகையை விரைவில் வழங்குவதற்காகவும், முறையே குறைதீர்பிரிவு மற்றும் தனிக் கண்காணிப்புப் பிரிவு ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் கடன் பெற்ற விண்ணப்பதாரர்கள் காலதாமதமின்றி தங்களுடைய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வசதியாக ''வழிகாட்டிப் பிரிவு'' ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி).

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்குதல், தொழில்வளர்ச்சிக்கான அடிப்படை



வசதிகளுக்கு வகை செய்தல், பயிற்சி செயல்முறை விளக்க மையங்களாகச் செயல்படுதல் முதலான நோக்கங்களுடன் 'டான்சி' (TANSI) என்றழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனமானது 1965 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இந் நிறுவனம் தொழில் வணிகத்துறை ஏற்படுத்திய 64 சிறுதொழில் பிரிவுகளைத் தன்வசம் எடுத்துக்கொண்டது. இப்பிரிவுகளின் விற்றுமுதல் கணிசமான அளவிற்கு அதிகரித்ததால், வணிக முறையில் இப்பிரிவுகளை நடத்திச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட்ட சில தொழில்பிரிவுகள், தமிழ்நாடு கனிமவள நிறுவனம், தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் போன்ற துணை நிறுவனங்களுக்குப் பின்னர் மாற்றப்பட்டுள்ளன. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனமானது தற்போது சில குறிப்பிட்ட தொழில்களோடு 47 உற்பத்திப் பிரிவுகள், 7 விற்பனை மையங்கள் ஆகியவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் கீழ்க்கண்டவாறு விரிவாக வகைப்படுத்தப் பட்டுள்ளன:—

(1) தொழிற்சாலைக் கட்டிடங்கள், மின்நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான கனரக கட்டுமானப் பொருட்கள்

(2) உயரழுத்த மின்சக்தியை எடுத்துச் செல்லும் கம்பிகள், நுண்ணலைக் கோபுரங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான துத்தநாகம் பூசப்பட்ட கோபுரங்களின் பாகங்கள்.

(3) மின்வாரியத்திற்கான மென்கட்டுமானப் பொருட்கள் உலோகத்தகடுகள் மின்இணைப்பு வழங்குவதற்குரிய பொருட்கள்.

(4) நுட்பமான கருவிகள், அச்சுகள், பற்றுக் குறடுகள். பொருத்திகள்.

(5) பாதுகாப்புத் துறைக்கும் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங் களுக்கும் தேவைப்படுகிற உயர் தொழில்நுட்பக் கருவிகள்.

(6) வார்ப்பிரும்புக் குழாய்கள், தனிவகைக் குழாய்கள்,

(7) மரச்சாமான்கள், மனை அலங்காரப் பொருட்கள், கதவு—சுவர் ஆகியவற்றின் தனிமுகப்புக்கூறு.

(8) வீடு, அலுவலகம், மருத்துவமனை ஆகியவற்றில் பயன்படுத்துவதற்கான உருக்குச் சாமான்கள் (மேசை நாற் காலிகள் முதலியன).

(9) காய்த்து, அடித்து, உருவாக்கப்பட்ட வார்த்து உரு வாக்கப்பட்ட பாகங்கள்.

(10) சாராவியை அடிப்படையாகக் கொண்ட தயா ரிப்புகள்.

(11) இயந்திரக்கருவிகள், மீன்செக்குகள், பூட்டுகள், கடிகாரங்களின் பாகங்கள் முதலியன.

### தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனமானது, 21-3-1983 ஆம் நாளன்று 10 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் அரசுத்துறை நிறுவனமாகத் தொடங் பட்டது. நாளது வரையிலுள்ள நிலவரப்படி அரசின் பங்குத் தொகை 250 இலட்சம் ரூபாயாகும். இந்த நிறுவனத்தின் முக்கியமான நோக்கங்கள் பின்வருமாறு :—

(1) சிறு அளவில் தோல் பதனிடுவோருக்கு மூலப்பொருட் கள், இராசாயனப் பொருட்கள், முதலியவற்றை நியாயமான விலையில் வழங்கி உதவுதல்.

(2) செருப்புகள், தோல்பொருட்கள், ஆகியவற்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுப்பதன் மூலம் உதவுதல்.

(3) செருப்புகள் மற்றும் பிற தோல் பொருட்களின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் திறமையையும் ஆற்றலையும் மேம்படுத்துதல்.

(4) தோல்பொருட்கள் தயாரிப்புத் தொழிலில் ஈடு பட்டுள்ள முன்னேறும் நிலையிலுள்ள தொழில் முனைவோருக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்.

(5) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளி யேறும் கழிவுநீரைச் சுத்திகரிப்பதற்காக பொது நோக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து தமிழ்நாட்டில் மண் மற்றும் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்.

இந்நோக்கங்களை எய்துவதற்காக ஏழாவது திட்டக் காலத்தில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை தவிர 1986 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திட மிருந்து நான்கு தோல்பொருள் பிரிவுகளும், மாதவரத்தில் உள்ள சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்குச் சொந்தமான தொழிற் பேட்டை ஒன்றும் நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்களாக தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டன. மொத்தம் 1,576.00 இலட்ச ரூபாய் செலவில் வாணியம்பாடி, இராணிப்பேட்டை, ஆம்பூர், பேரணாம் பட்டு, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. பள்ளிச்செல்லும் குழந்தைகளுக்கு இலவசமாக காலணிகளை வழங்கும் அரசின் திட்டத்தின்கீழ் பள்ளிச் செல்லும் குழந்தைகளுக்கு காலணிகளைத் தயாரித்து வழங்கும் பொறுப்பு தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவன மானது 1987-88 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தைச் செயல் படுத்தும் முக்கிய அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் காலணிகளைத் தயாரிக்கும் பணியாளர்கள் பெருமளவில் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.



### நிவாரண நடவடிக்கைகள் :

தொழில்துறையில் குறிப்பாக சிறுதொழிலில் தேக்கமும் நலிவும் பரவலாகக் காணப்பட்டது. மாவட்ட தொழில் மையங்களால் பதிவு செய்யப்பட்ட 1.02 இலட்சம் தொழில் பிரிவுகளில், 31-3-1989 ஆம் நாள் நிலவரப்படி 32,000 தொழிற்பிரிவுகள் நலிவுற்றிருந்தன. இது சிறுதொழில்கள் அழிந்துவிடக்கூடிய அபாயநிலையைத் தெரிவித்தது. எனவே, சிறுதொழில் நலிவுற்றதற்கான காரணங்களை அறியவும் அது குறித்து ஆழ்ந்து ஆய்வு செய்து நலிவுற்ற சிறுதொழில் களுக்குப் புத்துயிரளிக்க அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கருத்துரைக்கவும் விழைந்த அரசு விரைந்து செயல்பட்டு மத்திய அரசின் வங்கியியல் துறையின் முன்னாள் செயலாளரான திரு. எம். ஜி. பாலசுப்பிரமணியன், இ.ஆ.ப. (பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்) அவர்களை தலைவராகக் கொண்ட வல்லுநர் குழு ஒன்றை நியமித்தது. நலிவுற்ற சிறு தொழில் பிரிவுகளுக்குப் புத்துயிரளிப்பதற்காகத் தனியாக நிறுவனம் ஒன்றை ஏற்படுத்து வதற்கான சாத்தியக் கூறு பற்றியும் இக்குழு ஆராய்ந்துள்ளது. அக்குழுவானது அதனுடைய ஆய்வை முடித்து அதனுடைய அறிக்கையை தற்போது அரசிடம் அளித்துள்ளது.

தொழில்துறையில் முதலீடு செய்வோரின் ஆர்வத்தை அதி கரிக்கவும், இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கான சூழ்நிலையை மேம்படுத்தவும், கடந்த இராண்டு காலத்தில் பல பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளில் சிறு தொழில் சங்கங்கள், சிலவற்றுடன் தொழில் முனைவோர் சிலருடன் அடிக்கடி பேச்சுவார்த்தை நடத்தியதும் அடங்கும், மத்திய அரசின் முதலீட்டு உதவித்தொகை நிறுத்தப்பட்டபோது பின்வரும் ஊக்க உதவித் தொகைகள் வழங்கப்படும் என்றும் தற்போதுள்ள ஊக்க உதவித் தொகைகள் சிலவற்றுக்கான விதி முறைகள் தளர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது :—

(அ) பின்தங்கிய வட்டங்களுக்கு மாநில மூலதன முதலீட்டு உதவித் தொகையும், தனிவகை முதலீட்டு உதவித் தொகையும் வழங்குதல், 105 வட்டங்கள் அடங்கிய பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது. பல புதிய தொழில்கள், தனிவகை முதலீட்டு உதவித் தொகை பெறுவதற்காக பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.

(ஆ) விற்பனை வரி செலுத்துவதற்காக வட்டியில்லாக் கடன் வழங்குவதற்குப் பதிலாக, தொழிற்சாலைகளிடமிருந்து வசூலிக்க வேண்டிய விற்பனை வரியை ஒத்திப்போடவும், தொழிற்பிரிவை விரிவுபடுத்தும் போதும் அதேபோல விற்பனை வரியை ஒத்திப்போடவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(இ) உயரழுத்த/குறைவழுத்த மின்சாரம் பயன்படுத்துகின்றவையும், மின் உற்பத்தி இயந்திரங்களை வாங்குவதற்கு முதலீடு செய்கின்றவையுமான சிறு தொழில் பிரிவுகள் அனைத்திற்கும் தங்கள் பயனுக்கென்று மின் உற்பத்தி இயந்திரங்களைப் புதிதாக வாங்குவதற்கு அவற்றிற்கு உயரளவாக ரூ. 5 இலட்சம் வழங்குதல் என்பதற்கு உட்பட்டு 15 சதவீதம் உதவித்தொகை அனுமதிக்கப்படுகின்றது.

(ஈ) 'சிப்காட்' வளாகத்திலுள்ள தொழில் பிரிவுகளுக்கும் அதன் வளர்ச்சி மையங்களிலும், சிட்கோ மற்றும் அரசும், அரசு சார்பிலான முகவரமைப்புகளும் அமைத்துள்ள தொழிற்பேட்டைகளில் உள்ள தொழில் பிரிவுகளுக்கும் அண்மையில் இந்த ஊக்க உதவித் தொகைகள் வழங்குவது விரிவாக்கப்பட்டுள்ளது.

ஏனைய பிரச்னைகள்

(1) மத்திய அரசு 1989–90 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஆயத்தீர்வை விதிப்பு முறையைத் திருத்தியமைத்தது. இது, தீப்பெட்டித் தயாரிப்புத் (குடிசைத் தொழில்) தொழில் துறையைப் பாதித்தது. மத்திய அரசின் மேற்சொன்ன கொள்கையினால் ஏற்பட்ட கடும் டர்பாடு பற்றி மாநிலச் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. இச்சட்டமன்றம் இது பற்றி ஒரு மனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. ஆயத்தீர்வை விதிப்பது தொடர்பாக முன்னர் இருந்த வேறு பாட்டு வீதங்களையே மீண்டும் செயலுக்குக் கொண்டு வருமாறு அனைத்து அரசியல் கட்சிகளும் வலியுறுத்தின. தமிழ்நாட்டில் தீப்பெட்டி தயாரிப்புத் (குடிசைத்) தொழிலை ஊக்குவிப்பதற்காக, 1–3–1989க்கு முன்னர் இருந்த ஆயத் தீர்வை வீதங்களையே மீண்டும் கொண்டுவருமாறு கோரி மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

(2) 1988 ஜூன் திங்களில் மத்திய அரசு அதிகார முறையில் பிறப்பித்த கட்டாய சணல் பயன்பாட்டு ஆணையினால், பாலிதீன் பை தயாரிப்புத் தொழில் பிரிவுகளின் நிறுவன திறன் பயன்பாடு மிகவும் குறைந்துள்ளது. இதனால் தமிழ்நாட்டில் பாலிதீன் பை தயாரிப்புத் தொழில் கடுமையாக நலிவுற்றது. எனவே, சணலினாலான சாக்குப் பைகளில்தான் சிப்பம் செய்ய வேண்டும் என்று கூறி பிறப்பிக்கப்பட்ட ஆணையின் செயல் வரம்பிலிருந்து சிமிட்டியையும், இரசாயன உரங்களையும் நீக்குமாறு தென்னிந்திய பாலிதீன் பை தயாரிப்பு தொழில்களின் சார்பில் மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



(3) மூலப்பொருளான H D P E சிறுமணிகளுக்கு மிக அதிக சுங்கத்தீர்வை விதிக்கப்பட்டுள்ளது. இச்சிறு மணிகளிலிருந்து இடைநிலைப் பொருள்களாக தயாரிக்கப்படுவதும், அதே தொழிற்சாலையில் பயன்படுத்தப்படுவதுமான நாடாக்களுக்கு மேலும் ஆயத்தீர்வை விதிக்கப்பட்டுள்ளது. இறுதியாக தயாரிக்கப்படும் வேலை நிறைவு பெற்ற பொருட்களுக்கு மூன்றாம் முறையாக ஆயத்தீர்வை விதிக்கப்படுகிறது. மூலப் பொருட்கள் இடைநிலைப்பொருட்கள், இறுதியாகத் தயாரிக்கப்படும் வேலை நிறைவு பெற்ற பொருட்கள் ஆகியவற்றின் மூன்று நிலைகளில் தீர்வை விதிப்பதால், இத்தொழில் பொருளாதார வகையில் தனித்தியங்குவது கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. எனவே, சிறு தொழில் பிரிவுகள், நடுத்தரத் தொழில் பிரிவுகள் தயாரிக்கும் வேலை நிறைவு பெற்ற பாலிதீன் பைகள் மீதான ஆயத் தீர்வையையும், மூலப்பொருள்கள் மீதான சுங்கத் தீர்வையையும் கணிசமாக குறைக்க பாலிதீன் பை தயாரிப்புத் தொழிற்சாலைகள் சார்பில் மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

(4) திருவாளர்கள் மாருதி உத்யோக் நிறுவனம், மோட்டார் கார் தயாரிப்பதற்காக தங்களுடைய இரண்டாவது தொழிற்சாலையை அமைப்பதற்குத் தகுந்த இடத்தைத் தேடிக் கொண்டிருப்பதால் இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியைக் கருதியும், தமிழ்நாட்டின் சிறு தொழிற்சாலைகளிடமிருந்து துணைப் பாகங்களைக் கொள்முதல் செய்வதை அதிகரிப்பதற்கும், மாருதி உத்யோக் நிறுவனத்தின் உத்தேச இரண்டாவது தொழிற்சாலையை இம்மாநிலத்தில் அமைக்குமாறு மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

(5) இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி என்ற பெயரில், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் துணை நிறுவனம் ஒன்றை அமைக்க, மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி போன்ற வளர்ச்சி வங்கி ஒன்றை அமைப்பது, தென்னிந்தியாவில் சிறு தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்குமாதலால், மேற்சொன்ன வங்கியின் தலைமையிடத்தைச் சென்னையில் அமைக்குமாறு மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது.

(6) அண்மையில் அரசு H D P E சாக்கு தயாரிக்கும் தொழில் பிரிவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், வருங்காலத்தில் இப்பிரிவுகள் நலிவுற்று மூடப்படாமல் இருப்பதற்கு வழிவகைகளைக் காண்பதற்கும் ஒரு குழுவை நியமித்துள்ளது.

(7) தொழில் முனைவோர் தங்களுக்குத் தேவைப்படுகின்ற தொழில் அனுமதிகள் அனைத்தையும் விரைவில் பெறுவதற்கு இயலும் வகையில், குஜராத் மாநிலத்தில் செயல்படுகின்ற திட்டத்தைக் காட்டிலும் சிறப்பான முறையில் ஒருமுனைத்

தீர்வுக்குழு செயல்படுமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் 10–1-1990-ல் சிறு தொழில் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய கூட்டத்தில் உறுதியளித்தார். இதைத் தொடர்ந்து உரிமம் வழங்குவதற்கான ஒரு முனைத் தீர்வுக் குழுத் திட்டம் மற்றும் பசுமைக் கொடி திட்டம் ஆகியவை செயல்படுவதையும், தொழில் முனைவோர், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் அனுமதி பெறுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் ஆய்வு செய்யும் பொருட்டு தலைமைச் செயலாளர் 2-2–1990 இல் கூட்டம் ஒன்றை நடத்தினார். இக்கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:—

(அ) மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பிறப்பிக்கவிருக்கும் நிருவாக ஆணைகளின்படி, சிறு தொழில் சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர், ஒப்புக்கொண்ட பட்டியலின் அடிப்படையில், சிறு தொழில்களுக்கு மாசுக் கட்டுப்பாட்டு அனுமதி பெறுவதிலிருந்து விலக்களிக்கும்.

(ஆ) சிறுதொழில் பிரிவுகளின் பிரதிநிதிகள் அடங்கிய நிலைக் குழுவை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அமைக்கும்.

(இ) சிறு தொழில் பிரிவுகளுக்கு இலவச ஆலோசனை அளிக்கும் பொருட்டு, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் தொழில் நுட்பப் பணிப்பிரிவு ஒன்றை அமைக்கும்.

(ஈ) அதிக அளவில் மாசு விளைவிக்கும், ஓரளவு மாசு விளைவிக்கும், மாசு விளைவிக்காத (சிவப்பு, ஆரஞ்சு, பச்சை) வகைகளைச் சேர்ந்த தொழில்களுக்கு, வரையறுக்கப்பட்ட கால அளவு தொடர்பாக அனுமதி அளிப்பதற்கு புதிய நடைமுறை ஒன்றை வகுக்கும்.

(உ) மாவட்டத் தொழில் மையங்கள் வழங்கும் தகுதிச் சான்றிதழின் அடிப்படையில், விற்பனை வரி செலுத்துவதைத் தள்ளிப் போடுவதற்கு அனுமதி அளிக்க, வணிக வரிகள் துறையின் மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் வழங்கும்.

(ஊ) சிறுதொழில் முனைவர்களிடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பொதுச் சுகாதார இயக்குநர், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், தீயணைப்புப் பணி இயக்குநர் ஆகியோர் தொழில்களுக்கு அனுமதி அளிப்பர்.

(எ) 31–3–1990-க்கு முன் தாமாகவே முன்வந்து மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் தங்களைக் கொண்டு வந்து கொள்கிறவர்களுக்கு, நடப் பாண்டிற்கும் அதற்குமுன் ஆண்டிற்கும் உரிய தொகைகள் தவிர அவர்களுடைய முந்தைய கால நிலுவைகள் அனைத்தையும்



கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யலாம் என்றும், ஆனால், அவ்வாறு தாமாகவே முன்வந்து இவ்வாரியத்தின், நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் தங்களைக் கொண்டுவந்து கொள்ளாதவர்களை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பின்னர் கண்டறிந்தால் அவர்கள் நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தும் வகையில், திட்டமொன்றைத் தயாரிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

(8) 1990-91ல் பின்வரும் புதிய திட்டங்களை அரசு செயல்படுத்தும்:

(அ) ரூ. 11.00 இலட்சம் செலவில் சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள தீப்பெட்டித் தயாரிப்புத் தொழிற்சாலைகளுக்காக (குடிசைத் தொழில்) ஐந்து கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துதல், சுமார், 50 சிறு தொழில் பிரிவுகள் ஒன்று சேர்ந்து இத்தகைய சங்கமொன்றை ஏற்படுத்தி, கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் அச் சங்கத்தைப் பதிவு செய்து கொள்ளலாம். இச்சங்கம், தரமான மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து அவற்றை நியாயமான விலையில் வழங்க ஏற்பாடு செய்யலாம். இத்தகைய சங்கங்கள், அவற்றின் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம் படுத்துவதற்கு முக்கிய ஆய்வுக் கூடத்தை ஏற்படுத்துவதற்கு சாதனங்கள் குறித்த செலவிற்காகவும், தொடக்க அடிப்படை வசதிகள் குறித்த செலவிற்காகவும் இச்சங்கங்களுக்குத் தேவையான தொகையில் 50 சதவீதத்தை ஆதாரத் தொகையாகவும், 50 சதவீதத்தை மானியமாகவும் வழங்குவது குறித்தும், வெவ்வேறு இடங்களில் இத்தகைய சங்கங்கள் ஏற்படுத்தவிருக்கின்ற ஒவ்வொரு விற்பனை நிலையத்திற்கும் 50 சதவீதம் அல்லது உயரளவுத் தொகையாக ரூ. 50,000 வழங்குவது குறித்தும் அரசு பரிசீலிக்கும்.

(ஆ) எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 25,000 பேருக்கு வேலை வாய்ப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க ஒவ்வோராண்டும், கூட்டுறவுத் தொழிற்பேட்டை ஒன்றுக்கு ரூ. 5.00 இலட்சம் என்ற வீதத்தில், மொத்தம் ரூ. 25.00 இலட்சத்திற்கு அரசின் பங்குத் தொகையுடன் 5 கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் அமைத்தல். அமைக்கக் கருதப்பட்டுள்ள இந்த ஐந்து தொழிற்பேட்டைகளில், கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்தில் கன்னியாகுமரி கூட்டுறவுத் தொழிற்பேட்டையும், கோயம்புத்தூர், அவினாசி வட்டத்தில் உள்ள அறிஞர் அண்ணா கூட்டுறவுத் தொழிற் பேட்டையும் 1990–91 ஆம் ஆண்டில் அமைக்கப்படவுள்ளன.

(இ) தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக, ஆர்வமுள்ள, நிதி வசதியுடைய தொழில் முனைவர்களுக்கு

ஊக்கமளித்து உதவுவதற்கும், தொழில் நுட்ப வகையில் சாத்தியமானவையாகவும், நிதி வகையில் தனித்து இயங்கும் வகையிலும், அவர்களுடைய தொழில் திட்டங்களை உருவாக்கத் தேவையான தொழில் நுட்பத் திறனை வளர்ப்பதற்கும் ரூ. 10.00 இலட்சம் செலவில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 1990–91 ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 25.00 இலட்சமாகும்.



(ஈ) 1990–91 ஆம் ஆண்டில் தென்னை நார்த் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் பின்வரும் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்குத் தொகை வகையில் நிதி உதவி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது:—

| வரிசை எண்ணும் சங்கத்தின் பெயரும். | நோக்கம். | திட்டத்தின் மொத்தச் செலவு. | வழங்கப்பட உள்ள தொகை. | வேலை வாய்ப்பு பெறுவோரின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. கன்னியாகுமரி மாவட்ட மத்திய கயிறு விற்பனை தொழில் கூட்டுறவுச் சங்கம் ஈத்தாமொழி கன்னியாகுமரி மாவட்டம். | ஈத்தாமொழியில் ரப்பர் கலந்த கயிற்றுப்பாய் தயாரிக்கும் தொழிற் பிரிவை ஏற்படுத்துதல். | 22.20 | 5.00 | 60 |
| 2. கடலூர் கயிறு தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம், கடலூர் தென்னார்க்காடு மாவட்டம். .. .. | கயிறு நெசவு நிலையம் கிடங்கு மற்றும் விற்பனைக் கூடம் கட்டுதல். | 5.08 | 2.50 | 30 |
| 3. தென்காசி தென்னை நார் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம். | தென்னை நார் கலந்த சுருள் கயிறு-முப்பிரி கயிறு தயாரித்தல். | 8.50 | 1.00 | .. |
| 4. அழகசமுத்திரம் கயிறு தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம், சேலம் மாவட்டம். | நிதிநிலையை, சாதனையை மேம்படுத்த நடைமுறை மூலதனம் வழங்குதல். | 1.00 | 1.00 | .. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. | தாமரைக்குளம் கயிறு தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம், கோவை மாவட்டம். | இரு இழை நார் நூற்பு மற்றும் சட்டத்தின் மூலம் மிதியடி நெய்தல் மற்றும் சங்கத்தைப் புதுப்பித்தல். | 1.[illegible]0 | [illegible] | 30 |
| 6. | சின்ன கிருஷ்ணாபுரம் கயிறு தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம், சேலம் மாவட்டம். | தென்னை நாரிழை பிரித்தெடுக்கும் தொழிற் பிரிவை ஏற்படுத்துதல். | 1.03 | [illegible].50 | 45 |
| 7. | கூட்டுறவு மயமாக்கல் திட்டத்தின்கீழ் கயிறு தயாரிக்கும் தொழிலுக்காக அரசின் பங்கு உதவித்தொகை வகையில் இணை மானிய உதவி வழங்குதல். | பங்கு மூலதன உதவி சாதன உதவி இணை மானியம் வழங்குதல். | 33,92 | 14.45 | .. |

1989–90 ஆம் ஆண்டில் மேற்சொன்ன முகமைகள் செயற்படுத்திய பல்வேறு திட்டங்கள், அவற்றின் சாதனை விவரங்கள் ஆகியவை, செயலாக்க ஆய்வு அறிக்கையில் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.



கோரிக்கை எண் 30.

சமூக நலத் துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு 1990–91

''அன்பின் வழியது உயிர்நிலை அஃது இல்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு''

1.1 கோரிக்கை எண் 30-ன் கீழ் 1990–91 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,39,42,59 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.2. சமூகத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று பிரிவினராகிய மகளிர், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களின் வளர்ச்சி மற்றும் நலனுக்காக சமூகநல இயக்ககம் 1947-ல் நிறுவப்பட்டது.

1.3. இதன் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:—

(அ) ஆறு வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளும் ஆரோக்கியமாக வளர தேவையான உணவு, ஊட்டச்சத்து மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் கிடைக்கச் செய்தல் மற்றும் குழந்தைகளின் இறப்பு விகிதத்தினை குறைக்க உறுதி செய்தல்;

(ஆ) 2 வயது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு போதுமான முன் பருவக்கல்வி கிடைக்கச் செய்தல்;

(இ) பேறுகால இறப்பு விகிதத்தினை குறைக்கும் வகையில் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குப் போதிய உணவு, ஊட்டச்சத்து மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் கிடைக்கச் செய்தல்;

(ஈ) உறைவிடமும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகளை பராமரித்தல்;

(உ) பெண்களுக்கு முக்கியமாக வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்தல்;

(ஊ) துயருறும் மகளிருக்கு, குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்ற மகளிருக்கு தேவையான உதவிகள் அளித்தல்;

(எ) மருத்துவ வசதியில், பொருளாதாரத்தில் சமூகத்தில் மற்றும் கல்வியில் பின்தங்கிய மக்களுக்கு அதனை கிடைக்கச் செய்தல்;

(ஏ) சமூகத்தில் நலிவடைந்த மற்றும் பின் தங்கிய பிரிவினருக்கு உதவும் பணியில் ஈடுபட்டுள்ள சமூகநல நிறுவனங் களுக்கு உதவி செய்தல்;

(ஐ) மகளிர் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டிற்காக கருத்தரங்குகள், விளம்பரங்கள் சுட்டங்கள் மற்றுய விழிப் புணாச்சி திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்துதல்;

(ஒ) பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இழைக்கப் படுகின்ற கொடுமைகள் மற்றும் அநீதிகளைத் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுத்தல்;

(ஓ) மகளிர் ஆண்களுடன் சரி சமமாக முன்னேறுவதற்கு உரிய வழிமுறைகளை வகுத்தல்;

(ஔ) சமுதாயத்தில் பெண்கள் முன்னேற்றம் அடைவதற்கு அவர்கள் வாழ்க்கையில் புதிய வழிவகை செய்வதோடு, குழந்தை களின் எதிர்காலம் மலர்வதற்கு புதிய சூழ்நிலையை உருவாக்கு தல்;

(க) பிரச்சனைகளை எல்லா பரிமாணங்களிலும் ஆராய்ந்து மனிதனுடைய முழுத்திறனையும் வெளிக் கொணர்வதோடு, எல்லா பிரச்சனைகளையும் போர்க்கால அடிப்படையில் கையாண்டு, தற்போதுள்ள நிலையே போதும், என்று நினை யாமல் நல்ல ஒரு மாற்றத்தினை உருவாக்க தேவையான சமூக உணர்வினை ஏற்படுத்தல், மேலும்

(ங) துன்பத்தையும், தீங்கினையும் களைவதோடு மனித இனத்தின் பெருமையை நிலை நாட்டுதல்.

1.4. மகளிர், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் சமூகத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக கருதப்படுவதாலும் இவர்களின் எண்ணிக்கை பெரிய அளவில் உள்ளதாலும் இவர் களின் நலனுக்காக திட்டங்கள் படிப்படியாக அமுல்படுத்தப் படுகின்றன.

1.5. இத்துறையில் தற்போதைய வரவு செலவுத் திட்டத்தில் பெருமளவு தொகை குழந்தைகள் நலனுக்காகவும், மகளிர் முன்னேற்றத்திற்காகவும் உடல் ஊனமுற்றோர் நலனுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிரின் முன்னேற்றத்தினை பொறுத்து நாட்டின் வளர்ச்சி அமையும். எனவே இந்த அடிப்படையில் சமுதாய உணர்வு ஊட்டப்படவேண்டும். புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். வாழ்க்கை என்பது குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சிக்கு நல்ல சூழ்நிலையுடன் அமைய வேண்டும். இளம் பருவத்தில் வளர்கின்ற குழந்தைகளை கவனித்து பாதுகாத்தல் இன்றியமையாதது. விரைவாக வளர்ந்து கொண்டிருக்கின்ற சமுதாயத்தை உருவாக்குவதில் நம் பணி தளர்வின்றி மேற் கொள்ளப்படும்.



## அத்தியாயம் 2.

### மகளிர் நலம்

**சிறப்புத் திட்டம் :**

2.1. பல வருடங்களாக மகளிருக்கென தீட்டப்படும் திட்டங்கள்அவர்களது நலன் சார்புடையதாகவே அமைந்துள்ளன. பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டங்கள் மூலம் தற்பொழுது இந்நிலை சிறிதளவு மாறியுள்ளது. முதன் முறையாக மகளிர் கல்விக்கும் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கும் நோக்கத்துடன் புதிய திட்டம் ஒன்று தீட்டப் பட்டுள்ளது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பாராட்டுக்குரிய தகடூர் நெடுமானஞ்சியின் அவைப்புலவர் அவ்வையார் போன்ற பெரும்புலவர்களைப் பெற்ற பெருமையைக் கொண்டது நமது தொன்று தொட்ட தமிழகம். அவ்வைப்பாட்டியும் மற்ற புலவர் களும் துயருற்றோருக்கும் உதவி நாடி வந்தவர்களுக்கும் அன்பை யும் ஆதரவையும் நல்கின்ற உயர்ந்த எண்ணத்தை வளர்த்த வர்கள், அவர்கள் நமது கலங்கரை விளக்கம்.

2.2 **மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்:—** தங்கள் குடும்பத்திற்கு கூடுதல் வருமானம் கிடைக்கப்பெறும் பொருட்டு வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மகளிருக்கு வேலை வாய்ப்பு நல்கவேண்டி 1987-88, 1988-89 மற்றும் 1989-90 ஆம் ஆண்டுகளில் பல மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் துவக்கப் பட்டன. தற்பொழுது இம்மகளிர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்க்ள் அனைத்தும், அரசுக்கும் அரசுத்துறை சார்ந்த நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்யப் படுவதால் இத்திட்டங்கள் அனைத்தும் அரசால் அமுல்படுத்தும் திட்டங்களாகவே இத்துறை மூலம் செயல்பட்டு வருகின்றன.

2.3. **தையற் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் :—** இத்துறையில் 1987-88ஆம் ஆண்டில் 13 தையற் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே இருந்தன. பிறகு அதே ஆண்டில் 16 புதிய தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. அத் துடன் 43 மகளிர் தொழிற் கூட்டுறவு தையற் சங்கங்கள் தொழில் வணிகத் துறையிடமிருந்து இத்துறைக்கு மாற்றப் பட்டன. 1989-90ல் மெலும் 3 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தற்சமயம் மொத்தத்தில் 75 மகளிர் தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையின் கீழ் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியர் பிற் படுத்தப்பட்டோர் நல இயக்கக் கட்டுபாட்டின் கீழ் பயிலும்

பள்ளி மாணவ மாணவியர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும் மாணவ மாணவியர் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளை இந்த 75 மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்து வருகின்றன.

2.4. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்விலவச சீருடைத் துணிகளை வெட்டுவதற்கு தானியங்கி துணி வெட்டும் கருவிகளை அரசு இலவசமாக வழங்கியுள்ளது. துணிகள் அனைத்தும் அந்தந்த மாவட்டத்திலுள்ள துணிவெட்டும் மையத்தில், மாவட்ட சமூகநல அலுவலர் முன்னிலையில் வெட்டப்பட்டு, வெட்டப்பட்ட துணிகளை சீருடைகள் தைப்பதற்காக இச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. 1989-90-ல் பள்ளிக் குழந்தைகளுக்கான 64 லட்சம் சீருடைகளை சமூக நலம் துறையின்கீழ் இயங்கும் 75 மகளிர் தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், சில சேவை நிறுவனங்களும் தைத்துக் கொடுத்தன. இச்சீருடை தைக்கும் பணியின் மூலம் 20,000 மகளிருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டன. ஏறக்குறைய மூன்று கோடியே எழுபத்தேழு லட்சம் ரூபாய் தையற்கூலியாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு உறுப்பினரும் ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு ரூ. 400 முதல் ரூ. 500 வரையில் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு குடும்பத்திற்கு கூடுதல் வருமானமாக இச்சீருடை தைக்கும் பணியின் மூலம் பெற்றனர்.

2.5. துணி வெட்டும் பணிக்காக அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு துணி வெட்டுநருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 தொகுப்பூதியமாக மூன்று மாதங்களுக்கு அரசுச் செலவில் வழங்கப்பட்டது. இத்துணி வெட்டுநர்களோ சீருடை தைக்கும் துணிகளை வெட்டுகின்றனர்.

2.6. சீருடை தைக்கும் மகளிர்க்கு 25சதவீதம் கூலி 1988-89 வரை முன்பணமாக வழங்கப்பட்டது. மீதமுள்ள 75 சதவீதம் கூலித்தொகை சீருடைகள் யாவும் தைத்து முடித்து கல்வித் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்டது. இம் முறையினால் சங்க உறுப்பினர்கள் தங்களுடைய முழு கூலித் தொகையையும் பெற நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருந்தது. எனவே 1989-90 முதல் 90 சதவீதம் தையல் கூலியை முன்பணமாகவும் மீதமுள்ள 10 சதவீதம் கூலித் தொகையை சீருடைகள் அனைத்தும் தைத்து முடித்த பின்னர் வழங்கவும் அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது.

2.7. 1990-91 ஆம் ஆண்டில் ஒரு தையற் தொழிற் கூட்டுறவு சங்கத்தை 'ஆயத்த ஆடை தயாரிக்கும் சங்கமாக' மாற்றுவதற்கு திட்டம் உள்ளது.





2.8. காலணி தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்:—

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளி மாணவ மாணவியர்க்கு அரசு இலவச காலணிகள் வழங்கும் பொருட்டு அக்காலணிகளை தயாரிப்பதற்காக சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 39 மகளிர் காலணிக் கூட்டுறவுச் சங்கங்கள் 1987-88 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. இரண்டாயிரம் ஆதிதிராவிட மகளிர்க்கு இச் சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. காலணிகளைத் தயாரிப்பதற்கு சங்க உறுப்பினர் அனைவருக்கும் ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி காலத்தில் ஒவ்வொரு மகளிருக்கும் ரூ. 200 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. காலணிகளைத் தயாரிப்பதற்காக ரூ. 250 மதிப்புள்ள கருவிகள் மற்றும் உபகரணங்கள் ஒவ்வொரு மகளிருக்கும் இலவசமாக அரசால் வழங்கப்பட்டுள்ளது. இம் மகளிர் காலணிக் கூட்டுறவுச் சங்கங்கள் 1987-88 மற்றும் 1988-89 ஆம் ஆண்டுகளில் இத் துறைக்கு ஒதுக்கப்பட்ட 11.64 லட்சம் ஜோடி காலணிகளைத் தயாரித்து கல்வித் துறைக்கு வழங்கியுள்ளன. மகளிர்க்கு கூலியாகவும் காலணி கூட்டுறவு சங்கங்களுக்கு சேவை கட்டணமாகவும் ரூ. 40 இலட்சம் 1987-88 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. அரசுக்கு தேவையான காலணிகள் தயாரிப்பதோடு மட்டுமின்றி ஏனைய பிற காலணிகளைத் தயார் செய்வதற்கும் மகளிர் காலணி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு செயல்விளக்கம் அளிக்கப்படுகிறது. பள்ளி மாணவ மாணவிகளுக்கு சீருடை வழங்குவது தவிர கிராமப்புரத்தில் உள்ள ஏழை மகளிருக்கு 1988-89 ஆம் ஆண்டில் இத்துறையால் ரூ. 3.27 இலட்சம் ஜோடி காலணிகள் தயாரிக்கப்பட்டன. 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 11.45 லட்சம் கூலியாக பெண் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் மாணவருக்கு காலணி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. மொத்தமாக உருவாக்க வேண்டிய 22 இலட்சம் ஜோடி காலணியில் 6 லட்சம் ஜோடி சமூக நலத்துறையினரால் செய்து முடிக்கப்பட உள்ளது. இதற்கு அரசு சமூக நலத்துறைக்கு மட்டும் ரூ. 21.00 லட்சம் ஒதுக்கியுள்ளது.

2.9 தமிழ்நாடு சத்துணவு திட்டத்துடன் இணைந்த திட்டங்கள் இலவச சீருடை வழங்குதல்:— தமிழ்நாடு அரசின் சத்துணவு திட்டத்தின் கீழ் பயனடையும் 1 முதல் 8 ஆம் வகுப்புவரை பயிலும் பள்ளி சிறார்களுக்கு கல்வித்துறை வாயிலாக இலவச சீருடைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1985–86 ஆம் ஆண்டு முதல் அரசால் அமுல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இதுபோன்ற இலவச சீருடைகள் பிற்பட்டோர் நல இயக்கத்தினராலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்கத்தின

D
V211,31'N90
N91:25.3
143800

ராலும் அவர்கள் கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளி சிறார்களுக்கு வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு சுமார் 64 இலட்சம் சீருடைகள் தைத்து வழங்கப்படுகிறது, இச்சீருடைகள் தைக்கும் பொறுப்பு சமூகநல இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது,

2.10, இதனால் உழைப்பின் பயன் பாடுபட்டவர்களையே சென்றடைவதை உறுதி செய்ய முடிகிறது. சீருடைகளை தைக்கும் பணி அனைத்தும் அந்தந்த மாவட்ட சமூகநல அலுவலர்களின் நேரடி கண்காணிப்பில் நடைபெறுகிறது. சீருடைகளைத் தைப்பதற்கு தேவைப்படும் துணிகள் அனைத்தும் கைத்தறி துணி இயக்கத்தினரால் நேரடியாக அந்தந்த மாவட்ட சமூகநல அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டு அரசு கட்டுப்பாட்டிலுள்ள அனாதை இல்லக் குழந்தைகள் மற்றும் சிறப்பு பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடைகள் இத்துறையிலுள்ள கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தைத்து வழங்கப்படவுள்ளது.

2.11. இலவச காலணி வழங்குதல்:— தமிழ்நாடு அரசின் சத்துணவுத திட்டத்தின் கீழ் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு இலவசக் காலணி வழங்கும் திட்டம் 1987-88 ஆம் ஆண்டு தமிழக அரசால் அமுல் படுத்தப்பட்டது. ஒன்றுமுதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு உரிய காலணிகளை தயார் செய்யும் பணி தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சமூக நல இயக்ககம் ஆகிய 3 நிறுவனங்களுக்கும் 50:30:20 என்ற விகிதத்தில் முறையே ஒப்படைக்கப்பட்டது. 1988-89 ஆம் ஆண்டில் சுமார் 65 லட்சம் பள்ளிச் சிறுவர்களுக்கான காலணிகள் 3 நிறுவனங்களால் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டது, இத்திட்டம் 1989-90-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இதற்காக அரசு 3 லட்சம் ஜோடி காலணிகள் செய்வதற்கு சமூகநலத் துறைக்கு ரூ. 10.50 லட்சம் செலவினமாக ஒதுக்கியுள்ளது. கதர்வாரியததிற்கு ஒதுக்கப்பட்ட காலணிகளை தயார் செய்யும் பணியிலிருந்து 3 இலட்சம் ஜோடி காலணிகளை சமூக நலத் துறைக்கு தயார் செய்வதற்கு மாற்றப்பட்டுள்ளது, இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மகளிர் எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

2. 12. 1979 முதல் 1981 வரையிலான ஆண்டுகளில் 15 மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. 1987–88 மற்றும் 1988-89-ஆம் ஆண்டுகளில் மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 7 சங்கங்களுக்கு அச்சு இயந்திரமும் 13 சங்கங்களுக்கு இரு கோடிடும் யந்திரங்களும் 12 சங்கஙகளுக்கு காகித உறை தயாரிக்கும் இயந்திரங்களும்



வழங்கப்பட்டன. எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கும் ஆர்டர்கள தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டன. ஏறக் குறைய 700 மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ளனர்.

மகளிர் கயிறு பொருட்கள் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம் :

2.13.1981 ஆம் ஆண்டில் கயிறு மற்றும் கயிறு சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இத்துறையின் கீழ் தொடங்கப்பட்டது. இச்சங்கம் உற்பத்தி நிலையமாகவும், மகளிர்க்கு பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் இயங்கி வருகிறது. ஒவ்வொரு வருடமும் சுமார் 50 மகளிருக்கு கயிறு தயாரிப்பதில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர 75 மகளிர்க்கு முறையாக வேலை வாய்ப்பும் அளிக்கப் படுகிறது.

சாக்குக்கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம் :

2.14. ஏற்கனவே இத்துறையின்கீழ் இயங்கும் இரண்டு மகளிர் சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்களோடு 19 சாக்கு கட்டி தயாரிகரும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 1988–89 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. புதிதாகத் துவங்கப்பட்ட 19 சாக்குக் கட்டி கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள மகளிர் உறுப்பினர்கள் அனைவருக்கும் சாக்குக் கட்டி தயாரிப்பதில் ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி காலத்தில் இவர்களுக்கு உதவித் தொகையாக ரூ. 150 அளிக்கப்பட்டது. இம்மகளிர் சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தயாரிக்கும் சாக்குக் கட்டிகள் அனைத்தையும் கல்வித் துறையினர் எடுத்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளபடியால் இக்கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது உற்பத்தியைத் துவக்கியுள்ளன. சுமார் 1,200 மகளிர்க்கு இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இச்சங்கங்களில் உள்ள மகளிர் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்கள். எஞ்சிய ஒரு பங்கினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்.

2.15. இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம் :

1988-89 ஆம்ஆண்டில் 22 மகளிர் இணை உணவு தயாரிக்கும் மகளிர்சங்கங்கள்தொடங்கப்பட்டுள்ளன. சுமார் 1,650 மகளிர்க்கு ஒரு வார காலம் இணை உணவு தயாரிப்பதில் பயிற்சியளிக்கபபட்டது. உதவித் தொகையாக ரூ.50 இம்மகளிர்க்கு வழங்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு மத்தியில் முறையான உற்பத்தியை இக்கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கி ஒருங்கிணைந்த

குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மையங்களுக்குத் தேவையான இணை உணவு தயாரித்து விநியோகம் செய்யப்படுகிறது.

2.16. மகளிர் பயிற்சி நிலையங்கள் :—சமூகநல இயக்கத்தின் கீழ் 36 பயிற்சி நிலையங்கள் மகளிருக்காக நடத்தப்படுகின்றன. இவை 24 தையல் பயிற்சி நிலையங்கள், 3 பனை ஓலை பயிற்சி நிலையங்கள், 3 கம்பளி பயிற்சி நிலையங்கள், ஒரு பாய் முடையும் பயிற்சி நிலையம், ஒரு மூங்கில் பயிற்சி நிலையம், ஒரு பிரம்பு பயிற்சி நிலையம், ஒரு ஆயத்த ஆடைத் தயாரிப்பு நிலையம், ஒரு துணி பொம்மை தயாரிப்பு நிலையம், ஒரு பெட்சீட் டவல் தயாரிப்பு நிலையம், ஆகும். இந்தப் பயிற்சிப் நிலையங்கள் 1958 முதல் வெவ்வேறு ஆண்டுகளில் துவக்கப்பட்டவை, ஆண்டு தோறும் சுமார் 500 பெண்களுக்கு இப்பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப் படுகின்றது.

2.17. மகளிர்க்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் :—இத் திட்டத்தின் கீழ் 1989–90 ஆம் ஆண்டு சென்னை, மதுரை கோவை, திருச்சி மற்றும் சேலம் மாவட்டங்களில், மகளிர்க்கு, ஆட்டோ ரிக்ஷாக்கள் சொந்தமாக வழங்கப்பட உள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 6 ஆட்டோ ரிக்ஷாக்கள் ரூ. 60 ஆயிரம் செலவில் வழங்கப்பட உள்ளது. ஆட்டோ ரிக்ஷா விலையில் 15 சதவீதத் தொகை அரசு மானியமாகவும், எஞ்கிய 85 சதவீதம் நிதி நிறுவனங்களில் இருந்து கடனாகவும் பெறப்பட்டு வழங்கப்பட உள்ளது.

2.18. பட்டு நூலிழை மையங்கள் :—திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் சின்னாளபட்டியில் ஒரு பட்டு நூலிழை மையமும், தருமபுரி மாவட்டத்தில் மற்றொரு பட்டு நூலிழை மையமும் நிறுவ அரசால் ரூபாய் எட்டு இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

வழிகாட்டி மையம் :

2.19. 1978–79 ஆம் ஆண்டு வழிகாட்டி மையங்கள் நான்கு மாவட்டங்களிலும் இதனைத் தொடர்ந்து 1983–84-ல் மேலும் நான்கு மாவட்டங்களிலும் நிறுவப்பட்டன. 1988–89 ஆம் ஆண்டு மீதமுள்ள பன்னிரண்டு மாவட்டங்களிலும் வழிகாட்டி மையங்கள் நிறுவப்பட்டன.

2.20. வழிகாட்டி மையம் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. வழிகாட்டி அலுவலர், கணவனால் கைவிடப்பட்டவர். விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு வங்கி மூலம் கடனுதவி பெறுவதற்கு உதவி புரிகிறார். ஏழை விதவைகள் ஆயுள் பாதுகாப்பு ஈட்டுத் தொகை, ஓய்வூதியம், பொது வைப்பு நிதியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ஆகியவற்றினை பெறுவதற்கும் இதர துறைகளுடன் தொடர்பு





கொண்டு அவர்களுக்கு வழிகாட்டி உதவி புரிகிறார். வழிகாட்டி மைய அலுவலர்கள், அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தில் குழந்தைகளை சேர்க்க தக்க நடவடிக்கை மேற்கொள்கிறார். மகளிர் மேம்பாட்டிற்கு உருவாக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் மாவட்ட சமூக நல அலுவலர்களாலும் வழிகாட்டி மைய அலுவலர்களாலும் செயல்படுத்தப்படுகின்றன.

2.21. 1990–91 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.6.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகளிர்க்கு சுயவேலை வாய்ப்புத் திட்டம் :

2.22. 1988-89 ஆம் ஆண்டு பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தில், விதவைகள், ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் குடும்பப் பொறுப்பை தானே சுமக்கும் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தினால் பயன்பெறும் பெண்களில் 2/3 பாகம் தாழ்த் தப்பட்ட வகுப்பினராகவும் மீதமுள்ள 1/3 பாகம் பிற்படுத்தப் பட்ட இனத்தவராகவும் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ரூ. 600 மானியமாக வழங்கப்படுகிறது. கடன் தொகையில் 2/3 பங்கு வங்கிக் கடனாகவும், ஒரு பங்கு மானியமாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பெரும்பாலும் நடமாடும் சிற்றுண்டிச் சாலை, சலவையகம், ஊறுகாய் தயாரித்தல், மூங்கில் கூடைகள் முடைதல், பைண்டிங், காய்கறி வியாபாரம், பலகாரம் தயாரித்தல் ஆகிய தொழில்களுக்கு கடன் மற்றும் மானியம் வழங்கப்படுகிறது. சுமார் 11,600 ஏழை மகளிருக்கு இத்திட்டத்தின் மூலம் ரூ.69.75 இலட்சங்கள் வழங்கப் பட்டுள்ளது.

2.23. 1989–90 பகுதி II திட்டத்தில் நகர்ப்புறம் மற்றும் நகரியத்தினை சார்ந்த பகுதிகளில் மகளிர் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் சிறு தொழில் செய்ய 6,000 நபர்களுக்கு சராசரியாக ரூ.600 மானியத் தொகை வழங்க ரூ. 36,00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை அனைத்து மாவட்டங்களுக்கும் பங்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் விதவைகள், ஆதரவற்றவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோர் பயனடைவோர்களாவர். இத்திட்டத்தில் பயனடைவோரின் வருட வருமானம் ரூ. 6,400-க்கு மிகாமல் இருக்க வேண்டும். பயனடைவோரில் 5 சதவீதம் (ஐந்து சதவீதம்) உடல் ஊனமுற்ற பெண்களாக இருத்தல் வேண்டும்.

சேவை இல்லம் :

2.24. இத்துறையின் கீழ் தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, காரைக்குடி ஆகிய இடங்களில் சேவை

இல்லங்கள் நடைபெற்று வருகின்றன. 18 முதல் 40 வயது
வரையுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும்
ஆதரவற்றோருக்கு கல்வி வசதி அளிப்பதே இவற்றின் நோக்க
மாகும். இவர்களுக்கு 8 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு, மற்றும்
மேல்நிலைக் கல்வியில் தேர்வு எழுத பயிற்சியளிக்கப்படுகின்றது.
இதில் ஆர்வமில்லாதோருக்கு தையல், பூவேலை, துணி நெய்தல்
போன்றவற்றில் பயிற்சியளிக்கப்படுகின்றது. தையல் மற்றும்
பூவேலையில் ஓராண்டு பயிற்சி முடித்தவர்கள் அரசின் தொழில்
நுட்பத் துறையால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு அனுப்பப்படு
கின்றனர்.

2.25. சேவை இல்லங்களில் பயிலும் உள்ளுறை மாணவிக
ளுடன் இரண்டு குழந்தைகள் தங்குவதற்கும் அனுமதியளிக்கப்
பட்டுள்ளது. அவர்கள் தொடர்ந்து மூன்று ஆண்டுக்காலம் மேற்படி
இல்லத்தில் இருக்கலாம். உள்ளுறை மாணவிகளுக்கு மாதம்
ரூ. 75 வீதமும், குழந்தைகளுக்கு ரூ. 60 வீதமும் உதவித்
தொகை வழங்கப்பட்டு வருகிறது. உள்ளுறை மாணவிகளுக்கு
ஆண்டிற்கு ரூ.100 வீதம் சீருடையும், குழந்தைகளுக்கு ரூ. 60
வீதம் சீருடையும் வழங்கப்பட்டு வருகின்றன, 6 ஆம் வகுப்பி
லிருந்து 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு பாடநூல்
மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்கு ரூ. 40 வீதமும், 9 மற்றும்
10 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு ரூ. 60 வீதமும் ஆண்டுதோறும்
வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், குழந்தைகள் பிரிவில்
படிக்கும் குழந்தைகளுக்கு (5 ஆம் வகுப்பு வரை) பாட நூல்க
ளுக்காக ரூ. 15 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

2.26. தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில்
தலா 60 மாணவிகள் பயன்பெறும் வகையில் மேல்நிலைக் கல்விப்
பிரிவு நடத்தப்பட்டு வருகின்றது. இப்பிரிவில் பயிலும் மாணவி
களுக்கு பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகளுக்காக ஆண்டொன்
றிற்கு ரூ.100 வீதமும், சீருடைக்காக ரூ. 110 வீதமும் உதவித்
தொகை வழங்கப்பட்டு வருகிறது, தஞ்சாவூரில் 1988–89 இல்
தொடங்கப்பட்டுள்ள மேல்நிலைப் பிரிவில் (விஞ்ஞானம்) 60
மாணவியர் பயின்று வருகின்றனர். இவர்களுக்கு மாதம் ரூ.
75 வீதம் உதவித் தொகையும், ஆண்டொன்றிற்கு ரூ.200 வீதம்
பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகளுக்காகவும் உதவித் தொகை
வழங்கப்பட்டு வருகிறது. 1988–89ல் தாம்பரம் மற்றும் கடலூர்
சேவை இல்லங்களில் இப்பிரிவில் சேர்க்கப்படும் மாணவிகளின்
எண்ணிக்கை அறுபதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

2.27. உடல் ஊனமுற்ற மகளிருக்காகவும். குழந்தைகளுக்
காகவும் முறையே 30 மற்றும் 20 பேர் பயன்படத்தக்க அளவில்
தாம்பரம் சேவை இல்லத்தில் ஒரு தனிப்பிரிவு நடைபெற்று
வருகிறது.





2.28. தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவை
இல்லங்களில் செயலகப் பிரிவு நடைபெற்று வருகின்றது. ஒவ்
வொரு சேவை இல்லத்திலும் தலா 20 பெண்கள் பயன்பெற்று
வருகின்றனர். ஓராண்டு பயிற்சிக்குப் பின்னர் இம்மாணவிகள்
அரசு தொழில் நுட்பத் தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். இப்
பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 20 வீதம் உதவித் தொகை
வழங்கப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டு முதல் தையல் பிரிவில்
பயிற்சி பெறும் மாணவிகளுக்கு ஆண்டுக்கு ரூ, 250 வீதம் உதவித்
தொகை மொத்தமாக வழங்கப்படுகிறது.

2. 29. 1983-84 முதல் இத்துறையின் சேவை இல்லங்கள்
மற்றும் அரசு மானியம் பெறும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும்
சேவை இல்லங்களில் பத்தாம் வகுப்பு தேறிய மாணவிகள் பொது
சுகாதாரத்துறையால் நடத்தப்படும் பல்நோக்கு சுகாதாரப்
பணியாளர் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். பொது சுகா
தாரத் துறையினரால் தமிழ்நாட்டில் 9 இடங்களில் நடத்தப்படும்
பயிற்சி நிலையங்களில் $1\frac{1}{2}$ ஆண்டுகள் இப்பயிற்சி அளிக்கப்
படுகிறது. இது நாள்வரை 827 சேவை இல்ல மாணவிகள்
பயிற்சி பெற்றுள்ளனர். அரசு சேவை இல்லங்களுக்காக 39.40
லட்சங்கள் 1990-91-ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது.

2.30. உள்ளுறை மாணவிகள் மற்றும் குழந்தைகளுக்கு
வழங்கப்படும் உணவில் உள்ள மனநிறைவின்மையை போக்க
வழங்கப்படும் உதவித்தொகையினை 1990-91–ல் மாத
மொன்றிற்கு ரூ. 75–லிருந்து ரூ. 120 ஆகவும் ரூ. 60-
லிருந்து ரூ. 90 ஆகவும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.31. தற்போது சேவை இல்லத்தை சுற்றி எழுப்பப்
பட்டுள்ள முட்கம்பி சுவர் சேதமுற்று இருப்பதாலும் மாணவி
களின் பாதுகாப்பிற்காக நான்கு புறங்களிலும் சுற்றுச்சுவர் படிப்
படியாக கட்ட திட்டமிடப்பட்டது. 1987-88-ல் வடபுற சுவர்
கட்டுவதற்காக பணிமேற்கொள்ளப்பட்டது. 1990-91-ல் ரூ.1.95
லட்சம் செலவில் வடக்குபுறச்சுவர்கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது

**ஆசிரியர் பயிற்சிப்பள்ளி:**

2.32. ஒவ்வொரு பிரிவிலும் 50 பேர் பயிலும் வண்ணம்
இளநிலைப் பிரிவு, முதுநிலைப்பிரிவு என இரு பிரிவுகளுடன்
1966-67-ல் தாம்பரத்தில் தொடங்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப்
பள்ளி தற்போது பல்லாவரத்தில் செயல்பட்டு வருகிறது.

2.33. சேவை இல்லங்கள் மூலம் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி
பெற்று வயது வரம்பு கடந்த விதவைகள், கணவனால்
கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு இப்
பயிற்சியில் சேர முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இரண்டாண்டு

கால இப்பயிற்சியில் பயிலும் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 120 வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி முடித்த பின் அவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக இத் துறையால் நடத்தப்படும் பள்ளிகளிலும், கல்வித்துறை மற்றும் தனியாரால் நடத்தப்படும் பள்ளிகளிலும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளிலும் பணியமர்த்தப்படுகிறார்கள். இவ் வேலைக்காக அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் பெயரை பதிவு செய்திருந்தால் மட்டும் போதுமானது. வேலை வாய்ப்பில் இவர்களது வயது வரம்பு 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1990–91 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.10 லட்சங்கள் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

**அரசால் நடத்தப்படும் பணிபுரியும் மகளிர் விடுதிகள்:**

2.34. பணிபுரியும் மகளிருக்கு, குறிப்பாக நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு, பாதுகாப்பும் வசதியும் செய்து கொடுக்கும் பொருட்டு பணிபுரியும் மகளிர் விடுதிகள் அமைக்கும் திட்டத்தை அரசு பல நகரங்களில் செயல்படுத்தி வருகிறது. சென்னை, கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, ஒசூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஏழு இடங்களில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. சென்னையிலுள்ள இல்லத்தில் 75 பேரும், கடலூரில் 30 பேரும் இதர ஐந்து இடங்களில் தலா 50 பேரும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

2.35. இவ்விடுதிப் பணியாளர்களான ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையலர்கள், ஒரு அலுவலக உதவியாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு துப்புரவாளரின் ஊதியத்திற்கான மொத்த செலவையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. உணவுச் செலவு, கட்டிட வாடகை, மின் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் உள்ளுறுப்பினர்களிடமிருந்து சம அளவில் ஈடுசெய்யப்படுகிறது. ரூ. 6.13 லட்சங்கள் 1990-91-ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மகளிர் மன்றங்கள்:**

2.36. கிராம மகளிர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட மகளிர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் மாநிலத்தில் மொத்தம் 11,520 மகளிர் மன்றங்கள் உள்ளன. இம்மகளிர் மன்ற அமைப்பாளர்களுக்கு காலாண்டிற்கொருமுறை ரூ. 90 மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. குழந்தைகள் கண்காட்சி மற்றும் கல்விச் சுற்றுலாவுக்காக முறையே ரூ. 200-ம், ரூ. 440-ம் வழங்கப் படுகிறது. புத்தகங்கள், பத்திரிகைகள் வாங்கப்பட்டு அதன் மூலம் சமூகக் கல்வியை வளர்க்கும் பொருட்டும் ஆண்டொன் றிற்கு ரூ. 360 வழங்கப்படுகிறது.



2.37. சிறப்பாகச் செயல்படும் மகளிர் மன்றங்களுக்கு ஆண்டு தோறும் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. சிறந்த மகளிர் மன்றங்கள், மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டு ரூ. 1,000, ரூ. 600, ரூ.400 வீதம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு 127 பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

1990–91 ஆம் ஆண்டிற்காக ரூ. 0.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விதவைகளின் குழந்தைகளுக்கு பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்குதல்**

2.38. ஆண்டு வருமானம் ரூ. 6,400—க்கு குறைவாகவுள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம் 1978-79 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ரூ. 15 வீதமும், நடுநிலைப் பள்ளியில் பயில்வோருக்கு ரூ. 30 வீதமும், உயர்நிலைப் பள்ளியில் பயில்வோருக்கு ரூ. 90 வீதமும், மேல்நிலைக் கல்வி பயில்வோருக்கு ரூ. 190 வீதமும், ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இத்திட்டத் தினால் ஒவ்வோராண்டும் 4,000 குழந்தைகள் பயனடைகிறார்கள். 1990–91 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மகளிருக்கான திருமண உதவித் திட்டங்கள்:**

2.39. மகளிர் திருமணத்திற்காக இரண்டு விதமான உதவிகள் இவ்வியக்ககத்தால் வழங்கப்படுகின்றன.

2.40. (அ) ஏழை விதவையரது மகள் திருமண நிதி உதவித் திட்டம்:—ஏழை விதவையரது மகளிர் திருமணத்திற்காக ரூ. 1,000 வீதம் வழங்கப்படுகிறது. திருமண உதவி கோரும் மகளிர் 18-க்கும் 30-க்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும். ஒரு மகளிர் திருமணத்திற்கு மட்டுமே இவ்வுதவி பெற முடியும். இத்திட்டத்தால் ஒவ்வொரு ஆண்டும் 1,015 பெண்கள் பயன் பெறுகின்றனர். 1990–91 ஆம் ஆண்டிற் கான நிதி ஒதுக்கீடு ரூ. 10.15 இலட்சங்களாகும்.

2.41. (ஆ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்:—இந்த அரசு ஒரு சிறப்புத் திட்டமாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், என்று மகளிர் மேம்பாட்டிற்காக அறிமுகப்படுத்தி யுள்ளது. இதன்படி 8-ம் வகுப்பு படித்த ஏழைப் பெண் களுக்குத் திருமண உதவியாக ரூ. 5,000 வழங்கப்படுகிறது.

பழங்குடியினர் மகளிர் 5-வது வகுப்பு படித்திருந்தால் போதுமானது. மாநிலம் முழுவதும் கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்கள் உட்பட இத்திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்படுகிறது. இதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு:—

**வயது**.—திருமணம் செய்யும் காலத்தில் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

ஆண்டுவருமானம்.—ரூ. 5000.

செயலாக்கம்.—சென்னை, மதுரை மற்றும்] கோவை ஆகிய மாநகராட்சிகளில் மாநகராட்சி ஆணையரும், ஊரகங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும், நகராட்சியில் நகராட்சி ஆணையரும், நகரியத்தில் தனி அலுவலரும், அந்தந்த மாவட்ட சமூகநல அலுவலரும், இதற்கான தொகையினைப் பெறவும், வழங்கவும் அனுமதிக்கப்பட்டு இத்திட்டம் சீரிய முறையில் செயல்பட பொறுப்பானவர்கள். மாநில அளவில் சமூக நல இயக்குநர் திட்ட செயலாக்கத்திற்கு பொறுப்பானவர்.

2. 42. நடைமுறை—இவ்வுதவி கோரி மணப் பெண்ணால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் இரு நகலாக அனுப்பப்பட வேண்டும். இவ் விண்ணப்பங்களில் குறிந்துள்ள விபரங்களை களப்பணியாளர்கள் நேரடியாகச் சென்று சரி பார்த்திடுவர். மேற்படி சரிபார்ப்பு நடத்தி உரிய சான்று வழங்கப்பட்ட பின்னரே மனுதாரருக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

2.43. 1989–90 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 6.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1990–91 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்:

2.44. அரசு 3–6–1989 முதல் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பத்தைக் சார்ந்த பெண்களுக்கு பேறு காலத்திற்கு முன் இரு மாதங்களுக்கும் அதற்குப்பின் இரு மாதங்களுக்கும் நிதி உதவி செய்யும் பொருட்டு' 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டம்'' செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.45. 18 வயது நிரம்பிய பெண்டிருக்கு இத்திட்டத்தின் கீழ் முதல் இரண்டு குழந்தைகளுக்கு பண உதவி செய்யப்படும். ஆண்டு வருமானம் ரூ. 5,000–க்கு மிகாமலிருத்தல் வேண்டும்.

2. 46. உதவித் தொகை ரூ. 200 மொத்தமாக (மாதம் ரூ. 50 வீதம்) முன்னிரண்டு மற்றும் பின்னிரண்டு மாதங்களுக்கு வழங்கப்படும். விண்ப்பங்களில் குறித்துள்ள வயது, வருமானம்



(குடும்ப கார்டு அட்டை) மற்றும் இவ்வுதவி பெற வேண்டிய தகுதி (மருத்துவச் செவிலியரது சான்று) ஆதியவற்றிற்கான ஆதாரங்களும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

2.47. ஊரகங்களில் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களும், நகராட்சி மற்றும நகரியங்களில் ஆணையர்களும், சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் அந்தந்த மாநகராட்சி ஆணையரும் இத்திட்டத்தினை செயல்படுத்துவர். கிராம மருத்துவச் செவிலியர்/பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் மூலமாக கருவுற்ற பெண்களுக்கு இத்தொகை பட்டுவாடா செய்யப்படும்.

2.48. மாநில அளவில் இத்திட்டத்தின் சீரிய செயலாக்கத்திற்கு சமுகநலத் துறை இயக்குநர் பொறுப்பானர். இத்திட்டத்திற்கென 1989–90 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

டாக்டர். தர்மாம்பாள் அம்மையார் திட்டம் (விதவை மறுமணத்திட்டம்):

2.49. விதவை ஒருவர் மறுமணம் செய்து கொண்டால் அத்தம்பதியரின் பெயரில் ரூ. 5,000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற 18 வயது முதல் 30 வயதுடைய விதவைகளே தகுதியுடையவர்கள். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 100 மகளிர் பயனடைகின்றனர்.

2.50. மேற்கண்ட திட்டத்தின் மூலம் பயனடைவோர் வருமானம் அல்லது அவர்களது குடும்ப வருமானம் ரூ. 6,400 க்குள் இருத்தல் வேண்டும். 1989-90 ஆம் ஆண்டிற்கு ரூ. 9 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 180 தம்பதிகள் பயனடைந்துள்ளனர் 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பணி புரியும் மகளிர் விடுதி கட்ட நிதி உதவி அளித்தல்:

2.51. தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால், பணிபுரியும் மகளிர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கான மொத்த செலவில் 75 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. மொத்த மதிப்பீட்டில் 15 சதவிகிதம் அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைந்த தொகையோ அத்தொகை மாநில அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை பயன்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டிடம் கட்ட, சொந்தமாக நிலம் வைத்திருந்து, மாநகராட்சி–நகராட்சியின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். இவ்வகைக்காக பிற அரசிடமிருந்தோ

நிறுவனங்களிடமிருந்தோ உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டிடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் 1988-89 வரை 47 பணி புரியும் இல்ல கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.52 குறைந்த வருமானமுள்ள பணிபுரியும் மகளிர்க்கான விடுதி தொடங்கல்: பல்வேறு இடங்களில் பணிபுரியும் குறைந்த வருமானமுள்ள மகளிர்க்கு தனியார் நிறுவனம் மூலம் ஒரு பணிபுரியும் மகளிர் விடுதி 1990–91 ஆம் ஆண்டில் தொடங்க ரூ. 1.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுய வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் இலவச தையல் இயந்திரம் வழங்குதல்:

2.53. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,000 தையல் இயந்திரங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மகளிர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்ற மகளிருக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 7.60 லட்சங்கள் ஆகும்.

2.54. தகுதிவாய்ந்த ஏழை மகளிர்களிடம் இருந்து தையல் இயந்திரம் வழங்க கோரி விண்ணப்பங்கள் அதிக அளவில் பெறப்பட்டதால் 1989-90க்கு 1,900 மகளிர் பயன் பெறும் வகையில் இத்திட்டத்திற்கு ரூ. 14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டிற்கு வழங்கப்படும் தையல் இயந்திரங்களின் எண்ணிக்கை 1,000-லிருந்து 2,000 ஆக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசு நிதி உதவியுடன் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்கள்:

2.55. அரசு நிதியுதவியுடன் கஸ்தூரிபா சேவிகாஸ்ரமத்தினால் காந்திகிராமம், ஈரோடு ஆகிய இடங்களிலும், மதுரை சேவாஸ்ரம் மதுரையிலும் முறையே ஜூன் 1968, ஜூலை 1981, நவம்பர் 1981-ல் சேவை இல்லங்கள் தொடங்கி நடத்தி வருகின்றன.

2.56. காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 120 மாணவிகளுக்கும், மதுரை மற்றும் ஈரோட்டிலுள்ள சேவை இல்லங்களில் தலா 40 மாணவிகளுக்கும் இரண்டாண்டு குறுகிய கால 10ம்வகுப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 75 வீதம் உதவித் தொகை மானியம் வழங்கப்படுகிறது. இது தவிர மதுரை மற்றும் ஈரோட்டிலுள்ள



சேவை இல்ல மாணவிகள் ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ. 15 வீதம் தொகுப்பூதியம் வழங்கப்படுகிறது. ஒரு பட்டதாரி ஆசிரியர், ஒரு தமிழ் ஆசிரியர் ஆகிய இருவருக்கான ஊதியத் தொகை ஒவ்வொரு சேவை இல்லத்திற்கும் மானியமாக வழங்கப்படுகிறது. சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மகளிருக்காக, தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் செயலகப் பிரிவு நடத்தும் சென்னை ''ஸ்திரி சேவா மந்திர்'' என்னும் நிறுவனத்திற்கு உதவித்தொகை மானியம் வழங்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.08 லட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிர்க்கான பயிற்சி அளித்தல்:

2.57. பல்வேறு சமூகநல திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த கிராம நல அலுவலர் மற்றும் சமூகநல விரிவாக்க அலுவலர்கள் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டு அதற்கென 1990–91 ல் ரூ. 1.93 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் லிமிடெட்.

முன்னுரை :

2.58 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் ரூபாய் ஒரு கோடி மூலதனத்துடன் மாநில அரசின் நிறுவனமாக நிறுமச் சட்டம் 1956ன் கீழ் 1983ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் பதிவு செய்யப்பட்டது. இக் கழகத்தின் பங்கு மூலதனத்தில் மத்திய அரசும், மாநில அரசும் முறையே 49 மற்றும் 51 விழுக்காடு அளவிற்கு முதலீடு செய்ய ஒப்புக் கொண்டுள்ளன.

1989-90 ஆம் ஆண்டில் இக்கழகம் ரூபாய் 250.92 இலட்சம் செலவில் சுமார் 2,569 கிராமப்புற மகளிருக்கு வேலை வாய்ப்பு மற்றும் சுயத்தொழில் துவங்க உதவி அளித்துள்ளது. இக்கழகம் தொடங்கியதிலிருந்து 8,314 மகளிருக்கு உதவி புரிந்துள்ளது. இவற்றில் குறிப்பிடத் தக்க திட்டங்கள் பன்னாட்டு வளர்ச்சிக்கான நார்வே நாட்டு நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள மகளிர் நெசவாளர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள், மத்திய அரசின் வேலை வாய்ப்புக்கான உதவியளிக்கும் ஸ்டெப் திட்டம் மற்றும் சிறப்பு நிதியுதவித் திட்டம் இவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப் பட்ட ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் மற்றும் விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியுதவிடன் மேற்கொள்ளப்படும் விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும் ஆகும்.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்:**

2,59. இக்கழகம் ரூ. 4,592 இலட்சம் செலவில் தருமபுரி, சேலம் மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களில் 1989–90 ஆம் ஆண்டு தொடங்கி 7 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் ஒரு பெரிய அளவிலான மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் விவசாயம் மற்றும் அதனை சார்ந்த பலவித பொருளாதார மற்றும் தொழிற் திட்டங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தில் உதவி பெறும் பெண்களுக்கு தற்போது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் முறையில் மானியம் மற்றும் கடனுதவி வழங்கப்படும். சுமார் 40,320 பெண்கள் இத்திட்டத்தினால் பயனடைவர். இத்திட்டமானது, ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சார்ந்த பெண்களை ஒரு குழுவாகச் சேர்த்து அக்குழுவின் மூலமாக அப்பகுதியை வளர்ச்சியடையச் செய்வதற்கான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்வதை, தனது சீரிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தில் ஆண்டுதோறும் பயனடைவோரின் எண்ணிக்கை மற்றும் மொத்த செலவுத் தொகைகள் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | பயனடைவோரின் எண்ணிக்கை. | மொத்த தொகை (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1989–90 .. .. | 536 | 84 |
| 1990–91 .. .. | 1,624 | 230 |
| 1991–92 .. .. | 5,400 | 566 |
| 1992–93 .. .. | 11,340 | 1,174 |
| 1993–94 .. .. | 14,220 | 1,258 |
| 1994–95 .. .. | 7,200 | 858 |
| 1995–96 .. .. | .. | 152 |
| | 40,320 | 4,322 |

இத்திட்டத்தின் வளர்ச்சியினைக் கண்டு இதர மாவட்டங்களுக்கு விரிவாக்கப்படும்.

**தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மற்றும் சுய வேலைவாய்ப்புக்கு உதவியளிக்கும் திட்டங்கள்:**

2.60 மகளிருடைய செயல் திறன்களை மேம்படுத்தவும், சுய வேலை வாய்ப்புத் திட்டங்களைப் பற்றி அறிவுறுத்தவும் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும், இக்கழகம்



தமிழ்நாடு தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனத்துடன் இணைந்து இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் தொழில் ஊக்குவிப்பு முகாம்களை நடத்த, முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. இந்த நடப்பு ஆண்டில் கும்பகோணம் ஈரோடு மற்றும் சேலம் ஆகிய 3 இடங்களில் நடத்தப்பட்ட மகளிருக்கான தொழில் ஊக்குவிப்பு முகாம்களில் சுமார் 75 பெண்கள் பயனடைந்துள்ளனர். இக்கழகத்தின் தொழில் வளர்ச்சிப் பிரிவினை வலுப்படுத்தும் நோக்கத்தோடு இவ்வாண்டில் அதிக அளவில் தனிப்பட்ட பெண்களுக்கு உதவியளிக்கும் வகையில் தொழிற் திட்ட அறிக்கைகளை தயார் செய்யவும், தொழில் முனைவோர்க்கு வங்கிகள் மூலம் காலதாமதமின்றி கடனுதவி பெற்றுத் தரவும், பெண் தொழில் முனைவோர் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விற்பனை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பலவிதப்பட்ட பொருட்களில் விற்பனை வாய்ப்புகள் பற்றி பெண் தொழில் முனைவோருக்கு வழிகாட்டும் பொருட்டு, இது குறித்து விற்பனை வாய்ப்புகளை பற்றி ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**1990–91 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்.**

2.61. இக்கழகம் 1990–91 ஆண்டில் 3,819 பெண்கள் பயன்பெறுமாறு மொத்தம் ரூ. 324.52 இலட்சம் செலவில் கீழ்வரும் திட்டங்களை செயல்படுத்த உத்தேசித்துள்ளது:—

| வரிசை எண்ணும் திட்டமும். | பயனடைவோர் எண்ணிக்கை. | நிதி உதவித் தொகை. | | மொத்த செலவுத் தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) |
| | | | | (ரூபாய் இலட்சங்களில்) |
| 1 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம். | 1,624 | விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவன மானியம் .. | 163.32 | |
| | | வங்கி கடன் .. | 66.68 | 230.00 |
| 2 கன்று வளர்ப்புத்திட்டம் .. | 1,400 | சிறப்பு மைய நிதி உதவித் திட்ட மானியம். .. | 37.75 | |
| | | வங்கி கடன் | 20.89 | 58.64 |
| 3 'டர்க்கி டவல்' பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடம் அமைக்க தொண்டு நிறுவனத்திற்கு உதவி அளித்தல். | 100 | நார்வே நாட்டு பன்னாட்டு வளர்ச்சி நிதி மானியம் | 9.96 | |
| | | தொண்டு நிறுவன பங்கு .. | 6.64 | 16.60 |



| | | | | |
|---|---|---|---|---|
| 4 'நீக்குச்சி' பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடம் அமைக்க தொண்டு நிறுவனத்திற்கு உதவி அளித்தல். | 60 | நார்வே நாட்டு பன்னாட்டு வளர்ச்சி நிதி மானியம் | 3.49 | |
| | | தொண்டு நிறுவன பங்கு | 0.77 | 4.26 |
| 5 'செயற்கை வைரம் பட்டை தீட்டுதல்' பயிற்சி மற்றும் தொழிற் கூடம் அமைக்க தொண்டு நிறுவனத்திற்கு உதவி அளித்தல். | 100 | நார்வே நாட்டு பன்னாட்டு வளர்ச்சி நிதி மானியம் .. | 3.98 | |
| | | தொண்டு நிறுவன பங்கு .. | 1.04 | 5.02 |
| 6 தொழிற் பயிற்சி முகாம்கள். | 535 | தமிழக அரசு .. | 10.00 | 10.00 |
| | 3,819 | | | 324.52 |

மேற் குறிப்பிடப்பட்ட திட்டங்களுடன் மேலும் ரூபாய் 507 இலட்சம் செலவில் சுமார் 16,517 பெண்கள் பயன்பெறும் வகையில் மகளிருடைய வருவாயினை அதிகப்படுத்தவும், சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும் பலவகைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதோடு இத் திட்டங்களுக்கு மத்திய அரசு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் மூலமாக பொருளுதவி பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழில், பட்டு உற்பத்தி, மீன் வளர்ப்பு ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கவும், தொண்டு நிறுவனங்கள் குடிசைத் தொழிற்கூடங்களை அமைப்பதற்கும், கால்நடை வளர்ப்பு சம்பந்தமான திட்டங்களை மேற்கொள்ளவும் உதவியளிக்கப்படும்.

2.62. இக் கழகம் பெண்களுக்கு கல்வி, சுகாதாரம், ஊட்டச் சத்து, குழந்தை வளர்ப்பு மற்றும் வருவாயினைப் பெருக்கும் நடவடிக்கைகள் ஆகிய பலவித நடவடிக்கைகளில் பெண்களுக்கு ஒருங்கே உதவியளிக்கும் நோக்கத்தோடு 'ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம்' ஒன்றிற்கு முழு வடிவம் கொடுத்து வருகிறது. இத்திட்டத்தினால் சுமார் 50,000 கிராமப்புற மகளிர் ரூபாய் 124 கோடி செலவில் ஐந்து ஆண்டுகளில் பயன் பெறுவர். வெளிநாட்டு நிறுவனத்தின் நிதி உதவியுடன் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கும் வழிவகை செய்யப்படும். சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துத் திட்ட செயல்பாடுகளைச் சிறப்பாகப் பெண்களுக்கு வலியுறுத்த, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்ட அலுவலர்களும் இத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படுவார்கள். கச்சாப் பொருட்களின் நிலைமை, விற்பனைக்கான வாய்ப்புகள் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு மகளிர்க்கு ஏற்ற வருவாய் பெருகுவதற்கான தொழில் முறைகளையும் இத் திட்டம் வகுக்கும். தொண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத் திட்ட செயல்பாட்டில் ஈடுபடுத்தப்படும்.



## அத்தியாயம்—3.

## குழந்தைகள் நலம்.

### தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் :

3.1. சமூகநல இயக்ககத்தின் பணிகளில் குழந்தைகள் நலம் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்துறை கீழ்க்காணும் சத்துணவு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.—

1. தமிழ்நாடு சத்துணவு திட்டம்.
2. தமிழ்நாடு ஊட்டச்சத்து திட்டம்.
3. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் (மத்திய அரசால் செயல்படுத்தப்படுகிறது).

பொருளாதாரத்தில் நலிவுற்ற குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவது மட்டுமல்லாமல் 0-5 வயது வரையுள்ள குழந்தைகளின் அனைத்து வளர்ச்சிக்கும் வழி வகை காண்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### தமிழக அரசு சத்துணவுத் திட்டம்.

3.2. இத்திட்டம் தமிழ்நாட்டில் 1–7–1982 முதல் கிராமப் புறங்களிலும் 15–9–1982 முதல் நகர்ப்புறங்களிலும் தொடங்கப் பட்டது. தற்போது 28,890 குழந்தைகள் நல மையங்கள் நகர்ப் புறங்களிலும், கிராமப்புறங்களிலும் நடைபெற்று வருகின்றன. இதில் 157 குழந்தைகள் நல மையங்கள் மலைவாழ் பகுதியினர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 18.55 லட்சங்களாகும்.

3.3. குழந்தைகளுக்கு நேரடியாக பயன் அளிப்பதுடன் ஆயிரக் கணக்கான வேலையற்ற ஏழை மகளிர் பலர் இத்திட்டத்தின் மூலமாக வேலை வாய்ப்பு பெற இத்திட்டம் வழி வகுத்துள்ளது. நாடு முழுவதும் சுமார் 28,890 பெண்கள் குழந்தைகள் நல அமைப்பாளர்கள்/அங்கன்வாடி பணியாளர்களாகவும் 54,518 பெண்கள் குழந்தைகள் நல உதவியாளர்கள்/ஆயாக்களாகவும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

இத்திட்டத்தில் முக்கியமான மூன்று அம்சங்கள் பொருந்தியுள்ளன. அவை—

1. ஊட்டச்சத்து.
2. முன்பருவக் கல்வி.
3. சுகாதார பாதுகாப்பு.

### 3.4. ஊட்டச்சத்துத் திட்டம் :

ஊட்டச்சத்து குறைவினை தடுப்பதற்கு குழந்தைகளுக்கு சுகாதார முறையில் தலத்திலேயே சமைக்கப்பட்ட சூடான உணவு மதிய உணவாக மையங்களில் வழங்கப்படுகிறது. [இந்த உணவு

கீழ்க்கண்ட அளவுப் பொருட்களைக் கொண்டு சமைக்கப்படுகிறது:

| | | | |
|---|---|---|---|
| 1. அரிசி | .. | 80 | கிராம் |
| 2. பருப்பு | .. | 10 | கிராம் |
| 3. எண்ணெய் | .. | 1 | கிராம் |
| 4. தாளிதம் மற்றும் காய்கறி | .. | 50 | கிராம் |

3.5. ஒரு குழந்தைக்கு ஒரு வேளை உணவுக்காகும் செலவு 44 பைசா, இச்சத்துணவு மூலமாக ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான சுமார் மூன்றில் ஒரு பகுதி புரதச்சத்து மற்றும் ஊட்டச்சத்துக்கள் தினந்தோறும் கிடைக்கும் என ஊட்டச்சத்து வல்லுநர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 2,000 மதிப்புள்ள சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. எரிபொருட்களுக்கான செலவினை மீதப்படுத்த குழந்தைகள் நல அமைப்பாளர்கள் வைக்கோல் பெட்டியை உபயோகிப்பது குறித்து அறிவுரைகளுடன் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளார்கள்.

3.6. முட்டை விநியோகம் :

சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை தலா ஒரு கோழி முட்டை 1989 ஜூன் 3-ம் தேதி முதல் வழங்கப்படுகிறது.

3.7. முன்பருவக் கல்வி :

அனைத்து சத்துணவு மையங்களும் நர்சரிப் பள்ளிகளாக மாற்றப்பட்டன. ஆகவே ரூ. 1,500 மதிப்புள்ள கல்வி உபகரணங்கள் விளையாட்டு சாமான்கள் மற்றும் மேஜைகள் எல்லா மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

3.8. உடல் நலம் பேணுதல் :

சீரான உடல்நிலையைப் பராமரிப்பதற்காக அடிக்கடி மருத்துவ பரிசோதனை செய்வதன் மூலமும் தடுப்பூசிகளின் மூலமும் குழந்தைகளின் உடல் நலம் பேணப்படுகிறது. கிராமப் புறங்களிலும் நகராட்சிகளிலும் பொது சுகாதார துறையினர் குழந்தைகள் உடல் நலத்தைப் பேணுகின்றனர். குழந்தைகள் உடல் வளர்ச்சியையும் ஊட்டச்சத்து நிலையையும் மதிப்பிடுவதற்கு அவர்களின் எடைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு அதற்கென்று உள்ள சுகாதார அட்டைகளில் பதிவு செய்யப்படுகின்றன. இதற்காக அனைத்து குழந்தைகள் நல மையங்களுக்கும் எடை பார்க்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.



3.9. குடிநீர் சேமிப்பு :

மையங்களில் குடிநீரை சேமிப்பதற்கு மூடியுள்ள ஜி.ஐ. டிரம்கள் முதற்கட்டமாக வாங்க அரசு 22–3–1988 தேதியிட்ட ஆணை எண் 710. ச.ந. துறையில் உத்தரவு வழங்கியுள்ளது. அதன்படி முதற்கட்டமாக 14,063 குழந்தைகள் நல மையங்களுக்கு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் மூலமாக ஜி.ஐ. டிரம்கள் வழங்கப்பட்டுள்ளன.

3.10 பழைய பாய்களுக்கு பதிலாக புதிய பாய்கள் தமிழ்நாடு சத்துணவு மையங்களுக்கு விநியோகம் செய்தல் :

வட ஆற்காடு, தர்மபுரி, சேலம், செங்கை–அண்ணா ஆகிய மாவட்டங்களில் 1989–90 ஆம் நிதியாண்டில் 7,607 குழந்தைகள் நல மையங்களில் பழைய பாய்களுக்குப் பதிலாக புதிய பாய்களை ஒரு மையத்திற்கு 5 பாய்கள் வீதம் கதர் கிராம கைத்தொழில் வாரியம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

3.11. முதியோர்களுக்கான சத்துணவு 15–11–983 முதல் உதவித் தொகை பெறும் முதியோருக்கும் இத்திட்டத்தின் கீழ் உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொருவருக்கும் நாள் தோறும் 200 கிராம் அரிசி, 15 கிராம் பருப்பு, 1 கிராம் எண்ணெய் 50 கிராம் காய்கறி மற்றும் தாளிதம் அடங்கிய சத்துணவு வழங்கப்படுகிறது. அவர்கள் தங்களது உணவை முன் பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு தொந்தரவு இல்லாத வகையில் வீடுகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

3.12. 1–1–1984 முதல் அரசு இத்திட்டத்தை முன்னாள் படை வீரர் நல நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறும் முன்னாள் படை வீரர்களுக்கும் அவர்தம் விதவையர்கட்கும் விரிவுபடுத்தியுள்ளது.

3.13. தற்போது இத்திட்டத்தினால் 2,12,991 முதியோரும் முன்னாள் படை வீரர்களும் அவர்தம் மனைவியரும் பயன்பெற்று வருகின்றனர். தாய்மார்களுக்கு குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் சத்துணவு பற்றிய சமுதாயக் கல்வியினை போதிக்கும் மையங்களாக மேற்படி குழந்தைகள் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அட்டவணை.

மையங்களின் எண்ணிக்கை :

| | | |
|---|---|---|
| ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் சாராதது. | .. | 21,604 |
| ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் | .. | 7,113 |
| சென்னை பெருநகர் அபிவிருத்தி திட்டம் | .. | 173 |
| மொத்தம் | .. | 28,890 |

2 ப்ளஸ் முதல் 4 ப்ளஸ் வயதுக்குள் பயன்பெறும் குழந்தைகள் 18.55 லட்சம். பயன்பெறும் முதியோர் மற்றும் முன்னாள் படைவீரர்கள் 2,12,991. இவற்றில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட மையங்களும் சென்னை பெருநகர் அபிவிருத்தி திட்ட மையங்களும் அடங்கும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் :

3.14. சமுதாயத்தில் நலிவுற்ற குழந்தைகள், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் அது தொடர்பான பற்றாக் குறைகளை சமாளிப்பதற்காக ஒருங்கிணைந்த முறையில் வடிவமைக்கப்பட்ட ஒரு பணியே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமாகும்.

இத்திட்டத்தின் பணிகள் கருவிலுள்ள குழந்தையிலிருந்து தொடங்கி 6 வயது ஆகும் வரை அக்குழந்தைக்கு தேவையான சத்துணவு, சுகாதாரம் மற்றும் ஏனைய வளர்ச்சிக்கான தேவைகளையும் கருத்தாக கவனிக்கிறது. இத்திட்டத்தின் முக்கிய பணிகளாவன :

1. துணை ஊட்டச்சத்து
2. முன்பருவக் கல்வி
3. மருத்துவ சோதனை
4. நோய்த்தடுப்பு
5. ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி
6. மேல் மருத்துவச் சோதனை.

3.15. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் முதன் முதலில் 1975–76-ம் ஆண்டு சென்னை, தளி மற்றும் நிலக்கோட்டை ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டது. அதன் பிறகு மேலும் விரிவாக்கப்பட்டு தற்போது 78 திட்டங்களில் செயல்பட்டு வருகிறது. நகர்ப்புரமான சென்னை, மதுரை, கோவை, திருச்சி, வேலூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், ஆலந்தூர், காஞ்சீபுரம், திருவெகற்றியூர், சேலம், தஞ்சாவூர், கும்பகோணம், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், ராஜபாளையம், கடலூர் ஆகிய இடங்களிலும் கிராமப்புறங்களான தளி, நிலக்கோட்டை, புதுக்கோட்டை, செங்கை–அண்ணா, காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டங்களிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு மலைப் பகுதியிலும், சேலம் மாவட்டத்தில் ஒரு மலைப் பகுதியிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

3.16. ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டமும் 1,00,000 மக்கள் தொகை உள்ள இடங்களில் நிறுவப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு திட்டத்திலும் ஒரு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரும் 4 அல்லது 5 மேற்பார்வையாளர்களும் உள்ளனர். கிராம மற்றும் மலைப்புறத்



திட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் சுகாதாரப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு திட்டத்திலும் சுமார் 100 அங்கன்வாடி மையங்கள் செயல்படுகின்றன.

3.17. அங்கன்வாடி மையங்கள் மூலம்தான் இத்திட்டப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு அங்கன்வாடி மையமும் 1,000 மக்கள் தொகை உள்ள இடங்களில் நிறுவப்பட்டு 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் 40 பேருக்கும், 0–2 வயது குழந்தைகள் 30 பேருக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 30 பேருக்கும் ஆக மொத்தம் 100 நபர்களுக்கு திட்டப்பணிகள் வழங்கப்படுகிறது. கீழ்க்கண்ட பணிகள் ஒவ்வொரு மையத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

3.18 இணை உணவு வழங்குதல்:

மத்திய அரசின் உதவியுடன் கோதுமையை அடிப்படையாகக் கொண்ட 'சத்து' என்னும் உணவு 6 மாதத்திலிருந்து 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகிறது. 80 கிராம் கொண்ட இச்சத்துணவு கீழ்க்காணும் விகிதத்தில் வருடத்தில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

கோதுமை 60 சதவீதம்
பொட்டுக் கடலை 15 சதவீதம்.
வெல்லம் 25 சதவீதம்.

3.19. இது நபருக்கு நாளொன்றுக்கு 0,50 பைசா வீதம் செலவிடப்படுகிறது. இச் செலவினம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசால் மீளப் பெறப்படுகிறது. தமிழ்நாடு ஊட்டச் சத்துணவு திட்டத்திலிருந்து ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டங்களாக மாற்றப்பட்ட பகுதியிலுள்ள 6 முதல் 36 மாதங்கள் வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கர்நாடகா அக்ரோகான் புராடெக்ஸ் லிமிடெட் மூலம் உற்பத்தி செய்யப்படும் இணை உணவோ அல்லது துறையிலுள்ள பெண்கள் கூட்டுறவு சங்கம் மூலம் தயாரிக்கப்படும் உணவோ வழங்கப்பட்டு வருகிறது. கர்நாடகா கான் புராடெக்ஸ் இணை உணவின் விலை ஒரு கிலோ ரூ. 7.95 ஆகும். இச் செலவினம் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

3.20. 2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு மதிய உணவு வருடத்தில் எல்லா நாட்களிலும் (365) மையத்திலேயே வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் அரிசி 80 கிராம், பருப்பு 10 கிராம், எண்ணெய் 1 கிராம் மற்றும் காய்கறி 50 கிராம் என்ற அளவில் வழங்கப்படுகிறது. இச் செலவினம் மாநில அரசு நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 44 பைசா வீதம் செலவிடப்

படுகிறது. மாதத்திற்கு இரு முறை 3-6-1989 முதல் குழந்தைகளுக்கு முட்டை வழங்கப்பட்டு வருகிறது.

3.21. முறைசாரா முன்பருவக் கல்வி (கருத்துணரு முறை):

ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திலும் 3 முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு முறைசாரா முன்பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. நல்ல மனப்போக்கையும் நடத்தையையும் வளர்க்க முன்பருவக் கல்வி வலியுறுத்தப்படுகிறது. குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் அங்கன்வாடி பணியாளர்கள் திட்டமிட்டு செயல்படத்தக்க வகையிலும் கருத்துணருமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திற்கும் விளையாட்டுச் சாதனங்களும் வழங்கப்படுகிறது. மேலும், குறைந்த செலவில் பொருட்கள் செய்ய பணியாளர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

3.22. மருத்துவ பரிசோதனை:

6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சுகாதாரம் மற்றும் சத்து நிலைமைகளை கண்காணிக்கும் வகையில் அவர்களின் எடை பார்க்கப்பட்டு அவ்வப்போது மருத்துவ உதவிகள் வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலரால் மாதத்திற்கொருமுறை பொதுவான மருத்துவச் சோதனைகளும் செய்யப்படுகின்றன. குழந்தைகளுக்கு போலியோ, முத்தடுப்பு ஊசிகள் முதலியன போடப்படுகின்றன. மேலும், அவ்வப்போது வயிற்றுப் பூச்சியை நீக்க மருந்து, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. அனைத்து நகர்ப்புறத் திட்டங்களிலும் உபகரணங்களுடன் 144 துணை மருத்துவ மையங்களிலும், அந்தந்த பகுதியிலுள்ள நோயாளிகளுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக நிறுவப்பட்டது. சுகாதார திட்டத்தில் இது ஒரு கூடுதல் அங்கமாகும், பெண்கள் கருவுற்ற காலத்திலும், மகப்பேறுக்குப்பின் பாலூட்டும் காலத்திலும் இச் சுகாதாரத் திட்டத்தின் கீழ் அவர்கள் கவனிக்கப்படுகிறார்கள்.

3.23. நோய்த் தடுப்பு:

ஆறு வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இளம்பிள்ளை வாதம், தட்டம்மை, கக்குவான், காசநோய், தொண்டை அடைப்பான் போன்ற நோய்களைத் தடுக்க தடுப்பூசிகள் போடப்படுகின்றன. அனைத்து கருவுற்ற பெண்களுக்கும், இரண ஜன்னிக்கான தடுப்பூசியும் போடப்படுகிறது.

3.24. ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி:

15 முதல் 45 வயது வரையிலுள்ள அனைத்து பெண்களுக்கும் ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி புகட்டப்



படுகிறது. குறிப்பாக கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களை பொறுத்தவரை அதிக கவனம் செலுத்தப்படுகிறார்கள். ஊட்ட சத்து பற்றாக்குறையினால் அடிக்கடி நோய்வாய்ப்படும் குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் மீது தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து கல்வியானது சிறப்பான வடிவமைக்கப்பட்ட குழுக்கள் மற்றும் வகுப்புகள் மூலமும் திட்டப் பகுதிகளில் அங்கன்வாடி பணியாளர்களின் வீட்டு பணி சமையல் செய் முறை விளக்கக் கூட்டங்கள், வானொலி போன்ற அமைப்புகள் மற்றும் ஏனைய தொடர்பு பிரிவுகள் மூலமும் இச் செய்திகள் எல்லாப் பகுதியினருக்கும் எட்டும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. அங்கன்வாடி பணியாளர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள 'பிள்ளைக்கனியமுதே' என்ற ஏடு இயக்ககத்திலிருந்து வெளியிடப்படுகிறது.

3.25. மேலும் இந் நிதியாண்டில் 19 மாவட்டங்களில் 33 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்க இந்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இவற்றில் மூன்று திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட உள்ளன. மேலும் 30 திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் இடங்கள் குறித்து இந்திய அரசுடன் கடிதத் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

அட்டவணை.

| | | |
|---|---|---|
| திட்டங்களின் எண்ணிக்கை | .. | 78 |
| நகரத் திட்டங்கள் | .. | 37 |
| கிராமப்புறத் திட்டங்கள் | .. | 39 |
| மலைப்புறத் திட்டங்கள் | | 2 |
| மையங்களின் எண்ணிக்கை | .. | 6,990 |
| 2 வயதிற்குட்பட்ட பயன்பெறும் குழந்தைகள் | .. | 1,01,354 |
| கர்ப்பிணிகள், தாய்மார்கள் | .. | 68,551 |
| 2 வயதிற்கு மேற்பட்டு ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் | .. | 2,14,347 |

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம்:

3.26. குழந்தைகள் ஊட்டச் சத்து திட்டங்களை அமுல்படுத்தி நடத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடியாக விளங்குகிறது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் இவ்வகையில் குறிப்பிட்ட கால அளவிற்குள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. இத் திட்டம் தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் குழந்தைகளின் ஊட்டச் சத்து அளவுகள் கண்காணிக்கப்பட்டு மிகவும் ஊட்டச் சத்து பற்றாக் குறைவாக உள்ள குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில் மேலும் சுகாதார அடிப்படையில் குழந்தைகளுக்கு

தடுப்பு ஊசிகள் மற்றும் வைட்டமின் 'ஏ', பூச்சி நீக்க மருந்து போன்றவைகளும் அளிக்கப்படுகின்றன. மேலும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் தேர்வு அடிப்படையில் மருத்துவ ஆய்வுக்குப் பின் இணை உணவு வழங்கப்படுகிறது.

3.27. 1989-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் தேதியன்று இத் திட்டத்தின் முதல் பகுதி நிறைவு பெறுகிறது. இத் திட்டத்தின் மூலம் ஊட்டச் சத்துப் பற்றாக் குறை மிகவும் அதிகமான அளவில் குறைக்கப்பட்டுள்ளது என தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட நிறைவு ஆய்வு தெரிவிக்கிறது.

3.28. உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் கொட்டாம்பட்டி வட்டாரத்தில்—சோதனை முறையில் 1980-ம் ஆண்டு நவம்பர் திங்களில் செயல்பட துவங்கி படிப்படியாக இத் திட்டம், மதுரை, திண்டுக்கல், காயிதே மில்லத், பசும்பொன் தேவர் திருமகன், காமராசர் இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, வ.உ. சிதம்பரனார், வட ஆற்காடு மற்றும் செங்கை அண்ணா ஆகிய பத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

3.29. இத் திட்டத்திற்கு ஆகும் மொத்த ஒதுக்கீடு ரூ. 55.78 கோடியாகும். இத் திட்டத்தின் குறிக்கோள் ஊட்டச் சத்து நிலையினை மேம்படுத்த அரசு எடுத்து வரும் முயற்சிகளை மேலும் திறன் உடையதாக்கி அம் முயற்சிகளில் பயனை அதிகப்படுத்துவதாகும். ஊட்டச் சத்து குறைவினால் அதிகமாக—பாதிப்பு ஏற்படக் கூடிய ஆறு மாதம் முதல் 36 மாதங்கள் வரையிலான குழந்தைகளின் ஊட்டச் சத்து குறைவினை போக்குவதின் மூலம் இத் திட்டத்தின் குறிக்கோளை அடைய முதன்முறையாக மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மற்ற வயது வரம்பிலுள்ள குறிப்பாக ஊட்டச் சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாயமார்கள், பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள் போன்றவர்களுக்கும் பயனளிக்கும் வகைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

3.30. ஆறு மாதம் முதல் 36 மாதங்களுக்குட்பட்ட எல்லா குழந்தைகளின் எடையும் மாதாமாதம் எடுக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சத்து குறைவுள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் தாய்மார்களுக்கும், இணை உணவு தரப்படுகிறது. மேலும், குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஓர் முறை வைட்டமின் 'ஏ' திரவமும் நான்கு மாதங்களுக்கு ஓர் முறை வயிற்றுப் பூச்சி நீக்க மருந்தும் தரப்படுகிறது. பொது சுகாதாரத் துறையின் கீழ் பணியாற்றும் பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் குழந்தைகளுக்கு தடுப்பு ஊசிகள் போடுகின்றனர்.

3.31. ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும் ஒரு சுகாதாரத் துணை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஒரு



ஆண் பல்நோக்கு சுகாதாரப் பணியாளரும், ஒரு பெண் பல்நோக்கு சுகாதாரப் பணியாளரும் பணிபுரிகின்றனர். சுகாதார மேற்பார்வையாளர்களும், சுகாதார ஆய்வாளர்களும் இவர்களது பணிகளை கண்காணிக்கின்றனர். அவர்கள் யாவரும் அண்மையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலரின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றனர். பத்து ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்ட மாவட்டங்களில் 1,600 துணை சுகாதார நிலையங்கள் கட்ட திட்டமிடப்பட்டு அவை அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

3.32. இத் திட்டத்தின் தொடர்புப் பிரிவு கிராம சமுதாயத்தில் சுகாதாரம் மற்றும் உணவுப் பழக்கங்களையும் மாற்றி அமைக்க முயற்சி செய்வதால் இத் திட்டம் வெற்றி பெறுவதற்கான ஒரு இன்றியமையாத அமைப்பாக இப் பிரிவு கருதப்படுகிறது. கருத்தரங்குகள், பயிற்சி தகவல் கூட்டங்கள், முனைப்பு இயக்கங்கள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம் திட்டத்தின் பல்வேறு பணியாளர்களுக்கும் திட்டத்தின் குறிக்கோள், செயல்முறை முதலானவற்றை போதித்து வருகிறது. திரைப்படங்கள், சுவரொட்டிகள், சுவர் வண்ண விளம்பரங்கள், செய்தித்தாள்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி திட்டம் சம்பந்தமான செய்திகள் பரப்பப்படுகின்றன.

3.33. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து பகுதி இரண்டு திட்டம் நிறைவேற்றப்படும்போது, சில இடங்களில் தமிழ்நாடு சத்துணவு கூடங்கள், ஊட்டச் சத்து கூடங்கள் எங்கு ஒரே இடத்தில் இருக்கின்றனவோ அவற்றை இணைத்தும், சத்துணவு கூடங்களை ஊட்டச் சத்து மையத்தின் பணிகளை இணைத்தும் அதன் தரத்தை உயர்த்தியும், மேலும் வேண்டிய பகுதிகளில் புதிதாக ஊட்டச் சத்து மையங்களை தொடங்கவும் 1990-91-ம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விரு திட்டங்களையும் இணைத்து ஒரே மையத்தில் ஆறு மாதங்களுக்கு மேல் மூன்று வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்தும் மூன்று வயதிலிருந்து ஆறு வயது வரைக்கும் உள்ள குழந்தைகளுக்கு சத்துணவும் கிடைக்கும் வகையில் புதிய ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படும். உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த இருக்கும் இந்தப் புதிய திட்டத்திற்கு, வரும் ஐந்தாண்டுகளில் கூடுதல் செலவு ரூ. 350 கோடியாகும்.

**தகவல் தொடர்பு மையம்:**

முதியோர் கல்வி மற்றும் ஊட்டச் சத்து, மக்கள் நலம் ஆகியவற்றைப் பற்றிய செய்தியினை தயாரிப்பதற்கும் இது தொடர்பான ஒலி/ஒளி நாடாக்களைத் தயாரித்து வழங்குவதற்கும் ஒரு

கேந்திரமாக, ஒரு தகவல் தொடர்பு மையம் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டத்தின் கீழ் செயலாற்ற சென்னைக் கருகில் ரூ. 68 லட்சத்தில் கட்டப்பட்டு வருகிறது.

3.34. 1989-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இத்திட்டத்தின்கீழ் 6—36 மாத வயதிலுள்ள 5.83 லட்சம் குழந்தைகள் எடை எடுக்கப்பட்டார்கள். மொத்த குழந்தைகளில் தமிழ்நாடு எண்ணிக்கையாகிய 6.21 லட்சத்தில் எடை எடுக்கப்பட்ட குழந்தைகள் விழுக்காடு பாராட்டப்படும் அளவிற்கு 94 சதவிகிதமாக பெருகியுள்ளது. எடை எடுக்கப்பட்ட மொத்த குழந்தைகளில் மிகவும் ஊட்டச் சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட 1.44 லட்சம் குழந்தைகட்கு இணை உணவு வழங்கப்பட்டது. மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையில் இணை உணவு பெறும் குழந்தைகள் கிட்டத்தட்ட 23 சதவிகிதமாகும். மூன்று மாதங்கள் உணவு பெற்று போதிய எடை அதிகரிப்பால் திட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட குழந்தைகளின் விழுக்காடு 66 ஆகும். கடந்த ஆறு மாதங்களில் 91 சதவிகித குழந்தைகளுக்கு கண் பார்வை பராமரிக்கும் பொருட்டு வைட்டமின் 'ஏ' திரவம் வழங்கப்பட்டது. மேலும் 80 சதவிகித குழந்தைகளுக்கு வயிற்றுப் பூச்சி நீக்க மருந்து வழங்கப்பட்டது ஒரு சிறப்பு அம்சமாகும்.

3.35. இத் திட்டம் நடப்பு ஆண்டில் (1989-90) தொடர்வதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊட்டச் சத்து திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைந்து மாநில அளவில் செயல்படுத்த வேண்டி திட்டங்கள் வரையப்பட்டுள்ளன. அதன்படி 6 முதல் 36 மாதங்களில் உள்ள குழந்தைகளின் ஊட்டச் சத்துப் பற்றாக் குறையினை தமிழ்நாடு முழுவதுமாக 1990-91 முதல் படிப்படியாக நீக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முழுமைக்கான இத் திட்டத்தின் திட்ட வரைவு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள்:

3.36. 5 முதல் 18 வயது வரை உடைய ஆதரவற்ற குழந்தைகளை பராமரிப்பதற்காக தமிழ்நாடு முழுவதும் 22 அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் இயங்கி வருகின்றன. மேற்படி இல்லங்கள் இயங்கி வரும் இடங்களும் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 20 இல்லங்களில் 250-ம் 2 இல்லங்களில் 100-ம் ஆகும்.

3.37. இவ்வில்லங்களில் குழந்தைகளுக்கு இலவச உணவு, உறைவிடம், உடை, பாடநூல், குறிப்பேடுகள், மருத்துவப் பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன. இல்லத்திலேயே 1 முதல் 5-ம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. ஆறாம் வகுப்பு முதல் குழந்தைகள் அரசு/மாநகராட்சி/நகரிய



பள்ளிகளுக்கு உயர் கல்வி பயில அனுப்பப்படுகின்றனர். 1990-91-ம் ஆண்டிற்கு ரூ. 113-88 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.38 உணவிற்காக ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.90 உடைக்காக ஓராண்டிற்காக ஒரு குழந்தைக்கு ரூ. 25 வீதமும் படுக்கை பொருட்களுக்காக ரூ. 20 வீதமும் வழங்கப்படுகிறது. குளிர்பிரதேசமாக நீலகிரி மாவட்டத்திலுள்ள அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லக் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு ஆண்டொன்றுக்கு உடைக்காக ரூ. 60 வீதமும் படுக்கைப் பொருட்களுக்காக ரூ. 50 வீதமும் வழங்கப்படுகிறது.

3.39 1 முதல் 5—ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.35 வீதமும், 6 முதல் 8—ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ரூ.50 வீதமும், 9 மற்றும் 10—ம் வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 90 வீதமும், மேல் நிலை வகுப்பில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 190 வீதமும் பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வாங்கி வழங்கப்படுகிறது. தற்பொழுது மாதாந்திர உணவூட்டு செலவினமாகிய ரூ.90 க்கு பதிலாக உணவு அளவீட்டு முறை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. பெண் கைதிகளின் குழந்தைகளும் இவ்வில்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அனைத்து அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் தையல் மற்றும் இதர கைவேலைகளில் பயிற்சி அளிக்க தனிப் பிரிவு 1988-89 முதல் அமைக்கப்பட்டுள்ளது.

பராமரிப்பும் பாதுகாப்பும் தேவையான குழந்தைகளுக்கான மத்திய மாநில அரசின் நலத் திட்டங்கள்.

3.40 ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறு வாழ்வு அளித்து தனது சொந்த குடும்பங்களில் வசிப்பது போன்ற உணர்வில் அவர்களை வாழவைக்கும் நோக்கத்துடன் 1974-75-ல் குடில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 25 குழந்தைகளைக் கொண்ட பிரிவு ஒரு குடில் ஆகும். ஒவ்வொரு குடிலும் ஒரு இல்லத்தாயின் பொறுப்பில் இருக்கும். இவ்வில்லத்தாய் தனது குடிலிலுள்ள குழந்தைகளை தன் குழந்தைபோல் பாவித்து அவர்களுக்கு போதிய உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி வசதி, பொழுது போக்கு வசதி முதலியன வழங்கி அறிவுரை கூறி வழி காட்டியாக நடந்து கொள்வார்.

3.41 குடில் திட்டப்படி குழந்தைகளை பராமரிக்கவும் இக்குடில்களை கட்டவும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 90 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. 10 சதவிகிதம் செலவை நிறுவனமே ஏற்க வேண்டும். 90 சதவிகித மானியத் தொகை மத்திய அரசாலும், மாநில அரசாலும் 50/50 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 01-04-1979-க்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் நிறுவனங்களிலுள்ள

குழந்தைகளுக்கான முழு பராமரிப்புத் தொகையையும் மாநில அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின்படி தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிகள் பற்றிய விவரம் பின் வருமாறு:—

3.42. தொடரும் செலவு:

1. உணவு, உடை மற்றும் இதர செலவினங்களுக்காக; ஒரு குழந்தைக்கு மாதமொன்றிற்கு ரூ. 150 வீதம்.

2; வாடகை; ஒரு குழந்தைக்கு மாதமொன்றிற்கு ரூ. 40 வீதம் (கட்டிடம் கட்ட மானியம் வழங்கப்பட்டவுடன் இது நிறுத்தப்படும்.)

தொடராச் செலவு:

இருக்கைகள், படுக்கைகள், மரசாமான்கள் முதலியவற்றிற்காக குழந்தை ஒன்றுக்கு ரூ. 500 வீதம்.

கட்டிடம் கட்டத் தொடங்கியதும் ஒரு குழந்தைக்கு ரூ. 6,000 வீதம் அல்லது பொதுப் பணித்துறையால் நிர்ணயம் செய்யப்படும் தொகை இதில் எது குறைவானதோ அத்தொகை கட்டிடம் கட்ட மானியமாக வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 161 தொண்டு நிறுவனங்கள் இவ்வாறு மானியம் பெறுகின்றன. இத்திட்டத்தினால் 13,655 ஆதரவற்ற குழந்தைகள் பயனடைகின்றனர். 1990-91-ம் ஆண்டிற்கு ரூ. 293.93 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தின் தஞ்சைக் கிளையால் நடத்தப்படும் குழந்தைகள் நல இல்லத்திற்கு மானியம் அளித்தல்'

3.43 இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தின் தஞ்சைக் கிளையால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லத்தின் நிர்வாகம் 08—11—1982 முதல் சீர்திருத்தப்பள்ளித் துறையிலிருந்து சமூக நலத்துறைக்கு மாற்றப்பட்டு 1982-83-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 30,000 பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

அரசு சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஆய்வு மற்றும் மேலாய்வு பற்றிய திட்டங்கள்.

3.44 சென்னை மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களாலும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகராட்சி ஆணையர்களாலும், சத்துணவுத் திட்டத்தில் தொடர்புடைய துறைத்தலைவர்களாலும் சத்துணவு மையங்கள் திறம்பட செயல்பட ஆய்வு மற்றும் மேலாய்வு காலம்தோறும்



செய்யப்படுகிறது. இதனால் ஆய்வின்போது காணப்பட்ட குறைப்பாடுகள் அறவே களையப்படுகின்றன. சத்துணவுத் திட்டத்தில் அவ்வப்போது காணப்படும் முறைகேடுகளைக் களைவதற்காக தல நிதி கணக்கு அலுவலர்களால் கால முறைப்படி தணிக்கைகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தினால் சத்துணவு மையங்களுக்கு பொருட்கள் வழங்கும் முறையும் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு வகுக்கப்பட்ட நடைமுறைகளின்படி சத்துணவு மையங்களுக்கு யேற்படி கழகத்தினால் வழங்கப்பட வேண்டிய அரிசி மற்றும் பருப்பு மூட்டைகள் நிர்ணயிக்கப்பட்ட கிலோ கிராம் அளவுகளில் இருக்கவேண்டும். அவ்வாறு தேவைப் பட்டியல் அனுப்புவோர் ஒவ்வொரு பண்டங்களின் அளவுகளும் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவிற்கு குறையாமல் பட்டியல்போட்டு அனுப்பவேண்டும். ஒப்படைப்பு லாரிகள் இடைமறித்து மையங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு உணவு பண்டங்கள் அவைகளால் ஒப்படைக்கப்பட்டனவா என்று சோதனை செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றும் சார்பு அலுவலர்களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஆய்வின்போது ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் குறிப்பிட்டுள்ள அளவுகள் நிர்ணயக்கப்பட்ட வீதங்களில் பண்டங்கள் இருக்கின்றனவா என்று சோதனை செய்யவும் (ம) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தினுடைய ஒப்படைப்பு பதிவேட்டில் முறையான பதிவுகள் செய்யப்பட்டுள்ளனவா என்று சரிபார்க்கவும் தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள களப்பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். எல்லா நிலைகளிலும் பொருட்கள் களவு போவதைத் தடுப்பதற்கு இந்நடவடிக்கைகள் பெரிதும் உதவும்.

சத்துணவுத் திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.195 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 85 லட்சம் சிறார்கள் இதனால் பயனுறுவர். இத்திட்டத்தில் அவ்வப்போது எழும் முறைகேடுகளையும், குறைபாடுகளையும் களைந்திட தக்க கண்காணிப்புகள் ஏற்படுத்தப்படும். ஆங்காங்கு இத்திட்டம் ஒழுங்குற நடைபெறுகிறதா என்பதை கவனித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கும் பொறுப்பை உள்ளாட்சி மன்றங்கள் ஏற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட இருக்கிறது. இத்திட்டத்தை ஒருங்கிணைந்த திட்டமாகவும், வீண் விரயமில்லாத சிக்கனத் திட்டமாகவும் உண்மையிலேயே சிறார்களுக்குச் சத்து நல்கிடும் திட்டமாகவும் நடத்திட அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

தமிழ்நாடு அரசு சத்துணஷித் திட்டத்தின் கீழ் முங்டைகள் இலவசமாக வழங்கும் நிட்டம்.

3.45 அரசால் வெளியிடப்பட்ட ஆணையின்படி, தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகள்

மற்றும் மாணவர்களுக்கு மாதம் இருமுறை முட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் எல்லாக் குழந்தைகளும், இரண்டு வயதிற்கு கீழே உள்ள குழந்தைகள் தவிர பயன்பெறுகின்றனர். இத்திட்டம் 3-6-1989 முதல் செயல்பட்டு வருகின்றது. முட்டைகள் சரிவர வழங்கப்படவில்லை என்று புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்தால் அவ்வப்போது அதற்குரிய தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டம் சிறப்பாக செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் சத்துணவில் மிகுந்த ஊட்டச்சத்தை அதிகரிக்கும் வகையில் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. 1990-91 வரவு செலவுத் திட்டத்தில், இதற்கு ரூபாய். 9.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதனால் ஏறக்குறைய 83 இலட்சம் குழந்தைகள் மற்றும் மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்நின் கீழ் வைட்டமின் 'ஏ' காய்கறிகள் வழங்குதல்.

3.46. தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகள் அதிக ஊட்டச்சத்து பெறவும், கண்ணில் ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்க்கவும் மருத்துவ நிபுணர்களின் அறிவுரையின் பேரில், அவர்களுக்கு வைட்டமின் 'ஏ' மாத்திரைகள் வழங்கப்படும் என்று அரசு அறிவித்தது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையின் பேரில், 3 வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' காப்சுல்கள், 2 இலட்சம் இன்டர்நேஷனல் யூனிட்ஸ், 6 மாதத்திற்கு ஒருமுறை வழங்கப்படும் என்று ஆணை வெளியிடப்பட்டது. பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத் துறையின் இயக்குநர் அவர்கள் வைட்டமின் 'ஏ' காப்சுல்கள் வாங்கி, அதனை குழந்தைகளுக்கு வழங்குவதற்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## அத்தியாயம் 4.

### ஊனமுற்றோருக்கான நலன் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்.

4.1. ஊனமுற்றோர் நலனில் இந்த அரசானது ஆழ்ந்த அக்கறையும், ஆர்வமும் காட்டுகிறது. 1987-88-ம் நிதி ஒதுக்கீடான ரூ. 255 இலட்சம் உடன் 1990-91ம் ஆண்டு நிதி ஒதுக்கீடான ரூ. 347 இலட்சம் உடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த அரசு ஊனமுற்றோர் நலனில் எவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ளது என்பது நன்கு தெரிய வரும். ஊனமுற்றோர் நலனுக்காக திட்டங்கள் சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்



படுகின்றன. ஊனமுற்றோர் நலனுக்காக உருவாக்கப்பட்ட திட்டங்களும் செயல் படுத்தப்படும் திட்டங்களும் மிக விரிவானவை. அவை பின்வருமாறு:

(அ) ஊனமுற்றோர்க்கான சிறப்பு கல்வி அளிக்க சிறப்புப் பள்ளிகள் நிறுவுதல்.

(ஆ) கல்வி பயில்வதற்கு உதவித் தொகை வழங்குதல்;

(இ) பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக பயிற்சி அளித்தல்;

(ஈ) தகுதியானவர்களை தகுதியான பணியில் அமர்த்துதலும் சுயவேலை வாய்ப்புக்கு மானியத்துடன் வங்கி கடன் வழங்குதல்;

(உ) ஊனமுற்றோர்க்கு இலவசமாக மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், காது கேட்கும் கருவிகள், காப்புக் கண்ணாடிகள் மற்றும் மடக்கு ஊன்றுக்கோல்கள் வழங்குதல்; மற்றும்

(ஊ) ஊனமுற்றோர்க்கான சமூக நல திட்டங்களை அமுலாக்குதல்.

1989-90-ம் ஆண்டில் சமூக நலத்துறை வாயிலாக பயனடைந்த ஊனமுற்றோரின் விவரம்:

| | | |
|---|---|---|
| 1 | சிறப்பு கல்வி பெறுபவர் .. .. | 4,844 |
| 2 | உதவித் தொகை பெறுபவர் .. | 12,000 |
| 3 | மூன்று சக்கர வண்டி வாயிலாக பயனடைந்தவர்கள். | 1,000 |
| 4 | சக்கர நாற்காலி வழங்கப்பட்டவர்கள் .. | 100 |
| 5 | காது கேட்கும் கருவி வழங்கப்பட்டவர்கள் .. | 5,000 |
| 6 | மடக்கு ஊன்றுகோல் மற்றும் கறுப்புக் கண்ணாடியால் பயனடைந்தவர். | 2,000 |
| 7 | சுயவேலை வாய்ப்பு பெற்றவர்கள் .. | 738 |
| 8 | கால் உறைகள் மற்றும் பிற உதவிகள் பெற்றவர்கள். | 1,000 |
| 9 | மண்டல மறுவாழ்வு மையங்கள் வாயிலாகப் பயனடைந்தவர். | 2,400 |
| 10 | இதர உதவிகள் வாயிலாகப் பயனடைந்தோர் | 1,000 |
| | மொத்தம் .. | 30,082 |

## ஊனமுற்றோருக்கு கல்வி வசதிகள்

4.2 ஊனமுற்றோருக்கு (பார்வையற்றோர், காது கேளாதோர் உடல் ஊனமுற்றோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோர்) தனி கவனிப்பும் கல்வி வசதியும் தேவைப்படுகிறது. இந்த சிறப்புத் தேவைகளைக் கருத்திற் கொண்டு ஊனமுற்றோர்க்காக நடத்தப்படும் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகள் பின்வருமாறு :

| | அரசு. | அரசு மானியம் பெறும் பள்ளி. | நகராட்சி | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 பார்வையற்றோருக்கான பள்ளிகள். | 11 | 9 | .. | 20 |
| 2 காது கேளாதோருக்கான பள்ளிகள். | 10 | 11 | 2 | 23 |
| 3 மனவளர்ச்சி குன்றியோர்க்கான பள்ளிகள். | 1 | 2 | .. | 3 |
| 4 உடல் ஊனமுற்றோர் பள்ளிகள் | 1 | 2 | .. | 3 |
| 5 தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பள்ளிகள் | .. | 1 | .. | 1 |
| | .. | .. | 6 .. | .. |
| | 23 | 25 | 2 | 50 |

சுமார் 5,000 உடல் ஊனமுற்ற சிறுவர்கள் சிறப்புப் பள்ளிகள் மூலம் கல்வி வசதி பெற்று வருகிறார்கள். அரசு சிறப்புப் பள்ளிகள் மூலம் கல்வி வசதி பெறும் மாணவர்களுக்கு இலவசமாக உணவு மற்றும் தங்கும் வசதி வழங்கப்படுகிறது. 1990-91ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 1.11 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோருக்கான அரசு பள்ளிகள் மற்றும் வகுப்புகள் விவரம் பின்வருமாறு.

| வ. எண். (1) | பள்ளிகள். (2) | செயல்பட்டு வரும் வகுப்புகள். (3) |
|---|---|---|
| | **பார்வையற்றோருக்கான பள்ளிகள்:** | |
| 1. | பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி. | 1 முதல் 12 |
| 2. | பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி. | 1 முதல் 10 |
| 3. | பார்வையற்றோருக்கான அரசு பள்ளி தஞ்சாவூர். | 1 முதல் 8 |
| 4. | பார்வையற்றோர்க்கான அரசு பள்ளி, சேலம். | 1 முதல் 7 |
| 5. | பார்வையற்றோருக்கான அரசு பள்ளி, மதுரை. | 1 முதல் 6 |
| 6. | பார்வையற்றோருக்கான அரசு பள்ளி, கடலூர். | 1 முதல் 5 |
| 7. | பார்வையற்றோருக்கான அரசு பள்ளி, சிவகங்கை. | 1 முதல் 5 |
| 8. | பார்வையற்றோருக்கான அரசு பள்ளி, நாகர்கோவில். | 1 முதல் 5 |
| 9. | பார்வையற்றோருக்கான அரசு பள்ளி, கோயம்புத்தூர். | 1 முதல் 5 |
| 10. | பார்வையற்றோருக்கான அரசு பள்ளி, புதுக்கோட்டை. | 1 முதல் 5 |
| 11. | பார்வையற்றோருக்கான அரசு பள்ளி, தருமபுரி. | 1 முதல் 5 |
| | **காதுகேளாதோருக்கான பள்ளிகள்:** | |
| 1. | காது கேளாதோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர். | 1 முதல் 12 |
| 2. | காது கேளாதோருக்கான அரசு பள்ளி, தருமபுரி. | 1 முதல் 9 |
| 3. | காது கேளாதோருக்கான அரசு பள்ளி, கடலூர். | 1 முதல் 7 |
| 4. | காது கேளாதோருக்கான அரசு பள்ளி, புதுக்கோட்டை. | 1 முதல் 7 |
| 5. | காது கேளாதோருக்கான அரசு பள்ளி, காஞ்சிபுரம். | 1 முதல் 6 |
| 6. | காது கேளாதோருக்கான அரசு பள்ளி, சேலம். | 1 முதல் 5 |
| 7. | காது கேளாதோருக்கான அரசு பள்ளி, ஈரோடு. | 1 முதல் 5 |
| 8. | காது கேளாதோருக்கான அரசு பள்ளி, விருதுநகர். | 1 முதல் 5 |

9. காது கேளாதோருக்கான அரசு பள்ளி, உதகமண்டலம். — 1 முதல் 5

10. காது கேளாதோருக்கான அரசு பள்ளி, சென்னை. — 1 முதல் 5

உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி:

1. உடல் ஊனமுற்றோர்க்கான அரசு பள்ளி, மதுரை 1 முதல் 5

மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி:

2. மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம். — 1 முதல் 5

4.3 உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு முன்பருவப் பள்ளி:

கடந்த 1988-89 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் காது கேளாத சிறார்களுக்கென ஒரு முன் பருவப் பள்ளிவீதம் 20 முன் பருவப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. காதினால் கேட்கும் குறையுள்ள சிறார்களின் பேச்சுத் திறனை மேம்படுத்திடவும் கேட்கும் திறனை செம்மைப்படுத்திடவும் இப்பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. சிறு வயதிலேயே முன்பருவப் பள்ளியில் கல்விப்பயிலும் சிறார்கள் தங்களது பேச்சுத் திறனை மேம்படுத்திக் கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 200 சிறார்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

பார்வையற்ற மாணவர்களுக்கென கேட்பு ஒலிநாடா நூலகம்:

4.4 பார்வையற்ற மாணவர்களின் திறமையினை மேலும் திறம்பட போற்றிடுமாறு ஒரு கேட்பு ஒலிநாடா நூலகம் ஒன்று 1988-89 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 8,00 லட்சம் செலவில் துவங்கிட திட்டமிடப்பட்டது. பள்ளிக்கூட பாட புத்தகங்கள் மற்றும் முக்கியமான புத்தகங்கள் முழுமையாக ஒலி நாடாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, அந்த ஒலி நாடாவினை மாணவர்களுக்கு நூலகம் வாயிலாக கொடுத்து பார்வையற்ற மாணவர்களின் திறனை மேம்படுத்திட ஆவன செய்ய திட்டமிடப்பட்டது. ஒவ்வோரு அரசு பார்வையற்றோர் சிறப்பு பள்ளிகளுக்கும் 1989-90 ஆம் ஆண்டில் 100 ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலி நாடா வழங்கிட ஏற்பாடு செய்ய திட்டமிடப்பட்டது. இந்த ஒலி நாடா பெட்டி ஒலிப்பதிவு செய்யப்பட்ட பின்னர் பாதுகாப்பாக வைத்திடும் வண்ணம் அரசு பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளி பூவையில் குளிர் சாதனம் மற்றும் ஒலிபுகாத வசதி படைத்திட்ட ஒரு நூலக கட்டிடம் கட்டிடும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த குளிர் சாதன ஒலிப்புகாத கட்டிடத்தை மேற்படி பள்ளியில் கட்டிட பொதுப் பணித்துறை அவர்களுக்கு எழுதப்பட்டு கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



பார்வையற்ற, காது கேளாத மற்றும் மன வளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு போதிக்கும் வகையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்:

4.5. பார்வையற்ற, காது கேளாத மற்றும் மன வளர்ச்சிக் குன்றிய மாணவர்களுக்கு நல்ல முறையில் பாடம் கற்றுத் தந்திடும் வகையிற், ஒரு சிறப்புப் பயிற்சித் திட்டம் ஒன்று அரசினாலும் மற்றும் தொண்டு நிலையத்தினராலும், கீழ்க் குறிப்பிட்டுள்ள இடங்களில் நடத்தப்படுகிறது. அவையாவன்:—

| வ.எண். | பயிற்சி விவரம். | அரசு. | அரசு மானியம் பெறுபவை. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பார்வையற்றவர்களுக்கான ஆசிரியருக்கு பயிற்சி அளித்திடும் மையம். | 1 | .. | 1 |
| 2. | காது கேளாதோர்க்கான ஆசிரியருக்கு பயிற்சி அளித்திடும் மையம். | .. | 1 | |
| 3. | மனவளர்ச்சி குன்றியோர்க்கான ஆசிரியருக்கு பயிற்சி அளித்திடும் மையம். | .. | 1 | 1 |
| | மொத்தம் .. | 1 | 2 | 3 |

பார்வையற்றவருக்கு போதிப்பதற்கான ஆசிரியர் பயிற்சி மையம்.

4.6. அரசு பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளி பூவையில் மத்திய அரசு உதவியுடன், மண்டல பயிற்சி மையம் ஒன்று துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. தென்னிந்தியாவிலுள்ள நான்கு மாவட்டங்களிலிருந்தும் கிட்டத்தட்ட 20 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதே போன்று மாநில அரசும் சிறப்புப் பயிற்சிப் பகுதி ஒன்று பார்வையற்றோருக்கென பயிற்சி அளித்திடும் வண்ணம் 15 ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அளித்து வருகிறது. இதற்கென ரூ. 5.62 லட்சம் 1990-91-ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காது கேளாதோருக்கு போதிப்பதற்கென ஆசிரியர் பயிற்சி நிலையம்.

4.7. சென்னையில் உள்ள சிறுமலர் காது கேளாதோர் மேல்நிலைப்பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் 10 ஆசிரியர்களுக்கு காது கேட்கும் திறமை குன்றிய மாணவர்களுக்கு போதிப்பதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. நூறு விழுக்காடு அரசின் மான்யம் முழுமையாக இப்பள்ளிக்கு வழங்கப்படுகிறது. சிறப்புப் பள்ளிகளில் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்களுக்கு இப்பயிற்சித் திட்டம் அளிக்கலாகிறது. இத்திட்டத்திற்கென ரூ. 1.30 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றியோருக்கு போதிப்பதற்கென ஆசிரியர் பயிற்சி நிலையம்.

4.8. அரசு சார்பற்ற தனியார் தொண்டு நிறுவனமான பாலவிகார் பயிற்சி பள்ளியில் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு போதிப்பதற்கென ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென ரூ. 0.68 லட்சம் மேற்படி பள்ளிக்கு ஆண்டு தோறும் கொடுக்கப்படுகிறது.

அரசு மண்டல பிரெய்லி அச்சகம்.

4.9. பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகங்கள் அச்சடித்து வழங்கும் பொருட்டு பூவிருந்தவல்லி பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தனி அச்சகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அரசு மானியம் பெற்று இயங்கும் பள்ளிகளுக்குத் தேவையான புத்தகங்களை இவ்வச்சகம் விநியோகித்து வருகிறது. தற்போது இப்புத்தகங்கள் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு விற்பனை செய்யப்படுகிறது. 1989–90 முதல் அரசு பள்ளிகளுக்கும் அரசு உதவியுடன் இயங்கும் பள்ளிகளுக்கும் இப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டது. ஏறத்தாழ 2,000 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர். 1990–91-ம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 3.68 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4.10. மனவளர்ச்சி குன்றியோர்க்கான நிறுவனம்:

சென்னைக்கருகிலுள்ள குரோம்பேட்டையில் மனவளர்ச்சி குன்றியோருக்கான ஒரு நிறுவனம் பிப்ரவரி 1984 முதல் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதியுடன் கூடிய சிறப்புக் கல்வி இங்கு வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென 1990–91-ம் ஆண்டில் ரூ. 3. 68 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



4.11. ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகை; இந்திய அரசு உதவித் தொகை:

ஒன்பதாம் வகுப்பும் அதற்கு மேலும் பயின்று வரும் ஊனமுற்ற மாணவர்களுக்கும் தொழில் திட்டத் துறையில் பயிற்சி பெறும் ஊனமுற்ற மாணவர்களுக்கும் மத்திய அரசு திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1977–78 முதல் செயல்பட்டு வருகிறது. இதுவரையில் 18,088 ஊனமுற்ற மாணவர்கள் இந்த உதவித்தொகை சலுகையை பெற்றுள்ளனர். 1989–90 வருடத்தில் சுமார் 2,000 உடல் ஊனமுற்ற நபர்கள் பயன் அடைவார்கள்.

4.12 தமிழ்நாடு அரசு உதவித் தொகை:

முதலாம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பள்ளிகளில் படிக்கும் ஊனமுற்ற மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வாங்குவதற்காக மாநில அரசு திட்டத்தின் கீழ் ஆண்டிற்கு ரூ. 10 முதல் ரூ. 84 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரையில் இந்த சலுகையை சுமார் 65,600 மாணவர்கள் பெற்றுள்ளனர். 1989–90-ம் வருடத்திற்கு 10,000 நபர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது.

ஊனமுற்றோருக்கான பயிற்சி.

4.13. ஊனமுற்றோர் ஒரு குறிப்பிட்ட துறையில் தம்முடைய திறமையை வளர்த்துக் கொள்ள இதுவரை வகை செய்யப்படாததை கருத்தில் கொண்டு சமூக நலத்துறை பார்வையற்றோர்க்கும், காதுகேளாதோர்க்கும், உடல் ஊனமுற்றோர்க்கும் வெவ்வேறு பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக அந்தந்தத் துறையில் பயிற்சியளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பயிற்சி திட்டங்களாவன:

4.14. கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காதுகேளாதோர்க்கான தனிப்பிரிவு அமைத்தல்.

கிண்டியில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதோர்க்கான ஒரு சிறப்புப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு தற்போது 15 காது கேளாத மாணவர்கள் ‘பொருத்துநர்’ துறையில் பயிற்சி பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்காக 1989–90-ம் ஆண்டில் ரூ. 0.54 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.15. வடசென்னை மற்றும் அம்பத்தூரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் 3-வது சிப்ட் அறிமுகப்படுத்துதல்.

உடல் ஊனமுற்றோருக்கு பயிற்சியளிக்க வட சென்னை மற்றும் அம்பத்தூரிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில்

ஊனமுற்றோருக்காக 3-வது சிப்ட் தொடங்கப்பட்டுள்ளது. இத் தொழிற் பயிற்சி நிலையத்தில் பிட்டர், மெஷினிஸ்ட், பிளம்பர், பெயின்டர் மற்றும் வரைவாளர் போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 34 உடல் ஊனமுற்றோர் இங்கு பயிற்சி பெறுகின்றனர். இத்திட்டத்திற்காக 1989–90-ம் ஆண்டில் ரூ. 0.46 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.16. பார்வையற்றோர்க்கான அரசு தொழில் பயிற்சி நிலையம், கிண்டி:**

கிண்டியில் 1967-ம் ஆண்டு துவக்கப்பட்ட எளிய பொறியியல் திட்டத்தில் வயது வந்த பார்வையற்றவர்கள் இந்த வகைத் தொழில்களில் 6 மாத கால பயிற்சி அளிக்கப்படுகின்றனர். ஆனால் இந்த வகை பயிற்சி தொழில் துறையினரின் எதிர் பார்ப்புகளுக்கு ஈடான வகையில் இல்லை. இதன் காரணமாக இப்பயிற்சியின் காலம் மற்றும் பயிற்சியின் தன்மை போன்றவற்றை மாற்றி அமைக்கும்படியான அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே 1982–83-ம் ஆண்டு முதல் அரசு பார்வையற்றவர்களுக்கு தகுந்த தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலில் அவர்களுக்குப் போதுமான திறமை ஏற்படவும் வேலைவாய்ப்பு அளிக்கவும் இதனை தொழிற்பயிற்சி மையமாக மாற்றி அமைத்து மேற்படி பயிற்சி திட்டத்தின் கீழ் பொறிப் பகுதி பொருத்துதல், புத்தகம் கட்டுதல் மற்றும் மின்கம்பி சுற்றுதல் ஆகிய மூன்று பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மின் கம்பி சுற்றுவதற்கு 6 மாதமும் ஏனையவற்றிற்கு ஒரு வருடமும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 30 பார்வையற்ற நபர்கள் இப்பயிற்சியில் சேர்க்கப்படுகின்றனர். 1989–90-ம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் இந்த நிலையத்திற்கு ரூ. 4.38 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மின் கம்பி சுற்றும் பயிற்சியை 6 மாதத்தி லிருந்து ஒரு வருடமாக மாற்ற அரசு பரிசீலனையில் உள்ளது. மேலும் இப்பயிற்சியாளர்களுக்கு ஆண்டிற்கு இரண்டு ஜதை சீருடை இலவசமாக வழங்கவும் அரசின் ஆணை பெறப் பட்டுள்ளது.

**4.17. ஊனமுற்றோருக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சி, நவீனத் தொழில் மற்றும் பயிற்சி உற்பத்தி பணிமனை முட்டுக்காடு;**

செங்கற்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் ஊனமுற்றோர்க் கான நவீன தொழிற் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் 1975-ம் ஆண்டு முதல் ரூ. 30 லட்சம் செலவில் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதில் முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், பெட்டிக்கடைகள், அலமாரிகள் போன்ற சாமான்கள் உற்பத்தி செய்வதில் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1980 முதல் உற்பத்திக் கூடமாக இந்நிலையம் இயங்கி வருகிறது. இதில் சக்கர நாற்காலி, மூன்று சக்கர வண்டிக்ப்போர்ட் பங்க், மடக்கு ஊன்றுகோல் போன்றவைகள் உற்பத்தி



செய்யப்படுகின்றது. பயிற்சி பெற்ற நபர்கள் அரசு அச்சகம், போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின் வாரியம், பொதுப் பணித்துறை மற்றும் சமூக நலத் துறை பணியில் அமர்த்தப் படுகின்றனர்.

**4.18. ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பு உதவிகள்:**

தகுதி வாய்ந்த பணிகளில் ஊனமுற்றோரை பணியமர்த்தம் செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தகைய நடவடிக்கைகள் தனியமைப்புகள் வாயிலாக பணி வாய்ப்புகள் ஆராய்தல், ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்புக்கள், ஊனமுற்றோரை தேர்வு செய்வதற்கான குழுக்கள்.

**4.19. ஊனமுற்றோரை தகுதி வாய்ந்த பணிகளில் பணி அமர்த்தம் செய்ய தனி அமைப்புகள், ஊனமுற்றோருக்கென பணிகள் ஒதுக்கீடுகள், ஊனமுற்றோருக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்களில் தகுதியான ஊனமுற்றோரை நேர்முகத் தேர்வு செய்ய தேர்வுக் குழு அமைத்தல் போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.**

ஊனமுற்றோர் பிரச்சினையை தனிக் கவனிப்புடன் தீர்ப்பதற் கென மத்திய அரசு நடத்துவது போன்று மாநில அரசு மூலம் ஒரு தனி அமைப்பு நிறுவப்பட்டது. இதுதான் மண்டல மறு வாழ்வு மையங்களாகும். இம்மையம் இருபது மாவட்டங்களிலும் பணிபுரிய தக்க அளவில் சென்னை, வேலூர், தஞ்சாவூர், மதுரை கோயம்புத்தூர் ஆகிய ஐந்து இடங்களில் இயங்கி வருகின்றன. இம்மண்டல மறுவாழ்வு மையங்கள் ஊனமுற்றோருக்கு மருத்துவம், வாழ்க்கை, பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் மறுவாழ்வு கிடைக்க ஏற்பாடு செய்து வருகின்றன.

4.20. ஒவ்வொரு மண்டல மறுவாழ்வு அலுவலரும் தனது மண்டலத்தில் அடங்கிய ஐந்து மாவட்டங்களிலுள்ள 2.5 இலட்சம் உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பணிகளை செய்துள்ளனர். 1988–89இல் 15 இளநிலை மறுவாழ்வு அலுவலர்களை பணியமர்த்த அரசு அனுமதித்துள்ளது. 1989 முதல் பணியில் உள்ள ஐந்து இளநிலை மறுவாழ்வு அலுவலர்கள் மற்றும் தற்போது அரசால் அனுமதித்துள்ள 15 இளநிலை மறு வாழ்வு அலுவலர்களும், மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் இருபது மாவட்டங்களிலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற் கென 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 19.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.21. ஊனமுற்றோருக்கான தேர்வுக் குழு அமைத்தல்:**

ஊனமுற்றோருக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்களை தகுதியாக ஊனமுற்றோரை நேர்முகத் தேர்வு நடத்தி தேர்வு செய்ய தமிழ்நாடு தேர்வாணைக் குழு உறுப்பினர் ஒரு தேர்வுக் குழுவை

ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவில் சமூக நல இயக்குநர் அல்லது அவரது பிரதிநிதி இடம்பெற்றுள்ளனர். தேர்வுமுறையில் இடம் பெற்று உள்ளவர்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொறுப்பினை சமூக நலத்துறை ஏற்றுக்கொண்டுள்ளது. வேலை வாய்ப்பகங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட பணியிடங்களில் இதுநாள் வரை 297 ஊனமுற்றோர் இத்தேர்வுக் குழுவால் பல்வேறு துறைகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 1988–89 இல் இவ்விட ஒதுக்கீடு உத்தரவுப்படி வேலை வாய்ப்பகங்கள் மூலமும் இத்தேர்வுக் குழுவின் மூலமும் மொத்தம் 2,382 பேர் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

4.22. மாநில அளவிலான தேர்வுக் குழு:

29–11–1989 ஆம் தேதிய பிற்பட்டோர் நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, அரசாணை எண் 970-ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும், கீழ்க்கண்ட உறுப்பினர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்று அமைத்து அக்குழுவின் மூலம் ஊனமுற்றோருக்கென ஒதுக்கப்பட்ட 3 விழுக்காடு ஒதுக்கீட்டை 'சி' மற்றும் 'டி' பிரிவான பணிகளுக்கு பணியாளர் தேர்வு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

1. மாவட்ட ஆட்சியர் .. .. தலைவர்.
2. மாவட்ட வேலை வாய்ப்பக உதவி இயக்குநர் உறுப்பினர்.
3. எந்தத் துறையில் பணியிடம் காலியாக உள்ளதோ அந்தத் துறையைச் சார்ந்த அலுவலர். உறுப்பினர்.
4. மண்டல மறுவாழ்வு அலுவலர்/மாவட்ட சமூக நல அலுவலர். உறுப்பினர். செயலர்.

மாவட்டம் தோறும் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

4.23. பயிற்சி பெற்ற பார்வையற்ற/காது கேளாத நபர்களுக்கு தொழில் பழக் பருவம் வாய்ப்பளித்தல்:

அரசு தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாதவருக்கு அரசு அங்கீகாரம் பெற்ற தொழில் நிறுவனங்களில் மாதம் ரூ. 400 உதவித் தொகையுடன் தொழில் பழகும் பருவப் பயிற்சிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பயிற்சி காலம் முடிந்த பின்னர் இவர்களை தொடர்ந்து பணியில் நீடிக்க உரிய அரசாணை மூலம் வகை செய்யப்பட்டுள்ளது. (அரசாணை எண் 490, பிற்பட்டோர் நலம் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூகநலத்துறை, நாள்: 24–5–1989) ரூ. 4.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக 100 பேர் பயனடைய வகை செய்யப்பட்டுள்ளது.



4.24. பார்வையற்ற மகளிருக்கான தொழிற் கூடங்களுடன் கூடிய மறுவாழ்வு மையம்:

பார்வையற்ற மகளிருக்கு விடுதி வசதியுடன் கூடிய மறுவாழ்வு மையம் ஒன்று 1978 ஆம் ஆண்டு சென்னை நகரில் துவக்கப்பட்டது. இம்மையத்தில் பார்வையற்ற மகளிருக்கு நெசவுத் தொழிலிலும் சாக்குக் கட்டி செய்தலிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 40 வயதுக்குட்பட்ட பார்வையற்ற ஏழை மற்றும் கைவிடப்பட்டவர்கள் இம்மையத்தில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு 6 மாத கால பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் மாதம் ரூ. 90 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின்னர் அங்கேயே வேலை வாய்ப்பளித்து அவர்கள் செய்யும் பணிக்கேற்ற ஊதியம் கொடுக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் போர்வைகள், துண்டுகள் மற்றும் சாக்குக் கட்டிகள் அரசு மருத்துவ மனைகளுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் போதுமான இடவசதி கிடைக்காததால் 1988 நவம்பர் முதல் இம்மையம் பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1990–91 ஆம் ஆண்டில் ரூ. 2.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.25 ஊனமுற்றோருக்குக் கருவிகள் வழங்குதல்;

ஊனமுற்றோர்க்கு அவர்களது ஊனத்தின் தன்மைக்கேற்ப முச்சக்கரம் வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 19–4–75-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. 1988–89 ஆம் ஆண்டு இறுதி வரை 11248 முச்சக்கர வண்டிகள் இரண்டு கால்களும் இழந்த ஊனமுற்ற நபர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 1989–90 ஆம் ஆண்டு 1,000 நபர்களுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டு உள்ளது.

4.26. சக்கர நாற்காலிகள் :

பாரிச வாத நோயினால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்களுக்கு 1981 ஆம் ஆண்டு முதல் இலவசமாக சக்கர நாற்காலிகள் வழங்கப்படுகின்றன. 1988–89 ஆம் ஆண்டு இறுதி வரை 800 சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 1989-90 ஆம் ஆண்டிற்கு 100 சக்கர நாற்காலிகள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.27. காதொலி கருவிகள் :

பள்ளிக்குச் செல்லும்/செல்லாத காது கேளாத ஏழைக் குழந்தைகளுக்கு காதொலி கருவிகள் இலவசமாக வழங்கப்

படுகிறது. 7-4-1975 முதல் இத்திட்டம் செயல்பட்டுவருகிறது. இத்திட்டத்தினால் மொத்தத்தில் 23,940 காது கேளாதோர் 1988-89 ஆம் ஆண்டு வரை பயன் பெற்றுள்ளார்கள். காது கேளாத நபர்களுக்கு 1989-90ஆம் ஆண்டில் 5,000 காதொலி கருவிகள் வழங்கப்பட உள்ளது.

4,28. கண்பார்வையற்றோருக்கு இலவசமாகக் கறுப்பு கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல்கள் வழங்குதல் :

பார்வையற்ற நபர் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு கறுப்புக் கண்ணாடியும் மடக்கு ஊன்றுகோலும் இலவசமாக வழங்கப் படுகிறது. இந்தத் திட்டம் 1989-90லிருந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது. 1989-90ஆம் ஆண்டு 2,000 பார்வையற்ற நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். 1990-91 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்கென ரூ.1.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் நலனுக்கான இதர நடவடிக்கைகள்

4.29. வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை வழங்குதல் :

மாநிலத்திலுள்ள பல்வேறு வாய்ப்பகங்களில் பதிவு செய்து வேலை வாய்ப்பில்லாத பார்வையற்றவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம் 1981 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி இறுதித் தேர்வு அதற்கு மேல் படித்தவர்கள் மற்றும் தொழிற் பயிற்சி கல்வி முடித்து வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து மூன்றாண்டுகளுக்கு மேல் காத்திருப்போருக்கு மாதம் ரூ. 50 வீதம் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1988-89 ஆம் ஆண்டு முதல் வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டு வருகிறது:

| | | மாதம். ரூ. |
|---|---|---|
| அ. | பட்டதாரிகள்/முதுநிலை பட்டதாரிகள். | 100 |
| ஆ. | புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு பட்டப்படிப்பு முடிக்காதவர்கள் .. | 75 |
| இ. | இதர வகுப்புகள். .. .. .. | 50 |

இந்நிவாரணத் தொகை இவர்கள் தகுதி பெறும் காலத்தில் இருந்து வேலை வாய்ப்புக் கிடைக்கும் வரை அல்லது 40—45 வயது முடியும்வரை அதிக பட்சம் 5 ஆண்டுகளுக்கு



வழங்கப்படும். 1989-90 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.4.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 723 பார்வையற்றவர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளார்கள்.

4.30. செயற்கை உறுப்பு துணை நிலையம், மதுரை :

உறுப்புகள் பாதிக்கப்பட்ட 100 குழந்தைகளுக்கு உதவுகின்ற வகையில் செயற்கை உறுப்பு துணை நிலையம் ஒன்று மதுரையில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் கல்வி அறுவை சிகிச்சை, உடற் பயிற்சி மற்றும் உதவிக் கருவிகள், வழங்கப்படுகின்றன. ஒரு உடற்கூறு நிபுணர் மற்றும் பணியாளர்களால் இந்நிலையம் நடத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்கென 1989-90 ஆம் ஆண்டில் ரூ1.56 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4,31, பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவருக்கான சலுகைகள் :

தற்போது நடைமுறையில் உள்ள கலப்பு மணம் புரிந்து கொள்பவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் பார்வையற்றோரை திருமணம் செய்துக் கொள்ளும் பார்வையற்றவர்களுக்கு கீழ்க்கண்டவாறு விஸ்தரிக்கப்பட்டுள்ளது:

1. பாராட்டுச் சான்றிதழ்.
2. திருமணச் செலவிற்கான ரொக்கத் தொகை ரூ. 500.
3. தேசிய சேமிப்பு பத்திரம் ரூ. 5,500.

இத்திட்டத்தின் மூலம் ஒவ்வோர் ஆண்டும் 20 தம்பதியர் பயனடைகின்றனர். 1987-88ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4.32. உடல் ஊனமுற்றோருக்கு பயணச் சலுகை வழங்குதல் :

உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு வீட்டிலிருந்து பள்ளிக்கு மற்றும் மருத்துவ மனைக்குச் சென்று திரும்பி வர அரசுக்கு சொந்தமான போக்குவரத்துக் கழக பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நீங்கலாக) இலவசமாக பயணம் செய்ய சலுகை வழங்கப்படுகிறது. இதனால் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் நிதி இழப்பை சமூக நலத்துறையினால் ஈடு செய்யப்படுகின்றது. 1988-89 வரை 20,287 ஊனமுற்ற குழந்தைகள், மாணவர்கள் இந்தத் திட்டத்தினால் பயனடைந் துள்ளார்கள். இத்திட்டத்திற்கென இந்த வருடம் (1989-90) சுமார் 2.000 பேர் பயனடைவார்கள். திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகம் நீங்கலாக ஏனைய அரசு போக்குவரத்துக் கழகங்களிலும், கல்லூரிகள், தொழில் நுட்ப மையங்கள் மற்றும் தொழிற் பயிற்சி மையங்களிலும் பயிலும் பார்வையற்ற

மாணவர்களுக்கு இலவச அனுமதிச் சீட்டுகள் விஸ்தரிக்கப் பட்டுள்ளது. (அரசு ஆணை எண் 922, போக்குவரத்துத் துறை, நாள் : 25–8–1988).

4.33. பெட்ரோல் மானியம் :

உடல் ஊனமுற்ற மோட்டார் வாகன உரிமையாளர்களுக்கு மத்திய அரசு திட்டத்தின் கீழ் 50 சதவிகிதம் பெட்ரோல் வாங்கியமைக்காக மானிய உதவி வழங்கப்படுகிறது. இத் திட்டம் 1985-86-லிருந்து அமுல் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1988–89 ஆம் ஆண்டு வரை 68 ஊனமுற்ற நபர்கள் பயனடைந்துள்ளனர். 1990-91 ஆம் ஆண்டில் 25 நபர்கள் ரூ. 0.20 இலட்சம் செலவில் பயனடைவார்கள்.

4.34. மாவட்ட மறுவாழ்வு மையம், செங்கற்பட்டு :

மத்திய அரசும், அமெரிக்கா ஐக்கிய நாட்டு அரசின் ஊனமுற்றோர் ஆராய்ச்சி நிலையமும் சேர்ந்து ஊனமுற்றோருக்கு விரிவான மறுவாழ்வுப் பணிகள் செய்வதற்கான ஒரு முன்னோடித் திட்டத்தை தீட்டியுள்ளது. மாவட்ட மறுவாழ்வு மையம் என்ற திட்டம் முதல் கட்டமாக செங்கை-அண்ணா மாவட்டத்தில் உள்ள காட்டாங்குளத்தூர், திருக்கழுகுன்றம் ஆகிய இரு வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பகுதியில் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஊனமுற்ற நபர்கள் ஒரு மருத்துவ நிபுணர் குழுவால் பரிசோதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை உடனடியாக வழங்கப்படுகின்றன. இத்திட்டப் பகுதியில் சிறப்புப் பள்ளிகள் தொடங்கவும், பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தவும், ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கத் தக்க அளவிலான தொழிற்கூடங்களை அமைக்கவும் தொண்டு நிறுவனங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறது.

இத்திட்டத்தின் காலளவு 5 ஆண்டுகள் ஆகும். இதற்கான செலவினங்கள் மாநில அரசால் முதலில் ஏற்கப்பட்டு நிதியாண்டு இறுதியில் மத்திய அரசிடம் மீளப் பெறப்படுகிறது. இதுவரை 3,181 ஊனமுற்றோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கென 1989–90 ஆம் ஆண்டில் 8.18 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.35. பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவியவருக்கு உதவி :

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள் 9 ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவர்கள். தேர்வின்போது வினாக்களுக்கு, பார்வையற்ற மாணவர்களால் அளிக்கப்படும் பதிலினை அவ்வாறே எழுத உதவியாளர்கள் வைத்துக்கொள்ள



அனுமதி அளித்து, பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகளில் நல்ல மதிப்பெண் பெற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு இவ்வாறு பார்வையற்ற மாணவர்களுக்கு உதவி புரிபவர்களுக்கு ஒரு தேர்வுத்தாளுக்கு ரூ. 6 வீதம் உதவித் தொகை வழங்கி வருகிறது. மேற்படி உதவித் தொகை அரசு பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளி, பூந்தமல்லி, அரசு பார்வையற்றோர் பெண்கள்உயர்நிலைப்பள்ளி, திருச்சி, சிறுமலர் பார்வையற்றோர் பள்ளி, சென்னை மற்றும் செயிண்ட் லூயிஸ் பார்வையற்றோர் பள்ளி, சென்னை ஆகிய பள்ளிகளுக்கு அளிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 200 மாணவர்கள் பயனடைகிறார்கள். இத்திட்டமானது 1986–87 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கென ரூ. 20 ஆயிரம் 1990–91 ஆம் ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.36. பராமரிப்பு உதவித் தொகை :

தமிழ்நாடு முழுவதும் 1,000 கடும் ஊனமுற்றோருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ, 100 வீதம் பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1990–91 ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.37. தொண்டு நிறுவனங்களுக்கு மான்யம் வழங்குதல் :

8 முதல் 14 வயது வரையுள்ள மூளை வளர்ச்சி குன்றிய காது கேளாத, பார்வையற்ற, கை கால் ஊனமுற்ற குழந்தைகள் தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் தொழு நோயால் பாதிக்கப்பட்டோரின் குழந்தைகளை பராமரிப்பதற்காக தொண்டு நிறுவனங்ளுக்கு மான்யம் வழங்கப்படுகிறது. 1989–90ஆம் ஆண்டு 31 தொண்டு நிறுவனங்களுக்கு மான்யம் வழங்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1,175 ஊனமுற்ற குழந்தைகள் பயனடைந்தவர்கள். இத்திட்டத்திற்கென 1990-91 ஆம் ஆண்டில் 4.90 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.38. இளம்பிள்ளைவாதத் தடுப்பு மற்றும் நிவாரணத் திட்டங்கள்:

தமிழ்நாட்டில் இளம்பிள்ளை வாதத்தைத் தடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் 1988-89 ஆம் ஆண்டில் 'இளம்பிள்ளை வாதத் தடுப்பு மற்றும் செயல்முறை' எனும் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்படுவதை தடுத்தலும், இளம்பிள்ளைவாதத் தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் அளித்தலுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1988–89 முதல் 1992–93 வரை யுள்ள காலத்தில் மாநில முழுதும் ஐந்து கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது. முதல்கட்டமாக மாவட்டத்திற்கு ஒரு ஒன்றியங்கள் வீதம் 40 ஒன்றியங்கள் செயல்படுத்தப்படுகிறது. 1988–89 ஆம் ஆண்டில் ஏறத்தாழ இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட 16,000 பேர் பயனடைந்துள்ளனர்.

இதுவரை கண்டறியப்பட்ட 15,547 போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் அறுவை சிகிச்சை, மற்றும் கருவிகள் வழங்குதல், பள்ளிகளில் சேர்த்தல், உதவித் தொகை வழங்குதல், தொழிற் பயிற்சி அளித்தல், பணியமர்த்தல், முதியோர் உதவித் தொகை மான்யம் போன்ற உதவிகள் பெறுகிறார்கள். இதுவரை 7,699 போலியோவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதம் உள்ளவர் களுக்கு உதவிகள் வழங்கும் பணி நடைபெற்று கொண்டு வருகிறது. முதல்கட்ட திட்டத்தை செயல்படுத்துவதற்கு மத்திய அரசு ரூ. 109.50 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தை எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்தாது செயல்படுத்தப்படும். இதன்படி இந்நிதியாண்டில் ரூ. 50.00 லட்சம் மாநில அரசு செலவில் சில தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## அத்தியாயம் 5.

## தமிழ்நாடு சமூகநல வாரியம்.

5.1 தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு. தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்களது மேம்பாட்டு வளர்ச்சியில் முக்கியமான பங்கு வகிக்கிறது.

5.2 வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:—

(1) சமூக நல அமைப்புகளை ஆரம்பித்து உயர்வடையச் செய்தல்.

(2) தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்குத் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

(3) உதவித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

5.3 தமிழ்நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியத்திடமிருந்து பண உதவிப் பெற்று, தொண்டு நிறுவனங்களின் மூலம் குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டுக்காகப் பணியாற்றுகிறது. சுமார் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தொண்டு நிறுவனங்களுக்கு பண உதவி செய்யப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம்கூட பண உதவி செய்யப்படுகிறது.

5.4 தற்போதைய தமிழ்நாடு சமூக நல வாரியம் 1988 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்று அலுவலக உறுப்பினர்கள் உட்பட 24 உறுப்பினர்களைக் கொண்டதாக, திருத்தியமைக்கப் பட்டது.



5,5. 1989-90 ஆம் ஆண்டில் 1,480 தொண்டு நிறுவனங் களுக்கு ஏப்ரல் 1989 முதல் பிப்ரவரி முடிய மொத்தம் ரூ.160.44 லட்சங்கள் பண உதவி செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | அலகுகளின் எண்ணிக்கை. (2) | அனுமதிக் கப்பட்ட தொகை. (3) (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. திட்டக் கால உதவி .. | 33 | 2,78 |
| 2. வருடாந்திர உதவி .. | 155 | 2.99 |
| 3. மகிலா மண்டலத் திட்டம் .. | 35 | 1.29 |
| 4. சத்துணவுத் திட்டம் .. | 89 | 7.06 |
| 5. குழந்தைகள் காப்பகத் திட்டம். | 769 | 96.82 |
| 6. விடுமுறை முகாம் .. .. | 50 | 2,50 |
| 7. பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி. | 16 | 1.22 |
| 8. விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் திட்டம். | 41 | 4.10 |
| 9. மாநில அரசு மானியம் .. | 130 | 4.58 |
| 10. குடும்ப நல அறிவுரை நிலையம். | 12 | 4.76 |
| 11. குறுகியகாலக் கல்வி பயிற்சி (1 வருடம்— 2 வருடம்). | 13 | 2.74 |
| 12. வாழ்க்கைத் தொழில் பயிற்சி .. | 87 | 17.58 |
| 13. சமூகப் பொருளாதாரத் திட்டம்— .. | | |
| (அ) உற்பத்தி அலகுகள் .. | 1 | 1.57 |
| (ஆ) சேவை முனைப்புத் திட்டம். | .. | .. |
| (இ) பால்வளத் திட்டம் .. | 48 | 10.01 |
| (ஈ) சுய வேலைவாய்ப்புத் திட்டம். | .. | .. |
| (உ) ஆடு வளர்த்தல் .. | 1 | 0.42 |
| | 1,480 | 160.44 |

## அத்தியாயம் 6.

### சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக்கண்காணிப்புத் துறை.

6.1 தமிழ்நாடு அரசினரால் செயல்படுத்தப்படும் பல்வேறு நல்வாழ்வுத் திட்ட அமுலாக்கங்களில் சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக்கண்காணிப்புத்துறை மூலம் இளைஞர் நீதிச் சட்டம் 1986 (நீக்கப்பட்ட தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 1920)-ன்படி தோற்றுவிக்கப்பட்ட இல்லங்கள் மற்றும் பரத்தமைத் தடுப்பு சட்டம், 1956-ன் கீழ் அமைந்துள்ள மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பு நிறுவனங்களும் அடங்கும்.

6.2 புறக்கணிக்கப்பட்ட. ஆதரவற்ற, கைவிடப்பட்ட அநாதை மற்றும் குற்றம் இழைத்த சிறார்கள், ஒழுக்க நெறி தவறிய மகளிர் மற்றும் சிறுமிகளுக்கு ஆதரவு, பாதுகாப்பு, பயிற்சி - கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வழங்கி அவர்களை நல்வழிப்படுத்தும் வகையில் சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை தனது பணிகளை அர்ப்பணம் செய்துக் கொண்டுள்ளது. இவையெல்லாவற்றிற்கும் மேலாக சீர்திருத்த நிறுவனங்களிலிருந்து விடுதலையாகி வரும் இல்லவாசிகளுக்கு பிற்காப்பு சேவையும் இத்துறையின் மூலம் அளிக்கப்பட்டு வருகின்றது.

6.3 சீர்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக்கண்காணிப்புத் துறையின் நிர்வாகம் மற்றும் செயல்பாட்டுக்கென ஒரு முழு நேர இயக்குநர் இத்துறையில் பொறுப்பினை வகிக்கின்றார். இம்மாநிலத்தின் தென்மண்டல நிறுவனங்களின் நிலையான மற்றும் திறமையான மேற்பார்வைக்கென சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை துணை இயக்குநரை தலைமையாகக் கொண்டு மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் இயங்கி வருகிறது.

### இளைஞர் நீதிச்சட்டம் 1986-ன் கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள்

6.4. இம்மாநிலத்தில் 14 கூர்நோக்கு இல்லங்கள் (குறுகிய காலம் தங்கும் நிறுவனங்கள்) உள்ளன. இக்கூர் நோக்கு இல்லங்கள் இளைஞர் நலக் குழுமத்திற்கு வரும் ஆதரவற்ற சிறார்களையும், இளைஞர் நீதிமன்றத்திற்கு வரும் குற்றம் புரிந்த சிறார்களையும் அவர்கள் விசாரணைக்குட்படும் காலங்களில் பொறுப்பேற்று கவனித்து ஆதரவு அளித்து வருகின்றது. சிறப்பு மற்றும் இளைஞர் இல்லங்களின் நுழைவு ஆதார இல்லங்களாக இவை உள்ளன. மொத்தமுள்ள 14 கூர்நோக்கு இல்லங்களில் 11 நிறுவனங்கள் அரசினராலும் ஏனைய மூன்று இல்லங்களாகிய குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம், விடுதலை பெற்ற கைதிகள் உதவிச்சங்கங்கள் மற்றும்



பாலமந்திர் ஆகியவை தனியார் நிறுவனங்களால் அரசினரின் நிதி உதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களிலுள்ள இல்லவாசிகளுக்கு பராமரிப்பு மான்யமாக 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு ஒரு நாளைக்கு தலா ரூ 3.00 வீதமும் 12 வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு ரூ. 4.50 வீதமும் வழங்கப்படுகிறது.

6.5 மாநிலத்தில் மொத்தம் 20 சிறப்பு மற்றும் இளைஞர் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த 20 நிறுவனங்களில் 3 சிறப்பு இல்லங்களும், 7 இளைஞர் இல்லங்களும் அரசினராலும் மீதமுள்ள 10 இளைஞர் இல்லங்கள் அரசினரின் பராமரிப்பு மான்ய உதவி பெற்று தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. இளைஞர் நீதி சட்டத்தின் கீழ் துவங்கப்பட்டு இளைஞர் நீதிமன்றங்கள் வாயிலாக குற்றம் புரிந்த சிறார்கள் சிறப்பு இல்லங்களுக்கும், இளைஞர் நலக்குழுமங்கள் மூலம் ஆதரவற்ற சிறார்கள் இளைஞர் இல்லங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றனர். மனவளர்ச்சி குன்றிய சிறார்கள் சென்னையிலுள்ள பாலவிஹார் நடத்தும் இளைஞர் இல்லத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

### இளைஞர் நலக்குழுமம்

6.6. புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் தொடர்புடைய வழக்குகளை விசாரிக்க ஒரு தலைவரும், 4 உறுப்பினர்களும் (ஒருவர் பெண் உறுப்பினர்) கொண்ட 13 இளைஞர் நலக்குழுமங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

### இளைஞர் நீதிமன்றங்கள் ;

6.7 குற்றம் புரிந்த சிறார்களை விசாரித்து தீர்ப்பு வழங்க சென்னை நகரைப் பொறுத்தவரை பன்னிரெண்டாவது நகர நீதிபதியும், வெளியூர்களில் தலைமை குற்றவியல் நீதிபதி, சார்பு உட்கோட்ட குற்றவியல் நீதிபதிகள் மற்றும் முதன்மை குற்றவியல் நீதிபதிகளும் நியமிக்கப்பட்டுள்ளார்.

### பரத்தன்மை தடுப்புச் சட்டம் 1956-ன் கீழ் இயங்கும் நிறுவனங்கள் விழிப்புப் பணி பாதுகாப்பு இல்லங்கள் :

6.8 பரத்தமைத்தடுப்புச் சட்டம் 1956-ன்படி சேர்க்கப்படும் பெண்டிர் மற்றும் சிறுமியர்களுக்கு அரசினரால் நடத்தப்படும் நீண்டகாலவரையரையுடைய நிறுவனங்களாகிய விழிப்பு பாதுகாப்பு இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு இல்லவாசிகளுக்கு ஆதரவு, பாதுகாப்பு, பயற்சி மற்றும் மறுவாழ்வு அளித்து வருகின்றன. இந்நிறுவனங்கள் ஒழுக்கநெறி தவறிய மற்றும் அபாயம் ஏற்படக்கூடிய வகையில் உள்ள மகளிரையும், ஒழுக்க நெறிக்கு மாறுவிளையக்கூடும் என அஞ்சி தாமாகவே சேர விரும்பும் மகளிருக்கும் பாதுகாப்பு அளிக்கின்றது. அரசினரால்

நடத்தப்படும் 6 விழிப்பு பாதுகாப்பு இல்லங்கள், சென்னையில் ஸ்திரிசதனா மற்றும் விழிப்புப்பணி இல்லம், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் நிறுவப்பட்டுள்ளது, இவை தவிர ஒழுக்கநெறி தவறிய சிறுமிகளுக்கும் மற்றும் திருமணமாகாத தாய்மார்களுக்கும் 2 இல்லங்கள் தனியார் நிறுவங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் ஒரு நாளைக்கு ஒரு இல்லவாசிக்கு தலா ரூ. 4.50 வீதம் மான்யமாக வழங்கப்படுகின்றன.

**விழிப்பு மற்றும் மீட்புப்பணி நிறுவனங்கள்**

6.9. குறுகி காலவரையரையுடைய விழிப்பு மற்றும் மீட்புப் பணி நிறுவனங்கள், நீதிமன்றங்களில் விசாரணைக்குட்படுத்தப் படும் காலங்களில் சிறுமியர் மற்றும் மகளிருக்கு பாதுகாப்பும் புகலிடமும் அளித்து வருகின்றன. மாநிலத்தில் 6 விழிப்பு மற்றும் மீட்புப்பணி நிறுவனங்கள் பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றன. இக்குறுகிய கால வரையறையுள்ள நிறுவனங்கள் நீண்டகால வரையறையுள்ள பாதுகாப்பு இல்லங்களுக்கு நுழைவாயிலாகும்.

**பிற்காப்பு நிறுவனங்கள்**

6.10. இல்லங்களிலிருந்து விடுதலையாகி வரும் இல்லவாசிகளுக்கு ஆதரவு நல்கி சேவை புரிய 3 பிற்காப்பு நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 2 நிறுவனங்கள் ஆத்தூர் மற்றும் மதுரையில் சிறுவர்களுக்காகவும், ஒன்று மகளிர் மற்றும் சிறுமியருக்காக வேலூரிலும் இயங்கி வருகின்றன. இப் பிற்காப்பு இல்லங்கள் இல்லவாசிகளுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதுடன் அவர்களை வெளியிடத்திலுள்ள கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கும் அனுப்பி சுயவேலைக்கு தகுதிபெறுமளவிற்கு செய்வதுடன் அவர்கள் நேர்மையான, தொழிற்பற்றுள்ள உபயோகமான வாழ்க்கை வாழவும் வழிவகுத்துத் தரப்படுகின்றது. ஆடைகள், உள்ளடக்கிகள் மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பதில் பயிற்சி அளிக்கும் ஒரு தொழில் நிறுவனம் வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்புநிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது இந்நிறுவனத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு பயிற்சி அளிப்பதுடன் பர்மா மற்றும் இலங்கை, அகதிகளுக்கும் உள்ளூர் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**கல்வியுடன் பயிற்சி**

6.11. நிறுவனங்களிலுள்ள அனைத்து இல்லவாசிகளுக்கும் எட்டாம் வகுப்பு வரை கல்வி அளிப்பதுடன், இக்கல்விப் பிரிவுகள் கல்வித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட பிரிவுகளாக இயங்கி வருகின்றன. செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லத்திலும்



சென்னையிலுள்ள அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்திலும் 10 ஆம் வகுப்பு வரையுள்ள உயர்நிலைப்பள்ளி பிரிவு இயங்கி வருகின்றன. தகுதியுள்ள திறமையுள்ள இல்லவாசிகளை வேறு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப்பள்ளிகளுக்கும் கல்லூரி தொழிற்பயிற்சி நிலையங்கள் பல் தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றிற்கும் அனுப்பப்பட்டு வருகின்றனர் சாதாரண பள்ளிக் கல்வி மட்டுமில்லாமல் முறைசாரா கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் கல்வி பெறவும், தேர்வு எழுதவும் அனுப்பப்படுகின்றனர்.

**தொழிற்கல்வியுடன் பயிற்சி**

6.12. இல்லவாசிகளுக்கு கல்விப் பயிற்சி அளிப்பதோடு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் வருமானம் ஈட்டக்கூடிய தொழிற்கல்வி பயிற்சிகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

(அ) சிறப்பு இளைஞர் இல்லங்கள் ;—

1. தச்சு
2. மின்தச்சு
3. தையல் மற்றும் பூவேலை
4. நெசவு
5. பாய் நெசவு
6. கருமாரப்பணி
7. உலோகப்பணி
8. புத்தகம் கட்டுதல்
9. கொத்துவேலை
10. சோப்பு தயாரித்தல்
11. தோட்ட வேலை வேளாண்மை
12. வாத்திய இசை
13. மாட்டுப்பண்ணை

(ஆ) விழிப்பு/பாதுகாப்பு இல்லங்கள்.—

1. தையல் மற்றும் பூவேலை
2. பாய் நெசவு
3. நெசவு
4. மின் சலவையகம்

(இ) பிற்காப்பு நிறுவனங்கள்.—

1. புத்தகம் கட்டுதல்
2. கருமாரப்பணி

மேலேயுள்ள தொழிற்பிரிவு அலகுகளில் சென்னையிலுள்ள அரசினர் பெண்கள் இல்லம் மற்றும் தஞ்சாவூர் இளைஞர் இல்லத்தில் இயங்கி வரும் தையல் பிரிவுகளிலும், செங்கற்பட்டிலுள்ள அரசினர் சிறப்பு இல்லத்திலுள்ள நெசவு பிரிவிலும்

இராணிப்பேட்டை தஞ்சாவூரிலுள்ள தச்சுப்பிரிவிலும் இயந்திர மயமாக்கப்பட்டு, மின்விசையில் இயங்கும் நவீன இயந்திரங்களை இயக்க கற்றுக் கொள்ளவும் இவ்வில்லங்களிலிருந்து வெளியேறிய பின்னர் தொழிற்சாலைகளில் பணிபுரிய ஏதுவாக பயிற்சி வழங்கப்படுகிறது. பற்ற வைப்பு மற்றும் உற்பத்தி தொழிற்கூடம் ஒன்று இராணிப்பேட்டையில் துவங்கப்பட்டு, இல்லவாசிகளுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

சென்னை அரசினர் பெண்கள் இல்லவளாகத்தில் ஒரு குழந்தைகள் காப்பகம் இயங்கி வருவதுடன் 10 மாணவிகள் இப்பிரிவில் பயிற்சியும் பெற்று வருகின்றனர். சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் 20 இல்லவாசிகளுக்கென மனையியல் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

விடுதலையான இல்லவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கென அவர்கள் பெட்டிகடைகள் ஆரம்பிக்கவும், மாட்டுப்பண்ணை போன்ற தொழில் தொடங்கவும் அவர்களுக்கு நிதியுதவி அளிக்க ஒழுக்க நெறி தவறியவர்களுக்கு புதுவாழ்வு அளிக்க தமிழ்நாடு நல நிதி, அரசினரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொடர் ஆண்டு மானியமாக இந்தநிதிக்கு ரூ.5 இலட்சம் வழங்கப்படுகிறது. இதில் 2½ இலட்சம் தமிழ்நாடு முதல் அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் மீதி ரூ.2½ இலட்சம் அரசினராலும் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 100 விடுதலையாகும் இல்லவாசிகள் இத்திட்டத்தில் பயன் பெறுகின்றனர்.

### இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் :

6.13. சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய 3 இடங்களில் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இளைஞர் நலக்குழுமங்கள்/இளைஞர் நீதிமன்றங்கள் அனுப்பும் இளைஞர்களின் தன்மை, அசாதாரண நடத்தை, சமூக, பொருளாதார மனோதத்துவ சூழ்நிலைகளை ஆராய்ந்து சிறார்களிடையே நிலவிவரும் குற்றம் புரியும் தன்மை குறித்து ஆராய்ச்சி செய்து வருவதுடன் சில தனியார் நிறுவனங்களி லிருந்து கிடைக்கப்பெறும் குற்றவியல் தன்மை குறித்து ஆய்வுப் பணிகளையும் மேற்கொள்கின்றன. அருகிலுள்ள கூர்நோக்கு இல்லங்கள் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்கள் மூலம் அனுப்பப்படும் சிறார்களின் இன்னல்கள் குறித்தும் மனோதத்துவ ரீதியில் இந்நிலையங்கள் ஆராய்ந்து வழிகாட்டி வருகின்றன. இந்நிலையங்களுக்காகும் செலவினம் அரசால் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. இந்நிலையங்கள் செயற் குழுவினரால் நடத்தப் பட்டு வருகின்றன



### மறுவாழ்வு:

6.14. இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் ஒரு பகுதியாக தொழிற்கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொழிற் மற்றும் வர்த்தகத்துறையுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. 'கஸ்தூரிபாய் காந்தி மறுவாழ்வு தொழிற் கூட்டுறவுச் சங்கம்' என பெயரிடப்பட்டுள்ள இச்சங்கம் சென்னை-10, அரசினர் இளைஞர் மற்றும் பெண்கள் சிறப் பில்ல வளாகத்தில் இயங்கி வருகிறது. இச்சங்கம் இல்லவாசிகள் மற்றும் முன்னால் இல்லவாசிகளால் அவர்களுக்காகவே பல நோக்க செயல்பாடுகளுக்காகவே நிறுவப்பட்டுள்ளது.

இல்லங்களிலுள்ள இல்லவாசிகளுக்கு காலணி தயாரிக்கவும் பனை ஓலை பொருட்கள் தயாரிப்பதிலும் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. தொழில் மற்றும் வர்த்தகத் துறையினர் அறிமுகப் படுத்தியுள்ள ஊரக கைவினைஞர் தொழில் வளர்ச்சித்திட்டம் மூலமாகவும், 'தாட்கோ' நிறுவனம் அளிக்கும் சிறப்பு ஒரு முகப்படுத்தப்பட்ட திட்டம் மூலமாக பயிற்சித் திட்டங்களுக்கு நிதியுதவி பெறப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது. சுமார் 100 இல்லவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சீர்திருத்த நிறுவனங்களில் சீர்திருத்தப்பயிற்சி பெற்ற பின்னர் வெளியேறும் இல்லவாசிகளுக்கு மறுவாழ்வும் அளிக்கப்படுகிறது.

### மறுவாழ்வு அளிக்கப்படும் முறைகள்:

(1) விருப்பமுள்ள இளம்பெண்களுக்கும், ஆதரவற்ற பெண் களுக்கும் திருமண ஏற்பாடு செய்தல்.

(2) வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தருதல்.

(3) வேலைத்திறமையுள்ள மாணவர்களுக்கும் அவர்கள் பயின்ற தொழிற்கல்விக்கேற்ப கருவிகள் வழங்குதல்.

தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினரின் தேர்வு வரம்புக்கு உட்படாத, இத்துறையின் அனைத்துப் பணியிடங்களும், மாவட்ட வேலைவாய்ப்பகங்கள் மூலம் தகுதிவாய்ந்த முன்னாள் இல்லவாசிகளைக் கொண்டு நிரப்படுகின்றன. இதற்கென மாவட்ட வேலை வாய்ப்பகங்களில் தனியான பதிவேடும் பராமரிக்கப்படுகிறது.

திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கு அவர்கள் புது குடும்பம் துவங்க சீதனமாக ரூ. 1,000 அரசினரால் வழங்கப்படுவதுடன் திருமண நாளன்று ஏற்படும் செலவுகளுக் காகவும் ரூ.100 வழங்கப்படுகிறது.

**வரவு-செலவு:**

இத்துறையின் 1990–91ஆம் ஆண்டின் வரவு–செலவு மதிப்பீடு (பணியாளர் சம்பளங்கள் உட்பட) ரூ. 293.97 இலட்சம் ஆகும். தனியார் நிறுவனங்களுக்கு மான்ய உதவி ரூ. 9.72 இலட்சம் ஆகும்.

அத்தியாயம் 7.

முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

7.1. இந்தத் திட்டம் முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். உற்றார், உறவினர், ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட இனங்களின் கீழ் இத் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது.

(அ) முதியோர் உதவித் தொகைத் (சாதாரணம்) திட்டம் (1–4–1962 முதல்).

கண் பார்வையற்றோர், தொழுநோய், மன நோய் பாரிச வாய்வு மற்றும் அவயமிழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகைப் பெற குறைந்தபட்ச வயது வரம்பு 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்தபட்ச வயது வரம்பு 65 ஆகும். இத்திட்டம் 1–4–1962 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊன முற்றோர் திட்டம்) (1–11–1974 முதல்)

1–11–1974 முதல் இந்தத் திட்டம் 45 வயது நிரம்பிய ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் குறைந்தபட்ச வயது வரம்பு கண் பார்வையற்றோர்களுக்கு பொருந்தாது என அரசால் ஆணையிடப் பட்டது.

(இ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவை திட்டம்) (1–6–1975 முதல்).

1–6–1975 முதல் இந்தத் திட்டம் 45 வயது நிரம்பிய ஆதரவற்ற விதவைகளுக்கு அமுல் படுத்தப்பட்டு வருகிறது. குறைந்தப்பட்ச வயது வரம்பு 40 ஆகும்.

(ஈ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் திட்டம்) (21–8–1981 முதல்.)



இந்த திட்டம் 21–8–1981 முதல் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் அமுலாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை (25–4–1986 முதல்) ;

25–4–1986 முதல் 30 வயது நிரம்பிய கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் அமுலாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**7.2. உதவித் தொகை ஒப்பளிப்பு அளிக்கப்படும் முறை:**

மேற்கண்ட திட்டத்தின் கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு அதிகாரம் கோட்டாட்சியர்களுடையது. அரசாணை எண். 440 சமூக நலத்துறை, நாள் 8–5-1989–இன்படி, மேற்கண்ட அதிகாரம் வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண். 1080, சமூக நலத்துறை, நாள் 18–7–1989-ன்படி மேற்கண்ட ஒப்பளிக்கும் அதிகாரம் நலிந்தோர் நலம், வட்டாட்சியர்களுக்கு வழங்கப்படுள்ளது.

**7.3. உதவித் தொகை வழங்கும் முறை:**

முதியோர் உதவித்தொகைத் திட்டம் அமுல்படுத்தப்பட்ட நாளாகிய 1–4–1962 முதல் 31–3–1979 வரை ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 20 உதவித் தொகையாக அளிக்கப் பட்டது. 1–4–1979 முதல் 31–3–1982 வரை மாதம் ரூபாய் 25 எனவும் 1–4–1982 முதல் 30–4–1989 வரை மாதம் ரூபாய் 35/ ஆகவும் வழங்கப்படுகிறது. 1-5–1989 முதல் இதுநாள் வரை மாதம் ரூ. 50 ஆகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை பண அஞ்சல் மூலம் உதவித் தொகை பெறுபவர்களின் முகவரிக்கு வட்டாட்சியரால் அனுப்பப் படுகிறது. இதற்கான பண அஞ்சல் கமிஷன் செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது.

**7.4 இலவச கைத்தறி ஜனதா ஆடைகள் வழங்குதல்.**

ஆண்டுக்கு இரு முறை பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாள் அன்று உதவித் தொகை பெறும் ஆண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வேட்டியும், பெண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வண்ண/வெள்ளைச் சேலையும், 1979 சுதந்திர நாள் முதல் அளிக்கப்பட்டுவருகிறது.

**7.5. மதிய சத்துணவு வழங்குதல்:**

அனைத்து முதியோர் உதவித் தொகை பெறுப்பவர்களுக்கு நாள்தோறும் மதிய சத்துணவு இலவசமாக சத்துணவு கூடங்களில் வழங்கப்படுகிறது.

7.6 முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயனடைவோரின் எண்ணிக்கை:

| | எண்ணிக்கை. |
|---|---|
| (அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம். | 2,04,029 |
| (ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம். | 24,137 |
| (இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவைகள்) திட்டம். | 1,57,850 |
| (ஈ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்கள்) திட்டம். | 59,786 |
| (உ) முதியோர் உதவித் தொகை (கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள்) திட்டம். | 17,937 |
| மொத்தம் .. | 4,63.739 |

7.7 ஒவ்வொரு காலாண்டிற்கும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கும் திட்டம்:

அரசாணை எண். 440 சமூக நலத் துறை, நாள்: 9-5-1989 இல் ஒவ்வொரு காலாண்டிலும் முதியோர் உதவித் தொகை கேட்டு, காத்திருப்போர் பட்டியலிலுள்ளவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கும் புதிய முறையை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தாய்மையைப் போற்றும் இத்தமிழ் நிலத்தில் ஒரு சில மாவட்டங்களில் பிறக்கும் குழந்தை பெண்ணாக இருந்தால், அதனை உடனே கொன்றுவிடும் கொடுமை நடைபெறுவதாகச் செய்திகள் வருகின்றன. அந்தக் கொலைகளைச் செய்வோர், அதற்கு உடந்தையாக இருப்போர் கடுமையான முறையில் தண்டிக்கப்பட, அரசு உடனடி நடவடிக்கை எடுக்கு மென்பதுடன், அப்பகுதியிலுள்ள பெண் குழந்தைகளை வளர்த்துக் காத்திட அரசு ஏற்பாடுகளைச் செய்யும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, 1990-ஆம் ஆண்டு ''பெண் குழந்தைகள்'' ஆண்டாக இருப்பதால் சிறப்புத் திட்டங்களை உருவாக்கு வதுடன், கருத்தரங்குகள் முதலியன ஏற்பாடு செய்து



பெண் குழந்தைகளின் பெருமையினையும் சிறப்பினையும் சமுதாயத்திற்கு உணர்த்த தனிக் கவனம் இன்றைய தேவை யாகும். இத்துறையின் எல்லா வளர்ச்சித் திட்டங்களும் ஒரு புதிய செயல்முறைத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு தொண்டு நிறுவனங்கள் மூலமாக செயல்படுத்த கூடுதல் நிதி உதவி மத்திய அரசிடமிருந்தும், மற்றும் அயல்நாட்டு நிறு வனங்களிடமிருந்தும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இறுதியாக, மகாகவி பாரதியார் அவர்களின் கவிதையை நினைவுகூர்ந்து இத் துறை கொள்கை விளக்கத்தை இந்த பேரவை முன் வைக்கின்கிறேன்.

''உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்''

143800
D
V211,31:1990
N90.2513

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamamn Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
5 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

---

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.